

# இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது



பூங்கொடி பதிப்பகம்



சிலம்புச் செல்வர்

டாக்டர் **ம.பொ.சிவஞானம்**

# இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது

சிலம்புச் செல்வர்

டாக்டர் ம.பொ. சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி - 044-24643074.



அமரர் சிலம்புச்செல்வர் டாக்டர்
ம.பொ.சிவஞானம் அவர்களின் 108வது
(26-06-2013) பிறந்த நாள் வெளியீடு

## நூல் விவரப்பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது** |
| நூல் ஆசிரியர் | : | சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கட்டுரை |
| வெளியீடு | : | **பூங்கொடி பதிப்பகம்**<br>14, சித்திரைக்குளம் மேற்கு வீதி<br>சென்னை-4. ☎: 044-24643074 |
| வெளியிட்ட ஆண்டு | : | முதற் பதிப்பு, 26.6.86<br>இரண்டாம் பதிப்பு, 26.6.2013 |
| நூல் அளவு | : | 1x8 |
| பக்கங்கள் | : | 288 |
| எழுத்து அளவு | : | 11 புள்ளிகள் |
| தாள் | : | 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| ஒளி அச்சு | : | **மனோஜ் கிராபிக்ஸ்**<br>கோடம்பாக்கம், சென்னை-24 |
| அச்சிட்டோர் | : | பத்மாவதி ஆப்செட் பிரிண்டரஸ்<br>சென்னை- 2. |

விலை - **ரூ. 100**

# முன்னுரை

சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இந்திய தேசியக் காங்கிரஸ் (இண்டியன் நேஷனல் காங்கிரஸ்) என்னும் பெயருடன் தோன்றி, இற்றை நாளில் "இந்திரா காங்கிரஸ்" என்று பெயர் மாற்றம் பெற்றுள்ள மாபெரும் தேசிய அமைப்பானது, கடந்த 1985 -ஆம் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியிருக்கிறது.

எண்பது ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்ட எனது வாழ்விலே சரியாக 28 ஆண்டுக்காலம் நான் காங்கிரசில் இருந்தேன். அப்போது அது ஒரு கட்சியல்ல, இந்திய தேசிய மகாசபை. அது அரசியல் கட்சிகளுள் ஒன்றாக மாறிய பின்னும், அதிலே ஆறாண்டுக் காலம் நீடித்திருந்தேன் என்றாலும், கட்சி - கோஷ்டிப் பூசலுக்கு அப்பாற் பட்டவனாக - சரியாகச் சொல்வதானால், கட்சி - கோஷ்டி வேற்றுமைகளைக் கடந்து தேசிய உள்ளத்துடனேயே காங்கிரசில் இருந்து வந்தேன்.

"இந்திரா காங்கிரஸ்" என்று மாற்றுப்பெயர் பெற்றுவிட்ட எனது தாய்ச் சபையின் நூற்றாண்டு விழாவைக் காண நேர்ந்ததிலே, எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. சென்னை நகரில் தமிழ்நாடு காங்கிரஸ் நடத்திய நூற்றாண்டு விழா மேடையிலே

பிரதமர் ராஜீவ் காந்தியின் கரத்தால் இந்திய விடுதலைப் போரில் பங்கு கொண்டவன் என்ற காரணத்திற்காக - வெள்ளிக் கேடயம் பெற்றேன். இந்தச் சிறப்பு எனக்கு நடத்தப்படும் என்று எதிர் பார்க்காத நிலையிலே, "இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது" என்னும் பெயரில் தமிழரசுக் கழக வார ஏடான "செங்கோலி"ல் தொடர் கட்டுரையாக எழுதி வந்தேன். அதுவே இந்நூல் வடிவம் பெற்றுள்ளது.

இந்த நூல் முழுக்க முழுக்க இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு அன்று. அப்படியொரு நூலை " விடுதலைப் போரில் தமிழகம்" என்னும் பெயரில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வெளியிட்டு விட்டேன்.

இந்திய தேசியக் காங்கிரஸ் தோன்றிய காலந்தொட்டு, தேச விடுதலைக்குப் பின்னும் 1985 வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் காங்கிரஸ் புரிந்துள்ள சாதனைகளை விமர்சித்து " இந்திய தேசியம்" என்னும் தத்துவத்தின் விளக்கமாகவே இந்நூலைப் படைத்துள்ளேன்.

இதனை வெளியிட்டு உதவிய பூங்கொடி பதிப்பக உரிமையாளர் திரு. வே. சுப்பையாவுக்கு எனது இதயபூர்வமான நன்றி உரித்தாகுக.

*சென்னை* *ம.பொ. சிவஞானம்*
*20-6-86*

# பதிப்புரை

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் பாரதத்திற்கு எத்தனையோ நன்மைகளைப் புரிந்திருக்கிறது. அடிமை வாழ்வின் அவலத்தை உணர்த்தியது மட்டுமின்றி, பல்வேறு இனங்களாகச் சிதறிக் கிடந்த பாரத மக்களை ஒரே தேசிய இனமாக உணரச் செய்ததும் ஆங்கிலேய ஆதிபத்தியம்தான். எத்தனையோ அந்நியப் படை யெடுப்புகளுக்கும் ஆளுகைக்கும் ஆட்பட்டு அடங்கிக் கிடந்த போதெல்லாம்கூட ஏற்படாத ஒரு தேசிய உணர்வு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ்தான் நமக்கு ஏற்பட்டது.

முன்னர் வந்த மொகலாயரும் சரி, மாசிடோனியர் களும் சரி, பின்னர் வந்த போர்ச்சுக்கீசியர், மற்றும் பிரெஞ்சுக்காரர்களும் சரி, கிடைத்தவரை ஆதாயம் என்ற நோக்கில் பகுதி பகுதியாக ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டார்களேயன்றி, ஆங்கிலேயர்களைப் போல யானைப் பசியுடன் பாரதத்தின் பெரும்பகுதியைத் தங்களது ஆளுகையின்கீழ் கொண்டுவர முயலவில்லை. ஆங்கிலேயரின் இந்த அகோரமான ஆதிக்க வெறியே இமயம் முதல் குமரிவரை நாம் அனைவரும் ஒரே நாட்டினர் என்ற உணர்வைத் தோற்றுவித்தது.

அதற்கு முன்பு அநாதி காலமாக பாரதம் முழுமையும் மதவழிப்பட்ட ஒரு ஆன்மீகச் சரடு பிணைத்திருந்தாலும் கூட அது மூட்டையில் கட்டிய நெல்லிக்காய்களாக இருந்ததே தவிர நாரில் தொடுத்த மாலையாக இருக்க வில்லை.

இப்படி அந்நியரால் நம்மிடையே உருவாக்கப்பட்ட தேசிய உணர்வை, அந்த அந்நிய வழியிலேயே வந்த ஒருவரால் தொடங்கப்பட்டு, பல்வேறு மாற்றங்களும், வளர்ச்சியும் அடைந்து மலர்ந்த காங்கிரஸ் மகா இயக்கத்தை வளர்த்து வாழவைத்தது.

ஐயா அவர்கள் தன்னுடைய இந்த நூலில் காங்கிரஸ் பேரியக்கத்தின் வரலாற்றை மட்டும் சொல்லிச் செல்ல வில்லை. அதன் ஆத்மாவையே தொட்டுக் காட்டி யிருக்கிறார்கள்.

மதச்சார்பற்ற தன்மையிலும், நிறத் துவேஷமற்ற தன்மையிலும், மக்களின் உரிமைக்காகத் தோன்றிய அந்த இயக்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்று தீவிரமான விடுதலை இயக்கமாக மலர்ச்சியுற்றதையும், காந்தியடி களின் தலைமைக்குப் பிறகு இயக்கம் விடுதலைக் கோஷத்தை மட்டுமே கொண்டிராமல் நவபாரதத்தின் நிர்மாணத்திற்கான அடிப்படையான விஷயங்களில் கவனம் செலுத்தியதையும் விரிவாகவே ஆராய்ந் திருக்கிறார்கள். தொலை நோக்குடன் பெண்கள் முன் னேற்றத்திலும், தீண்டாமை ஒழிப்பிலும், மற்றைய சமூக சீர்திருத்தங்களிலும் அது கடமையாற்றிய விபரத்தை விரிவாகவே சொல்லியிருக்கிறார்கள். காந்தியடிகளாலும் அவர்தம் கொள்கைகளாலும் முழுமையாக ஆட்கொள்ளப் பட்டவராதலின் ஐயாவின் குரல் அந்த இயக்கத்தின் வரலாற்றைக் கூறும்போது ஆத்மபூர்வ மாகவே ஒலிக்கிறது.

தேசிய உணர்வைப் புறக்கணித்துப் பிளவுபட்டுக் கிடப்பதால் உண்டாகும் தீமையைப் புரிந்து கொள்வ தற்காக தேசியத்திற்குப் புறம்பானவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வோரும், மொழிவழிப்பட்ட இனங்களின் நலனையும், உரிமையையும், உணர்வுகளையும் மதிக்க மறந்தால் தேசிய உணர்வு எப்படிச் சிதையும் என்பதை உணர்ந்து கொள்ள தேசியவர்திகள் என்று தம்மைச் சொல்லிக் கொள்வோரும் - ஏற்பட்டுள்ள ஒரு மகத்தான ஒற்றுமை யைப் பேணிக்காத்துப் போற்ற வேண்டிய அவசியத்தை உணர அனைவராலும் படிக்கப்பட வேண்டிய நூல் இது.

இதனை வெளியிடும் நல்வாய்ப்பினை நல்கிய ஐயா அவர்களுக்கு எங்கள் நன்றி.

***வே. சுப்பையா***

பூங்கொடி பதிப்பகம்.

# என்னுரை

1935இல் காங்கிரஸ் பொன்விழாவை ஒட்டி எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் ராஜாஜி அவர்கள் ''இந்திய தேசியம் காங்கிரஸ் என்ற பெயரில் மலர்ந்தது'' எனக் குறிப்பிட்டார். பாரதியாரும் ''பாரத ஜன சபை வரலாறு'' எனும் நூலில் 1885-ல் பம்பாயில் காங்கிரஸின் தோற்றத்தைப் பற்றி குறிப்பிடும் பொழுது ''பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று' என்று குறிப்பிட்டார்.

தேச பக்த மெய்ஞ்ஞானி சுவாமி விவேகானந்தர் 1896-இல் லண்டனில் ''இந்தியா லண்டன்'' எனும் பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில், ''இந்தியா வில் பல இனத்தாரிடையே ஒரு நாடு உருவாகின்றது'' என்று காங்கிரஸை குறிப்பிட்டுப் பாராட்டினார்.

என்னுடைய ''காங்கிரஸ் வினா விடை (1979)'' எனும் நூலிற்கு டாக்டர் ம.பொ.சி. எழுதிய அணிந் துரையில் காங்கிரஸிற்கு ''தேசிய'' எனும் அடைமொழி இணைந்ததிற்கான காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபை'' என்னும் பெயரானது, இந்தியப் பெருநாட்டின் வரலாற்றில் ஒரு புனிதமான இடத்தைப் பெற்றுவிட்டது. இந்தியாவின் விடுதலைக்குப் போராடி, அதிலே மகத்தான வெற்றிகண்ட பெருமை காங்கிரஸ் மகாசபைக்கு உண்டு. நாடு விடுதலை பெறுவதற்கு முன்பிருந்த ''காங்கிரஸ் மகா சபை'' வேறு, இன்றுள்ள ''காங்கிரஸ் கட்சி'' வேறு. ''தேசிய காங்கிரஸ் மகாசபை'' என்பது, அரசியல் கட்சிகளிலே ஒன்றல்ல, தேசத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த

ஒரு அமைப்பாகும், அதனாலேயே "தேசிய" என்னும் அடைமொழி அதன் பெயரோடு இணைந்தது."

72 பட்டதாரிகளைக் கொண்டு பல மாநில அரசியல் பிரதிநிதிகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட "இந்திய நேஷனல் காங்கிரஸ்" எனும் பெயரில் உள்ள "நேஷனல்" என்ற அடைமொழி ஏற்கத்தக்கதா? எனும் கேள்வியும் பின்வருமாறு எழுப்பப்பட்டது.

### *தேசிய காங்கிரஸா?*

முதல் இந்திய தேசியக் காங்கிரசில் கலந்து கொண்ட பேராசிரியர் க. சுந்தரராமன், 1908-ல் காங்கிரஸை தேசியக் காங்கிரஸ் என்று குறிப்பிடுவதைக் கடுமையாகக் கண்டித்தார். அவர் எழுதியதாவது.

> *"அது, தன்னைத் 'தேசிய' என்று அழைத்துக் கொண்டாலும், அதன் வழி முறைகள் உண்மையில் அவ்வாறில்லை. பெரும்பாலும், அந்நிய ஆட்சியைத் தூக்கியெறியவும், அதற்குப் பதிலாக அந்தந்த நாட்டுக் குடிமக்களால் உருவாக்கப்பட்ட சுதந்திர அரசாங்கம் நிறுவப்படுவதையும், ஐரோப்பிய நாடுகளின் தேசிய இயக்கங்களின் வளர்ச்சியைக் கூறும் சரித்திரத்தில் அறிகிறோம். காங்கிரசின் கொள்ளைகளில் அரசியல் புரட்சியைப் பற்றிய தீர்மானத்திற்கு இடமில்லை. அதன் தலைவர்களில் ஆங்கிலேயரான சிலர் இந்திய அரசாங்கத்தில் உயர் பதவியில் இருந்தவர்கள். இவர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் துண்டாட விரும்புவார்கள் என்ற கருத்து முட்டாள்களுக்குத் தான் தோன்றும், எவ்விதக் கவனத்திற்கும் உரியதல்ல, அது."*

பேராசிரியர் சுந்தரராமன் போன்றோர் இவ்விதமாகக் கருதியபோது, ஆரம்பகாலக் காங்கிரஸ் தலைவர்கள் ராஜ பக்திக்கும் தேசபக்திக்கும் வித்தியாசம் காண விரும்பாமல் காங்கிரசைக் கொண்டு தேசியத்தை வளர்த்தார்கள்.

*''கடந்த காலத்தில் சுதேச ஆட்சியிடம் காட்டிய ராஜபக்தியை விட, அந்நிய ஆட்சியிடம் ஆழ்ந்த ராஜ பக்தியை வெளிப்படுத்தி, பிரிட்டிஷ் பிரஜைகள் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறோம். இதற்குக் காரணம் யாதெனில் பிரிட்டன் சுதந்திரமும், பிரதிநிதித்துவமும் உள்ள அரசாங்க அமைப்பின் தந்தையாகும். அதன் பிரஜைகள், அதன் குழந்தைகள் என்ற முறையில் சுதந்திரத்தையும் பெற உரிமை உடையவர்களா கிறோம்.''*

இவ்வாறு நவ்ரோஜி 1885 - ல் பம்பாய் காங்கிரஸில் கூறினார்.*

ராஜபக்தி விசுவாசத்தை வெளிப்படுத்தும் காங்கிரஸின் தீர்மானங்கள் 1886-ல் தொடங்கி எட்டு மாநாடுகளில் 1917 வரையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் பேரரசின் கருணைக்கு வேண்டி நிற்கும் காட்சி காங்கிரஸ் தேசியத்தில் ஓர் அங்கமாகத் திகழ்ந்து வந்தது. ராஜவாழ்த்துடன் சபை நடவடிக்கைகள் தொடங்கப் பட்டது, பெருமையாகக் கொள்ளப்பட்டது.

காங்கிரஸின் இந்தப் போக்கிற்கு, அரசியல் சாசன வழிக் கிளர்ச்சியில் உறுதியான நம்பிக்கையும் பிரிட்டன் ''லிபரல்'' கட்சியை வழிகாட்டியாகக் கொண்டு

★ *இந்தியதேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் -1973, பெ.சு. மணி -பூங்கொடி பதிப்பகம், சென்னை- ப.537.*

இந்தியாவில் செயல்புரிந்த காங்கிரஸ் மிதவாதிகளின் கொள்கைகளும் காரணங்களாகும்.

இந்தியாவில் தேசிய வளர்ச்சிக்கு உறுதுணையாக, துருவ நட்சத்திரமாக விளங்கிய பண்டித ஜவஹர்லால் நேருஜி தமது ''உலக சரித்திரக் காட்சிகள்'' என்னும் நூலில் காங்கிரசின் பிறப்பைக் குறித்துச் செய்துள்ள பின்வரும் விமர்சனமும் இங்கு நினைவு கூரத்தக்கது.

*''காங்கிரஸ் தோன்றிய காலத்தில் மத்திய வகுப்புக்கே பிரதிநிதியாக இருந்தது. சற்று ஏழைகளான மத்திய வகுப்பாருக்குக் கூட அதில் இடமில்லை. பொது ஜனங்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கும் அக்காலக் காங்கிரசுக்கும் சம்பந்தமே இல்லை. முக்கியமாக ஆங்கிலம் படித்த வகுப்பாரின் கட்சியை எடுத்துக் கூறும் கருவியாகவே அது இருந்தது. அதனுடைய நடவடிக்கைகள் நமது மாற்றாந்தாய் மொழியான ஆங்கிலத்தில் நடைபெற்றுவந்தன.''*

பாவேந்தர் பாரதிதாசன் ''கே.எஸ். பாரதிதாசன்'' எனும் பெயரில் புதுச்சேரி தேச சேவகன் எனும் தேசிய இதழில் 1923 மார்ச்சு 13-இல் தேச மகாமன்றம் (காங்கிரஸ்)'' எனும் தலைப்பில் எட்டு கண்ணிகள் கொண்ட அற்புதமான ''தேசியக் கீர்த்தனையை'' எழுதி இருக்கிறார். மூன்றாவது கண்ணியில்,

*'' முப்பத்து முக்கோடி மாந்தர் கருத்தில்*
*முளைத்த பெருந்தெய்வமாய் - நன்கு*
*முளைத்த பெருந் தெய்வமாம் - ஒரு*
*மெய்ப்பதம் உண்டெனில் உம்மினும் வேறொரு*
*வீரக்குலம் புகல்வாய் - ஒரு*
*வீரக்குலம் புகல்வாய்.*

விடுதலைப் போராட்ட வீரர் ம.பொ.சி. அவர்கள் ''இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது (1986) எனும் நூலின் முன்னுரையில், காங்கிரஸின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ''இந்திய தேசியம்'' எனும் தத்துவத்தின் விளக்கத்தை மட்டுமல்ல, நூறாண்டு காங்கிரஸ் வரலாற்றையும் எழுதி உள்ளார்.

ம.பொ.சி. காங்கிரஸ் தலைவராக மட்டும் அல்லாமல் தமிழரசுக் கழகத் தலைவராகவும் சாதனை புரிந்தவர்.

எனவே இந்திய தேசியத்தையும் தமிழரசுக் கழகம் மூலம் உருவாக்கிய தமிழ்த் தேசிய தத்துவத்தையும் இரு கண்களாகக் கொண்டிருந்தார்.

இந்திய தேசியத்திற்காக தமிழ்த் தேசியத்தையோ, தமிழ்த் தேசியத்திற்காக இந்திய தேசியத்தையோ விட்டுக் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய தெளிவான அரசியல் பார்வை கொண்ட ஐயா ம.பொ.சி. அவர்களின் இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமாகப் படைக்கப்பட்டுள்ளது. தற்கால அரசியல் தெளிவிற்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது.

காங்கிரஸ் அவரை மறந்தாலும் உரிய வகையில் நன்றி பாராட்டாமல் இருந்தாலும் அவர் குறிப்பிடத்தக்க வரலாற்று ஆசிரியர் எனும் பொறுப்பில் தன் தேசியக் கடமையை இந்த நூலின் வாயிலாகச் செய்துவிட்டார்,

*23/11, இராமகிருஷ்ணாபுரம் 2வது தெரு*
*மேற்கு மாம்பலம், சென்னை-33, 29-5-2013.*

***பெ.சு.மணி***

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது | ..... | 13 |
| 2. | காங்கிரசுக்கு எம்மதமும் சம்மதம் | ..... | 21 |
| 3. | இந்திய தேசியம் நிறத்துவேஷமற்றது | .... | 30 |
| 4. | சமூக சீர்திருத்தத்திலும் பங்கு | ..... | 38 |
| 5. | தல-தீர்த்த யாத்திரையும் அரசியல் யாத்திரையும் | ..... | 61 |
| 6. | தேசியத்தை முழுமையாக்கிய அன்னிபெசண்ட் அம்மையார் | ..... | 74 |
| 7. | காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம் | ..... | 83 |
| 8. | தேசியம் வளர்த்த சமூக ஒற்றுமை | ..... | 106 |
| 9. | தேசியம் சாதித்த தீண்டாமை ஒழிப்பு | ..... | 118 |
| 10. | பெண்விடுதலைப் பேரியக்கம் | ..... | 154 |
| 11. | தேசியம் வளர்த்த வர்க்க உணர்ச்சி | ..... | 190 |
| 12. | தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டி வளர்த்தது காங்கிரசே | ..... | 199 |
| 13. | பயங்கரச் சோதனைகள் | ..... | 221 |
| 14. | தேசந் தழுவிய ஒரே தேசிய அமைப்பு | ..... | 244 |
| 15. | இந்திய விடுதலைப் போரில் மொழிவழிச் சிறுபான்மையினர் | ..... | 256 |
| 16. | காங்கிரசுக்கு ஏற்பட்ட சோதனைகள் | ..... | 268 |
| 17. | வாழ்க, இந்திய தேசியம் | ..... | 282 |

# இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது

''இந்திரா காங்கிரஸ்'' என்னும் பெயரால் அழைக்கப் படும் இந்திய தேசத்தின் மிகப் பெரிய கட்சி 1985 இறுதியிலே தனது நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியிருக்கின்றது. ஒரு நூறு வயதை அடைந்து விட்ட இந்தக் கட்சிதான் இந்தியா முழுவதையும் இன்று ஆட்சி புரிகின்றது. மாநில வாரியாகப் பார்த்தாலும், மிகப் பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரசே ஆட்சியில் இருக்கிறது.

இந்திய அரசமைப்புச் சட்டப்படிப் பார்த்தால் மற்ற கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மிகச் சில மாநிலங்கள் மீதும் இ. காங்கிரசின் செல்வாக்கிலுள்ள மத்திய அரசே மேலதிகாரம் செலுத்துகின்றது. அங்கெல்லாம் பிரதான எதிர்க்கட்சியாகவும் இருந்து காங்கிரஸ் கட்சி செயல்படுகின்றது.

இந்தியப் பெருநாடு, 1947 ஆகஸ்டு 15ல் பிரிட்டிஷ் பேரரசிடமிருந்து சுதந்திரம் பெற்றது. சுதந்திர

இந்தியாவிலே முதன்முதலில் ஆட்சிக்கு வந்தது சுதந்திரத்தைத் தேடித் தந்த காங்கிரஸ்தான்.

## உலகிலேயே மிகப்பெரிய கட்சி

அமெரிக்க ஐக்கிய குடியரசிலேயுள்ள குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் ஒரு நூறு வயதுக்கு மேற்பட்டவையாகும். இங்கிலாந்திலுள்ள கன்சர் வெட்டிவ் கட்சி, லிபரல்கட்சி, தொழிற்கட்சி ஆகிய மூன்று பெரிய கட்சிகளுள் கன்சர்வெட்டிவ் கட்சியே பருவத்தால் மூத்தது. ''டோரி கட்சி''யிலிருந்து வெளி யேறிய டிஸ்ரேலி என்பவரும், அவருடன் சேர்ந்து வெளியேறிய சிலரும் 1830-ல் ''கன்சர்வெட்டிவ் கட்சி''யைத் தோற்றுவித்தனர்.

பருவத்தால் இவற்றிற்கடுத்த இடத்தில் இருக்கிறது இந்தியாவிலுள்ள காங்கிரஸ் கட்சி. அதனால், காங்கிரஸ் நூற்றாண்டு நிறைவு விழா உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க மகத்தான நிகழ்ச்சியாகும் என்பதை அதன் எதிர்க்கட்சிகளும் ஒப்புக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

1947 ஆகஸ்டு 15ல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது. பின், 1950 சனவரி 26ல் அரசியல் நிர்ணயமன்றம் தயாரித்தளித்த அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதன் விளைவாக, இந்திய தேசியக் காங்கிரசானது, இந்திய அரசியல் கட்சிகளிலே ஒன்று என்று ஆகிவிட்டது. இது காங்கிரசுக்கு ஏற்பட்ட தாழ்வு அல்ல, ஜனநாயக நெறிப்படி ஏற்பட்ட நிலை

யாகும். ஆனால், அதற்கு முன்பு - அதாவது, தேச விடு தலைக்கு முன்பு ''இந்திய தேசிய காங்கிரஸ்'' என்னும் பெயரையே அது பெற்றிருந்தது. சாதி மத வருண இன வேற்றுமையின்றி, இந்திய சமுதாயத்தினர் அனை வருக்குமான ஒரே அமைப்பாகத் தோன்றி, தேசம் விடுதலை பெறும்வரை அந்த நிலையிலேயே இயங்கி வந்ததால் ''இந்திய தேசிய காங்கிரஸ்'' என்று அழைக்கப் பட்டது. அந்தப் பெயராலேயே, அதனுடைய தோற்றத் தையும் விடுதலைக்காக அது நடத்திய போராட்டங் களையும் விடுதலைக்கு முன்னும் பின்னும் அது புரிந்துள்ள சாதனைகளையும் ஆராய்வது பொருத்தமாக இருக்குமென்று நம்புகிறேன்.

## *வித்திட்டவர் வெள்ளையரே*

இந்திய தேசியக் காங்கிரசைத் தோற்றுவித்தவர், இந்தியாவில் இயங்கிய பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சேவகம் புரிந்த சிவில் சர்விஸ் (ஐ.சி.எஸ்.) காரராவார். அவரது பெயர் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் (1829-1912) ஆகும்.

பிரிட்டனில் பிறந்த ஆங்கிலேயரான இவர், 1857-ல் நடந்த சிப்பாய்ப் புரட்சியை ஒடுக்குவதிலே ஐ.சி.எஸ். அதிகாரி என்ற முறையில் கடமையாற்றினார். புரட்சியாளர்களால் தாக்கப்பட்டுப் படுகாய மடைந்தார். பின்னர், ஆங்கிலேய அரசு இந்தியர்களை நியாயமாக நடத்தவில்லை யென்று கருதியதன் காரணமாக, பிரிட்டிஷ் சேவையிலிருந்து விலகினார்.

அதன்பின், சிப்பாய்ப் புரட்சிபற்றி தாமே விரும்பி ஆய்வு நடத்தி, ஓர் அறிக்கையை இந்திய அரசுக்கு அளித்தார். அதிலே, 1857-ல் நடந்தது போன்ற ஆயுதப் புரட்சியானது திரும்பவும் எந்த நேரத்திலும் தோன்றுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது என்பதனை எடுத்துக்கூறி இந்திய அரசை எச்சரித்தார்.

## ஹ்யூம் விடுத்த அறிக்கை

தாம் எதிர்பார்த்த இரண்டாவது புரட்சி தோன்றுவதைத் தவிர்க்கும் குறிக்கோளுடன் இந்தியர்களை - குறிப்பாக, ஆங்கிலம் பயின்ற பட்டதாரிகளைத் திருப்தி செய்யத் தேசம் தழுவிய முறையில் ஓர் அமைப்பைத் தோற்றுவிக்க முனைந்தார். அதற்காக, ''கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு' என்ற தலைப்பில் 1.3.1883ல் அவர் வெளிப்படையாக விடுத்த வேண்டுகோள் வருமாறு.

''நாட்டின் அறிவாளிகள் அவரவர்கள் சுய நலத்திலேயே கண்ணாயிருந்து தாய்நாட்டிற்காகச் சிறிதளவேனும் பாடுபடாமல் இருப்பார்களாயின், அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் உரிமையிழந்து அயல் நாட்டினர் அவர்கள் முதுகிலேறிச் சவாரி செய்வார்கள். அதற்கு அவர்கள் முற்றிலும் தகுதியானவர்களே. அவ்விதமாயின், அவர்களுக்குற்ற விதி சரியானதே. எந்த நாட்டினரும் அவரவர் முயற்சியாலான பதவியை மட்டுந்தான் அடைவரன்றோ!

''உயர் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்று உலக வரலாற்றை அறிந்த உங்களில் சிலராவது சுய

நலத்தையே பெரிதாக நினைக்காமல் உங்கள் தாய்நாடு நலமடையவும், நாடெங்கும் நியாயம் ஓங்கவும், பொன் விளைந்ததெனக் கூறப்படும் இந்திய நாட்டின் வளம் ஓங்கி நிற்கவும், உங்கள் அரசாங்க நிர்வாகத்தில் பெரும் பாலான பங்கை நீங்கள் அடையவும் முயற்சிகள் செய்து அதிகாரமேற்க நீங்கள் முன்வர வேண்டாமா?

''நீங்கள் இப்படிச் செய்ய முன்வராமல் பதுங்கினால் உங்கள் நலனை நாடும் என்னைப் போன்ற நண்பர்களைக் கைவிட்டவர்களாவீர்கள். நம்முடைய பகைவர்களின் கரங்களைப் பலப்படுத்தி, அவர்களின் அநியாய நோக்கங்கள் எளிதில் கைகூடச் செய்தவர்களா வீர்கள்.

''இந்தியா என்றுமே மேலான சுதந்திர அந்தஸ்தை அடைய வழியில்லாமல் போய்விடும். நீங்கள் இப்பொழுது பின்னடைந்து நின்று, பிறகு, 'எங்களைச் சரியாக நடத்தவில்லை. நாங்கள் 'சிறுபிள்ளைகளா?' என்று ஓலமிட்டு அழுதால் அது ஆண்மைத்தனமாகுமா? செய்கையற்றவர்கள் மனிதர்களாவார்களா?

''தேசபக்தியும் பொது நன்மைக்காகப் பாடுபட ஆர்வமும் இல்லாத நாட்டினரைப் பிற நாட்டார் தங்களுக்கு அடிமைகளாக்கி ஆண்டு வருவதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது? பிற நாட்டார் உங்கள் மீது அதிகாரஞ் செலுத்துவோராகவும் நீங்கள் அவர் களுக்குத் தொண்டு செய்வோராகவுந்தான் என்றும் இருக்கவேண்டிவரும்.''

(டாக்டர் பட்டாபி எழுதிய காங்கிரஸ் மகா சபையின் சரித்திரம் (தமிழ் மொழி பெயர்ப்பு) - பாகம் 1, பக்.6.)

இந்த வேண்டுகோளுக்குப் பின், பட்டதாரிகளான இந்தியர்களிடையே ஒரு விழிப்பு தோன்றியது.

ஹ்யூம் துரைமகனார் ஆங்கிலம் படித்த இந்தியர் களைக் கொண்ட ஓர் அமைப்பைத் தோற்றுவிக்க நினைத்தது சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள கோடிக் கணக்கான மக்கள் மீது ஆங்கிலம் படித்த புதிய வகுப் பினருக்குச் செல்வாக்குத் தேடித்தரும் நோக்கத் துடனாகும்.

## *'காங்கிரசின் தந்தை ஹ்யூம்'*

சிப்பாய்ப் புரட்சியானது இந்து குருமார்களாலும் இஸ்லாமிய மௌல்விகளாலும் தூண்டிவிடப் பட்டதென்று வரலாறு கூறுகிறது. சிப்பாய்ப் புரட்சி பற்றித் தாம் நடத்திய ஆய்வினாலும் இந்த உண்மையை ஹ்யூம் அறிந்திருக்க வேண்டும். அதனாற்றான், இந்திய சமுதாயத்தின் மீது மதவாதிகளுக்கிருந்த செல்வாக்கைக் குறைக்கவும், ஆங்கிலம் படித்தவர்களுடைய செல் வாக்கை வளர்க்கவும் இந்திய தேசியக் காங்கிரசை ஹ்யூம் துரைமகனார் தோற்றுவித்தார் என்ற கருத்தும் இந்திய வரலாற்றில் கலந்திருக்கிறது.

ஹ்யூம் அவர்கள் இந்திய தேசிய காங்கிசைத் தொடங்கி வைத்ததுபற்றிக் காந்தியடிகள் லண்டனில் 5.9.1931-ல் நடந்த வட்டமேஜை மாநாட்டு சமஷ்டி

அமைப்பின் துணைக் குழுக் கூட்டத்தில் பேசியபோது வெளியிட்ட கருத்து வருமாறு.

''காங்கிரஸ் ஒரு தேசிய ஸ்தாபனம். குறிப்பிட்ட ஒரு சாதியின் அல்லது வகுப்பின் நலனுக்காக அது வேலை செய்யவில்லை. அது, எல்லா இந்தியருடைய நலன்களுக்கும் எல்லா வகுப்புக்களுக்கும் பிரதி நிதித்துவம் வகிக்கின்றது.

''காங்கிரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணம் முதலில் ஒரு ஆங்கிலேயருக்குத்தான் தோன்றியது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும். ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம்தான் காங்கிரசின் தந்தை.''

(காந்தி நூல்கள், தொகுப்பு -6 பக். 118)

ஹ்யூம் விடுத்த அழைப்புக்கிணங்க, 1885 டிசம்பர் 28, 29 தேதிகளில் பம்பாய் நகரில் உள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சம்ஸ்கிருதக் கல்லூரியில் இந்தியப் பிரமுகர்கள் 73 பேர் கூடினர். இவர்களில் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் 21 பேர். பம்பாய் (சிந்து உட்பட) ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் 8 பேர். பஞ்சாபியர் மூவர். வங்க மாநிலத்தவர் (பீகார், ஒரிசா, அசாம் உட்பட) மூவர்.

### *கிறித்துவரே முதல் தலைவர்!*

அயல் நாட்டுக் கிறித்துவரான ஏ.ஓ. ஹ்யூம் அவர்களால் நடத்தப்பட்ட மாநாட்டிலே இந்தியக் கிறித்தவரான உமேஷ்சந்தர் பானர்ஜி (1844-1906)

தலைமை வகித்தார். இதில் கலந்துகொண்ட சென்னை ராஜ்யத்தவர் 21 பேரிலே தமிழர்களான திரு. சுப்பிரமணிய ஐயர் (''இந்து'' - ''சுதேச மித்திரன்'' நாளிதழ்களைத் தோற்றுவித்தவர்). திரு. குந்தி கேசவப் பிள்ளை (பிற்காலத்தில் சென்னை ராஜ்ய சட்டசபையில் துணைத் தலைவராக இருந்தவர்), திரு. எஸ். சுப்பிரமணிய ஐயர் (பிற்காலத்தில் சென்னை ராஜ்ய உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பதவி வகித்தவர்), திரு. வீரராகவாச்சாரியார் ('இந்து' நிர்வாகி), திரு. சுவாமிநாத ஐயர் (தஞ்சாவூர்) ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

முதல் காங்கிரசிலே முதல் தீர்மானத்தை முன்மொழிந்த பெருமை திரு. ஜி. சுப்பிரமணிய ஐயருடையதாகும். அத்தீர்மானத்திலே,

''இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள அதிகார வர்க்கத்தினரால் இந்தியப் பெருநாடு நிர்வகிக்கப்படும் விதம் குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை தர இந்தியரும் அடங்கிய ராயல் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும்''.

என்னும் கோரிக்கை வெளியிடப்பட்டது. முதல் காங்கிரசிலே மொத்தம் ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இப்படி, இந்திய தேசியக் காங்கிரஸ் தோன்றிச் சரியாக ஒரு நூற்றாண்டு ஆகிறது.

வாழ்க, இந்திய தேசிய காங்கிரஸ்!

❖

# காங்கிரசுக்கு எம்மதமும் சம்மதம்!

விடுதலைப் போரின்போது, இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மகாசபை ஆண்டுதோறும் கூடுவது வழக்கமாகியிருந்தது. காங்கிரசானது சட்ட விரோத அமைப்பாக இந்திய அரசால் அறிவிக்கப் பட்டிருந்த கால கட்டங்களிலேகூட, ஒன்றிரு சந்தர்ப் பங்களிலே தடைச் சட்டத்தைத் தகர்த்து மகாசபை கூடிய துண்டு. காங்கிரசானது, தனது தேசியப் பண்பை வெளிப்படுத்தும் வகையில் வருடாந்திர மகாசபைகளில் பல மதத்தினரும் மாறி மாறித் தலைமை தாங்க வாய்ப்பளித்து வந்தது.

## *மதவாரி பெயர்ப் பட்டியல்*

1885-ல் நடந்த முதல் மகாசபையிலே, அன்றைய பெரிய வங்காளத்தைச் சேர்ந்த உமேஷ் சந்திர பானர்ஜி என்னும் இந்தியக் கிறித்துவர் தலைமை தாங்கினார். அதையடுத்தும் ஐந்து மகாசபைகளிலே இந்துக்களல்லாத பிற மதங்களைச் சேர்ந்த கனவான்களே தலைவர்களாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். முதன் முதலாக ஒரு இந்து கனவான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏழாவது மகாசபைகளுக்கு முறையே தலைமை வகித்த கனவான்களின் பெயர்ப் பட்டியலைப் பார்ப்போம்.

| ஆண்டு | நகரம் | பெயர் | சமயம் |
|---|---|---|---|
| 1885 | பம்பாய் | டபிள்யூ.சி. பானர்ஜி | கிறித்துவர் |
| 1886 | கல்கத்தா | தாதாபாய் நௌரோஜி | பார்ஸி |
| 1887 | சென்னை | பத்ரூதீன் தயாப்ஜி | முஸ்லிம் |
| 1888 | அலகாபாத் | ஜார்ஜ் யூல் | கிறித்துவர் |
| 1889 | பம்பாய் | வில்லியம் வெட்டர்பர்ன் | கிறித்துவர் |
| 1890 | கல்கத்தா | பெரோஸிஷாமேத்தா | பார்ஸி |
| 1891 | நாகபுரி | அனந்தாச்சார்லு | இந்து |

இப்படி, 1885 தொடங்கி காந்தி சகாப்தம் தோன்றி ஒரு நூற்றாண்டு நிறைவு பெறும் 1985 வரை நடந்த மகாசபைகளிலே பல்வேறு மதத்தினரும் மாறி மாறி தலைமைப் பதவியைப் பெறுவது எளிதான ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகிறது. இதற்கு எதிர்ப்போ, முணுமுணுப்போ ஏற்பட்டதில்லை. இது, காங்கிரசின் தேசியப் பண்பைக் குறிப்பதாகும்.

இந்தியாவின் மக்கள் தொகையில் மிகப்பெரும் பாலோர் இந்துக்களே. வருடாந்திர காங்கிரஸ் மகா சபை களுக்குப் பிரதிநிதிகளாக வருவோரிலும் இந்துக்களே

மிகுதியாக இருந்தனர். அப்படியிருந்தும், கல்வித் தகுதியும் நிர்வாகத் திறமையும் தேசபக்தியும் உடைய எல்லா மதத்தவருமே மகாசபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1907-ல் சூரத்தில் நடைபெற வேண்டிய மகாசபை ஒன்றுதான் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் ஏற்பட்ட கொள்கை ரீதியான மோதலால் தடைப்பட்டு விட்டது.

1885 தொடங்கி 1920 வரையுள்ள 35 ஆண்டுகளிலும் ஆண்டுதோறும் காங்கிரஸ் மகாசபை நடந்து வந்தது. 1918லும் 1920 லும் வருடாந்திர மகாசபை கூடுமுன்னர் விசேஷ மகாசபையும் நடைபெற்றது. ஒரு கனவானே ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பத்திலே தலைமைப் பதவி பெற்றதுமுண்டு.

பொதுவாக, இரண்டு விசேஷ மகாசபைகளிலும் 35 வருடாந்திர மகாசபைகளிலும் பதவி பெற்றவர்களை மதவாரி பிரித்துப் பார்ப்பது இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் தேசியத்தை அறிந்து கொள்ளத் துணை புரியும் அல்லவா! இதோ, அந்தப் பட்டியல்.

### *கிறித்துவர்கள்*

(1) உமேஷ்சந்திர பானர்ஜி, (2) ஆல் ஃபிரெட்வெப், (3) ஹென்றி காட்டன், (4) வில்லியம் வெட்டர்பர்ன், (5) ராம்சே மெக்டோனால்டு.

இவர்களிலே கடைசி நால்வரும் பிரிட்டனைச் சேர்ந்த ஐரோப்பியக் கிறித்துவராவர். இவர்களேயன்றி,

கிறித்துவப் பாரம்பரியத்தைச் சார்ந்திருந்து, பின்னர், பிரம்மஞான சங்கத்திற்கு மாறிய ஐரிஷ்காரரான அன்னி பெசன்ட் அம்மையாரும் 1917-ல் நடந்த கல்கத்தா மகாசபையிலே தலைமை தாங்கினார்.

***முஸ்லிம்கள்***

(1) பத்ருதீன் தயாப்ஜி, (2) ரகீம்துல்லா முகமது சயானி, (3) நவாப் சையத் முகமது, (4) டி. அசன் இமாம்.

(1920க்குப் பிற்பட்ட காந்தி சகாப்தத்திலேயும் அக்கீம் அஜ்மல்கான், மௌலானா முகமது அலி, டாக்டர் அன்சாரி, மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஆகிய முஸ்லிம் கனவான்கள் மகாசபைத் தலைவர்களான துண்டு.)

***பார்சிகள்***

(1) தாதாபாய் நௌரோஜி, (2) டி.இ. வாச்சா, (3) சர். பெரோஸ்ஷா மேத்தா.

பார்சிகளில் முதுபெரும் கிழவரான தாதாபாய் நௌரோஜி காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பதவியை மூன்று முறை பெற்றார்.

***இந்துக்கள்***

(1) பி. அனந்தாச்சார்லு, (2) சுரேந்திரநாத் பானர்ஜி, (3) சி. சங்கரன் நாயர், (4) ஆனந்த மோகன் போஸ், (5) ருமேஷ் சந்தர் தத், (6) நாராயண் கணேஷ்சந்திரவர்க்கர், (7) லால்மோகன் கோஷ்,

(8) கோபாலகிருஷ்ண கோகலே, (9) டாக்டர் ராஷ் பிகார கோஷ், (10) பண்டித மதன்மோகன் மாளவியா, (11) பிஷண்நாராயணதார், (12) ஆர். எம். முதோல்கர், (13) பூபேந்திரநாத் பாசு, (14) சத்யேந்திர பிரசன்ன சின்ஹா (15) அம்பிகாசரண் மஜும்தர், (16) பண்டித மோதிலால் நேரு, (17) லாலா லஜபதி ராய், (18) சேலம் சி. விசயராகவாச்சாரியார்.

பொதுவாக, 1885 தொடங்கி 1920 வரை நடந்த 35 வ்ருடாந்தர மகாசபைகளில் தலைமை வகித்தவர் களிலே, இந்துக்கள் 18 பேர், பிற மதத்தவர் 17 பேர்.

## *பெண்மைக்கும் தலைமை*

இந்திய தேசிய காங்கிரசின் வரலாற்றிலே பெண் மணிகள் நால்வர் மகாசபைத் தலைமைப் பதவியைப் பெற்றனர். அவர்கள் டாக்டர் அன்னிபெசன்ட் - 1917, கவியரசி சரோஜினி தேவி 1925, நெல்லி சென்குப்தா, சுதந்திர இந்தியாவில் இந்திரா காந்தி ஆகியோராவர்.

வங்காளப் பெருந்தலைவர் திரு. ஜே. எம். சென்குப்தாவின் மனைவி நெல்லி சென்குப்தா 1933ல் கல்கத்தாவில் தடையை மீறி நடந்த காங்கிரசில் தலைமை வகித்துச் சிறைபுகுந்தார்.

காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பதவியைப் பெற்ற தாழ்த்தப்பட்டவர் ஆந்திராவைச் சேர்ந்த திரு. சஞ்சீவய்யா ஆவார். இவர் சுதந்திர இந்தியாவில் இந்தப் பெருமையைப் பெற்றார்.

இந்திய தேசியக் காங்கிரசின் வரலாற்றிலே புரட்சிகர மான அரசியல் திருப்பங்களைக் கொடுத்த பெண்களிலே டாக்டர் அன்னிபெசன்டும் திருமதி இந்திரா காந்தியும் முக்கியமானவர்களாவர்.

### *பகுத்தறிவுக்கும் பாராட்டு*

இன்னொரு முக்கிய விஷயத்தையும் இங்கு சொல்லியாக வேண்டும். அது, மத நம்பிக்கையற்ற நாத்திகர்களும் காங்கிரஸ் மகாசபையிலே பெருமைக் குரிய இடத்தைப் பெற்றனர் என்பதாகும்.

தேசியக் காங்கிரசானது ''எம்மதமும் சம்மதம்'' என்ற தத்துவத்தை நடைமுறைப்படுத்தி வந்தேதோடு, மதமற்றவர்களுக்கும் தன்னிலே இடம் உண்டு என்பதனைப் புலப்படுத்தியிருக்கிறது. பிரிட்டனைச் சார்ந்த திரு. சார்லஸ் பிராட்லா என்பவர் உலகறிந்த நாத்திகராவார், டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், இவரைத் தம் குருவாகக் கொண்டிருந்த காலமும் உண்டு.

திரு. சார்லஸ் பிராட்லா, பிரிட்டிஷ் பார்லி மெண்டிற்கு முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ''கடவுள் சாட்சியாக'' என்று சொல்லிப் பிரமாணம் எடுத்துப் பதவி ஏற்க மறுத்தார். அதனால், உறுப்பினர் பதவியை இழந்து, அதே பிரச்சினை மீது மறு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்டார். இவர் காரணமாகத்தான் ''மனச்சாட்சி''ப்படிப் பிரமாணம் எடுத்துப் பதவி ஏற்கும் மரபும் பிரிட்டிஷ் பார்லி மெண்டில் ஏற்பட்டது. அது, உலகெங்கும் உள்ள

தெய்வ நம்பிக்கையற்றவர்களுக்குப் பயன்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

இத்தகு உலகறிந்த நாத்திகர், பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் பிரதிநிதியாக 1989ல் கல்கத்தா நகரில் நடந்த ஐந்தாவது காங்கிரஸ் மகாசபைக்கு அழைக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார். இவருக்கு அளிக்கும் வரவேற்பு இதழைத் தயாரிப்பதற்கென்று திரு. டபிள்யூ. சி. பானர்ஜி, சென்னை ஆதம், பெரோஸிஷா மேதா ஆகியோரைக் கொண்ட தனிக்குழு அமைக்கப்பட்டது.

### *'பிராட்லா செஷன்'*

காங்கிரசிலே தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்து இவர் நிகழ்த்திய அருமையான சொற்பொழி வானது, ''உண்மையான நாத்திகர் ஏகாதிபத்தியங்களின் எதிரியாகத்தான் இருப்பார், ஆதரவாளராக இருக்க மாட்டார், இருக்கவும் கூடாது'' என்பதனை உலகறியச் செய்தது. இவர் தமது வீரமிக்க பேச்சால் ஐந்தாவது காங்கிரஸ் மகாசபை ''பிராட்லா செஷன்'' என்று சரித்திர எழுத்தாளர்களால் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவுக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தத்தை ஒரு மசோதா வடிவில் தயாரித்து, அதை லண்டன் நாடாளுமன்றத்திலே பிரேரேபிப்பதற்கு ஐந்தாவது காங்கிரஸ் மகாசபையானது பிராட்லாவுக்கு அனுமதியளித்தது. அவரும் அந்த மசோதாவை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே முன் மொழிந்தார். மசோதா நிராகரிக்கப்பட்டதென்றாலும், அந்தப்

பணிக்காக அவர் இந்திய மக்களின் இதயங்களிலே இடம் பெற்றார். அந்தப் பணிக்காக அவரைப் பாராட்டும் தீர்மானம் ஒன்று ஆறாவது காங்கிரஸ் மகாசபையிலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. பிராட்லாவுக்கு அளித்த மிகச் சிறந்த மரியாதை காரணமாக இந்திய தேசியமானது, ''பகுத்தறிவு''க்குப் பகையானதன்று என்பதை ஆரம்ப காலத்திலேயே உலகறியச் செய்தது.

### *நேருஜியும் பகுத்தறிவாளரே!*

இராம பக்தரான காந்தியடிகளின் சகாப்தத்திலேயும் இந்திய தேசிய காங்கிரசிலே நாத்திகர்கள் மதிப்பிற்குரிய ஒரு தனியிடத்தைப் பெற்றிருந்தனர். அவர்களிலே தமிழ் நாட்டவரான தோழர் சிங்காரவேலரை இங்கு குறிப் பிட்டாக வேண்டும்.

''நான் மதவாதியல்ல, பொருள் முதல்வாதி'' என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொண்ட பண்டித ஜவகர்லால் நேருவை ராம பக்தரான காந்தியடிகள் தமது வாரிசாகத் தேர்ந்தெடுத்ததையும் இங்கு நினைப் பூட்டியாக வேண்டும்.

''உண்மையான ஒரு கம்யூனிஸ்டு சுத்தமான நாத்திகன்'' என்றார் தோழர் லெனின். விடுதலைப் போராட்ட காலத்திலே இந்திய கம்யூனிஸ்டுகள் தேசிய காங்கிரசிலே தனிப் பெரும் சக்தியாக விளங்கினர் என்பதனைத் தேசிய காங்கிரசின் வரலாறு காட்டுகிறது.

''இந்திய தேசியக் காங்கிரஸிடமிருந்துதான் தேசியம் தோன்றியது. விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசியம் வேறு, காங்கிரஸ் வேறு என்று சொல்ல முடியாத நிலையில் இரண்டும் ஒன்றாகவே இருந்தனவெனலாம். இதனாற்றான் காங்கிரசுக்கு நூற்றாண்டு நிறைவு கொண்டாடப்பட்டபோது இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது'' என்னும் பெயரில் நூல் எழுதி வெளியிட் டேன்.

ஆனால், இந்தியா விடுதலை பெற்றபின் தேசியம் வேறு, காங்கிரஸ் வேறு என்ற நிலை ஏற்பட்டது. விடுதலைக்குப் பின் காங்கிரஸ் என்ற அமைப்பு அரசியல் கட்சிகளில் ஒன்றாகிவிட்டது. தேசியம் என்பது அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவான சொத்தாகி விட்டது.

*30.4.89, செங்கோல்*

❖

# இந்திய தேசியம் நிறத் துவேஷமற்றது!

காங்கிரஸ் மகாசபை தோன்றிய நாள் தொடங்கித் தேசம் சுதந்திரம் பெற்ற நாள்வரை இந்தியப் பெரு நாட்டிலே கிறித்துவர்களான ஐரோப்பியர்கள் பல லட்சக் கணக்கிலே வாழ்ந்து வந்தனர். அவர்களிலே சிலர், அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருந்தனர். மற்றவர்கள் எல்லாம் வழக்கறிஞர்களாகவும், மருத்துவர்களாகவும், பாதிரிமார்களாகவும், கல்வி நிறுவனங்களிலே உயர்பதவி களை வகிப்பவர்களாகவும் இருந்து இந்திய சமுதாயத் திற்குத் தொண்டு புரிந்து வந்தனர், பெருவணிகர்க ளாகவும், தொழிலதிபர்களாகவும் இருந்தவர்களும் உண்டு.

சென்னையில் நடந்த மூன்றாவது (1887) மகாசபை வரை அரசாங்க உயர் பதவிகளிலிருந்த ஐரோப்பியர்களிலே இங்குமங்குமாக ஒரு சிலர் காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களிலே கலந்து கொண்டதுண்டு. தன்னை நெருங்கி வந்த வெள்ளை அதிகாரிகளை வரவேற்று, அவர்களை காங்கிரஸ் கௌரவித்தது. ஆனால் மூன்றாவது காங்கிரசுக்குப்பின், அதிகாரப்

பதவிகளிலிருந்த வெள்ளையர்கள் காங்கிரசை அண்டவும் அஞ்சி, ஒதுங்கினர். ஆயினும், அதிகாரி களல்லாத வெள்ளையர்களில் சிலர், காங்கிரஸ் மகாசபையின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து வந்தனர்.

இந்திய தேசியக் காங்கிரசானது, நிறத் துவேஷத்தைப் பாராட்டியதேயில்லை. இந்திய தேசத்தை அடிமைப்படுத்தி ஆண்டவர்கள் வெள்ளை நிறத்தவரேயாதலால், அதன் காரணமாக, இந்தியாவிலும் பிரிட்டனிலும் வெள்ளையர்கள் நிறவெறி ஆணவத்தை வெளிப்படுத்தியதுண்டு. அந்தச் சூழ்நிலையிலும், தன்னை மனமாற விரும்பி, ஆதரவு காட்டிய வெள்ளை யர்களைக் காங்கிரஸ் மகாசபை தன்னோடு ஐக்கியப் படுத்திக் கொண்டது.

## *24 ஆண்டுக் காலம் வெள்ளையரே பொதுச் செயலர்*

காங்கிரசைத் தொடங்கி வைத்த ஹ்யூம் துரைமகனார், தொடர்ந்து 24 ஆண்டுக்காலம் - அதாவது, 1885 முதல் 1908 வரை இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளராகப் பதவிவகிக்க அனுமதிக்கப்பட்டார்.

முதல் இரண்டு மகா சபைகளிலே தம்மைத் தாமே நியமித்துக் கொண்ட நிலையில் ஹ்யூம் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து வந்தார். அதன் பின்னர், ஆண்டுதோறும் மகாசபைப் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு,பதவி வகித்தார். முதல்

ஆறாண்டுக் காலத்திலே துணைச்செயலாளராக எவருமில்லாத நிலையில் பொதுச் செயலாளர் பொறுப்பை வகித்தார்.

பின்னர் 1891 தொடங்கி 1908 வரை இந்தியர் இருவர் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திரு. ஹ்யூம் அவர்களுக்கு உதவி புரிந்துவந்தனர்.

## *முதல் தலைவரும் வெள்ளைப் பெண்மணியே*

1885 தொடங்கி 1916 வரை வருடாந்திர காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை தாங்குபவர், அடுத்துவரும் ஓராண்டு முழுவதும் தலைமைப் பொறுப்பில் இருந்து, காங்கிரசை நடத்திச் செல்லும் வழக்கம் இருந்ததில்லை. பொதுக் கூட்டத் தலைவர் போல, மகாசபை முடிந்ததும், தலைவர் பொறுப்பும் முடிந்துவிடும். அதனால், வெள்ளை நிறத்தவரும் கிறித்துவருமான திரு. ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் அவர்களே, தொடர்ந்து 24 ஆண்டுக் காலம் காங்கிரசின் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வந்தார்.

இந்தியக் குடிமகளாகத் தம்மைப் பதிவு செய்து கொண்ட டாக்டர் அன்னிபெசன்ட் 1917-ல் கல்கத்தா காங்கிரசில் தலைமை ஏற்றதிலிருந்துதான் ஒரு மகா சபையின் தலைவரே அடுத்துவரும் மகாசபைக் கூட்டம் வரை தலைமைப் பதவியில் இருந்து கொண்டு காங்கிரசை நடத்திச் செல்லும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. டாக்டர் பெசன்டே விரும்பி, இந்த வழக்கத்தை

ஏற்படுத்தினார். இதனால், காங்கிரஸ் வளரவும் வலுப்பெறவும் வாய்ப்பு ஏற்பட்டது.

## *வெள்ளையரை மணந்த தமிழ்ப் பெண்*

இங்கிலாந்தில் பிறந்து இந்தியாவின் ஒரு பகுதியான சென்னையம்பதியிலே குடியேறி இந்தியக் குடிமகனாகவே தம்மை மாற்றிக் கொண்ட ஒரு ஆங்கிலேயரின் மகனான எர்ட்லி நார்ட்டன் என்னும் புகழ்மிக்க வழக்கறிஞர் காந்தி சகாப்தத்திற்கு முன்பு காங்கிரசிலே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முதல்வர் பொறுப்பிலிருந்த திரு. ஆதம் என்னும் வெள்ளையரும் ஆண்டுதோறும் காங்கிரஸ் மகாசபையிலே சென்னை ராஜ்யத்தின் பிரதிநிதியாகச் சென்று பங்குபெற்று வந்தார்.

அடையாறு பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் என்னும் ஐரிஷ் வெள்ளையரும், காங்கிரஸ் மகாசபையில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்றிருந்தார்.

சென்னை ராஜ்யத்திலே அப்போது வானோங்கி வளர்ந்திருந்த தொழிற்சங்க இயக்கத்திலும் முன்னணி யில் இருந்தார்.

தமிழகத்துப் பிராமணப் பெண்மணியான திருமதி. ருக்மணி அம்மாளை மணந்துகொண்டு தமிழகத்தின் மாப்பிள்ளையாகவே மாறிவிட்டார். வங்க மாநிலப்

பெருந்தலைவரான திரு. ஜே.எம். சென்குப்தா நெல்லி என்ற வெள்ளைப் பெண்மணியை மணந்தார்.

## *கசின்ஸின் கடுந்தவம்*

டாக்டர் மார்கரட் கசின்ஸ் என்பவர் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த வெள்ளை நிறப் பெண்மணியாவார். ஐரிஷ் நாட்டில் பிறந்து இந்தியக் குடிமகளாக மாறியவர். காந்தி சகாப்தத்திலே, சென்னை நகரில் சட்டத்தை மீறியதற்காக இவ்வம்மையார், ஓராண்டு காலச் சிறைத் தண்டனை பெற்றார்.

காந்தி சகாப்தத்திற்கு முன்பே, டாக்டர் பெசன்ட் அம்மையாரும், டாக்டர் அருண்டேலும் சுயாட்சி (ஹோம்ரூல்) இயக்கத்தை நடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டு, இரண்டு மாத காலம் உதகமண்டலத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

காந்திசகாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலே, ஆண்டு தோறும் நடைபெறும் காங்கிரஸ் மகாசபைக்குப் பிரிட்டனிலிருந்து தொழிற் கட்சி எம்.பி.க்களான வெள்ளையர்கள் தனி ஒரு குழுவாகவே வந்து கலந்து கொள்வது வழக்கமாக இருந்தது. அவர்களில் சார்லஸ் பிராட்லா என்ற நாத்திகரைப் பற்றி முன்பே அறிந்தோம்.

## *வெறுத்தது வெள்ளை ஆதிக்கத்தையே !*

காந்தி சகாப்தமானது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கடும்போர் நடத்திய காலமாகும். ''இம்'' என்றால் சிறைவாசம், ஏன்?' என்றால் வனவாசம்'' என்ற

நிலையிலே, காங்கிரஸ்காரர்கள் வெள்ளை நிறத்தவர் ஆட்சியில் வேதனையுற்றதுண்டு. அந்தக் காலத்தில் கூட இந்திய தேசிய காங்கிரசும் - குறிப்பாக, காங்கிரசைச் சேர்ந்த தனி நபர்களும் நிறத்துவேஷம் கொண்டிருந்த தில்லை.

''வெள்ளை நிறத்தவரை நாங்கள் வெறுக்க வில்லை. அவர்களுடைய அரசியல் ஆதிக்கத்தையே வெறுக்கிறோம்'' என்று காந்தியடிகள் அடிக்கடி கூறி, நிறத்துவேஷம் என்ற நோய் இந்திய தேசிய காங்கிரசை நெருங்காதபடிக் காத்து வந்தார்.

மிஸ் ஸ்லேடு என்னும் பிரிட்டிஷ் பெண்மணி ஒருவர் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் தங்கி அவருடைய சிஷ்யையாகவே மாறியதை உலகம் அறியும். அவர் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி ஒருவரின் மகள் ஆவார். இவ்வம்மையார் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தவர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கதாகும். இவ்வம்மையார் தமது பெயரை இந்திய மொழியில் மீரா பென் என்று மாற்றிக்கொண்டார்.

அகாதா ஹாரிசன் என்ற வெள்ளை மூதாட்டியும் காந்தியடிகளின் பக்தையாகி, இந்திய தேசியத்துடன் இரண்டறக் கலந்தார்.

### *பேடன்பவல்*

திருப்பத்தூர் (வ.ஆ) நகரைச் சேர்ந்த கிறித்துவப் பாதிரியான டாக்டர் பேடன் பவல் என்ற வெள்ளையர்,

சென்னை நகரில் காங்கிரஸ் தொண்டர்கள் அன்னிய துணிக்கடை முன்பு மறியல் செய்த நேரத்திலே, போலீசார் தடியடி நடத்தியதைப் புகைப்படம் எடுத்ததற்காகக் கைது செய்யப்பட்டார்.

இந்த நிகழ்ச்சி பற்றிப் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே வினா எழுப்பப்பட்டு, எதிர்க்கட்சியினரால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலே தலையிட்டதால் டாக்டர் பேடன்பவலுக்கு விடுதலை கிடைத்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் டாக்டர் பேடன்பவல் காங்கிரஸ்காரராகவே மாறினார்.

காந்தி சகாப்தத்திலே, தாம் சத்தியாக்கிரகப் போரைத் தொடங்க நேர்ந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கான முன்னறிவிப்புக் கடிதத்தைத் தமது ஆசிரமவாசியான ஒரு வெள்ளையரிடமே கொடுத்து வைசிராயிடம் சேர்ப்பிக்கச் செய்தார் காந்தியடிகள். உப்பு சத்தியாக்கிரகம் தொடங்குமுன்பு, தமது சபர்மதி ஆசிரம வாசியான ரெஜினால் ரெனால்டு எனற வெள்ளை யரிடமும், ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது தமது பக்தை யான மீரா பென் (ஸ்லைடு) அவர்களிடமும் கடிதம் கொடுத்து வைசிராய்க்கு அனுப்பினார். இந்திய காங்கிரஸ் நிறத்துவேஷ மற்றது என்பதனை உலகறியச் செய்யவே அடிகள் இதனைக் கடைப்பிடித்தார்.

அடிகளார், தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நடத்திய காலத்திலே தீனபந்து ஆண்ட்ரூஸ் என்னும் ஐரோப்பியப் பெருமகனாரைத் தம்முடைய நண்பராகப் பெற்றார். அவர், அடிகள் இந்தியா திரும்பிய

பின்னும் இங்கு வந்து அவரோடு தொடர்பு கொண்டிருந்து இந்திய விடுதலைப் போருக்குப் பேராதரவு காட்டி வந்தார். இவர் காங்கிரசில் இரண்டறக் கலந்து கொண்டார்.

## *இந்திய தேசியம் முழுநிலவு போன்றது*

இப்படி, மத வேற்றுமையையும் நிறவேற்றுமையையும் கடந்த தேசிய ஸ்தாபனமாக காங்கிரஸ் விளங்கி வந்திருக்கிறது என்பதற்கு இன்னும் எத்தனை எத்தனையோ சான்றுகளைக் காட்ட முடியும். விரிவஞ்சி இத்துடன் விடவேண்டியதாயிற்று.

கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திலே காங்கிரசின் தேசியமானது, பூரண சந்திரனாகவே தண்ணொளி தந்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

# சமூக சீர்திருத்தத்திலும் பங்கு

இந்திய தேசிய காங்கிரசைச் சமுதாய சீர்திருத்த இயக்கமாக மட்டும் நடத்திவரவே சர். ஆலன் ஆக்டே வியன் ஹ்யூம் முதலில் நினைத்தார். ஆனால், வைசிராய் லார்டு டப்ரின் ஆலோசனைப்படி, அதனை அரசியல் இயக்க மாக்கினார். தொடக்க ஆண்டுகளில் சமுதாயச் சீர்திருத்தத்திலும் அது கருத்துச் செலுத்தியது.

## *சீர்திருத்த மாநாடு*

காங்கிரஸ் வருடாந்திர மகாசபையின் முதல் நாள் கூட்டம் ''சமூக சீர்திருத்த மாநாடு'' என்னும் பெயரிலே நடத்தப்பட்டு வந்தது. ஆனால், ''சமூக சீர்திருத்தம்'' என்பது, இந்து மதத்திற்கு மட்டுமே தேவைப்படுகின்ற ஒரு பணியாக காங்கிரசிலிருந்த இஸ்லாமிய கனவான்கள் கருதினர். மற்றும், சமூக சீர்திருத்தம் என்னும் பெயரால் பசுவதையைத் தடுக்கவேண்டுமென்று இந்து கனவான் கள் வலியுறுத்தி வந்ததை இஸ்லாமிய கனவான்கள் விரும்பவில்லை. லோகமான்ய திலகர் போன்ற வைதிக இந்து கனவான்கள் ஆளுஞ்சாதியினரான ஆங்கிலேயருள் ளிட்ட பிற சமயத்தினரையும் தன்னுட் கொண்டுள்ள காங்கிரசானது, இந்து சமய சீர்திருத்தத்தில் ஈடுபடுவதை விரும்பவில்லை.

இந்தக் காரணங்களால், சில ஆண்டுகளுக்குப் பின்னர், காங்கிரஸ் வருடாந்திர மகாசபையின் முதல் நாளில் சீர்திருத்த மாநாடு நடத்தப்படுவது கைவிடப்பட்டது. ஆயினும், சமூக சீர்திருத்தத்தில் மிகுந்த ஆர்வமுடைய மகாதேவ கோவிந்த ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே போன்றவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் ஆண்டுதோறும் காங்கிரஸ் மகாசபைப் பந்தலிலேயே சமூக சீர்திருத்த மாநாட்டைச் சில ஆண்டுகாலம் நடத்தி வந்தனர்.

### *சமாஜங்களின் பணி*

இன்னொரு விஷயத்தையும் இங்கு நினைவூட்ட வேண்டும். காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முன்பே, இராசாராம்மோகனர் பிரம்ம சமாஜத்தையும் சுவாமி தயானந்த சரசுவதி ஆரிய சமாஜத்தையும் தோற்றுவித்துவிட்டனர். இந்த இரண்டு சமாஜங்களும் இந்து சமய சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டு வந்தன. இநதுக்களிடையில் மூட நம்பிக்கையை வளர்ப்பன வென்று காரணங்காட்டி, விக்கிரக வழிபாட்டையும் இதிகாச புராணங்களையும் இந்த சமாஜங்கள் கண்டித்து வந்தன. வேதங்களை மட்டுமே உடன்பாடாக ஏற்றன. ஆரிய சமாஜம், ''வேத காலத்திற்குச் செல்வோம்'' என்றே குரல் கொடுத்துவந்தது.

### *சூன்யமாக இல்லை!*

தமிழ் நாட்டிலும் வடலூர் இராமலிங்க சுவாமிகள் தோற்றுவித்த சமரச சுத்த சன்மார்க்க சங்கமானது இந்திய

சமயங்களிடையில் ஒருமைப்பாடு காணும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இதிகாசங்களும் புராணங் களும் வெறும் கற்பனைகள் என்று கூறி, அவற்றை மக்கள் கண்மூடித்தனமாக நம்புவதைக் கண்டித்தது.

இந்தச் சூழ்நிலையில் சமய வழிப்பட சீர்திருத்தப் பணியில் ஈடுபடக் காங்கிரசுக்கு அதிக சந்தர்ப்பமிருக்க வில்லை, அந்த இடம் சூன்யமாக இருக்கவில்லை அல்லவா! அதனால், இந்தியர் அனைவரையும் ஒருமைப் படுத்தும் தேசியப்பணியில் மட்டுமே காங்கிரஸ் ஈடுபட்ட தென்றாலும், காங்கிரஸ் நடத்திய வருடாந்திர மகா சபைகளின் விளைவாக, இந்திய மதங்களிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த பூசலானது குறைந்து, தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி வலுப் பெறலானது.

காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முன்பு ஆளுஞ் சாதியாரான ஆங்கிலேயர் ஸ்தாபன ரீதியாகத் திரண்டிருந்தனர். முதலில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியும் பின்னர் சட்ட ரீதியில் இயங்கி வந்த இந்திய அரசும் ஆளுஞ்சாதியார் ஒருமைப்பட உதவிகரமாக அமைந்தன. அதுபோல, ஆளப்படும் சாதியாரான இந்தியரனைவரையும் ஒருமைப்படுத்தவும், அவர் களுடைய வாழ்க்கை உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் அனைத்திந்திய ரீதியாக ஒரு அமைப்பு தேவைப்பட்டது. அந்தத் தேவையை நிறைவு செய்தது இந்திய தேசிய காங்கிரஸ்.

அரசியல் பொருளாதார ரீதியில் பார்க்குமிடத்து, இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றிய காலத்திலே பாரதப்

பெருநாடு முழுவதிலும் மக்களில் மிகப் பெரும்பாலோர், வறுமை - கல்வியின்மை - பிணி ஆகிய கொடுமைகளால் அவதியுற்று வந்தனர். தாங்கள் அனுபவித்து வரும் கொடுமைகளுக்கு நாடு அன்னியரால் சுரண்டப்படுவதுதான் காரணமென்பதை உணர்ந்து கொள்ளவும் மக்கள் சக்தியற்றிருந்தனர். அதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவும் அனைத்திந்திய ரீதியில் ஒரு அமைப்பு தேவைப்பட்டது. ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்றவை சமய வழிப்பட்ட தேசிய அமைப்புகளாதலால் அரசியல் - பொருளாதார ரீதியில் மக்களுக்குத் தொண்டாற்ற அந்த சமாஜங்கள் நினைக்கக் கூட இல்லை. அதற்கு, ''அரசாங்கத்திற்கு எதிரான அரசியல்'' எனப் பெயர் வைத்து, ஒதுங்கிவிட்டன.

### *கல்வித் தொண்டு*

காங்கிரசானது, தான் தோன்றிய பின்னுள்ள இருபதாண்டு காலம்வரை அரசியலில் மிதவாதிகளின் முகாமாகவே இருந்து வந்தது. பொதுவாக, இந்திய சமுதாயத்திலுள்ள படித்த வர்க்கத்தின் தேவைகளைத் தேடித் தருவதிலேயே அது கருத்துச் செலுத்தி வந்தது. அப்போதும், தாதாபாய் நௌரோஜி, லோகமான்ய திலகர், வ.உ.சி. போன்ற பெருந்தலைவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் கருத்துச் செலுத்தி வந்தனர்.

### *தாதாபாயின் தொண்டு*

இந்தியாவில் தேசிய காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பே பார்ஸியான தாதாபாய் நௌரோஜி

இங்கிலாந்தில் குடியேறி, பார்ஸி சமூகத்திற்குரிய நெறிப்படி வாணிபத்தில் ஈடுபட்டு வந்தார். அந்தக் காலத்திலும் லண்டனிலிருந்தபடி ''இந்தியாவின் குரல்'' (வாய்ஸ் ஆப் இந்தியா) என்னும் பெயரிலே ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை நடத்தி, இந்தியப் பெருநாட்டிலே பிரிட்டிஷ் ஆட்சியானது சமுதாயத்தின் அடித்தளத் திலுள்ள மக்களுடைய வறுமையையும் கல்வியின்மை யையும் போக்க அக்கறை காட்டாததனைக் கண்டித்து எழுதி வந்தார்.

லண்டனிலே பல பகுதிகளில் கூட்டங்கள் நடத்தி, ''இந்தியாவில் பிரிட்டனுடைய நியாயமற்ற ஆட்சி'' என்னும் தலைப்பிலே பேசி, இந்தியருக்குப் பிரிட்டிஷ் ஆட்சி இழைத்து வரும் கொடுமைகளைப் பிரிட்டனி லுள்ள வெள்ளையர்களுக்கு உணர்த்தி வந்தார். ''இதற்கான ஒரே பரிகாரம் சுயராஜ்யம்''தான் என்றார். சுயராஜ்யம் என்னும் சொல்லை முதன்முதலில் லண்டனிலேயே பயன்படுத்தினார்.

சுமார் ஆயிரம் பக்கங்களுடைய ''இந்தியாவின் வறுமை'' (பாவர்ட்டி ஆப் இந்தியா) என்ற மிகப் பெரிய அளவிலான ஆங்கில நூலை எழுதி, அதன் பிரதிகளைப் பல்லாயிரக் கணக்கில் பிரிட்டிஷ் மக்களிடையே பரப்பினார். இந்தியாவை ஆட்சி புரியும் வெள்ளை வர்க்கத் தின் கோட்டையிலேயே முதன் முதலில் குரல் கொடுத்த பெருமை தாதாபாய் நௌரோஜிக்கு உரியதாகும்.

இந்தியாவிலிருந்த தேசிய காங்கிரஸ் தலைவர் களிலே, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்ய

மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பிரதிபலித்து எழுதவும் பேசவும் தொடங்கிய முதல் தலைவர் லோகமான்ய திலகராவார்.

இதற்காக ஆங்கிலத்தில் ''மராட்டா'' என்னும் பெயரிலும் மராத்தி மொழியில் ''கேசரி'' என்னும் பெயரிலும் வார இதழ்களை வெளியிட்டு வந்தார். புனாவிலே பிளேக் நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு நிவாரணம் தருவதற்கென்று நியமிக்கப்பட்ட வெள்ளை அதிகாரிகளில் சிலர், மக்களுக்கு இழைத்த கொடுமை களைக் கண்டித்துத் தலையங்கம் எழுதியதற்காக 1891-ல் ஒன்றரையாண்டுச் சிறைத் தண்டனை பெற்றார். தமிழகத்திலும் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், ஆங்கிலத்தில் ''இந்து'' என்ற பெயரில் வார இதழைத் தொடங்கி, பின்னர் அதனை நாளிதழாக்கினார். சாதாரண மக்களோடு தொடர்பு கொள்ள விரும்பி ''சுதேச மித்திரன்'' என்னும் பெயரில் தமிழ் நாளிதழையும் தொடங்கினார்.

### *சீர்திருத்தம் எது?*

இப்படி, இந்திய தேசிய காங்கிரஸ் படுமிதவாதி களின் கைகளில் சிக்கியிருந்த காலத்தில் கூட, அதைச் சார்ந்திருந்த தலைவர்களில் சிலரோ பலரோ சமுதாயச் சீர்திருத்தப் பணியில் கருத்துச் செலுத்தி வந்தனர். மக்களிடையே நிலவிய கல்வியின்மையைப் போக்கு வதே உண்மையான சமுதாயச் சீர்திருத்தப் பணி என்று அவர்கள் நம்பினர்.

ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே, லாலா லஜபதி ராய் போன்ற தலைவர்கள் சமூக சீர்திருத்தவாதி களாவர். லஜபதி ஆரிய சமாஜியாகவும் விளங்கினார். திலகர், ரானடே, கோகலே ஆகிய மூவரும் புனா நகரவாசிகளாவர். சமுதாயச் சீர்திருத்தத்திலே திலகருக்கு மிகுந்த அக்கறை உண்டாயினும், சமயச் சீர்திருத்தத் திலே அவர் அதிக அக்கறை காட்டவில்லை. அதிலே அவர் மிதவாதி. ஆயினும், மக்களனைவரும் சமமாகக் கல்வி பயில வேண்டுமென்பதிலே ஆர்வங் காட்டி, புனாவில் ''பொதுஜனக் கல்லூரி''யை நிறுவினார்.

ரானடே ''சார்வ ஜனிக் சபா'' என்னும் பெயரில் சமயச் சீர்திருத்த அமைப்பு ஒன்றை நிறுவினார். கோபால கிருஷ்ணகோகலே, இந்திய மக்களிடையே நிலவிய கல்வியின்மையைப் போக்குவதிலே எல்லை யற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். அதற்கென 1905-ல் ''இந்திய ஊழியர் சங்கம்'' என்ற பெயரில் ஒரு அமைப்பை நிறுவினார். உயர்தரக் கல்வி கற்றவர்களில் சிலரேனும் செல்வம் பெருக்குவதையும் உயர் பதவிகளை அடை வதையும் விரும்பாமல், இந்தியப் பொது மக்களுக்கு ஊழியம் செய்வதிலேயே ஈடுபட வேண்டுமென்று கோகலே போதித்து வந்தார். அப்படிப்பட்டவர்களையே இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்த்துவந்தார்.

### கல்வி மசோதா

கோகலே, 1902-ல் சொந்தச் செல்வாக்கால் இந்திய சட்ட சபையிலே இடம் பிடித்துக் கொண்டார்.

அச்சபைக்குள் சென்றதும் ''கட்டாய ஆரம்பக் கல்வி மசோதா'' என்னும் பெயரில் ஒரு சட்ட முன்வடிவைப் பிரேரேபித்தார். ''இந்தியாவில் பள்ளிக்குச் செல்லும் பருவத்தை (ஐந்து வயதை) அடைந்துவிட்ட குழந்தை களுக்கெல்லாம கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வி தருவதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்'' என்பது மசோதாவின் குறிக்கோள். இந்த மசோதாவை முன் மொழிந்து அறிஞர் கோகலே பலமணி நேரம் சொற் பொழிவாற்றினார். அப்போதெல்லாம் இந்திய சட்ட சபையில் வைசிராய்தான் தலைமை வகிப்பது வழக்கம். கட்டாய ஆரம்பக்கல்வி மசோதாமீது அறிஞர் கோகலே நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டு வைசிராய் கவர்ச்சியுற்றார்.

''இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி மக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகள் பலவாயினும், அவற்றுள் தலையாயது இந்தியக் குழந்தைகளுக்குக் கட்டாய மாகவும் இலவசமாகவும் கல்வி தர மறுப்பதாகும். அதன் மூலம் எதிர்காலத் தலைமுறையினரையும் அறியாமை யிலும் மூடநம்பிக்கையிலும் ஆழ்த்தி வைக்க முயல்வ தாகும்'' என்று கூறி, சட்ட சபைக்குத் தலைமை வகித்த வைசி ராயின் காதுகள் கேட்க அவரது ஆட்சியைக் கண்டித்தார்.

அப்போது மத்திய அரசில் எவரும் அமைச்சர் என்னும் பெயரில் பதவி வகிக்கவில்லை. ஒவ்வொரு இலாகாவின் தலைவருக்கும் 'செயலர்' என்றே பெயர். அவர்கள் வெள்ளையர்களே! அதனால், கல்வித்துறைச் செயலரான வெள்ளையர்,

*"இந்தியர்களை அறிவாளிகள் ஆக்குவதோ, அவர்களிலிருந்து வருங்காலத் தலைவர்களைத் தயாரித்து அளிப்பதோ பிரிட்டிஷ் ஆட்சியின் நோக்கமல்ல; அது எங்களால் இயலாத காரியமும் கூட. அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்குத் தேவைப்படும் சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிக்கு மளவுக்கு இந்தியருக்குக் கல்வி தருவதுதான் எங்களால் சாத்தியமாகும்."*

என்று ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறினார்.

இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது வருடாந்திர மகாசபையிலிருந்து, அம் மகாசபையின் பந்தலிலேயே "இந்தியக் கல்வி மாநாடு" என்ற பெயரிலே, காங்கிரசைச் சேர்ந்த தேசியத் தலைவர் களிலே சிலர் தனியாக சில ஆண்டுகள்வரை மாநாடுகள் நடத்தி வந்தனர். அதிலே 5, முதல் 14 வயதுவரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வி தரவேண்டுமென்றும், அந்தக் கல்வியையும் தாய்மொழியின் மூலமே அளிக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானங்களை நிறை வேற்றி வந்தனர்.

### பகிஷ்காரம்!

காந்தி சகாப்தத்திற்கு முன்பே இந்திய தேசிய காங்கிரசானது, சமுதாயச் சீர்திருத்தத்திலே அக்கறை காட்டி, அதற்கெனத் தனியாக வேலைத் திட்டம் ஒன்றையும் வகுத்துக் கொண்டது. சமுதாயச் சீர்திருத்தம்

என்பது பழைய நம்பிக்கைகளைப் பழித்தும் இழித்தும் பிரச்சாரம் செய்வதுதான் என்று கருதும் சீர்திருத்தவாதிகள் இந்த உண்மையை உணராமல் காங்கிரசை வெறும் விடுதலைக்குப் பாடுபட்ட அரசியல் அமைப்பாகவே கருதுகின்றனர்.

இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியாளர், மக்களுக்கு அற்ப சொற்ப அளவிலேனும் அளித்துவரும் கல்வி யானது, அடிமைப் புத்தியை வளர்ப்பதாகவே இருந்து வருகிறது என்பதனைத் தலைவர்கள் தம்பட்டமடித்துச் சொல்லி வந்தனர். அவ்வாறு அடிமைப் புத்தியை வளர்க்கும் அரசாங்கக் கல்வி நிறுவனங்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற இயக்கமானது, 1921க்குப் பின்னுள்ள காந்தி சகாப்தத்தில்தான் தோன்றியது. அது, ஒத்துழையாமை இயக்கத்தின் வேலைத் திட்டங்களுள் ஒன்றாகவும் அமைந்தது. ஆனால், காந்தி சகாப்தத்திற்கு முன்பே - மிதவாதிகள் எனப் பெயர் பெற்றோர் காங்கிரசை நடத்திக்கொண்டு வந்தபோதே - ''தேசியக் கல்வி'' என்னும் சித்தாந்தத்தின்படி சமுதாயத்தின் காங்கிரசால் முயற்சி எடுக்கப்பட்டது. இது, சமூக சீர் திருத்தத்திற்குப் புறம்பானதல்ல.

### *மூட நம்பிக்கைக்கு முதல் அடி!*

இந்த வகையிலே, இந்திய தேசிய காங்கிரசானது, சமுதாயச் சீர்திருத்த இயக்கமாகவும் விளங்கியது. ''கல்வியின்மையானது கடந்த பிறவியில் செய்த பாவத்தின் விளைவு'' என்று நம்பினர் இந்திய மக்கள்.

இந்த மூடநம்பிக்கைக்கு முதல் அடி கொடுத்ததும் காங்கிரஸ் தொடங்கிய தேச விடுதலை இயக்கம்தான்.

''பாரத மக்களிடையே பட்டினிப் பட்டாளம் பெருகிவருவதற்குக் காரணம், முற்பிறப்புப் பாவம் அல்ல; அன்னிய நாட்டார் இந்த நாட்டைச் சுரண்டிச் செல்வதன் தீய விளைவு'' என்று சொல்லி, மக்களுடைய அறிவைச் சரியான திசைக்குத் திருப்பிவிட்டதும் தேசிய காங்கிரஸ்தான்.

## *சொர்க்கமும் நரகமும்*

மக்களுக்கு அக்காலத்திலும் சொர்க்கத்திலும் நரகத்திலும் நம்பிக்கை இருந்தது. சமய நம்பிக்கையற்ற சீர்திருத்தவாதிகள், ''அதெல்லாம் பொய் பொய்யே!'' என்று முழங்குவதோடு தங்கள் திருப்பணி தீர்ந்து விட்டதாகக் கருதினர்.

காங்கிரசைச் சேர்ந்தவர்களோ, ''நரகமும் சொர்க்கமும் வேறு எங்கோ இல்லை; சொந்த நாட்டி லேயே அன்னியருக்கு அடிமைப்பட்டு வாழ்வதுதான் நரக வாழ்வு. அந்த அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வாழ்வதுதான் சொர்க்க வாழ்வு'' என்று மக்களுக்குச் சொல்லி வந்தனர். இதிலேயும் மக்களுடைய அறிவைக் கற்பனைத் திசையிலிருந்து திருப்பி, அறிவார்ந்த யதார்த்தப் பாதையிலே அவர்களை நடைபோடச் செய்த பெருமை இந்திய தேசிய காங்கிரசுக்கே உரியதாகும்.

*" நாலுதிசையும் ஸ்வாதந்தர்ய*
*நாதம் எழுகவே!*
*நரகமொத்த அடிமை வாழ்வு*
*நைந்து கழிகவே!*

என்றார் பாரதியார். அவரே 'வானகம் இங்கு வந்திடல் வேண்டும்' என்றும் பாடினார். 'சொர்க்கம்' என்னும் பொருளிலேயே 'வானகம்' என்னும் சொல்லைப் பயன்படுத்தினார்.

சமுதாயச் சீர்திருத்தம் என்னும் பெயரிலே, தனியாக ஒரு இயக்கத்தைக் காங்கிரஸ் நடத்தவில்லை. அப்படி நடத்தி வைதிகர்களோடு மோதுவதும், அவர்களால் தூண்டப்பட்டு மூடநம்பிக்கைப் பாதையிலே நடைபோடும் மக்களோடும் போராடுவதும் உள்நாட்டுக் குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும். அதனால் அன்னிய ஆட்சி நிலைத்துப்போய் விடும்.

இந்த உண்மையைக் காந்தி சகாப்தத்திற்கு முன்பும் சரி; காந்தி சகாப்தத்திலும் சரி; இந்திய தேசிய காங்கிரசார் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால், இந்தியாவின் விடுதலை இயக்கத்தையே சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக்கும் வகையில் எதிர் மறையில் காங்கிரஸ் தலைவர்கள் செயல்பட்டனர்.

## *'காங்கிரஸ்' ஒரு தத்துவம்!*

இந்திய தேசிய காங்கிரசானது இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலும் ஆண்டாண்டுதோறும் தனது

பேரவையை அடுத்தடுத்து நடத்தி வந்ததன் காரண மாகத் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி மக்களிடையே வலுப்பெற்று வந்தது. ஒவ்வொரு மகாசபையிலும் பல்வேறு மதத்தினரேயன்றித் தனித் தனி மொழிகள் வழங்கும் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். இந்துக்களில் நால்வேறு வருணத்தவரும் பங்கு கொண்டனர். அவர்களிலே, ஏற்றத்தாழ்வுடைய பல்வேறு சாதியினரும் சம அந்தஸ்திலே பங்கு கொண்டனர். இந்த அதிசயம் காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பு இந்திய நாட்டில் நிகழ்ந்ததில்லை. இதனாற்றான், "காங்கிரஸ்" என்னும் பெயரில் ஒரு ஸ்தாபனம் தோன்றிய நாளை இந்திய தேசியம் பிறந்த நாளாகக் கருதி, அதற்கு இந்த ஆண்டிலே நூறு வயது நிறைவு பெறுவதாக நம்ப வேண்டியிருக்கிறது. "காங்கிரஸ்" என்பது ஒரு ஸ்தாபனம் மட்டுமல்ல; அது ஒரு தத்துவம்!

1885ல் நடந்த முதலாவது வருடாந்திர மகா சபையிலே 72 பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொண்டிருக்க, இந்த எண்ணிக்கை ஆண்டுக்காண்டு வளர்ந்து வளர்ந்து காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்தை அதிகார பூர்வமாக ஏற்றுக் கொண்ட நாகபுரி (1921) காங்கிரசிலே 14583 பிரதிநிதிகள் வெள்ளம் போல் குழுமினர், அதற்கு முந்திய மகாசபையில் கூட, 7031 பிரதிநிதிகள்தான் திரண்டிருந்தனர். நாகபுரி காங்கிரசிலே ஒரு நவபாரதம் காட்சியளித்ததெனலாம். அதிலே "சேலம் கிழவர்" எனப்படும் திரு. சி. விசயராக வாச்சாரியார் தலைமை வகித்தார்.

*''விஸ்வரூபம்!''*

வருடாந்திர மகாசபை கூடியபோதெல்லாம், அதிலே கலந்து கொண்ட பிரதிநிதிகள், ஒரே பந்தியில் அமர்ந்து விருந்து அருந்தினர். ஆம்; ஆண்டுதோறும் ''சமபந்தி விருந்து'' நடைபெற்றது காங்கிரஸ் பந்தலிலே!

சாதியாலும் வருணத்தாலும் மதத்தாலும் மொழி யாலும் வேறுபட்டவர்கள் எல்லாம் எத்தகைய ஏற்றத்தாழ்வுமின்றி ஒரே பந்தியில் அமர்ந்து உண வருந்தினர். இந்தப் புதுமை அல்லது புரட்சி தொடங்கியது காங்கிரசிலேதான்.

இதற்கு முன்பு ''மகாசபை'' அல்லது ''மகாநாடு'' என்னும் பெயரில் நாடு தழுவிய முறையில் பலர் கூடியிருப்பார்களானால், அது ஒரு மதம் சம்பந்தப்பட்ட தாகத்தான் இருக்கும், இல்லையேல், ஒரு வருணம் அல்லது ஒரு சாதி சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும். காங்கிரஸ் மகாசபைகளிலோ, இந்தியர் என்னும் பெயரால் பிரதிநிதிகள் ஒருங்கு கூடியதால் தேசியம் ''விஸ்வரூபம்'' எடுத்துக் காட்சியளித்தது.

காந்தி சகாப்தத்திலே, மாநில காங்கிரஸ் கமிட்டிகள் மொழி அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டன வாதலால், மாநிலந்தோறும் - ஏன், மாவட்டந்தோறும் ''அரசியல் மாநாடு'' என்னும் பெயரால் காங்கிரஸ் பேரவைகள் ஆண்டுதோறும் நடைபெறலாயின.

***பாரதியாரின் பரவசம் !***

தமிழ் நாட்டிலும் மாநில - மாவட்ட காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்றன. அதனோடு சேர்ந்து ''சீர்திருத்த மாநாடு'' நடப்பதும் வழக்கமாகியிருந்தது. மகாகவி பாரதியார் சீர்திருத்த மாநாட்டை வரவேற்றுச் ''சுதேச மித்திரனி''ல் எழுதினார்.

அவர் வரவேற்று எழுதியது, 1920 சூன் 21ல் நெல்லையில் நடைபெற்ற தமிழ் மாகாண 22ஆவது அரசியல் மாநாட்டையும், அந்த மாநாட்டுப் பந்தலி லேயே சூன் 22, 23 தேதிகளில் நடைபெற்ற 22வது ஆசாரத்திருத்த மகாசபையையுமாகும். அது வருமாறு;

''தமிழ் நாட்டு மக்களே! ஆரம்ப முதல் சமீப காலம் வரை ஆசாரச் சீர்திருத்தத் தலைவர்கள் பெரும்பாலும் தேசாபிமானம், ஸ்வபாஷாபிமானம், இந்திய நாகரிகத்தில் அனுதாபம் இம்மூன்றும் இல்லாதவர்களாக இருந்து வந்தபடியால் பொது ஜனங்கள் இவர்களுடைய வார்த்தையைக் கவனிக்க இடமில்லாமல் போய்விட்டது. எனினும் அவர்களுடைய கொள்கைகளில் பலவும் உத்தமமானவை என்பதில் ஐயமில்லை.

''இப்போது இம்முயற்சி தேச ஜனங்களின் பொதுக் காரியமாகப் பரிணமித்துவிட்டது. எனவே, இவ்வருஷத்து மகாசபையில் தமிழ் மக்கள் பெருந் திரளாக எய்தி நின்று, சபையின் விவகாரங்கள் பெரும்பாலும் தமிழிலேயே நடைபெறும்படியாகவும், தீர்மானங்கள் பின்பு தேச ஒழுக்கத்தில் காரியப்படும் படியாகவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யக் கடவர்.''

மாநிலந்தோறும் நடைபெற்ற அரசியல் மாநாடுகளிலேயும் இந்து - இஸ்லாமிய - கிறித்துவ - பார்ஸி - சீக்கிய மதத்தினர் எல்லோரும் உடன் பிறந்தாரைப் போலத் திரண்டு மகிழ்ந்தனர்.

இந்து சமயத்திலுள்ள பிறப்பு வழிப்பட்ட உயர்வு தாழ்வோடு கூடிய சாதி வேறுபாடானது, அரசியல் மாநாட்டுப் பந்தலிலே மறைந்தொழிந்தது.

### *சமபந்தி விருந்து!*

மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நடைபெற்ற விருந்திலே அப்துல்காதரும் அந்தோணியும் ஆராவமுத ஐயங்காரும் அமாவாசையும் ஒருவர் பக்கத்திலே ஒருவர் அமர்ந்து ''எல்லோரும் ஓர் குலம்'' என்னும் சமத்துவ நிலையில் சமபந்தி போஜனம் அருந்தினர். ''நாம் எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்ற புத்துணர்ச்சி பெற்று, தேசிய சித்தாந்தத்தை வளர்த்தனர். சுருங்கச் சொன்னால், வருடாந்திர தேசிய மகாசபையானது பல நதிகள் கலக்கும் ஒரு பெருங்கடல் போலக் காட்சி யளித்தது.

1921-ல் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மகா சபையிலே, உலகெங்குமுள்ள இஸ்லாமிய மக்களின் மத உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையிலே கிலாபத் கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டப்பட்டது. அதனால், ''இந்து முஸ்லிம் ஏக் ஹோ'' என்னும் புதிய கோஷம் பிறந்தது. அத்துடன் ''வந்தே மாதரம்'' - ''அல்லாஹு அக்பர்'' என்னும் கூட்டு மந்திரங்களும் காங்கிரஸ்காரர்களால்

கோஷிக்கப்பட்டன. நாடெங்குமுள்ள சாமான்ய மக்களும் இந்தச் சமய ஒருமைப்பாட்டுணர்வுடைய கோஷங்களை எழுப்பினர்.

இதனால், ஒரு உண்மை வெளிப்பட்டது. ஆம்; ''எம்மதமும் சம்மதம்'' என்னும் சித்தாந்தத்தின் அடிப்படையின் வழியில் நிலவிய ஏற்றத்தாழ்வோடு கூடிய வேற்றுமைகளைப் போக்கவோ, நால்வருணப் பாகுபாட்டைத் தகர்க்கவோ, பாரத பூமியில் தனியாக ஒரு இயக்கம் தேவைப்படவில்லையென்ற உண்மையை மக்கள் உணர்ந்தனர்.

## *கூட்டு வழிபாடு*

தேசிய காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பு சமயச் சீர்திருத்த அமைப்புகளாக இயங்கி வந்த ஆரிய சமாஜமும் பிரம்ம சமாஜமும் தார்மிக ரீதியில் தேசிய காங்கிரசை ஆதரித்தன. அந்த அமைப்புகளிலிருந்த முன்னணித் தலைவர்களிலே பலர் அவற்றில் இருந்து கொண்டே தேசிய காங்கிரசிலேயும் தொடர்பு கொண்டு தேச விடுதலைக் கிளர்ச்சியில் கலந்தனர்.

துவராடையணிந்த ஆரிய சமாஜத் துறவியான சுவாமி சிரத்தானந்தர், முஸ்லிம் சகோதரர்களாலேயே டில்லியிலுள்ள ஜும்மா மசூதிக்கு அழைக்கப் பட்டு, அவர்களோடு கலந்து இறைவழிபாட்டில் ஈடுபட 1919-ல் வாய்ப்புப் பெற்றார். இதுபோன்ற கூட்டு வழிபாடுகள் நாட்டில் பலவிடங்களில் நடை பெற்றன.

ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதிகளாக வரும் இஸ்லாமியர்கள் தங்கள் சமய வழிப்பட்ட பிரார்த்தனையைச் செய்வதற்காக, அவர்களுடைய பிரார்த்தனை நேரங்களிலே மகாசபையை ஒத்தி வைப்பது வழக்கமாகி வந்தது.

இந்து - முஸ்லிம்களிடையிலே, மேல் மட்டத்தில் - அதாவது, படித்தவர்களிடையில் உருவாகி வந்த ஒற்றுமையானது, கீழ் மட்டத்திலுள்ள சாமான்ய மக்களுக்கும் வழி காட்டுவதாக இருந்தது.

### *பாரதியாரின் பாட்டு*

இந்நேரத்திலேதான், 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்னும் தேசிய ஒருமைப்பாட்டுக் கீதத்தை மகாகவி பாரதியார் படைத்தார். இதற்கு முன்பே, ''வந்தே மாதரம் என்போம்'' என்று தொடங்கும் தேசியப் பாடலையும் புனைந்து மக்களுக்கு அளித்தார். இதற்கும் முன்பே, வங்க மொழியில் பங்கிம் சந்திர சட்டர்ஜி புனைந்த ''வந்தே மாதரம்'' என்று தொடங்கும் பாடலானது இந்தியாவின் தேசிய கீதமாக 1905-ல் கூடிய காங்கிரஸ் மகாசபையால் அங்கீகரிக்கப்பட்டது. அதைத் தமிழிலே பாரதியார் மொழி பெயர்த்தாரென்றாலும், அதிலே அவருக்கு மனநிறைவு கிடைக்கவில்லை. அதனால், ''வந்தே மாதரம் என்போம்'' என்று தொடங்கும் பாடல் ஒன்றைத் தமிழிலேயே படைத்தளித்தார். அதிலே.

*'' எப்பதம் வாய்த்திடு மேனும் - நம்மில்*
*யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்*

*முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்*
*முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்''*

என்று விளக்கம் தந்து தமிழக மக்களை ''வந்தே மாதரம்'' என்று கோஷிக்கச் செய்தார்.

பாரதப் பெருநாடு முழுவதையும் தாய் வடிவில் கற்பனை செய்து, அவளைச் சித்திரத்தில் எழுதி, சிலை வடிவிலும் படைத்து, அவளுக்குப் ''பாரத மாதா'' என்னும் பெயர் கொடுத்து, படித்தறியாத பாமரர்களுக்கும் தேசபக்தி ஊட்டுவதற்கு வழி வகுத்தது தேசிய காங்கிரஸ்!

பம்பாயிலே பாரத மாதாவின் கோவில் ஒன்றும் அமைக்கப்பட்டுக் காந்தியடிகளால் திறந்து வைக்கப் பட்டது. அங்கு தேசப்படமே பாரத மாதாவின் திரு வுருவமாகக் காட்சியளித்தது. ஆம்; அனைத்து மதத்தினரும் ஒன்றுபட்டு வழிபடுவதற்காக!

### *திலகரின் போதனை!*

திலகர் பெருமான் வருணாசிரமத்தில் நம்பிக்கை யுடையவர் என்றாலும் மேல்வருணம் கீழ்வருணம் என்று ஏற்றத் தாழ்வு கற்பிப்பதை விரும்பாதவர். அத்துட னன்றி, நாட்டாலும் மொழியாலும் மதத்தாலும் அன்னியரான ஆங்கிலேயர் ஆட்சியிலே இந்துக்களின் வருணாசிரமமானது திரும்பவும் புதுப்பிக்க முடியாதபடி அழிந்தொழிந்து விட்டது என்றும் கருதினார். அதனைக் கான்பூர் சொற்பொழிவொன்றில் அவரே கூறுகிறார், கேட்போம்.

''நான்கு வர்ணங்கள் பிறப்பினாலே அல்ல, குலத்தாலும் தொழிலாலும் உண்டாயின' என்று கீதை சொல்லுகிறது. அதன்படிப் பார்த்தால், இப்போது நமக்குள் க்ஷத்திரியர் எங்கே இருக்கிறார்கள்? நம்மைக் காப்போர் ஆங்கிலேயர்கள்; ஹிந்துக்களுள் க்ஷத்திரி யரைக் காணோம். இந்தக் கான்பூர் பெரிய வியாபார ஸ்தலம். ஆனால், இங்குள்ள வைசியர் பிறதேசத்து வியாபாரிகளின் வசத்தில் நிற்கிறார்கள். செல்வத் தலைமை நமக்கு இல்லை, இப்போதுள்ள பிராமணர் தாமே தேசத்தின் மூளை என்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த மூளை மண்ணடைந்து போய், நாம் வெளியிலிருந்து அதிக மூளை இறக்குமதி செய்யும்படி நேரிட்டிருக்கிறது.

''நான்கு வர்ணத்தாருக்குரிய நால்வகைத் தொழில் களும் ஹிந்துக்களல்லாத பிறர் நியமனப்படி நடக்கின்றன. நாமெல்லோரும் தொண்டர் நிலையிலே இருக்கிறோம். தேசம் கெட்ட ஸ்திதியிலே இருக்கிறது. உங்களுடம்பில் பிராமண ரத்தம் ஓடுவதாகவும் க்ஷத்திரிய ரத்தம் ஓடுவதாகவும் நீங்கள் வாயினால் சொல்லலாம். ஆனால், உங்களுடைய வாழ்க்கை அப்படி இல்லை.''

*(பாரதி நூல்கள் - கட்டுரைகள், ''நாற்குலம்'')*

### *பாரதியாரின் ஆதரவு*

இதற்கு மகாகவி பாரதியார் தந்துள்ள விமர்சனம் வருமாறு;

''இவ்வாறு திலகர் சொல்லியதிலிருந்து நமது தேசத்திற்கு மிகுந்த நன்மை உண்டாகக்கூடும். ஏனென்றால், இவர் தேசம் முழுவதிலும் சுதேசியக் கட்சியாருக்குத் தலைவராக இருப்பது மாத்திரமேயன்றி, மகாராஷ்டிரருக்கு வைதிகப் பிராமணர்களின் தலைவராகவும் விளங்குகிறார். வேத சாஸ்திர ஆராய்ச்சியில் உயர்ந்த கீர்த்திபெற்றவர். நெடுங் காலமாக இடைவிடாது செய்துவரும் ஆராய்ச்சி யினாலும், உயர்ந்த மேதையினாலும் நமது பூர்வீகமான ஜாதி தர்மத்தின் உட்கருத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு நமது தற்காலப் பிரிவுகளைக் கண்டிக்கிறார்.

''ஹிந்துக்களாகிய நாமெல்லோரும் இவரது உபதேசப்படி நடந்தால் நன்மையுண்டாகும். இப்போதுள்ள ஜாதி விரோதங்களும் தாழ்வுகளும் நீங்கி எல்லோருக்கும் மேன்மையுண்டாகும்.''

*(பாரதி நூல்கள் - கட்டுரைகள்; பாரதி பிரசுராலய வெளியீடு; பக். 558)*

தேசிய காங்கிரசிலே, முடிந்து கொண்டிருந்த மிதவாதிகள் சகாப்தத்திற்கும் தோன்றிக் கொண்டிருந்த காந்திய சகாப்தத்துக்குமான சந்திப்பிலே தேசம் முழுவ தற்கும் அறிமுகமான தேசியத் தலைவர்கள் தோன்றி யிருந்தனர். அவர்களிலே பல்வேறு மதத்தினரு மிருந்தனர். வடபுலத்தவருமிருந்தனர்; தென் புலத்தவரு மிருந்தனர்.

### *புதிய சகாப்தம்*

பொதுவாக, மௌலானா முகமதலி - மௌலானா ஷௌகத் அலி (சகோதரர்கள்), அக்கீம் அஜ்மல்கான்

மௌலானா அபுல்கலாம் அசாத், முகமது ரஹிம்துல்லா, சயானி, யாகூப் ஹசன், நவாப் சையத் முகமது ஹாசன் இமாம் ஆகியோருட்பட ஏராளமான இஸ்லாமியத் தலைவர்களும், தாதாபாய் நௌரோஜி, சர். பிரோஸிஷா மேத்தா, டி.ஈ. வாச்சா முதலியோருள்ளிட்ட பார்ஸி கனவான்களும், உமேஷ் சந்திர பானர்ஜி உள்ளிட்ட கிறித்துவத் தலைவர்களும், தாய்க்குலத்தின் சார்பாக அன்னிபெசன்ட், கவியரசி சரோஜினி தேவி ஆகியோரும் இருந்தனர்.

லோகமான்ய பாலகங்காதர திலகர், சேலம் சி. விசயராகவாச்சாரியார், லாலா லஜபதி ராய், பண்டித மோதிலால் நேரு, தேசபந்து சித்தரஞ்சன தாஸ், பண்டித மதன்மோகன மாளவியா, கோபால கிருஷ்ணகோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, ராஷ்பிகாரிகோஷ், லால்மோகன் கோஷ் ஆகியோருள்ளிட்ட இந்து கனவான்களும் நாடறிந்த தேசியத் தலைவர்களாகி விட்டனர்.

இது, காங்கிரசின் அரும்பெரும் சாதனையாகும். பிரிட்டிஷ் அரசாங்கமே இத்தனை பெருந்தலைவர்கள் காங்கிரசிலே தோன்றியது கண்டு வியப்படைந்தது.

அனைத்திந்தியத் தலைவர்களேயன்றி, மாநிலந் தோறும் பல்வேறு சாதி மத வருணங்களிருந்தும் தலைவர்களைக் காங்கிரஸ் தோற்றுவித்துவிட்டது.

காங்கிரஸ் தோன்றிய ஆரம்ப காலத்திலே தமிழ் நாட்டில் படித்த சமூகத்திலிருந்துதான் தலைவர்கள் மிகுதியாகத் தோன்றினர். அவர்களில் திருவாளர்கள் ஜி.

சுப்பிரமணிய ஐயர், சுப்பிரமணிய பாரதி, சி. விசயராக வாச்சாரி, சி.பி. ராமசாமி ஐயர், வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, சிவசாமி ஐயர், கஸ்தூரிரங்க ஐயங்கார் ஆகியோர் முக்கியமானவர்களாவர். ராஜாஜி, திலகர் சகாப்தத்தில் தோன்றிக் காந்தி சகாப்தத்தில் வளர்ந்த வராவார்.

## *தமிழகம் கண்ட தலைவர்கள்*

நாளடைவில் பிறசாதிகளிலிருந்தும் மதங்களி லிருந்தும் தலைவர்கள் தோன்றி தமிழ்நாடு காங்கிரசிலே முன்னணியில் நின்றனர். அவர்கள் குத்தி கேசவப் பிள்ளை, வ. உ. சிதம்பரனார், சக்கரை செட்டியார், டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, யாகூப் ஹாஸன், ஈ.வே. ராமசாமி, திரு.வி.கல்யாணசுந்தரனார், தோழர் சிங்கார வேலர் ஆகியோருள்ளிட்ட பலர் தமிழ்நாடு காங்கிரசிலே முன்னணித் தலைவர்களாயினர். இதனைச் சமுதாயப் புரட்சி என்றும் சொல்லலாம். இதற்காக, வகுப்பு ரீதியில் போட்டியோ, போராட்டமோ தமிழ் நாட்டில் நிகழ்ந்த தில்லை. இந்திய தேசிய அரசியலிலே புரட்சி மனப் பான்மை உருவானதன் விளைவாகவே இந்தச் சமுதாய மாறுதல் ஏற்பட்டது. இதனையும் தேசியத்தால் விளைந்த சமுதாயச் சீர்திருத்தம் எனலாம்.

இந்திய தேசியம் பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகளே தேச விடுதலைப் போராட்டமும் சமுதாய சீர்திருத்தப் புரட்சியும். இது, தேசிய காங்கிரசின் ஒரு நூற்றாண்டுக் கால வரலாறு காட்டும் உண்மையாகும்.

❖

# தல-தீர்த்த யாத்திரையும் அரசியல் யாத்திரையும்

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றிய பின்னர், பாரதப் பெருநாட்டிலே, சமய உணர்வு இரண்டாந்தரமாகி விட்டது. சமய எதிர்ப்பில் காங்கிரஸ் நேரடியாக ஈடுபடவில்லை. உண்மையில் காங்கிரஸ்காரர்களில் மிகப் பெரும்பாலோர் சமய நம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் உடையவர்களாகவே இருந்தனர். இருந்தாலும், அவர்கள் தோற்றுவித்த தேசிய எழுச்சி யானது பாமர மக்களை அணுகியதும் இயற்கையாகவே சமயம் இரண்டாந்தரமாகிவிட்டது.

### *தல - தீர்த்த யாத்திரை!*

வேத காலம் எனப்படும் ஒரு காலந்தொட்டு, இந்திய மக்களிலே பாவ புண்ணியங்களில் நம்பிக்கை யுடையோர் தல யாத்திரையிலும் தீர்த்த யாத்திரையிலும் ஈடுபட்டு வந்தனர். இதனைச் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழிலுள்ள பெருங் காப்பியங்களிலேயும் காண முடிகிறது.

வடக்கிலுள்ளவர்கள் குமரியாடவும் காவிரியாடவும் தெற்கு நோக்கித் தீர்த்த யாத்திரை வந்தனர். அதுபோல,

தெற்கிலுள்ளோர் கங்கையாட வடக்கு நோக்கித் தீர்த்த யாத்திரை சென்றனர். மற்றும், தெற்கிலுள்ளோர் வடக்கிலுள்ள காசி கோயிலுக்குச் சென்றனர். வடக்கிலுள்ளோர், தெற்கிலுள்ள இராமேஸ்வரம் கோயிலுக்கு வந்தனர். இது, தல யாத்திரை எனப்பட்டது.

சாமான்யர்களேயன்றி, ஆதிசங்கரர் - இராமானுஜர் - மாத்வர் போன்ற சமயத் தலைவர்கள் தாங்கள் கடைப்பிடித்த சமய தத்துவங்களை மக்களிடையில் பரப்ப விரும்பியும் குமரி முதல் காஷ்மீரம் வரை யாத்திரை செய்தனர்.

### *அரசியல் யாத்திரை!*

தேசிய காங்கிரஸ் தோன்றிய பின்னர், இந்த சமய வழிப்பட்ட யாத்திரைகளை இரண்டாந்தரமாக்கும் வகையிலே, அரசியல் யாத்திரையைத் தொடங்கி வைத்தனர் தேசியத் தலைவர்கள்.

இன்றுள்ளதுபோல் நவீன போக்குவரத்துச் சாதனங்கள் மலிந்திராத அந்தக் காலத்திலே, தேசத் தலைவர்கள் நாடு முற்றிலும் சுற்றுலாச் செய்வதில் அதிக கஷ்டமிருந்தது. கடந்த நூற்றாண்டின் இறுதியில் நடந்த வருடாந்திர காங்கிரஸ் மகா சபைக்குச் சென்னையிலுள்ளவர்கள் கல்கத்தா செல்லவும், கல்கத்தாவிலுள்ளவர்கள் சென்னைக்கு வரவும் பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் கப்பலிலேயே பயணம் செய்ய வேண்டியிருந்தது.

இந்தியா முழுவதிலும் சுற்றுலாச் செய்து பொது மக்களுக்கு அரசியல் விழிப்பூட்டவும், சாதி சமய வருண வேறுபாடுகளைக் கடந்து தேசபக்தியையும் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியையும் வளர்க்கவும் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

அனைத்திந்தியத் தலைவர்களைப் பின்பற்றி மாநில மட்டத்திலும் மக்களிடையில் செல்வாக்குப் பெற்றிருந்த தேசியவாதிகளும் தங்கள் தங்கள் மாநில - மாவட்ட எல்லைகளுக்குள் சுற்றுலாச் செய்து அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

### *பாலரின் புரட்சி!*

இப்படி, சமயத் தலைவர்களின் தல யாத்திரை - தீர்த்த யாத்திரை போலத் தேச விடுதலை யாத்திரையை மேற்கொண்ட தேசியத் தலைவர்களிலே லோகமான்ய திலகர், லாலா லஜபதி, கோபாலகிருஷ்ண கோகலே, விபினசந்திரபாலர், அன்னிபெசன்ட், சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோர் முக்கியமானவர்களாவர். 1907-ல் விபினசந்திர பாலர் தெற்கே வந்து செய்த அரசியல் பிரச்சாரமானது ஆட்சியை அதிர்ச்சியடையச் செய்தது.

இராமகிருஷ்ணர் மடத்துத் துறவியான சுவாமி விவேகானந்தர், ''வேதாந்தப் பிரச்சாரம்'' என்னும் குறிக்கோளுடன் தேசச் சுற்றுலாவை மேற்கொண்டு, தேசியப் பிரச்சாரத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். ''சென்னை ராஜ்யத்தில் அரசியல் விடுதலை ஆவேசத்தை ஏற்படுத்தியவர்களிலே சுவாமி

விவேகானந்தரும் விபினசந்திரரும் முக்கியமானவர்கள்'' என்று ரௌலட் கமிட்டியின் அறிக்கை அறிவிக்கிறது.

பண்டைக்கால சமயத் தலைவர்களின் தீர்த்த யாத்திரைக்கும் தல யாத்திரைக்கும் இல்லாத பெருமதிப்பைத் தேசியத் தலைவர்களின் தேச விடுதலை யாத்திரை பெற்றதெனலாம்.

### *காந்தி சகாப்தத்திலே...*

காந்தி சகாப்தத்திலே, ''கிராமங்களை நோக்கி யாத்திரை நடத்துங்கள்'' என்றார் காந்தியடிகள். இதனால் காங்கிரசானது தேசியம் என்பதை ஒரு புதிய மதமாக்கி விட்டது. தேசியத் தலைவர்கள் சமயாச்சாரியர்களுடைய இடத்தில் வைத்து மக்கள் மதிக்கத்தக்க சமூகாச்சாரியர்களாகி விட்டனர். இது, கற்பனையோ, மிகைப் பட்ட வருணனையோ அல்ல, ஒரு நூற்றாண்டு கால சரித்திரம் போதிக்கும் உண்மையாகும்.

நம்மிடையே இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் வயதான தேசபக்தர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டு சிந்திப்பார்களானால், அவர்கள் அந்நாளில் கிராமந்தோறும் யாத்திரை செய்தது அவர்களுடைய அகக் கண்களுக்குக் காட்சியளிக்கும். அவர்கள் நடத்தியது தல யாத்திரையோ தீர்த்த யாத்திரையோ அல்ல; ஒரு நூற்றாண்டு கால சரித்திரம் போதிக்கும் உண்மையாகும்.

நம்மிடையே இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் வயதான தேசபக்தர்கள் தங்கள் கண்களை மூடிக்

கொண்டு சிந்திப்பார்களானால், அவர்கள் அந்நாளில் கிராமந்தோறும் யாத்திரை செய்தது அவர்களுடைய அகக் கண்களுக்குக் காட்சியளிக்கும். அவர்கள் நடத்தியது தல யாத்திரையோ தீர்த்த யாத்திரையோ அல்ல; அவற்றை விடவும் புனிதமான அரசியல் யாத்திரை!

எழுதப் படிக்கத் தெரியாத கிராம மக்களிடையே கூட்டம் போட்டு, அவர்களுக்கு நாட்டின் அரசியல் பொருளாதார நிலைகளை எடுத்துச் சொல்லும் ஆசான்களாக அந்நாளில் தேசியவாதிகள் பணி புரிந்தனர். இதற்குச் 'சமுதாயப் புரட்சி' என்றல்லாமல், வேறு என்ன பெயர் வைப்பது?

### *சொர்க்கமல்ல, சுதந்திரம்!*

தேசிய காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பு, கிராமங்களிலோ, நகரங்களிலோ மக்கள் நூற்றுக் கணக்கிலே கூடினார்கள் என்றால், சைவப் புராணிகரின் அல்லது வைணவ பாகவதரின் சொற்பொழிவைக் கேட்பதற்காகத்தான்! ஆயிரக்கணக்கில திரண்டிருந்தால், அது தேர் திருவிழாவுக்குத்தான்! ஆனால், தேசிய காங்கிரஸ் தோன்றிய பின்னர், தேசிய அரசியல் வாதிகளின் அறிவார்ந்த பேச்சுக்களைக் கேட்கவும் மக்கள் கூடினர்.

பௌராணிகரோ பாகவதரோ பேசுகிறார்களென் றால், அது சொர்க்கத்தில் இடம் பிடிக்க மக்களுக்கு ஆசையூட்டுவதாகத்தான் இருக்கும். ஆனால், தேசிய

எழுச்சி நாட்டில் ஏற்பட்ட பின், மக்கள் சொர்க்கத்தை மறந்து சுதந்திரத்தை அடையவே ஆசைப்பட்டனர். அத்தகைய ஆசையை ஏற்படுத்தினர் அரசியல் பேச்சாளர்கள்.

பாரத தேசத்திலே நகரங்களிலும் கிராமங்களிலும்முள்ள கடற்கரை - ஆற்றங்கரை மணற் பரப்பிலே, பூங்காக்களிலே, ஊர்தோறுமுள்ள கோயில்களிலே, முச்சந்திகளிலே கூட்டங்கள் நடத்தினார்கள். தேசியவாதிகளின் புனித பாதங்கள் படாத ஊரே இல்லை என்று சொல்லுமளவுக்கு அவர்கள் பிரச்சார யாத்திரை நடத்தினர்.

தொடக்க காலத்தில் மக்களைப் பழைய குருட்டு நம்பிக்கைகளிலிருந்து விடுவிக்கும் இந்த அறிவுப் புரட்சியிலே வைதிகச் சாதிகளில் பிறந்தவர்களே முன்னணியில் நின்றனர். அவர்களில் தமிழ் நாட்டில் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா, ஜி. சுப்பிரமணிய ஐயர், கிருஷ்ணசாமி சர்மா ஆகியோர் முக்கியமானவராவர்.

### *அறிவுப் புரட்சி!*

தேச மட்டத்திலுள்ள பெருந்தலைவர்களோ, மாநில - மாவட்ட மட்டத்திலுள்ள தேசத் தொண்டர்களோ பேசினார்களென்றால், அவர்கள் பேச்சிலே அடிமைத் தனத்தின் கொடுமைகள் வருணிக்கப்படும், அதிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் பெறவேண்டியதன் அவசியம் விளக்கப்படும்.

இந்திய நாட்டை ஆங்கிலேயர் எப்படி எப்படி எல்லாம் சுரண்டிச் செல்லுகிறார்கள் என்பது புள்ளி விவரங்களோடு விளக்கப்படும். சுதந்திரமாக உள்ள நாடுகளிலே வாழும் மக்கள் என்னென்ன சுகங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை அதற்கான சான்றுகளோடு சுட்டிக் காட்டி, சுதந்திரம் பெற வேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்திப் பேசுவார்கள்.

இதனால், மக்கள், கல்வியின்மையாலும் பசி பட்டினியாலும் தாங்கள் அவதிப்படுவதற்குப் பூர்வ ஜன்ம பாவமோ, தலைவிதியோ காரணமல்ல வென்பதனை விளங்கிக் கொள்வார்கள். இதற்காக நாத்திகப் பிரசாரம் தேவைப்படவில்லை.

தேசிய காங்கிரசின் பிரச்சாரம் கிராம மக்களை அணுகுவதற்கு முன்னர், அவர்களிடம் பேசிய புராணிகர்களும் பாகவதர்களும் கோயிலுக்குச் சென்று நவக்கிரகத்தைச் சுற்றினால் வறுமை தொலையும் என்றனர். தல யாத்திரையும் தீர்த்த யாத்திரையும் சென்றால், சொர்க்கம் கிடைக்கும் என்றனர். இதை யெல்லாம் சமய வழிப்பட்ட அறிவுப் பிரச்சாரமாகக் கூடக் கருதி வந்த மக்களிடையேதான் தேசியவாதிகள் அரசியல் பொருளாதார ரீதியான காரணங்களைச் சொல்லி விடுதலைப் போரில் ஈடுபடுமாறு அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். வறுமை தொலையச் சுதந்திரம் பெறவதுதான் ஒரே வழி என்றும் கூறினர்.

இதைவிடப் பகுத்தறிவுப் பிரச்சாரம் வேறு எதுவாக இருக்க முடியும்? மக்களை மூடநம்பிக்கை

யிலிருந்து விடுவித்த முதல் இயக்கம் தேசிய காங்கிரசே யாகும்.

### *அடையாளம் காட்டினர்!*

தேசிய காங்கிரஸ்காரர்கள் மேடையேறிப் பிரச்சாரம் செய்யுங்கால், ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டின் கைத் தொழில்களை அழித்துவிட்டு, இங்கிலாந்தில் உற்பத்தி யாகும் பொருள்களுக்கு இந்தியாவை ''மார்க்கெட்'' ஆக்கினர் என்ற உண்மையை எடுத்துக் காட்டினர். இந்திய மக்கள் வாங்கும் அன்னியப் பொருள்களிலே எந்தெந்தப் பொருளின் மூலம் எத்தனை எத்தனை கோடி ரூபாய் ஆங்கிலேய நாட்டிற்குச் செல்கின்றது என்பதனைப் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டிப் பேசுவது வழக்கமாக இருந்தது. இதை விடவும் பகுத்தறிவுப் பிரச்சாரம் வேறு எதுவாக இருக்க முடியும்? கடவுள் உண்டா, இல்லையா? மதம் தேவையா? தலைவிதியையும் பாவ புண்ணியங்களையும் நம்புவது அறிவுடைமையா? இந்த மூட நம்பிக்கைகளை நாட்டில் பரப்பியவர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து இங்கு வந்தார்கள்? என்ற ஆராய்ச்சிகளையும் விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலேயே இந்திய நாட்டில் ஒரு சாரார் செய்ததுண்டு. அதனால், மக்கள் அடைந்த அறிவுத் தெளிவைவிடவும் தேசியப் பிரச்சாரத்தால்,தேச விடுதலைப் போராட்டத்தால், தொழிற்சங்க இயக்கத்தால் மக்கள் பெற்ற அறிவு விளக்கம் அதிகமாகும்.

பழைய சைவ - வைணவ சமயாசாரியர்கள் புறச் சமயங்களின் தாக்குதலிலிருந்து தங்கள் சொந்த

சமயங்களைக் காக்கவும் தேசத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு யாத்திரை சென்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே, பழைய வைதிகர்களின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க ஆரிய சமாஜ ஸ்தாபகர் தயானந்தரும், பிரமசமாஜ ஸ்தாபகர் ராம்மோகனராயும் காஷ்மீரிலிருந்து கன்னியா குமரிவரை யாத்திரை செய்தனர்.

இவர்களெல்லாம் பாத யாத்திரை செய்த புனித பூமியிலேதான் மக்களை அன்னியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவேண்டி அரசியல் யாத்திரை நடத்தினர் தேசிய காங்கிரஸ் தலைவர்கள்.

### *முதல் இயக்கம்*

1916-ல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த காந்திஜி தன் குருவான கோகலேயின் ஆணைப்படி குமரி முதல் காஷ்மீர் வரை யாத்திரை செய்தார்.

இந்தக் கண்ணோட்டத்துடன் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றிய பின்னுள்ள ஒரு நூற்றாண்டு கால வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்ய மக்களைப் பழைய நம்பிக்கைகளிலிருந்து விடுவித்து அவர்களையெல்லாம் அறிவு மேடைக்குக் கொண்டு வந்த முதல் இயக்கம், தேசிய இயக்கமே என்பது மறுக்கமுடியாத உண்மை என்பது புலனாகும்.

சமய அல்லது சீர்திருத்த இயக்கங்களின் வரலாற்றைப் பார்த்தால், அவற்றைச் சேர்ந்தவர்கள் நேரடியாகப் பழைய குருட்டு நம்பிக்கைகளைத் தாக்கினதாலே பலன் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நாளடைவில் அவர்களே ஒரு புதிய மதமாகி, மேலும் வளர்ச்சியின்றி முடங்கிக் கிடந்ததுதான் கண்ட உண்மை.

மக்களுடைய மத வழிப்பட்ட பழைய பழக்க வழக்கங்களைத் தாக்கினால், அவற்றைக் கடைப் பிடிப்பவர்கள் எல்லாம் 'மூடர்கள்' என்று ஏசினால், அந்தத் தவறுகளை விடாமல் கடைப்பிடிக்கும் பிடிவாதமே அவர்களுக்கு ஏற்படும். இந்திய தேசிய காங்கிரஸ் அந்தத் தவறைச் செய்யவில்லை. அது, தான் உருவாக்கிய தேசிய எழுச்சியாலேயே, தேசவிடுதலை ஆர்வத்தாலேயே, உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளித் துவச் சுரண்டலை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற ஆர்வத்தை மக்கள் மனத்தில் வளர்த்தனாலேயே அறிவு வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்ததெனலாம்.

### *அடக்குமுறை*

இந்திய தேசிய காங்கிரசார் சாமான்யப் பொது மக்களை அணுகி விடுதலை ஆர்வத்தை ஊட்டும் வகையில் அரசியல் - பொருளாதாரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர் என்றால், அதற்காக அந்நாளில் அவர்களுக்குக் கிடைத்தவை பூமாலைகள் அல்ல! பொன்னாடைகளும் அல்ல! போலீசாரிடம் அடி, உதை; நீதிமன்றத்தில் சிறைவாசத் தண்டனை!

மக்களுடைய வறுமைக்கும் கல்வியின்மைக்கும் பிரிட்டிஷ் ஆட்சிதான் காரணமென்பதனை அடையாளம் காட்டிய தேசியவாதிகளை ஒடுக்குவதற்கு புதிய சட்டங்களைப் பிறப்பித்து, அரசுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு ''அரச நிந்தனை'' எனப் பெயர் கொடுத்து, அதிலே ஈடுபடுவோருக்கு ஆண்டுக் கணக்கில் சிறைத் தண்டனை கொடுக்க இந்தியன் பெனல் கோடு சட்டத்தையும் ஆங்கிலேய அரசு திருத்தியது.

பொதுக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் சட்ட விரோதமாக்க 144 தடைச் சட்ட மொன்றையும் பிரிட்டிஷ் அரசு தோற்றுவித்தது.

இதன் விளைவாக, இரண்டு சொற்பொழிவுகளுக்கு இரண்டு ஆயுள்கால நாடு கடத்தல் தண்டனை பெற்றார் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார். அவரோடு சேர்ந்து பத்தாண்டு கால நாடு கடத்தல் தண்டனை பெற்றார் சுப்பிரமணிய சிவா.

அரச நிந்தனையாக எழுதுகிறார், பாடல் புனைகிறார் என்பதற்காக மகாகவி பாரதியார் மீது அரசு வாரண்டு பிறப்பித்தது! ஆம்; அவரைக் கைது செய்து ஆண்டுக் கணக்கில் சிறையிலடையக்க! தகவல் அறிந்து, பாண்டிச்சேரிக்குத் தப்பிச் சென்றுவிட்டார் பாரதியார்.

### *ஆயுள் தண்டனை!*

லோகமான்ய திலகருக்கு 19-ம் நூற்றாண்டின் இறுதியிலே ஒன்றரையாண்டுச் சிறைத் தண்டனை!

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே - அதாவது, 1908-ல் ஆறாண்டு சிறைத் தண்டனை! ஆம்; அரச நிந்தனை பாணியில் தமது 'கேசரி' - 'மராட்டா' வார இதழ்களில் எழுதியதற்காக!

பொதுமக்களின் சிந்தனையிலே தேச விடுதலைப் பிரசாரமானது புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்து கிறது; அவர்களுடைய சிந்தனையிலே மறுமலர்ச்சியைத் தருகிறது; மூடநம்பிக்கைகளிலிருந்து அவர்களை விடுவித்து யதார்த்தமான அரசியல் பொருளாதாரச் சிந்தனைகளை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது - என்னும் உண்மைகளை அரசியலுக்குப் புறம்பான சமய - சமூக சீர்திருத்தவாதிகள் உணரவில்லையென்றாலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உணர்ந்தது. அதனாற்றான், தேசியப் பிரச்சாரகர்களை மக்களிடமிருந்து பிரித்துச் சிறையிலடைத்து வைக்க முயன்றது. திலகர் சகாப்தத்தை விடவும் காந்தி சகாப்தத்திலேதான் அரசியல் பிரச்சாரகர்கள் சொல்லொணா இன்னலுற்றனர்.

பொது மக்களைப் பழைய மூட நம்பிக்கைகளி லிருந்து விடுவித்து அவர்களுக்கு அரசியல் - பொருளாதார உண்மைகளை உணர்த்தும் பொருட்டு, தேசியவாதிகள் நாளிதழ்களையும் வார மாத இதழ் களையும் நடத்தினர். எண்ணற்ற பிரசுரங்களை எழுதி வெளியிட்டு, அவற்றை மக்களிடையே பரப்பினர். அந்தப் பிரசுரங்களுக்கு எல்லாம் ''சட்ட விரோத மானவை'' எனப் பெயர் கொடுத்து, அவற்றையெல்லாம் பறிமுதல் செய்தது பிரிட்டிஷ் அரசு. பல பத்திரிகை

களிடம் ஜாமீன்தொகை பெற்றது. திரும்பத் திரும்ப அரச நிந்தனையாக எழுதியதாகச் சொல்லி, ஜாமீன் தொகைகளைப் பறிமுதல் செய்தது. பல பத்திரிகைகளை வெளிவர விடாமலே தடை செய்துவிட்டது. 1921-ல் காந்தியடிகள் ஆறாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றது, ''நவ இந்தியா'' என்னும் தமது பத்திரிகையில் அரச நிந்தனையாக எழுதியதால்தான்.

திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். தேச விடுதலை இயக்கமானது, எழுதப் படிக்கத் தெரியாத சாமான்ய மக்களையும் அறிவு வளர்ச்சி பெறச் செய்தது. தங்கள் வறுமைக்கும் பிணிக்கும் கல்வி யின்மைக்கும் உண்மையான காரணங்கள் என்ன என்பதனை அவர்கள் அறியும்படிச் செய்தது. வேறு எந்தச் சமய – சமூக சீர்திருத்த இயக்கத்தாலும் இவ்வளவு மகத்தான சிந்தனைப் புரட்சியை மக்களிடையே ஏற்படுத்தியிருக்க முடியாது. இத்தகைய சாதனைகளைக் கொண்ட தேசீய சரித்திரத்திற்குத்தான் இந்த ஆண்டிலே ஒரு நூறு வயது ஆகியது.

❖

# தேசியத்தை முழுமையாக்கிய அன்னிபெசண்ட் அம்மையார்

இந்திய தேசியம் வளர்ந்த காலத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்துப் பார்க்க காங்கிரசின் வரலாறு வழிகாட்டுகின்றது. முதலாவது கட்டம், 1885 தொடங்கி 1905 வரையுள்ள 20 ஆண்டுகளாகும். அக்காலத்திலே, இந்திய தேசியம் என்பது, சமுதாயத்தின் மேல்மட்டத்தி லிருந்த ஆங்கிலம் படித்த புதிய வகுப்பாரின் ஒற்றுமையை மட்டுமே குறிப்பதாகத்தான் இருந்தது. அக்காலத்தில், மேட்டுக் குடிகள் எனத்தக்க குடும்பங்களி லிருந்துதான் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தோன்ற முடிந்தது. அதனால், ஆண்டுதோறும் காங்கிரஸ் மகா சபையில் கூடுவோரில் பெரும்பாலோர் பட்டதாரி களாகவே இருந்தனர்.

### *பட்டதாரிகளின் கோரிக்கைகள்*

மகாசபை நிறைவேற்றும் தீர்மானங்களும் அநேகமாகப் பட்டதாரிகளின் குறைபாடுகளைப் போக்க முயலும் கோரிக்கைகளாகவே இருந்தன. அவை வருமாறு.

1. ஐ.சி.எஸ். தேர்வை இந்தியாவிலும் நடத்தல். 2. இந்தியர்களுக்கு இராணுவ உயர் உத்தியோகங்களில் பயிற்சியளிக்க இராணுவக் கல்லூரிகளை அமைத்தல். 3. நீதிமன்றங்களில் உயர் உத்தியோகங்களை சட்டம் படித்த பட்டதாரிகளுக்கு அளித்தல், 4. கல்வி இலாக்காப் பதவிகளில் இந்தியர்களுக்குத் தலைமை உத்தி யோகங்கள் கிடைக்கக்கூடிய வகையில் அந்த இலாக்கா வைத் திருத்தி அமைத்தல், 5. பொது மராமத்து இலாகாவில் தலைமை உத்தியோகங்களுக்கு இந்தியர்கள் நியமிக்கப்படுவதற்குள்ள தடைக் கட்டுப் பாடுகளை அகற்றல், 6. சாதாரண இலாக்காக்களிலும் உயர் உத்தியோகங்களில் இந்தியர்களை அதிகமாக நியமித்தல், 7. காவல் (போலீஸ்) துறையில் உயர் பதவிகளுக்கு இந்தியரை நியமிக்க லண்டனில் நடைபெறும் இப்பதவிகளுக்கான தேர்வுகளில் கலந்துகொள்ள இந்தியர்களுக்கும் வாய்ப்பு அளித்தல், 8. சட்டத்துறையில் நிர்வாக உறுப்பினர் பதவிகளுக்கு இந்திய வக்கீல்களையும் அட்டர்னிகளையும் நியமனம் செய்தல், 9. இங்கிலாந்தில் தங்கும் இந்திய மாணவர்களுக்குப் பிரத்தியேக வசதிகள் அளித்தல், 10. இந்தியப் பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தம் செய்தல்.

இந்தியர்கள் - குறிப்பாக, படித்தவர்களை பொது மக்களின் தலைவர்களாக்கும் வகையில் பல அரசியல் சீர்திருத்தங்களைக் கோரும் தீர்மானங்களும் காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றுப்பட்டன. அவை வருமாறு;

1. பூரண ஸ்தல சுயாட்சி உரிமை வழங்கல், 2. பஞ்சாப் மாநிலத்திற்கு ஓர் நிர்வாக சபை நிறுவுதல், 3. லண்டனிலுள்ள இந்தியா கவுன்சிலை இந்தியர்களும் இடம் பெறத்தக்க வகையில் திருத்தியமைத்தல், 4. ஐக்கிய மாகாண (உத்தரப் பிரதேச)த்தில் அமைச்சர் களுடன் கூடிய கவர்னர் நிர்வாக சபை அமைத்தல்.

## மிதவாதிகள் கோரிய அரசியல் சீர்திருத்தம்

பொதுவாக, இந்தியாவின் அரசியல் - பொருளாதார அந்தஸ்தையும் உரிமைகளையும் எதிரொலிக்கும் தீவிரமான அரசியல் கோரிக்கைகளை வெளியிடும் தீர்மானங்களையும் காங்கிரஸ் மகாசபை நிறைவேற்றி வந்தது. அவை வருமாறு.

1. லண்டனிலுள்ள இந்தியா கவுன்சிலை ஒழித்தல், 2. இந்தியாவில் இராணுவத்திற்காகும் செலவில் நியாயமான பகுதியை பிரிட்டிஷ் அரசு ஏற்றல். 3. மாகாணங்களுக்கு நிதி, வரி நிர்வாகத்தில் சுதந்திரம் அளித்தல், 4. இந்தியர்களின் பொருளாதார நிலையை ஆராய விசாரணை நடத்தல், 5. கைத்தொழில்கள் சம்பந்த மான கல்வி முறைகளைப் போதிக்கவும் பெரிய தொழில் களின் அபிவிருத்திக்காகவும் தீவிர முயற்சிகள் எடுத்தல். 6. அரசின் நாணய மாற்றுக் கொள்கைகளை நினைத்தபடி யெல்லாம் மாற்றுவதைக் கைவிடல், 7. இங்கிலாந்தில் இந்திய நிர்வாகத்தின் பொருட்டு ஊதாரித்தனமாகச் செய்யும் செலவைக் குறைத்தல். 8. இங்கிலாந்திலுள்ள இந்தியா காரியாலயம், இந்தியா

மந்திரி சம்பந்தமான செலவுகளைப் பிரிட்டிஷ் அரசே ஏற்றல்.

இதுகாறும் எடுத்துக் காட்டியவை யெல்லாம் 1905க்கு முன் கூடிய காங்கிரஸ் மகாசபைகளில் இந்திய தேசியம் என்னும் பெயரால் படித்த வகுப்பாருக்குச் சலுகைகள் கோரி நிறைவேற்றிய தீர்மானங்களாகு மென்பதை மீண்டுமொருமுறை நினைவில் கொள்வோமாக!

## *இருவகைத் தேசியங்கள்*

இந்நிலையில் 1905-ஆம் ஆண்டில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு வைசிராய் லார்டு கர்சான் மரண அடி கொடுக்க முயன்றார். அது, அப்போதைய பெரிய வங்காளத்தைக் கிழக்கு மேற்காகத் துண்டாடிய திட்டமாகும். வங்கப் பிரிவினை என்று பெயர்பெற்ற கர்சான் திட்டமான 1947-ல் நடந்தது போன்ற தேச (வங்க)ப் பிரிவினை போன்றதல்லவாயினும், மத அடிப்படையில் வங்கத்தை இருவேறு மாநிலங்களாகத் துண்டாட முன்வந்ததால், அதனைத் தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கர்சான் கொடுத்த மரண அடியாக இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை கருதியது.

1915-ஆம் ஆண்டிலே சர்வதேச அமைப்பான பிரம்ம ஞான சங்கத்தின் தலைவர் பொறுப்பிலிருந்த டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் இந்திய தேசிய காங்கிரஸ் மேடைக்கு வருகிறார், 'ஹோம் ரூல்' என்னும் ஆங்கிலப் பெயரிலே இந்தியாவுக்குச் சுயாட்சி கோரும்

ஒரு குறிக்கோளுடன் அவர் காங்கிரசிலே இணைகிறார். 'சுயாட்சி' என்றால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட நிலையில்தான்!

அப்போது, முதலாவது உலகப் பெரும் போர் நடந்து கொண்டிருந்தது. 70 வயதை யடைந்து விட்ட மூதாட்டியான பெசண்ட் அம்மையார்தான் அனைத் திந்திய காங்கிரசின் தேசியத்தை முழுமைப்படுத்த முதன் முதலில் முயற்சி எடுத்தார்.

மாநில மட்டத்திலும் அதற்குக் கீழ் நிலையிலும் காங்கிரஸ் பிரசாரமானது அந்தந்தப் பிரதேச மொழிகளி லேயே நடைபெற வேண்டுமென்று மகா சபையிலே முடிவெடுத்து. அதனை அமுல் நடத்த முயன்றவர் பெசண்ட் அம்மையார்தான். மாகாண காங்கிரஸ் கமிட்டிகளை மொழிவாரி திருத்தியமைக்க வேண்டு மென்பதனை ஒரு கொள்கையாக வலியுறுத்தியதும் பெசண்ட் அம்மையார்தான். அதன்படி, முதலில் ஆந்திர மாநில காங்கிரஸ் அமைக்கப் பெற்றது.

அன்னிபெசண்டின் காங்கிரஸ் பிரவேசமானது பிரிட்டிஷ் பேரரசுக்கு அச்சத்தைத் தந்தது. குமரி முதல் காஷ்மீரம் வரையுள்ள பாரதப் பெருநாட்டிலுள்ள மாநிலங்களின் தலைநகரங்களுக்கு மட்டுமின்றி, அவற்றிற்குக் கீழேயுள்ள மாவட்டத் தலைநகரங் களுக்கும் பெசண்ட் சென்று தமது சுயாட்சிக் கோரிக்கைக்கு நடுத்தர வகுப்பு மக்களிடையேயும் ஆதரவு திரட்டப் பிரச்சாரம் செய்தார். முதன் முதலில் இந்திய தேசியத்தை நடுத்தரமக்களின் கைக்குக்

கொண்டு போய்க் கொடுத்தவர் பெசண்ட் அம்மையார் தான். இதிலே திலகரும் அம்மையாருக்குத் துணை புரிந்தார்.

### *தேசியத்திலே ஒரு திருப்பம்*

ஆனால், அவராலும் கீழ்த்தர மக்களோடு அதாவது - உழவர், தொழிலாளர்களோடு தொடர்பு கொள்ள இயலவில்லை. அவர், இந்தி மொழியிலோ, மாநில மொழிகளில் ஏதேனும் ஒன்றிலோ தமது பிரச்சாரத்தை நிகழ்த்தச் சக்தியற்றவராக இருந்தார். உயர்தரமான ஆங்கிலத்தில்தான் பேசலானார். ஆங்கிலம் படித்தவர்களோடு மட்டும்தான் அவரது தொடர்பு அமைந்தது. ஆயினும், ஆங்கிலத்தில் ஓரளவே ஞானம் பெற்றிருந்த நடுத்தர மக்களையும் அவரது பிரச்சாரம் கவர்ந்தது. தேசிய காங்கிரஸ் மக்கள் இயக்கமாக மாறி வருகின்றது. என்ற உண்மை நிலையை பிரிட்டிஷ் ஆட்சி உணர முடிந்தது.

மாநிலந்தோறும் புதிய புதிய பிரமுகர்கள் - தங்கள் வாழ்க்கை நலம் காரணமாக மிதவாதத் தன்மையுடையவர்கள் - கொஞ்சம் தீவிரவாதிகளாக மாற முன்வந்தனர். ஆம்; முதல் 1908 வரையுள்ள மூன்றாண்டுக் காலத்திலே தேசியமானது திலகர், அரவிந்தர், வ.உ.சி., லாலா லஜபதி, விபினசந்திரபாலர் ஆகியோரின் வடிவங்களிலே விசுவரூபம் எடுத்துக் காட்சியளித்தது. ஆனால், அவர்கள் எல்லாம் நீதி மன்றத்தில் கடுந் தண்டனைகள் பெற்றும், தண்டனை ஏதும் பெறாத விசாரணைக்

கைதிகளாகவும் சிறைச் சாலைகளில் அடைக்கப் பட்டனர்.

### *அடக்குமுறை எதிர்ப்பு!*

அந்தக் கால கட்டத்திலே இந்திய தேசிய காங்கிரசானது கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஜிஷா மேத்தா, வி. கிருஷ்ணசாமி ஐயர் போன்ற பரிசுத்த மிதவாதிகளின் கைகளிலே சிக்குண்டு விட்டது. 1906 - முதல் 1908 வரை நடைபெற்ற வருடாந்திர காங்கிரஸ் மகாசபைகளிலே திலகராலும் தேசிய்வாதி களாலும் தூண்டப்பட்டு காங்கிரஸ் எடுத்த விசுவ ரூபத்தை ஒடுக்க இந்திய அரசானது அடக்குமுறைச் சட்டங்கள் பலவற்றை நடைமுறைப் படுத்தலானது. அந்தக் கால கட்டத்தில் கூடிய காங்கிரஸ் மகா சபைகளிலே அடக்குமுறைச் சட்டங்களில் ஒன் றிரண்டை அடியோடு கைவிடுமாறும் மற்றவற்றின் கொடுமையான நடைமுறையைத் தணிக்கை செய்யு மாறும் வேண்டுகோள் விடும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

1. கிரிமினல் சட்டத் திருத்த மசோதாவின் கொடுமைகளை அகற்றல், 2. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டிடும் 1908-ஆவது ஆண்டுச் சட்டத்தை ரத்துச் செய்தல், 3. பொதுக் கூட்டங்களைச் சட்ட விரோதமாக்கும் சட்டத்தை ரத்து செய்தல், 4. இந்தியப் பத்திரிகைகள் பற்றிய சட்டத்தை ரத்து செய்தல், 5.

சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளிடம் தாராள மனப்பான்மை காட்டி அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்தல்.

## *சிறையில் பெசண்ட்!*

வருடாந்திர காங்கிரஸ் மகாசபைகளிலே பிரிட்டிஷ் அரசுக்குப் போட்ட விண்ணப்பங்களை யெல்லாம் மண்ணப்பங்களாக்கி அடக்கு முறையைத் தொடர்ந்து அமுல் நடத்தியது அரசு.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் டாக்டர் பெசண்ட் சுயாட்சிக் கிளர்ச்சியைத் தொடங்கினா ராதலால், அவர் மீதும் அடக்குமுறைச் சட்டம் பாய்ந்தது. பெசண்ட், வி.வி.வாடியா, டாக்டர் அருண்டேல் ஆகிய மூவரையும் கைது செய்து, உதகமண்டலத்திலுள்ள ஒரு பங்களாவில் அரசு காவலில் வைத்தது. இதனால், நடுத்தர மக்கள் கையில் இருந்த இந்திய தேசியமானது அடித்தளத்தி லுள்ள மக்கள் கைக்கும் எட்டியது.

உலகறிந்த மாதரசியான பெசண்ட் சிறைப் பட்டதால் அப்போதைய அமெரிக்கக் குடியரசின் தலைவர் வில்சனும் கவலையடைந்தார். பிரிட்டினி லுள்ள நியாயஸ்தர்கள் தங்கள் தாயகத்தின் ஆட்சிக்கு எச்சரிக்கை விடுத்தனர். இந்தியாவிலே உயர் நிலையில் இருந்தவர்களில் சிலர் காங்கிரசிலே கலந்தனர்.

சேலம் சி. ராசகோபாலச்சாரியார், சென்னை திரு.வி.கலியாணசுந்தர முதலியார், அலகாபாத்

வாசிகளான பண்டித மோதிலால் நேரு, அவரது மைந்தன் ஜவர்கர்லால் நேரு, தேஜ்பகதூர் சாப்ரு ஆகியோர் பெசண்டைக் கைது செய்ததைக் கண்டித்து அறிக்கை விட்டு, காங்கிரசிலே கலந்தனர். ''மணி ஐயர்'' என்றழைக்கப்பட்ட சுப்பிரமணிய ஐயர் நீதிபதி பதவியைத் துறந்தார். பெசண்ட் அம்மையார், உதகையில் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலே, 1917 டிசம்பரில் கல்கத்தா நகரில் நடக்கவிருந்த 34வது காங்கிரஸ் மகாசபைக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆட்சியால் சிறை வைக்கப்பட்ட ஒரு தலைவரை அடக்குமுறைக்கு அறைகூவல் விடும் வகையிலே காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது இதுதான் முதல்முறையாகும். இரண்டு திங்களுக்குப்பின் பெசண்டம்மையாரும் அவருடைய சகாக்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

''பாரத மாதாவுக்கு ஜே!'' என்ற கோஷம் இந்தச் சந்தர்ப்பத்திலேதான் சமுதாயத்தின் மேல் - நடு - அடி மட்டங்களிலுள்ள மக்களெல்லாம் ஒன்றுபட்டு ஒலிக்கும் மந்திரமானது. ஒரு பெண்மணியை - குறிப்பாக, ஐரிஷ் நாட்டில் பிறந்து இந்திய நாட்டில் குடியுரிமை பெற்ற வீராங்கனையை இந்திய தேசியம் தனது தலைவராக ஏற்றுக்கொண்டு உலக நாடுகள் அனைத்தின் கவனத்தை யும் தன்பால் ஈர்த்தது.

❖

# காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம்

நாகபுரியில் கூடிய 35ஆவது வருடாந்தரப் பேரவையிலே, காங்கிரசுக்கு வழிகாட்டும் பொறுப்பை ஒரு தீர்மானத்தின் வாயிலாகக் காந்தியடிகளிடம் ஒப்படைத்த பின்னர், அடிகள் சாதாரணப் பொது மக்களின் அமைப்பாக காங்கிரசை மாற்ற 13 அம்சத் திட்டமொன்றை வகுத்துத் தந்தார். அது வருமாறு.

1. சமூக ஒற்றுமை, 2. தீண்டாமை ஒழிப்பு, 3. மதுவிலக்கு, 4. கதர், 5. மற்ற கிராமத் தொழில்கள், 6. கிராம சுகாதாரம், 7. புதிய அல்லது அடிப்படைக் கல்வி, 8. முதியோர் கல்வி, 9. பெண்கள் முன்னேற்றம், 10. சுக வழியிலும் சுகாதாரத்திலும் போதனை, 11. தேசிய மொழியைப் பரப்புவது, 12. தாய் மொழியில் அன்பு கொண்டு, அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுதல், 13. பொருளாதார சமத்துவத்திற்காகப் பாடுபடுதல்.

## *நிர்மாணத் திட்டம்*

இந்த 13 அம்சத்திற்கு ''காங்கிரஸ் நிர்மாணத் திட்டம்'' என்று பெயர் தரப்பட்டது. ''தேசியத் திட்டம்'' என்ற பெயரும் பொருந்துந்தானே.

இந்தத் திட்டத்தின் மூலம் தேசிய காங்கிரசை சமுதாயச் சீர்திருத்த இயக்கமாகவும் மாற்றினார் காந்தியடிகள். ஆம்; தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், தேசியக் கல்வி, பொருளாதாரச் சமத்துவம் ஆகியவை இந்திய சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை விளைவிக்கக் கூடியவையல்லவா!

பதின்மூன்று அம்சங்களும காங்கிரஸ்காரர்களிலே ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டியவையாகும்.

1917-ல் கல்கத்தாவில் பெசண்ட் தலைமையில் கூடிய வருடாந்தரப் பேரவையிலே, காங்கிரஸ் மாகாணங்களை மொழிவாரித் திருத்தியமைப்பது கொள்கையளவில் ஏற்பட்டதென்றாலும், நாகபுரி காங்கிரசிற்குப் பின்னர்தான் காந்தியடிகளின் முயற்சியால் அது ஏக காலத்தில் நாடு முழுவதிலும் நடைமுறைக்கு வந்தது. அதன்படி, தமிழ் வழங்கும் பிரதேசத்திற்குத் ''தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி'' அமைக்கப்பட்டது.

காங்கிரஸ் அமைப்பு விதிகளிலும் மாறுதல் காண நாகபுரி காங்கிரசிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, ''முடிந்தால், பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டும் - முடியாவிட்டால், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பிரிந்தும் வாழும் சுயராஜ்யத்தைப் பெறுதல்'' காங்கிரஸ் குறிக்கோளானது.

### *ஜனநாயகப் பாதையிலே...*

காங்கிரஸ் உறுப்பினர் ஆண்டுச் சந்தா நான்கணா வாகக் குறைக்கப்பட்டதுடன், காங்கிரஸ் கமிட்டியின்

நிர்வாகப் பொறுப்புகளுக்கு சாதாரண உறுப்பினர்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக நெறியும் நடைமுறைக்கு வந்தது.

1921-ல் நாட்டில் நடைமுறைக்கு வந்த மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தமானது சொத்து வரியும் வருமான வரியும் செலுத்துபவர்களுக்கு மட்டுமே மாநில மத்திய சட்ட மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்க வாக்குரிமையளித்தது. மக்களின் அமைப்பான காங்கிரசோ, 21 வயதான - நான்கணா ஆண்டுச் சந்தா செலுத்திய - இந்தியர் அனைவருக்கும் காங்கிரஸ் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குரிமையளித்தது.

இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்புக்கு, வெள்ளை - பச்சை - சிவப்பு ஆகிய முந்நிறங்களையும், நடுவிடத்தே கைராட்டையையும் கொண்ட கொடி ஒன்றையும் முதன் முதலாக நாகபுரி காங்கிரஸ் அதிகார பூர்வமாக ஏற்றுக் கொண்டது. இதற்கு முன்பும் மூவர்ணக் கொடி ஒன்றை காங்கிரஸ்காரர்கள் பயன் படுத்தினரென்றாலும் அது அதிகாரபூர்வமாக அங்கீ கரிக்கப்பட்டது இப்போதுதான்.

1906 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய வருடாந்தரப் பேரவையிலேயே பங்கிம் சந்திரரின் ''வந்தே மாதரம்'' என்று தொடங்கும் பாடலைத் ''தேசிய கீதம்'' ஆக ஏற்றுக் கொண்டதை இங்கு நினைவில் கொள்வோமாக!

★ இந்திய சமுதாயத்தினர் அனைவருக்கும் ஒரே அமைப்பு - அது, **இந்திய தேசியக் காங்கிரஸ்**

★ இந்தியா முழுவதற்கும் ஒரே கொடி - அது, **மூவர்ண தேசியக் கொடி.**

★ மாநிலங்களிடையே இணைப்பு மொழியாக ஒரே பொதுமொழி - அது, இந்தியாவின் சொந்த மொழிகளில் ஒன்றான **இந்தி மொழி.**

★ இந்தியர் அனைவருக்கும் பொதுவான தேசிய உடை - அது, கையால் நூற்று, கையால் நெய்த **கதருடை.**

★ இந்தியப் பெரு நாடு, பிரிட்டனில் உற்பத்தியாகும் பொருள்களுக்குச் சந்தையாக இருந்து வருவதையும், அதன் மூலம் இந்தியாவின் பொருளாதாரம் சீர்குலைந்து மக்கள் வறுமையுற்று வருவதையும் தவிர்க்கும் தொழில் திட்டம் - அது, **கிராம கைத் தொழில்களை வளர்த்தல்.** இதற்காக, **கதிர் - கிராம கைத்தொழில் சங்கம்.**

★ ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக நடத்தப்படவேண்டும். அதற்காக, பெண்களுக் குள்ள தடைகளைத் தகர்த்து, தளைகளையறுத்து அவர்களை முன்னேற்றப் பாடுபடுதல், அதற்காக, **அனைத்திந்திய மாதர் சங்கம்.**

★ சமுதாயத்தில் ஒழுக்கக்கேடும் பொருளாதாரச் சீர்குலையும் ஏற்படுவதற்குக் காரணமான மதுப் பழக்கத்தை ஒழிக்க முயலுதல். அதற்காக, **அனைத்திந்திய மதுவிலக்குச் சங்கம்.**

★ இந்து - முஸ்லிம் ஒற்றுமை அடிப்படையில் அனைத்துச் சமயங்களைச் சார்ந்தவர்களிடையில் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல்.

★ "எல்லோருக்கும் கல்வி" என்னும் அடிப்படையில் தொழிலோடு கூடிய கல்வியைத் தாய் மொழியின் வாயிலாக அளித்தல் - அதன் பெயர், **தேசியக் கல்வி.**

★ வயது வந்து முதியோர்களுக்குக் கல்வியளிக்க **இரவுப் பள்ளிகளை** நிறுவுதல்.

★ தீண்டாமை என்னும் கொடுமையை ஒழித்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியிலும் தொழிலிலும் குடியிருப்பிலும் மேம்பாடடையச் செய்தல். இதற்காகப் பாடுபட அனைத்திந்திய ரீதியில் **தீண்டாமை ஒழிப்புச் சங்கம்.**

★ இந்தியரிலே ஒவ்வொருவரும் தத்தம் தாய் மொழியிடத்துப் பற்றுக் கொண்டு அதன் வளர்ச்சிக்குத் தொண்டு புரிதல்.

★ கிராம சுகாதாரத்திற்கும் தேசத்தின் பொதுச் சுகாதாரத்திற்கும் பாடுபடுதல்.

★ இந்தியாவின் அரசியல் குறிக்கோள், முடியுமானால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்டு சுய ஆட்சி பெறுதல் - முடியாவிடில், பிரிட்டிஷ் ஆட்சி யிலிருந்து வெளியேறிப் பூரண சுதந்திரம் பெறுதல்.

காந்தியடிகளின் 13 அம்சத் திட்டத்தால் ஏழை எளியவர்களெல்லாம் - குறிப்பாக, உழவர்களும் தொழிலாளர்களும் காங்கிரசை தங்களுக்கு நல்வாழ்வு தரத்தக்க ஒரே அமைப்பு என்று நம்பி, அதிலே சேரலாயினர். அது வரை காங்கிரசை நடத்தி வந்த மிதிவாதிகளிலேயும் சிலர் தீவிர தேசியவாதிகளாக மாறினர். மற்றுஞ் சிலர், போலிக் காரணங்களைச் சொல்லி காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

இந்த நேரத்திலேதான், ''காந்தி பஞ்சகம்'' பாடி, காந்தியடிகளின் தலைமைக்கு வரவேற்புக் கூறினார் பாரதியார். மக்களெல்லாம் ''காந்தி சொற்கேட்டார், காண்பார் விடுதலை கணத்தினுள்ளே'' என்றும் ''பாரத மாதா திருத்தசாங்கத்''தில் கூறினார்.

### *திலகர் நிதி*

காந்தியடிகள் தந்த நிர்மாணத் திட்டத்தைச் செயல் படுத்த ஓராண்டுக்குள் ஒரு கோடி ரூபாய் நிதி திரட்ட தேசிய காங்கிரஸ் பெஜவாடாவில் கூடிய அ.இ.கா.க. கூட்டத்திலே முடிவெடுத்தது. அப்போதுதான் காலமாகியிருந்த திலகர் நினைவாக ''திலகர் சுயராஜ்ய நிதி'' என்ற பெயரால் நிதி திரட்டத் தீர்மானித்தது.

காங்கிரசில் அப்போதுதான் சேர்ந்திருந்த வார்தாவள்ளல் ஜமுனலால் பஜாஜ், ரூபாய் ஒரு லட்சம் கொடுத்து, சுயராஜ்ய நிதியைத் தொடங்கி வைத்தார். பத்துத் திங்களுக்குள்ளாகவே, திட்டமிட்டதற்கு அதிகமாக நிதி சேர்ந்துவிட்டது. ஆம், ஒரு கோடி 15

லட்சம் திரட்டப்பட்டுவிட்டது. அந்நாளில் தொழிலதிபர் களோ, வணிக முதலாளிகளோ நிலப்பிரபுக்களோ அதிக எண்ணிக்கையில் காங்கிரசுக்கு ஆதரவாக இருக்க வில்லை. ஆகவே, பொது மக்களிட மிருந்தே சுயராஜ்ய நிதிக்கு ஆதரவு கிடைத்தது.

### *தேசிய உடை*

காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்திலே கதர் வளர்ச்சி பற்றிய அம்சமானது காந்தியடிகளின் உற்சாகத்தையே பொறுத்ததாக இருந்தது. அவர்தான் காலத்தால் விழுங்கப்பட்டு மறைந்து போயிருந்த கை ராட்டையைக் கண்டு பிடித்தார். அப்போது கைத்தறி நெசவுக்குக் கூட இந்திய ஆலைகளில் உற்பத்தியாகும் நூல்களே பயன்படுத்தப்பட்டு வந்தன. கையால் நூற்கப்பட்ட நூலைக்கொண்டு கையால் நெய் துணிக்கே **"கதர்"** என்று பெயர் தந்தார் அடிகள்.

அந்தக் காலத்துக் கதர் மிகவும் முரட்டாடையாகவே இருந்தது. செல்வந்தர்களும் கல்விமான்களும் அதைப் பயன்படுத்தத் தயங்கினர். பெண்களோ, "சுமக்க முடியாத பாரம்" எனக் கருதி, கையால் தீண்டவும் அஞ்சினர். அந்த நிலையில் கதர் கட்ட முன் வந்தவர் களுக்கும் அது கிடைப்பது அரிதாக இருந்தது.

சுயராஜ்ய நிதி திரட்டத் தீர்மானித்த பெஜவாடா அ.இ.கா.க. கூட்டத்திலேயே ஒரு ஆண்டுக்குள் 20 லட்சம் கைராட்டைகளைச் சுற்ற முனைந்து கதர்த்திட்டத் திற்கு ஆரம்பத்திலேயே மக்கள் மகத்தான வெற்றியைத் தந்தனர்.

### *ஒரு கோடி உறுப்பினர்*

தேசிய காங்கிரசுக்கு ஒரு ஆண்டுக்குள் ஒரு கோடி பேரை உறுப்பினர்களாகச் சேர்க்கவும் பெஜவாடாவில் கூடிய அ.இ.கா.க. தீர்மானித்தது. அதன்படி, குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் குமரி முதல் காஷ்மீரம் வரை ஒரு கோடி பேர் தங்களை காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சந்தா செலுத்திப் பதிவு செய்து கொண்டனர்.

கதர் உற்பத்தியைப் பெருக்கவும் உற்பத்தியான கதரை மக்களிடையே பரப்பவும் ''அகில பாரத சர்க்கா சங்கம்'' என்னும் பெயரில் நிரந்தரமாக இயங்கத்தக்க புதிய அமைப்பு ஒன்றை காங்கிரஸ் அமைத்தது. தேசிய காங்கிரசுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இற்றைநாள் வரை அந்த அமைப்பு மாநில - மத்திய அரசுகளின் ஆதரவுடன் இயங்கி வருவதோடு, ''கதர்'' என்னும் பெயர் பெற்ற ''தேசிய ஆடை''க்குச் **''சிரஞ்சீவி''** வரம் தந்துவிட்டது.

காந்தியடிகள், ''இனி, நான் சுத்தக் கதரையே உடுத்துவேன். கதரைத் தவிர வேறொரு ஆடையை உடுத்த மாட்டேன்'' என்று விரதம் எடுத்துப் பிரகடனம் செய்தார்.

இதனால், கதரை உடுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்குள் நாள் பெருகலானது. கதர் உடுத்துபவர்களைத் தேச பக்தர்களாகவும், காந்தி பக்தர்களாகவும், தேசியவாதிகளாகவும் மக்கள் கருதினர். காங்கிரசில் சேர்ந்திருந்த பண்டித மோதிலால் நேரு, ஜவகர்லால்

நேரு போன்ற பிரபுக்களும் கதராடை அணிந்தது அந் நாளில் மிகப் பெரிய சமூக சீர்திருத்தமாகக் கருதப் பட்டது.

### *ஆடையிலே புரட்சி!*

காந்தியடிகள் இரண்டு ஆடைகளை மட்டுமே பயன்படுத்துவது என்று முடிவெடுத்து, தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்த நேரத்திலே, மதுரை யிலிருந்த வண்ணம் அதைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். பிற்காலத்திலே பிரிட்டனின் முன்னாள் பிரதமர் சர். வின்ஸ்டன் சர்ச்சில், ''காந்தி ஒரு அரை நிர்வாணப் பக்கிரி'' என்று வருணித்தது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும். காந்தியடிகளைப் போல காங்கிரஸ்காரர்கள் எல்லோருமே அரை நிர்வாணப் பக்கிரிகளாகி விடவில்லையென்றாலும், ஏழைகளைப் போல எளிய முறையில் ஆடை உடுத்தும் வழக்கத்தை தேசியப் பெருந்தலைவர்களும் கடைப் பிடித்தனர். அதுவரை இந்திய நாட்டிலே ஆடை உடுத்துவதிலேயே 'பிரபுத்துவ புத்தி'' வெளிப்படுத்தப் பட்டு வந்தது. பலருக்குப் பயன்படக் கூடிய ஆடைப் பொதியை ஒருவர் சுமக்கின்ற''நாகரிகம்'' செல்வந்தர் களிடையில் ஒரு அநாகரிகமாக இருந்து வந்தது. அதனால்,

'' *சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச்*
*சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்*
*அப்பால் எவனோ செல்வான் - அவன்*

*ஆடையைக் கண்டு பயந்து எழுந்து நிற்பார்*
*நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்''*

என்று பாரதியார் பாட நேர்ந்தது.

காந்தியடிகள், இந்திய தேசிய காங்கிரசைப் பயன்படுத்தி, ''ஆடைப் பிரபுத்துவம்'' அஸ்தமிக்கச் செய்துவிட்டார். துவராடையை அணிந்த துறவிக்குத் தருகின்ற மதிப்பை விடவும் அதிகமான மதிப்பை கதராடை அணிந்த தேசியவாதிகளுக்கு மக்கள் தந்தனர். காக்கி ஆடை அணிந்தவனை ராணுவ வீரனாக மக்கள் கருதினர் என்றால், கதராடை அணிந்தவனை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசிய வீரனாகக் கருதினர். காக்கி ஆடை அணிந்த சோல்ஜரைக் கண்டால் மக்கள் பயந்தனர். கதராடை அணிந்த தேச பக்தனிடமோ பக்தி செலுத்தினர்.

## *இந்தியே பொதுமொழி*

இந்திதான் இந்தியப் பொது மக்களிலே பெரும் பாலோருக்குத் தெரிந்த மொழியாக இருப்பதால், அதையே தேசத்தின் பொது மொழியாக ஏற்று, பதின் மூன்று அம்ச நிர்மாணத் திட்டத்திலே இந்திய மொழியைப் பரப்புவதற்கும் காந்தியடிகள் இடம் அளித்தார். இந்தி மொழி வழங்காத தென்னிந்தியாவிலே அந்த மொழியைப் பரப்புவதற்கும் ''தக்ஷண பாரத இந்தி பிரசார சபை'' என்ற பெயரால் ஒரு அமைப்பை காங்கிரஸ் நிறுவியது. அந்த அமைப்பின் முதல்

தலைவராகப் பொறுப்பேற்றவர் மூதறிஞர் ராஜாஜி யாவார், காந்திஜியின் தாய் மொழி இந்தி அல்ல; குஜராத்தி! ஆயினும், இந்திய தேசியத்திற்கு வலுத்தேடும் பொருட்டு, அதனைப் பொது மொழியாகப் பரிந் துரைத்தார். கடைசி வரை இந்திதான் இந்தியாவின் பொது மொழி என்பதில் அவர் மாறவில்லை. வாழ்நாள்வரை உறுதி காட்டினார்.

காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றான பூரண மதுவிலக்கு பற்றிப் பிரசாரம் செய்வதற்கென ''அகில இந்திய மதுவிலக்குப் பிரசார சங்கம்'' என்னும் பெயரிலே ஒரு அமைப்பை நிறுவியது காங்கிரஸ். அதன் முதல் தலைவராக ராஜாஜியே நியமிக்கப்பட்டார். தம் வாழ்நாள் முழுவதிலும் ராஜாஜி பூரண மதுவிலக்குக் கொள்கையில் உறுதி காட்டி வந்தது நாடறிந்ததாகும்.

இந்திய தேசிய காங்கிரசுக்கு காந்தியடிகள் தந்த 13 அம்சங்கள் கொண்ட நிர்மாணத் திட்டத்திலே கதருக்கே அவர் முதன்மை தந்தார். அது வடபுலத்தில் ''காதி'' என்று பெயர் பெற்றது.

காந்தியடிகள், கிராமக் கைத்தொழில்களை வளர்க்கவும் தமது திட்டத்தில் இடம் தந்தாரென்றாலும், கைத்தொழில்களிலே கதர்தான் மைய இடத்தைப் பெற்றிருப்பதாக அவர் விளக்கம் தந்தார்.

## *'சுயராஜ்யம்' என்பதன் பொருள்*

''சுயராஜ்யம் என்பதன் பொருள் இந்திய மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே தேடிக் கொள்வதுதான்''

என்று கூறினார். கிராமப்புறங்களிலுள்ள விவசாயி களுக்கு நிலத்தில் கிடைக்கும் வருவாய் மட்டுமே போதுமானதல்ல என்றும், அவர்கள் வயிறார உண்டு வாழ துணைத் தொழில்கள் தேவை என்றும் - அவை கதரும் கிராமக் கைத் தொழில்களுமாகத்தான் இருக்க முடியும் என்று அடிகள் விளக்கம் தந்தார்.

''இளம் பருவத்திலேயே விதவைகளாகி விட்ட பெண்கள் தங்கள் கற்பைக் காத்துக் கொள்ளும் வகையிலே வீடுகளிலிருந்தபடி வருவாய் தேடிக் கொள்ளக் கையால் நூற்று, கையால் நெய்வதான கதர் உற்பத்தி ஒன்றுதான் உதவி புரியும்'' என்றார். ''இந்த ஒரே காரணத்திற்காக'' கதராடைக்கு ஆன்மா உண்டு என்று நான் நம்புகிறேன்'' என்றும் சொன்னார். ''கதரின்றேல் இந்தியாவுக்குச் சுதந்திரமும் இல்லை'' என்று உறுதியாகக் கூறினார்.

கற்பனைக் கோஷங்களில் கவர்ச்சியடையும் வழக்கமில்லாத ஜவகர்லால் நேருகூட, ''இந்திய தேசியத்தின் பிரதான சின்னம் கதராடைதான்'' என்று கூறினார்.

''அலி சகோதரர்கள்'' என்றழைக்கப் பெற்ற மௌலானா முகமது அலியும், மௌலானா ஷவுகத் அலியும் ''கைராட்டையில் நூற்று நாம் தயாரிக்கும் ஒவ்வொரு சிட்டமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு கெதிரான தோட்டா'' என்று வருணித்தனர்.

***கதரணிவது கட்டாயம்***

காங்கிரஸ் அமைப்பு விதி ஒன்றின் மூலமாக காங்கிரஸ் உறுப்பினர்கள் கதராடை அணிவது கட்டாய மாக்கப்பட்டது. கதர் இயக்கம் தோன்றிய சில ஆண்டு களுக்குள் காங்கிரஸ் உறுப்பினர்கள் நான்கணா சந்தாப்பணத்திற்குப் பதிலாக, அதற்கு இணையான விலை மதிப்புடைய நூலைத் தாங்களே நூற்றுச் செலுத்த விதி வகுக்கப்பட்டது. ஆனால், பின்னர் அது கைவிடப் பட்டது.

காங்கிரஸ்காரர்களிலே ஒவ்வொருவரும் தக்ளியிலும், கைராட்டையிலும் நூல் நூற்பதைத் தேசியத் தருமம் போலக் கடைப்பிடித்தனர். ''தினம் அரை மணி நேரமேனும் நூற்காமல் உணவருந்துவ தில்லை'' என்று காந்தியடிகள் விரதம் மேற்கொண்டார்.

நாடெங்கணும் கதராடை விற்கும் கடைகள் தோன்றின. ''காதி பந்தர்'' என்னும் பெயரிலே முதல் கதர்க் கடையை பம்பாய் நகரில் காந்தியடிகள் தொடங்கி வைத்தார்.

கதர்ப் பிரச்சாரச் சுற்றுலாவுக்காக முதன் முதலாகத் தமிழ் நாட்டைத் தேர்ந்தெடுத்து 1921-ல் அநேகமாக தமிழ்நாடு முழுவதிலும் காந்தியடிகள் சுற்றுலாச் செய்து கதர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டார். தமிழ் நாட்டிலே திருப்பூர் நகரை மைய இடமாகத் தேர்ந்தெடுத்து, அங்கு அகில இந்திய சர்க்கா சங்கத்தின் சார்பிலே கதர் உற்பத்தி ஆரம்பமானது. அன்று தொட்டு தமிழ் நாட்டிலே

திருப்பூரே கதர் உற்பத்தியாகும் பிரதான நகராக இருந்து வருகிறது. கதர் உற்பத்தியில் இந்திய மாநிலங்களில் தமிழ் மாநிலமே முதல் இடம் பெற்றிருக்கிறது, இதனைக் காந்தியடிகளே பலமுறை எடுத்துச் சொல்லித் தமிழகத்தைப் பாராட்டியிருக்கிறார்.

## கதர்த் தொண்டில் ராஜாஜி ஈ.வே.ரா

தமிழகத்திலே கதர் உற்பத்தியும் விற்பனையும் அதிகமாகும்படிச் செய்த திருத்தொண்டிலே மூதறிஞர் ராஜாஜிக்கும் பெரியார் ஈ.வே.ராவுக்கும் பெரும்பங்கு உண்டு. திரு. எஸ். இராமநாதன், கோவை திரு. ஐயாமுத்து ஆகிய இருவரும் திருப்பூர் சர்க்கா சங்கத்தின் செயலாளர்களாக இருந்து பல ஆண்டுகள் பணி யாற்றினர்.

காந்தியடிகள் கதரின் மீது தமக்கிருந்த எல்லையற்ற பற்றுதல் காரணமாக, கைராட்டை சுழலுங்கால் எழும் ஓசையை கண்ணபெருமானின் குழலோசையோடு ஒப்பிட்டு வருணித்தார். பகவத் கீதையின் ஆன்மிகப் போதனைகளை சாதனைகளாக்குவதற்குக் கைராட்டை தமக்குப் பயன்படுவதாகவும் அவர் கூறினார். இராட்டையைச் சுற்றுவதன் மூலம் தமது ஆன்ம பலம் அதிகரிப்பதாகவும் அவர் சொன்னார்.

அடிகளின் கருத்துக்களை ''அதீதமான கற்பனை'' என்று சொல்லிக் கவி தாகூர் கண்டனக் குரல் எழுப்பினார். வங்க மாநிலத்து நாளிதழ் ஒன்றிலே நீண்ட கட்டுரையும் வெளிவரச் செய்தார். காந்தியடிகள், அன்பு

கனிந்த மொழிகளிலே - தாகூரின் ஆட்சேபனைகளைத் தகர்த்தெறியும் வகையிலே தமது ''யங் இந்தியா'' பத்திரிகையில் பதிலளித்தார்.

காந்தியடிகளின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்த மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் என்பவர், கதர் இயக்கமானது காந்தியடிகளின் செல்வாக்கைப் பொறுத்ததுதான் என்றும், அவருக்குப் பின் அது அடியோடு மறைந்துவிடும் என்றும் அறிக்கை விட்டார்.

''அன்பர் ஜோசப்பின் கருத்து அவர் காணும். கனவாக இருக்கலாம். ஆனால், அது பலிக்காது'' என்று அடிகள் பதிலளித்தார்.

விஞ்ஞானியான டாக்டர் பி.சி.ரே. கதர் இயக்கத்திற்கு முழு மனதுடன் ஆதரவளித்து அறிக்கை வெளியிட்டார்.

ஆங்கிலேயரின் ஆதரவையும் கதர் வளர்ச்சிக்குத் தாம் எதிர்பார்ப்பதாக அடிகள் அறிக்கை விடுத்தார். பிரிட்டினிலும் இந்தியாவிலும் உள்ள ஆங்கிலேய பிரமுகர்களில் பலர் கதர் இயக்கத்திற்கு ஆதரவளித்தனர்.

## *பத்திரிகைகள் - நாடகங்கள்*

ரிச்சர்டு கிரக் என்பவர் ''கதரின் பொருளாதாரம்'' என்னும் பெயரில் நூல் எழுதி வெளியிட்டார். கதர் இயக்கத்திற்குப் பொது மக்களுடைய ஆதரவைத் திரட்டும் வகையிலே பாடல்களும் நாடகங்களும் பத்திரிகைகளும் நூல்களும் வெளியாயின.

''கதர் பத்திரிகை'' என்பது உட்பட எண்ணற்ற வார, மாத ஏடுகள் கதர் இயக்கத்திற்கு ஆதரவாக வெளி யிடப்பட்டன.

சதாவதானி தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், ''கதரின் வெற்றி'' என்னும் பெயரிலே நாடகம் ஒன்றை எழுதி, தமது ''பாவலர் பாய்ஸ் கம்பெனி''யின் மூலம் தமிழ்நாடு முழுவதும் சென்று நடத்திக் காட்டினார். இங்கிலாந்தில் ஐந்தாம் ஜார்ஜின் முடிசூட்டு விழாவை யொட்டி நடைபெற்ற ''வெம்பிளிக் கண்காட்சி''யிலும் நடத்தினார்.

### *பாடல்கள்*

''காந்தி கை ராட்டினமே'', ''ஆடு ராட்டே சுழன்றாடு ராட்டே'' என்று தொடங்கும் பாடல்கள் உள்பட கைராட்டைப் பாடல்கள் பல தமிழிலே எழுதப்பட்டு எங்கெங்கும் முழங்கின. புராண நாடகங்களிலேகூட ராட்டைப் பாடல்கள் பாடுமாறு வற்புறுத்தினர் நாடக ரசிகர்கள். சிறந்த தேச பக்தையும், நட்சத்திர நடிகையுமான திருமதி கே.பி. சுந்தராம்பாள் இப்பாடல்களை இசைத் தட்டுகளிலே பதிவு செய்து தர, அந்தத் தட்டுகளின் மூலம் தமிழ் நாடெங்கணும் ஒலித்தன.

### *போலிக் கதர்...*

கதர் ஆடைக்கு ஏற்பட்ட பெருமதிப்பின் காரணமாக சுத்தக் கதரினும் சிறிது தரத்தில் தாழ்ந்ததான

போலிக் கதராடைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வந்தன. அதனைச் சமாளிக்க ''அகில இந்திய சர்க்கா சங்கத்திடம் அங்கீகாரம் பெற்ற கதராடைகளையே வாங்குங்கள்'' என்று ராஜாஜி போன்ற தலைவர்களும் சர்க்கா சங்கங்களும் மக்களை எச்சரிக்க வேண்டியிருந்தது. அங்கீகாரம் பெற்ற கதராடைகள் கிடைக்கவில்லையானால், அங்கீகாரம் பெறாத கடைகளில் விற்கும் போலிக் தராடைகளையும் மக்கள் வாங்கலாம் என்றும், எக்காரணத்தைக் கொண்டும் ஆலைகளில் உற்பத்தியாகும் துணிகளை வாங்க வேண்டாமென்றும் காந்தியடிகள் அறிக்கை விடுத்தார். கதர் இயக்கமானது அப்பட்டமான சோஷலிசத் தன்மை பெற்றதாகவும், உள்நாட்டு - அயல் நாட்டு ஆலை முதலாளிகளின் சுரண்டலிலிருந்து இந்தியப் பெரு நாட்டைக் காப்பதாகவும் இருந்தது. அந்நாளிலே பிரிட்டினில் உற்பத்தியாகும் ஆடைகளேயன்றி, ஜப்பானில் உற்பத்தியாகும் சாயத்துணிகளும், போலிப் பட்டாடைகளும் இந்தியாவில் அதிக அளவில் விற்பனையாயின.

### *கோட்டும் சூட்டும் மறைந்தன!*

''கதராடையையே உடுத்துங்கள்'' என்னும் இயக்கம் தோன்றிய பின், பழைய பாணியிலான ஆடம்பரப் பட்டாடைகளுக்கும் நவீன முறையில் கோட்டும் சூட்டும் அணியும் ஐரோப்பிய பாணி ஆடைகளுக்கும் இருந்த மதிப்பு மறையலானது.

காங்கிரஸ் மாநாடுகளிலே, பிரதிநிதிகளாகவும் பார்வையாளராகவும் கூடுவோர் எளிய முறையில் வேட்டி - சட்டை - மேல் குட்டை - காந்தி குல்லாய் மட்டுமே அணிந்து திரண்டனராதலால் ''தேச பக்தர்கள் எல் லோரும் ஓர் குலம்'' என்னும் தேசிய ஒருமைப் பாட்டுணர்வு வலுப்பெறலானது.

காந்தியடிகள் தந்த ஆரம்பப் பள்ளிக்களுக்கான ஆதாரக் கல்வித் திட்டத்திலே, மாணவர்களுக்குத் தக்ளியில் நூற்கும் பயிற்சியளிப்பது கட்டாயமாக்கப் பட்டது.

## தேசியச் சின்னம்

கதராடையானது, மதிப்பிற்குரிய தேசியச் சின்னமாகவும், மக்களிடையே ''ஏழை - பணக்காரர்'' என்னும் புறத் தோற்றத்தை ஒழிக்கத்தக்க சமதருமச் சின்னமாகவும், இளம் விதவைகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இல்லத்திலிருந்தபடியே நூல் நூற்றும் ஆடை நெய்தும் வருவாய் தேடிக் கொள்ளக் கூடிய தொழிலாகவும் விளங்கியதால், இது தலையாய சமய சமுதாய சீர்திருத்தமாகவே கருதப்பட்டது.

## பெரியாரும் கதரும்

பெரியார் ஈ.வே.ரா. காங்கிரசிலிருந்த காலத்தில், கதரைத் தமது தோளில் சுமந்து விற்றார். அவரும் அவரது மனைவி நாகம்மையாரும் காந்தியடிகள் ஈரோடு நகருக்கு வருகை தந்தபோது அவரிடமே ராட்டையில் நூல் நூற்பதற்குப் பயிற்சி பெற்றனர்.

ஈ.வே.ரா. காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னரும், தொடர்ந்து பல ஆண்டுகள் தமது ''குடியரசு'' வார இதழிலே கதர் இயக்கத்திற்கு ஆதரவு தந்து வந்தார். ஆம்; அப்போது அவர் கதர் இயக்கத்தை சமூக சீர்திருத்தமாகவே கருதினார்.

## கதர்பற்றித் தோழர் சிங்காரவேலர்

பொதுவுடைமை வாதியாகவும் காங்கிரஸ் வாதியாகவும் விளங்கி வந்த தோழர் ம. சிங்காரவேலர், 1924-ல் கான்பூரில் நடந்த முதலாவது அகில இந்திய கம்யூனிஸ்டு மாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரையில் கதராடை பற்றிக் கீழ்வருமாறு கூறினார்.

''காங்கிரஸ் திட்டங்களிலொன்று கதர். ஒத்துழையாமை இயக்கம் ஓங்கி வளர்ந்த காலத்தில் கதரால் என்னென்ன நன்மைகள் உண்டாகுமென எதிர்பார்க்கப்பட்டதோ அவை ஏற்படவில்லை. இந்தியத் தொழிலாளிக்கு ராட்டையினால் அதிக நன்மை உண்டாகுமென்று சொல்ல முடியாது. ஆனால், சுயராஜ்யப் போரில் ஈடுபட்ட வீரர்களுக்குச் சிறப்பு அணியாகக் கதரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சர்க்கா சங்கத்தார் இதைச் செய்வதில் வெற்றி பெறுவார்கள் என நம்புகிறேன்.

''பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாச் சமயங்களிலும் கட்டாயமாகக் கதரையே அணிந்துகொள்ள வேண்டுமா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.''

*(''ம. சிங்காரவேலரின் பொதுவுடைமை விளக்கம்'' பக். 21)*

கதராடையானது இந்திய ஆலைத் துணிக்குப் போட்டியாகி விட்டதால், திரு. சிங்காரவேலரைப் போன்ற தொழிற் சங்க இயக்கத்திலும் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் காரர்கள் நிலை தரும சங்கடமாக இருந்தது. குறிப்பாக, வர்க்கப் புரட்சிக்கு ஆலைத் தொழிலாளர் இயக்கமே சிறந்த சாதனமென்று கருதிய கம்யூனிஸ்டுகள் மன நிறைவுடன் கதர் வளர்ச்சிக்கு ஆதரவு தர முடியாத வர்களாக இருந்தனர். இதன் பிரதிபலிப்பை சிங்கார வேலரின் பேச்சிலே காண முடிகிறது.

### *ஆலை அதிபர்களின் வேண்டுகோள்*

இன்னொரு புறத்திலே, பம்பாய் - அகமதாபாத் ஆலை முதலாளிகளும் கதர் இயக்கத்தை எதிர்த்தனர். அவர்கள், அன்னியத் துணி பகிஷ்காரத்துடன் நிற்கு மாறும் கதரியக்கத்தைக் கைவிடுமாறும் காந்தியடிகளை வேண்டினர்.

பிரிட்டனிலுள்ள லாங்காஷயர் ஆலைகளில் உற்பத்தியாகி இந்தியாவில் இறக்குமதியாகும் அன்னியத் துணிகளை பகிஷ்கரிப்பதுதான் இந்தியாவின் - பொருளாதாரத்தை வளர்க்கவும் அன்னிய முதலாளி களின் சுரண்டலைத் தடுக்கவுமான உண்மையான சுதேசி இயக்கமாக இருக்குமென்றும் அடிகளாருக்கு ''உபதேசம்'' செய்தனர். ஆனால், அவர் இந்திய ஆலை முதலாளிகளின் மாயா வாதத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

கதராடை கிடைக்காவிட்டால் அங்கீகாரம் பெறாத கதரையும் வாங்கலாம் என்றும், இரண்டும் கிடைக்கா

விட்டால் மில் நூலைக் கொண்டு கையால் நெய்த கைத்தறி ஆடைகளையும் வாங்கலாமென்றும் கூறினார்.

## *அன்னிய ஆடை பகிஷ்காரம்*

காந்தியடிகள், கதர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த நேரத்திலேயே அன்னிய ஆடை பகிஷ்காரத்தையும் வலுப்படுத்தி வந்தார். சுதேசிப் பொருள்களை ஆதரிப் பதையும் விதேசிப் பொருள்களைப் பகிஷ்கரிப்பதையும் ஏக காலத்தில் நடத்த காங்கிரஸ் காரியக் கமிட்டி 1921-ல் முடிவெடுத்து, அதை நடைமுறைப்படுத்த ஒரு துணைக் குழுவையும் நியமித்தது.

லோகமான்ய திலகர் மறைந்தபின் வந்த முதலாண்டு நிறைவு நாளான 1921 சூலை 30 ஆம் நாளிலே நாடெங்கும் அன்னிய ஆடைகளைக் கொளுத்துமாறு காங்கிரஸ் காரியக் கமிட்டி தேச மக்களை ஒரு தீர்மானத்தின் மூலம் வேண்டிக் கொண்டது.

பம்பாய் நகரிலே காந்தியடிகளே சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்த கூட்டத்தி லே, ஒரு லட்ச ரூபாய்க்கு அதிகமான மதிப்புடைய அன்னியத் துணிக் குவியலுக்குத் தீ மூட்டினார்.

கதர் இயக்கத்தைப் பொறுத்தவரை அரசியல் கலப்பின்றி நடத்தினாரென்றாலும், அன்னியத் துணி பகிஷ்காரம் சுதந்திரப் போரின் ஒரு அம்சமாகிவிட்டது.

அன்னிய ஆடைக் குவியலுக்குத் தீ வைப்பதை அகிம்சைக்கு எதிரான ''நாச வேலை'' என்று கவி

தாகூரும் பூஜ்யர் ஆண்டுரூஸும் வருணித்தனர். அவர் களுக்கு அன்னிய ஆடைகளை எரித்த பம்பாய்க் கூட்டத்தில் பதிலளித்து காந்திஜி கூறியது வருமாறு.

''இங்கே குவிந்து கிடக்கும் அன்னிய ஆடை களுக்கு நான் நெருப்பு வைக்கப் போகிறேன். எனது நெஞ்சில் பெருநெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. நான் இங்குள்ள ஆடைக் குவியலுக்கு வைக்கப் போகும் நெருப்பு உள்ளுக்குள்ளேயே என்னை எரித்துக் கொண்டிருக்கும் வெளித் தோற்றமே தவிர வேறு எதுவுமில்லை. அன்னிய ஆலை முதலாளிகளின் சுரண்டலால் எனது நாட்டு எழை விவசாயிகளும், தொழிலாளர்களும், பட்டினியால் செத்துக் கொண் டிருப்பதை நான் இன்னும் எவ்வளவு காலம் பொறுத்துக் கொண்டிருப்பது? பொறுமை இழந்து விட்டேனாதலால் தீ வைக்கிறேன்.''

பம்பாய்க் கூட்டத்தில் தாம் அரை நிர்வாணக் கோலத்தில் இருப்பதைக் கைவிடுவது பற்றியும் அடிகள் பேசினார். அது வருமாறு.

''மக்கள் எல்லோரும் கைராட்டையையும் கதராடையையும் கைக் கொண்டால் அப்போதுதான் நான் என் முழங்கால் வரையுள்ள வேட்டியைக் கைவிட்டு, எனது முந்தைய ஆடையை மீண்டும் தரித்துக் கொள்வது எனக்கு சாத்தியமாகும்.''

(காந்தி நூல் தொகுப்பு - பகுதி 5, பக். 842)

காந்தியடிகளும் காங்கிரஸ்காரர்களும் சிறைச் சாலைக்கு வெளியே வாழ்ந்தபோது மட்டுமல்லாமல், விடுதலைப் போரில் ஈடுபட்டு சிறைச்சாலைகளில் அடைப்பட்டிருந்த காலத்திலும் தக்ளியிலும் கை ராட்டையிலும் நூற்பதை ஒரு விரதமாகக் கடைப் பிடித்தனர். பண்டித மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, ராஜாஜி, மௌலானா அபுல்கலாம் ஆசாத், ராசேந்திர பிரசாத் ஆகிய பெருந்தலைவர்களின் சிறைவாழ்க்கையும் இதற்கு விலக்கு அல்ல.

❖

# தேசியம் வளர்த்த சமூக ஒற்றுமை

காந்திஜி, தாம் வகுத்தளித்த காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்திலே, சமூக ஒற்றுமைக்கே முதலிடந் தந்தார். இந்து, முஸ்லிம், கிறித்துவ, பார்ஸி, சீக்கிய சமயங்களிடையில் ஒருமைப்பாடு காண்பதையே அவர் சமூக ஒற்றுமையாகக் கருதினார். இது, காங்கிரசால்தான் சாத்தியமாகும் என்றும் அவர் நம்பினார்.

உண்மையில் ஆங்கில மொழிக் கல்வியினாலும் ஐரோப்பிய நாகரிக மோகத்தினாலும் இந்திய சமூகத்திலே உயர் கல்வி கற்றவர்களிடையில் ஒற்றுமை நிலவுவது போன்ற ஒரு தோற்றம் இருந்து வந்தது. ஆனால், அது உண்மையானதோ தேவையானதோ அல்ல.

### *புதிய சாதி*

ஆங்கிலக் கல்வியாலும் ஐரோப்பிய நாகரிக மோகத்தாலும் இந்தியாவின் புராதன பாரம்பர்ய கலாசாரத்திற்குப் புறம்பான, சில வகையில் விரோதமான ஒரு புதிய சாதி பாரதத்தில் தோன்றியிருந்தது. அந்தச் சாதிதான் காங்கிரசைத் தோற்றுவித்தது. ஆனால், காந்திஜி விரும்பிய சமூக ஒற்றுமையானது, இந்திய

கலாச்சாரத்தின் அடிப்படையிலானதாகும். படித்தவர் - பாமரர், பணக்காரர் - ஏழை என்ற வேற்றுமைகளற்ற ஒற்றுமையாகும்.

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றிய பின்னுள்ள 35 ஆண்டு காலத்திலே வேறு பல சமய ரீதியிலான அரசியல் அமைப்புகளும் இந்தியாவில் தோன்றலாயின. அவை, முஸ்லிம் லீக், இந்து மகாசபை ஆகியவையாகும்.

### *காங்கிரஸ் - லீக் உறவு*

முஸ்லிம்லீக் 1905-ல் டாக்கா நவாபால் தோற்று விக்கப்பட்டது. அப்போது பலமான எதிர்ப்புக்குரிய தாகியிருந்த வங்கப் பிரிவினைக்கு ஆதரவாக வேலை செய்யவே முஸ்லிம்லீக் பிறந்ததெனலாம். ஆனால், 1912-ல் வங்கப் பிரிவினை இந்திய அரசால் கைவிடப் பட்ட பின்னர் முஸ்லிம் லீக் இஸ்லாமிய சமுதாயத்தி னரின் கல்வியபிவிருத்திக்காகவும், அரசியல் பிரச்னை களுக்காகவும் பாடுபடுவதிலே கருத்துச் செலுத்தியது. அதன் விளைவாக இந்திய தேசிய காங்கிரசுடன் தோழமை கொண்டது. 1919-ல் கிலாபத் கிளர்ச்சி தோன்றிய பின்னர், காங்கிரஸ் - லீக் அமைப்புக்கள் ஒரே நேர் கோட்டில் நடைபோட்டன.

ஒரு சமயத்தில் முஸ்லிம் லீகின் காரியக் கமிட்டியி லே காந்திஜி கலந்து கொண்டார். ஒன்றிரண்டு சந்தர்ப் பங்களில் முஸ்லிம் லீகின் பேரவையானது காங்கிரசின் வருடாந்திர மகாசபைப் பந்தலிலேயே நடைபெற்றது.

வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரம், சைமன் கமிஷன் பகிஷ்காரம் பற்றிய தீர்மானங்களை இந்திய சட்ட சபையிலும் மாநில சட்டமன்றங்களிலும் காங்கிரசும் லீகும் ஒன்றுபட்டு நிறைவேற்றின. மாநில - மத்திய சட்ட சபைகளுக்கு வெளியேயும் பகிஷ்கார நடவடிக் கைகளில் ஒன்றுபட்டுப் பங்கு பெற்றன.

### *காங்கிரஸ் வழியில் இந்து மகாசபை*

இதுபோல, இந்து மகாசபையும் தொடக்க காலத்தில் காங்கிரசுடன் தோழமை கொண்டு செயல்பட்டது. காங்கிரஸ் மகாசபைத் தலைவரே இந்து மகாசபைத் தலைவராகவும் இருக்கும் அதிசயமும் ஒரு சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தது. இதனை நிகழ்த்தியவர் புனித காசிநகர் வாசியான பண்டித மதன்மோகன மாளவியா ஆவார். இந்து மகாசபையின் ஒரு வருடாந்திரப் பேரவையிலே, தேசிய முஸ்லிம் தலைவர்களி லொருவரான அக்கீம் அஜ்மல்கானும் கலந்து கொண்டார்.

இதுபோல, சீக்கிய சமுதாயத்தின் அரசியல் ஸ்தாபனமும் காங்கிரசோடு கைகோத்து நடைபோட்டது. ஆம், தேசம் சுதந்திரம் பெறும் வரையிலும், முஸ்லிம் லீகும் இந்து மகாசபையும் தனித்தனி மதத்தவருக்குரிய அமைப்புகளாயினும் இந்திய தேசியத்தை சித்தாந்த ரீதியில் ஏற்றுக்கொண்டும் செயல்பட்டன. இந்திய தேசியத்தால்தான் இந்து - முஸ்லிம் சமுதாயங்களின் நலன்கள் பாதுகாக்கப்பட முடியுமென்று அவை மனப் பூர்வமாக நம்பிய காலமது.

### *தொழிலாளர்களும்...*

இப்படியே, தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்கென பாடுபடுவதற்கென்று 1918-ல் இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ் தேசிய காங்கிரஸ் தலைவர்களாலேயே தோற்றுவிக்கப்பட்டு அதுவும் காங்கிரஸை செவிலித் தாயாகக் கொண்டு வளரலானது.

இப்படி, வகுப்பு - வர்க்க நலன்களுக்கான ஸ்தாபனங்களெல்லாம் ''தேசிய காங்கிரஸ்'' என்னும் கற்பகவிருட்சத்திலிருந்து இறங்கிய விழுதுகள்போலக் காட்சியளித்தன.

இந்திய தேசியமானது காந்திய சகாப்தத்துக்கு முன்பு, தொட்டியில் வைத்து வளர்க்கப்படும் பூச்செடி போலிருந்தது. காந்தி சகாப்தத்திலோ, அது, பூமியில் வேர்விட்டு வளரும் விருட்சம்போலானது. அந்த விருட்சத்தின் நிழலிலே, முஸ்லிம் லீக் - இந்து மகாசபை - தொழிற்சங்க காங்கிரஸ் ஆகிய விருட்சங்களும் தழைத்து வளரலாயின.

### *லீக் பிரிந்தது!*

1928 க்குப் பின், முஸ்லிம் லீக் காங்கிரசிலிருந்து வேறுபட்டு, அதனோடு ஊடல் கொண்டும் செயல் படலானது. அந்த ஊடலானது, 1929-க்குப் பின் பகை யாகவும் மாறிவிட்டது.

இதற்குக் காரணம், 1909-ல் நடைமுறைக்கு வந்த மிண்டோ - மார்லி சீர்திருத்தப்படி முஸ்லிம்களுக்கு

சட்டசபைகளுக்குத் தனித் தொகுதிகள் வழங்கப் பட்டதும், 1921-ல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு - செம்ஸ் போர்டு சீர்திருத்தப்படி அந்தத் தனித் தொகுதிகளின் எண்ணிக்கை முஸ்லிம்களின் சத விகிதத்திற்கும் அதிகமாக உயர்த்தப்பட்டதுமாகும். காங்கிரசானது வகுப்புவாரி தொகுதி முறைக்கு இந்திய அரசியலிலே நிரந்தரமாக இடம் தருவதை ஏற்க மறுத்தது. அதனால், தேசிய ஒருமைப்பாடு பாதிக்கப் படும் என்றும் அஞ்சியது. என்றாலும், சமூக ஒற்றுமையை - குறிப்பாக, இந்து - முஸ்லிம் ஒற்றுமையைக் கருதி, வகுப்புவாரி தொகுதிப் பிரச்சினையிலே தீவிரமான எதிர்ப்பை வெளிப்படுத்தாது நடுநிலைமை வகித்தது.

### *தனித் தொகுதியால்...*

1928-ல் நடைபெற்ற சர்வ கட்சித் தலைவர்கள் மாநாட்டிலே வகுப்புவாரி தொகுதிக் கோரிக்கையை முஸ்லிம் லீக் வலியுறுத்தியதோடு, அதனை ஐயத்திற் கிடமற்ற வகையில் காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டும் என்றும் கோரியது, அதற்கு இணக்கம் தெரிவிக்க காங்கிரஸ் உறுதியாக மறுத்தது.

முஸ்லிம்கள் பெருவாரியாகவுள்ள மாநிலங்களிலே அவர்களுடைய சதவிகிதத்திற்கும் அதிகமான இடங் களை லீக் கோரியதோடு, இந்துக்களின் சதவிகிதம் அதிகமாகவுள்ள மாநிலங்களிலும் முஸ்லிம்களின் சதவிகிதத்திற்கும் அதிகமான தொகுதிகளை ஒதுக்கீடு

செய்யக் கோரியது. இதனை சீக்கியர்களும் இந்து மகா சபையினரும் கடுமையாக எதிர்த்தனர். காங்கிரசும் ஏற்க மறுத்ததால், அதனோடு தனக்கிருந்த தொடர்பை முஸ்லிம் லீக் முறித்துக்கொண்டுவிட்டது.

அதுவரையில் காங்கிரஸ்காரராக இருந்துவந்த ஜனாப்ஜின்னா அவர்கள் சர்வகட்சி முஸ்லிம் தலைவர்கள் மாநாடு ஒன்றைத் தனியாகக் கூட்டி, அதிலே 14 அம்சக் கோரிக்கைத் திட்டம் ஒன்றை நிறை வேற்றி வைத்தார். எந்தக் காரணத்தை முன்னிட்டும் தனித் தொகுதி முறையையோ, அந்த அடிப்படையில் லீக் விரும்பும் சதவிகிதத்தையோ கைவிடுவதற்கில்லை என்று ஜனாப் ஜின்னா அறிவித்தார். இந்தச் சந்தர்ப் பத்தில் காங்கிரசுக்கும் லீகுக்கும் இடையே ஏற்பட்ட பிளவானது 1947-ல் தேசத்தைப் பிளப்பதிலே போய் முடிந்தது.

## *இந்து மகா சபையும் பிரிந்தது*

முஸ்லிம்கள் விஷயத்தில் காங்கிரஸ் மகாசபை தாராளத் தன்மை காட்டுகிறது என்று காரணம் சொல்லி, இந்து மகாசபையும் காங்கிரசுக்கு அன்னியமாகிவிட்டது. தேசியத்திற்கு முற்றிலும் புறம்பான வகுப்புவாத ரீதியிலேயே செயல்படும் அமைப்பாகிவிட்டது.

சுருங்கச் சொன்னால், காங்கிரஸ் என்னும் தேசிய விருட்சத்தின் விழுதுகளாக இருந்துவந்த லீகும் இந்துமகா சபையும் தனித்தனியே வேர்விட்ட விருட்சங்களாகிவிட்டன. இந்த நிலையிலும் இந்திய

தேசிய காங்கிரஸ் மகாசபையானது தனது தேசியத் தன்மையை இழந்து விடவில்லை. முஸ்லிம் சமுதாயத்தினருடைய நம்பிக்கைக்கு உரிய அமைப்பாகவே இயங்கலானது. எந்த ஒரு மாநிலத்திலும் காங்கிரசை இந்துக்களுக்கே உரிய அமைப்பாக்கிவிடக் கூடிய வகையிலே முஸ்லிம் லீக்கானது வளர்ச்சி பெறவில்லை. ஆயினும், சீக்கிய சமுதாயத்தினர் ஐயத்திற்கிடமற்ற வகையில் இந்திய தேசியத்தோடு இணைந்திருந்தனர்.

## *தனித் தொகுதியா?*

முஸ்லிம் வேட்பாளர்களுக்கு முஸ்லிம்களே வாக்களிப்பது என்னும் அடிப்படையைக் கொண்டது தனித் தொகுதிச் சித்தாந்தம். இதனை காங்கிரஸ் ஏற்க மறுத்தது முஸ்லிம் சமுதாயத்திடம் நல்லெண்ணம் இல்லாததால் அல்ல. பிறந்த காலத்திலிருந்தே தான் ஏற்றுக் கொண்டுள்ள இந்திய தேசிய ஒருமைப்பாட்டுச் சித்தாந்தத்திற்கு வகுப்புவாரி தனித் தொகுதி தீங்கு செய்யும் என்பதால்தான். சீக்கிய, கிறித்துவ சமயங்களைச் சார்ந்தவர்களுக்குக்கூட தனித் தொகுதி ஏற்படுவதை காங்கிரஸ் ஏற்கவில்லை.

## *தாழ்த்தப்பட்டோருக்கு...*

1934-ல் எரவாடா சிறையில் டாக்டர் அம்பேத்கார் உள்ளிட்ட தாழ்த்தப்பட்ட தலைவர்களுக்கும் காந்திஜி உள்ளிட்ட மற்றுள்ள தேசியத் தலைவர்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையிலேகூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு ரிசர்வ் தொகுதி அமைவது அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால், அந்தத் தொகுதிகளிலே தாழ்த்தப்பட்ட சமூகத் தவர் அல்லாதவர்களும் வாக்களித்துத்தான் தாழ்த்தப் பட்டவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மற்ற பொதுத் தொகுதிகளிலேயும் போட்டியிட தாழ்த்தப்பட்ட வர்களுக்கு உரிமையளிக்கப் பட்டிருப்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிலே அறிவிக்கப்பட்ட ஏற்பாட்டின்படி பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு வெளியிட்ட ''சமூக தீர்வு'' என்னும் அறிக்கையிலே தாழ்த்தப்பட்ட வேட்பாளர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களே வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்படும் தனித் தொகுதிகளுக்குப் பரிந்துரை தரப்பட்டது. அதனாற்றான் அதை எதிர்த்து உயிர்போகும் வரை உண்ணாவிரதம் இருப்பது என்ற முடிவுடன் காந்திஜி உயிர்த் தியாகம் புரிய முன் வந்தார். அதனால் அது கைவிடப்பட்டு, புனா உடன்படிக்கை ஏற்பட்டது.

இதுபோன்ற ரிசர்வ் தொகுதிகளை முஸ்லிம் களுக்கும் அளிப்பதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் இசைவு தெரிவித்தது. ஆனால், 1909 முதற்கொண்டே முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் நடைமுறையில் இருந்து வந்தமையால் ரிசர்வ் தொகுதி முறைக்கு காங்கிர சோடு உடன்படிக்கையை முஸ்லிம் லீக் விரும்பவில்லை.

### *தேசிய தருமம்*

சமய வழிபட்ட அல்லது மொழிவழிப்பட்ட சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் ஆதிக்கம்

செலுத்துவது என்ற ஜனநாயக் விரோத முறையை காங்கிரசின் தேசியம் என்றுமே விரும்பியதில்லை.

இலங்கையிலே இன்று தமிழர் மிகுதியாக வாழும் பிரதேசத்தை இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குட்பட்ட சுயாட்சியுடைய ஒரு மாநிலமாக்குவதற்கு இனவழியிலும் மத வழியிலும் பெரும்பான்மையினராக உள்ள சிங்களரின் செல்வாக்கில் இருக்கும் அரசு பிடிவாதமாக மறுத்து வருகிறது. மாநில சுயாட்சி மட்டுமன்றி, மாவட்ட சுயாட்சியைக் கூட நாணயமாகவும் நேர்மை யாகவும் அமுல் நடத்த மறுக்கிறது.

### *சமரச உணர்வு*

இப்படிப்பட்ட ஒரு பாசிச முறையை முஸ்லிம்கள் விஷயத்தில் கடைப்பிடிக்க இந்திய தேசிய காங்கிரஸ் நினைத்துப் பார்த்ததுகூட இல்லை. முஸ்லிம் லீகின் செல்வாக்கிலுள்ள இஸ்லாமியரைத் திருப்திப்படுத்து வதற்காக பரிபூரண மாநில சுயாட்சியை காங்கிரஸ் அரிபுரா,திரிபுரா மகா சபைகளில் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலமே அங்கீகரித்துக் கொண்டது. பூரண சுயாட்சி என்றால், பாதுகாப்பு - போக்குவரத்து அயல் நாட்டுறவு ஆகிய மூன்று பொறுப்புக்களை மத்திய அரசிடம் விட்டு - மற்ற பொறுப்புக்கள் அனைத்தும் மாநில அரசுகளுக்கே உரியவை என்ற அடிப்படையைக் கொண்டதாகும் இது. இதை லீக் ஏற்றிருந்தால், பிரிட்டிஷ் இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து கொண்டிருந்த பஞ்சாப், வடமேற்கு

எல்லைப்புறம், சிந்து ஆகிய மாநிலங்கள் ''சுதந்திரச் சாயலி''லே பூரண சுயாட்சியுடைய பிரதேசங்களாக ஒன்றுபட்ட இந்தியாவிற்குள் இருந்திருக்க முடியும். இன்னும்கூட ஒரு படிமேலே போய் இந்திய மாநிலங்களிலே எதுவும் தான் விரும்பாதபோது இந்திய சமஷ்டியிலிருந்து பிரிந்து போக உரிமை உண்டு என்றும் ஒரு தீர்மானத்தை அ.இ.கா.க. பிரகடனம் செய்தது.

### ***''வாழு; வாழ விடு''***

பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரத்தால் காங்கிரசின் லட்சியத்திற்கு இஸ்லாமியர் விஷயத்தில் வெற்றி கிடைக்காதபோது, ''வாழு; வாழ விடு'' என்னும் அடிப்படையிலே காங்கிரசானது பாகிஸ்தான் பிரிவினைக்கு வேதனையோடு விருப்பம் தெரிவித்தது. நாட்டிலுள்ள சிறுபான்மையினர் விஷயத்திலே இப்படியொரு தேசிய வரலாற்றைப் படைத்த இன்னொரு அமைப்பு உலகில் இல்லை.

மத வழியிலும் இன வழியிலும் தேசியம் பேசி இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தானிலே என்ன நடந்தது? மேற்கு பாகிஸ்தானுக்கு ஆயிரம் மைல் தொலைவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தானுக்கு சுயாட்சி வழங்க மறுத்தது பூடோவின் தலைமையைக் கொண்டிருந்த பாகிஸ்தான் அரசு. அதன் விளைவாகப் புரட்சி செய்து பாகிஸ்தானிலிருந்து அடியோடு பிரிந்துவிட்ட ''சுதந்திர வங்கம்'' அமைந்ததைக் கண்டோம்.

இலங்கையிலுள்ள ஈழப் பகுதிக்கு மாநில சுயாட்சி அளிக்க மறுத்து திரு. செயவர்த்தன அரசு இலங்கையையே சுடுகாடாக்கி வருவதைப் பார்த்து வருகிறோம்.

## *நீதி வழியிலே*

மதவழி அல்லது இனவழி சிறுபான்மையினர் விஷயத்திலே மிகவும் நீதியுடன் நடந்து கொண்ட பெருமையைப் படைத்த இந்திய தேசிய காங்கிரஸ்தான் 1985 ஆம் ஆண்டிலே தனது நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.

வாழ்க, ஒரு நூறு வயதை அடைந்துவிட்ட இந்திய தேசியம்!

விடுதலைப் போராட்ட காலத்திலே காந்தியடிகள் வகுத்துத் தந்த 13 அம்ச காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்திலே முதலாவதான சமூக ஒற்றுமை என்னும் அம்சத்தை விடுதலை பெற்ற இந்தியாவிலும் - ஆம்; தேசம் மத அடிப்படையில் பிளவு படுத்தப்பட்ட பின்னரும் - காங்கிரஸ் முழுமனதுடன் கடைப்பிடித்து வருகிறது. ஜனாப் ஜின்னாவின் பிரிவினை ''பாகிஸ்தான்'' - ''இந்துஸ்தான்'' என்ற வகையிலாகும். ஆனால், பாகிஸ்தான் பிரிந்து போன பின்னரும் எஞ்சிய பாரதத்தை - இந்துக்களுக்கே உரியது என்ற பொருளில் ''இந்துஸ்தான்'' ஆக்கவில்லை காங்கிரஸ். அப்படி ஆக்குமாறு கோரின இந்தியாவிலுள்ள இந்து வகுப்புவாதக் கட்சிகள். ஆனால், தேசிய காங்கிரசோ, சமயச் சார்பற்ற அரசை பிரகடனப்படுத்தி, தேசியப்

பாதையிலே நாட்டை நடத்திச் செல்கிறது. சமூக ஒற்றுமையை சர்வ சமயங்களிடையேயும் வளர்த்து வருகின்றது. சுதந்திர இந்தியாவில் மாநிலந்தோறும் இஸ்லாமியரும் அமைச்சர்களாகவும் முதலமைச்சர் களாகவும் ஆளுநர்களாகவும் வரமுடியும் - வந்தும் இருக்கிறார்கள். மத்திய அரசிலேயும் முஸ்லிம் ஒருவர் அமைச்சராக இல்லாத அமைச்சரவையை நாடு கண்டதில்லை. இருமுறை துணை ஜனாதிபதிகளாவும், இருமுறை ஜனாதிபதிகளாகவும் முஸ்லிம்கள் வர முடிந்திருக்கிறது. தேசிய இந்தியாவிலே இந்திய அரசியல் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள மொழிகளிலே முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள உருது மொழியும் ஒன்றாகும்.

❖

# தேசியம் சாதித்த தீண்டாமை ஒழிப்பு

இந்திய தேசிய காங்கிரசுக்கென காந்தியடிகள் தந்த 13 அம்சங்கள் கொண்ட நிர்மாணத் திட்டத்திலே ''தீண்டாமை ஒழிப்பு'' ஒன்றாகும்.

இந்து - முஸ்லிம் சமயங்கள் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களைச் சார்ந்த பாரத சமூகத்தார் அனைவரிடமும் ஒற்றுமையை உருவாக்க விரும்பிய அடிகள், ''சமூக ஒற்றுமை''க்குத் தமது திட்டத்தில் முதலிடந் தந்தார். அதற்கு அடுத்த இடத்தைத் தீண்டாமை ஒழிப்புக்குத் தந்தார்.

தீண்டாமை என்னும் கொடிய வழக்கமானது, முற்றிலும் இந்து சமயத்தவர் கடைப்பிடித்து வருவதாகும். இஸ்லாமிய - கிறித்துவச் சமயங்களிலே தீண்டாமைக்கு இடம் இல்லை. அப்படியிருப்பினும், அனைத்துச் சமயங்களையும் கொண்ட இந்தியப் பெருநாடு முழுவதும் பிரிட்டிஷாரிட மிருந்து விடுதலை பெற வேண்டுமானால், முதலில் தீண்டாமை என்னும் கொடுமை இந்து சமயத்திலிருந்து ஒழிந்தாக வேண்டும் என்று அடிகள் கருதினார். அந்த வகையிலே தீண்டாமை ஒழிப்பை சமய வேற்றுமை கடந்த சமூகச் சீர்திருத்த

மாகவும் அவர் கருதினார். அதனாற்றான், தேசிய அமைப் பாகிய காங்கிரசின் கொள்கையாக்கினார்.

''தீண்டாமை ஒழியவில்லையேல், இந்தியாவுக்குச் சுதந்திரம் இல்லை'' என்றும் அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார். ''நம்மவர்களான இந்தியர்களிலே - குறிப்பாக, இந்துக்களிலே ஒரு சாராரை நாயினும் கேவலமாக நாம் நடத்தி வருகிறோம் என்றால், நம்மை அடிமைகொண்டு கொடுமைப் படுத்துகிறார்கள் என்று பிரிட்டிஷார்மீது குற்றம் சொல்ல நமக்கு உரிமை ஏது?'' என்று அடிகள் கேட்டார்.

### *தமிழகத்திலும் தீண்டாமை*

இந்து சமயத்திலே தீண்டாமை என்னும் கொடுமை எப்போது, எதனால் புகுந்தது? - என்னும் வினாக் களுக்குத் தெளிவாக விடை காண முடியவில்லை. எத்தனையோ கொடிய பழக்க வழக்கங்களில் வடபுலத்தவரிடமிருந்து வேறுபட்டு நிற்கும் தென் புலத்துத் தமிழரிடையிலும் நிர்ணயித்துச் சொல்ல முடியாத காலந்தொட்டு தீண்டாமை என்னும் கொடுமை நடைமுறையில் இருந்து வருகிறது.

சமய அடிப்படையில் அணுகித் தீண்டாமை என்னும் கொடுமையை ஒழிக்க சைவ - வைணவ சமயங்களின் தலைவர்கள் ஓராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே முயன்று வந்திருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்டவர் எனப்படும் ''பாணர்'' வகுப்பில் பிறந்த யாழ் வல்லுநரான திருநீலகண்ட யாழ்ப்பாணரைத்

தமது தோழராகக் கொண்டு, அவர் யாழ் வாசிக்க, தாம் பக்திப் பதிகங்களைப் பாடிக்கொண்டு திருஞான சம்பந்தர் தலயாத்திரை செய்ததாகத் திருத்தொண்டர் புராணம் கூறுகிறது.

அதுபோல, தாழ்த்தப்பட்ட குடியிற் பிறந்த திருப்பாணாழ்வாரைப் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகக் கொண்டிருக்கிறது வைணவ சமயம்.

இதனால், சைவத்திற்கும் வைணவத்திற்கும் தீண்டாமை என்னும் கொடுமை உடன்பாடற்றது என்பது புலப்படுகிறது.

சேரியில் சிறைப்படுத்தப்பட்டிருந்த நந்தனாரையும் 63 சிவனடியாரில் ஒருவராகச் சேக்கிழார் பெருமான் சேர்த்து வைத்திருக்கிறார். சிவன் கோயில்களிலே, 63 நாயன்மார்களோடு, நந்தனார் திருவுருவச் சிலையும் சேர்ந்திருக்கக் காண்கிறோம். இவ்வளவிருந்தும், இந்து சமயத்திலே தீண்டாமை என்னும் வழக்கம் உயர் வகுப்பார் எனப்படுவோரிடையில் இன்னமும் நடை முறையில் இருந்து வருகிறது.

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றிய சமயத்திலே இந்து சமயத்தவரில் ஐந்தில் ஒரு பங்கினர் தாழ்த்தப் பட்டவர் என்று ஜனக் கணிதம் கூறுகின்றது.

## *வ.உ.சி.யும் பாரதியும்*

காந்தி சகாப்தம் தோன்றுவதற்கு முன்னும், தமிழ் நாட்டளவில் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய பாரதியார், 'இந்து' நாளிதழின் நிறுவனர் திரு. ஜி. சுப்பிரமணிய

ஐயர் போன்ற தேசியத் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வருணாசிரமக் கொடுமையிலிருந்து விடுதலை தேடப் பாடுபட்டிருக்கின்றனர். பிறவிக் குருடனான அரிசனச் சிறுவனைத் தன் இல்லத்தில் வைத்து உணவளித்து, கல்வியும் தந்தார் வ.உ.சி.

வடபுலத்திலே பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் தீண்டாமையைக் கொள்கையளவில் ஒப்புக் கொள்ள வில்லை. அவற்றை நிறுவியவர்களான ராம்மோகனரும் தயானந்த சரஸ்வதியும் தீண்டாமையானது வேதங் களுக்கு விரோதமானது என்று வாதித்திருக்கின்றனர். நால் வேதங்களிலே தீண்டாமைக்கு ஆதாரம் இல்லை யென்றும் சொல்லியிருக்கின்றனர். ஆரிய சமாஜம் இஸ்லாமியரின் கடுமையான எதிர்ப்புக்கிடையே கடைப் பிடித்த 'சுத்தி' என்னும் சடங்கானது பெரும்பாலும் மதம் மாறிய தீண்டாதாருக்கு உரிமையளிப்பதற்கே தோன்றியது எனலாம்.

காந்தி சகாப்தத்திலே தீண்டாமை ஒழிப்பானது தேசிய காங்கிரசின் கொள்கையாகச் செய்யப்பட்ட பின்னர், அதற்கெனத் தனியாக வேலைத் திட்டம் ஒன்றையும் காந்தியடிகள் வகுத்துத் தந்தார். அவை ஆலயப் பிரவேசம், கல்விபெறல், பொது இடங்களைப் பயன்படுத்தல், கலப்பு மணம் ஆகியனவாம்.

### *துவேஷப் பிரச்சாரம்*

தமிழ் நாட்டிலும் சரி, வடபுலத்திலும் சரி, சமூக சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக் கொண்டோர்

தீண்டாமையை வெறுத்து நிறையப் பேசியும் எழுதியும் வந்தனர். தீண்டாமைக்குக் காரணமானோர் என ஒரு வருணத்தாரை அடையாளம் காட்டி, அவர்களுக்கு எதிராகத் துவேஷத்தையும் வளர்த்தனர். தேச விடுதலைப் போராட்டத்திற்கு மத்தியிலே இப்படிப்பட்ட வகுப்புவாதப் போராட்டம் தேவையற்றதாகவும், தேச பக்தியற்றவர்களால் நடத்தப்படுவதாகவும் கருதப் பட்டது.

### *அடக்கம் தேவை*

தீண்டாமை ஒழிப்பு போன்ற சமூக சேவையில் ஈடுபடுவோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தைப் பற்றியும் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார். 27-12-1917 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில் நிகழ்த்திய சிறப்புரையில் அவர் கூறிய தாவது:

''சமூகசேவை அதிக பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், அதிக சந்தடி எதுவும் இல்லாமல் அதைச் செய்ய வேண்டும். வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாமல் செய்யும்போதுதான் அதிலே நல்ல பலனைக் காண முடியும்.''

(காந்தி நூல்கள் - தொகுப்பு, பகுதி - 7, பக். 8-9)

சேரிவாழ் தாழ்த்தப்பட்ட மக்களை அணுகிச் சேவை செய்ய விரும்புவோர் ஆங்கில பாணியில் உடை அணிவதையும் ஆங்கில மொழியில் பேசுவதையும்

விட்டுவிட வேண்டும் என்றும் அடிகள் கல்கத்தா மாநாட்டில் கூறினார். அது வருமாறு.

''ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அதிக மதிப்பைக் கொடுக்கும் மூட நம்பிக்கை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த மூட நம்பிக்கையிலிருந்து நாம் விடுதலை பெற்று, சமுதாயத்தையும் அதிலிருந்து விடுவிப்போமாயின். அதுவே சமூகத்திற்கு நாம் செய்யக் கூடிய சேவையாகும்.

''உயர்ந்த குடும்பங்களிலே தாய் மொழியின் இடத்தில் ஆங்கிலமே நிலைத்து விடும்போல் தெரிகிறது... ஆங்கிலம் நம்மை தனக்கு அடிமைப் படுத்திக் கொண்டுவிட்டது. உண்மையான சமூக சேவைக்கு நம்மைத் தகுதியற்றவர்களாகவும் அது செய்துவிட்டது. பாமர மக்களிடமிருந்து நாம் தனியாக பிரிந்தவர்களாகி விட்டோம்.

''பரிசுத்தமான - புத்திசாலித்தனமான வைதிகம், மூட நம்பிக்கையோடு கூடிய அறியாத்தனமான வைதிகத்தை எதிர்த்துப் போராடியாக வேண்டும். நமது மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்டோரை அவர்களுக்குரிய இடத்தில் உயர்த்துவது சிறந்த சமூக சேவையாகும்.

''தாழ்த்தப்பட்டவர்களுடைய சொந்த மொழியில் அவர்களுடன் பேசினால்தான் நாம் கூறுவதை அவர்கள் கேட்டு நடக்க முடியும். ஆங்கில மயமாகி விட்ட இந்தியர் எவரும், பயன்படக் கூடிய வகையில் அவர்களுடன் பேச முடியாது.

''இந்து தர்மத்தில் நமக்கு நம்பிக்கையிருந்தால், இந்து முறையில் அவர்களை அணுகவேண்டும். நாம் தவம் செய்து, அதன் மூலம் இந்து தர்மம் ஆபாச மடைந்துவிடாமல் நாம் காக்கவேண்டும்.''

*(காந்தி நூல்கள், பகுதி 7, பக். 9, 15)*

### அன்னையாரால்...

காந்தியடிகள் தமது பிள்ளைப் பருவத்திலிருந்தே தீண்டாமை என்னும் கொடுமையை வெறுத்து வந்தார். தமது பன்னிரெண்டாவது வயதிலே ஒரு தீண்டாத வரைத் தாம் தீண்டிவிட்டதற்காக நீராடித் தூய்மை பெறுமாறு அன்னையார் தமக்கு ஆணையிட்டது கண்டு, தாம் வியப்பும் வேதனையும் அடைந்ததாக அவர் கூறுகின்றார்.

இராமாயணக் கதையிலே கங்கைப் பிரதேசத்து வேடுவர் குலத் தலைவனான குகன் என்பான், இராமனைத் தனது படகில் ஏற்றிக் கொண்டு இக்கரையிலிருந்து அக்கரையில் சேர்த்த நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டி, ''இராமாயண காலத்திலே இந்து சமுதாயத்தில் தீண்டாமைக்கு இடம் இல்லை'' என்று வாதிக்கிறார் காந்திஜி. மேலும் அவர் கூறுவதாவது.

''இந்துக்களில் ஒரு பெரும்பகுதியினரை மிருகங்களைக் காட்டிலும் கேவலமாகத் தாழ்த்தி வைத்துள்ள முறையை எனது ஆன்மா அடியோடு வெறுக்கிறது. தீண்டாதவர்களிடமிருந்து நாம் பறித்துக் கொண்ட பல உரிமைகளை அவர்களிடமே திருப்பிக்

கொடுத்துவிட வேண்டும். இவ்விதம் செய்வது ஏதோ ஆங்கிலம் அறிந்த ஒரு சில சீர்திருத்தக்காரர்களின் நடவடிக்கைகளாக மட்டுமே இருந்துவிடக் கூடாது.''

*(மகாத்மா காந்தி நூல்கள், தொகுப்பு 7, ப. 24-25)*

## வேலைத் திட்டம்

காந்திஜி, அரசியல் - சமூகம் - சமயம் - பொருளாதாரம் - கல்வி ஆகிய அனைத்துத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டோரை முன்னேற்றுவதற்கான முறையில் முழுமையான ஒரு வேலைத் திட்டத்தை வகுத்து, அதனை நிறைவேற்றுவதிலே காங்கிரசை ஈடுபடுத்தினார். தீண்டாமை நிலவும்வரை இந்தியர்களிடையே சமூக ஒற்றுமையோ, தேசிய ஒருமைப்பாடோ ஏற்படுவது அடியோடு சாத்தியமில்லை என்றும் அடிகள் கூறினார்.

காங்கிரசானது காந்தியடிகளின் தலைமையை ஏற்ற பின்னர், தீண்டாமை விலக்கு அதன் கொள்கைகளில் ஒன்றானது. ஆம்; காங்கிரசின் அமைப்பு விதிப்படி, தீண்டாமையில் நம்பிக்கையுள்ள எவரும் அதன் அங்கத்தினராவது சாத்தியமில்லை. இப்படி, ஒரு சமூக சீர்திருத்தக் கொள்கையைத் தனது அமைப்பு விதியாகச் சேர்த்த முதல் அரசியல் ஸ்தாபனம் இந்திய தேசிய காங்கிரஸ்தான்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது 1910-ல் அங்கு தாம் நிறுவிய 'டால்ஸ்டாய் பண்ணை' யிலே தீண்டாதாருக்கும் இடமளித்து, அவர்களை மற்ற

இந்தியர்களோடு சமமாக நடத்தச் செய்தார். பண்ணையில் குடியிருப்போர், தோட்டிகளை எதிர் பாராமல், தங்கள் மலத்தைத் தாங்களே எடுக்கவும் வழிசெய்தார். இதனை, தாம் இந்தியாவுக்கு வந்த பின்னர், அகமதாபாத்துக்கருகிலுள்ள சபர்மதி யாற்றங்கரையில் அமைத்த சபர்மதி ஆசிரமத்திலும் அமுல் நடத்தினார். அதன் பின்னர், வார்தாவையடுத்த சேவா கிராமத்திலும் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

காந்தியடிகளைப் பின்பற்றித் திருச்செங்கோட்டில் தாம் அமைத்த ''காந்தி ஆசிரமத்''திலும் தீண்டாதார் களைச் சேர்த்து, ஆசிரமத்தில் தீண்டாமைக்கு இட மில்லாமல் செய்தார் ராஜாஜி. தீண்டாதார்களுடன் சேர்ந்து தம்முடைய மகன் நரசிம்மனோடும் மகள் லட்சுமியோடும் அவர் ஆசிரம வாழ்க்கை நடத்தினார். ராசன்பாபு போன்ற வேறு பல தேசியத் தலைவர்களும் தாங்கள் நிறுவிய ஆசிரமங்களில் தீண்டாமைக்கு இடமில்லாமல் செய்தனர் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

### *தனித் தொகுதிக்கு எதிர்ப்பு*

பாரத தேசம் துண்டுபட்டது - அதாவது, பாரதத்தின் ஒரு பகுதி ''பாகிஸ்தான்'' என்னும் பெயரில் பிரிந்து செல்லக் காரணமாக இருந்தது, மாநில - மத்திய சட்ட சபைகளுக்காக முஸ்லிம்களுக்கெனத் தனித் தொகுதிகளை பிரிட்டிஷோர் வழங்கியதாகும். ஆம்; 1909-ல் நடைமுறைக்கு வந்த மிண்டோ - மார்லி

அரசியல் சீர்திருத்தத்தில் முஸ்லிம்களுக்கு முதன் முதலில் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டன.

பின்னர், 1921-ல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திலும் முஸ்லிம்களுக்காகத் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டன.

இதனால், புதிதாகத் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த ''இந்திய தேசியம்'' என்னும் கற்பக விருட்சத்தின் கீழே அதையழிக்கக் கூடிய வகையில், வகுப்புவாத தனித் தொகுதி என்னும் விஷ விருட்சத்தையும் பயிரிட்டு வளர்த்தனர் பிரிட்டிஷார்.

இதுபோல, தீண்டாத சமூகத்தாருக்கும் தனித் தொகுதிகளைக் கோரினர் டாக்டர் அம்பேத்கார் போன்ற தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள்.

இந்தக் கோரிக்கை முதன் முதலாக, 1930-ல் லண்டனில் நடந்த முதலாவது வட்டமேஜை மாநாட்டில் எழுப்பப்பட்டது. பின்னர், காந்தியடிகள் கலந்து கொண்ட இரண்டாவது வட்டமேஜை மாநாட்டிலும் தாழ்த்தப் பட்டோர் தலைவர்கள் தனித் தொகுதிக் கோரிக்கையை வற்புறுத்தினர்.

காந்தியடிகள் அதனை ஏற்க மறுத்தார். ''முஸ்லிம்கள் என்றென்றும் முஸ்லிம்களாகவே இருப்பார்கள். தாழ்த்தப்பட்டோர் என்றென்றும் தாழ்த்தப் பட்டோராகவே இருப்பதை டாக்டர் அம்பேத்கார் விரும்புகிறாரா? அவர் விரும்பினாலும் நான் விரும்ப வில்லை. அரிசனங்கள் இந்துக்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதவர்கள்'' என்று அடிகள் வாதித்தார்.

### *வகுப்புத் தீர்ப்பு*

பின்னர், பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மாக்டொனால்டு என்பவர், ''வகுப்புத் தீர்ப்பு'' என்னும் பெயரில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதிலே, தாழ்த்தப்பட்டோருக்கு என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியவகையில் தனித் தொகுதிகள் அமைய வழி வகுத்துக் கொடுத்தார்.

### *புனா உடன்படிக்கை*

பிரிட்டிஷ் பிரதமரின் வகுப்புத் தீர்ப்பை எதிர்த்து உயிர் போகும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார் காந்தி அடிகள். அப்போது அவர் புனாவிலுள்ள எரவாடா சிறைச்சாலையில் இருந்தார், தாழ்த்தப்பட்டோர் தலைவர்களுக்கும் இந்து சமயத் தலைவர்களுக்கு மிடையில் ஒரு உடன்படிக்கை ஏற்படுமாயின் தமது வகுப்புத் தீர்ப்பு கைவிடப்படுமென்று பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்தார். அதனால், மாற்றுத் திட்டம் காண எரவாடா சிறையில் அரிசனத் தலைவர்களும், சர்தார் படேல் - ராஜாஜி - ஜவகர்லால் நேரு - மாளவியா ஆகிய தேசியத் தலைவர்களும், டாக்டர் மூஞ்சே உள்ளிட்ட இந்து மகாசபைத் தலைவர்களும் சந்தித்துப் பேசினர். கவிஞர் தாகூரும் கலந்துகொண்டார். பல நாட்கள் பேசியபின், ''புனா உடன்படிக்கை'' என்னும் பெயரில் புதிய திட்டம் உருவானது.

அரிசனங்களுக்கான தொகுதிகளின் எண்ணிக் கையை நிர்ணயித்து, அதற்கு ''ரிசர்வ் தொகுதிகள்'' எனப் பெயர் தந்து, அரிசனங்களும் மற்றவர்களும்

கூட்டாக வாக்களித்து அரிசன வேட்பாளரைத் தேர்ந் தெடுக்க புனா உடன்படிக்கை'' என்னும் பெயரில் புதிய திட்டம் உருவானது.

அரிசனங்களுக்கான தொகுதிகளின் எண்ணிக் கையை நிர்ணயித்து, அதற்கு 'ரிசர்வ் தொகுதிகள்'' எனப் பெயர் தந்து, அரிசனங்களும் மற்றவர்களும் கூட்டாக வாக்களித்து அரிசன வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க புனா ஒப்பந்தம் வழிசெய்தது. இதனால், பிரிட்டிஷ் பிரதமரின் ''வகுப்புத் தீர்ப்பு'' அடியோடு ரத்தானது. வகுப்புத் தீர்ப்பு தந்ததை விடவும் அதிகமான இடங்களை மாநில மத்திய சட்ட மன்றங்களிலே அரிசனங்களுக்குத் தந்தது புனா உடன்படிக்கை.

அந்த உடன்படிக்கையால் காந்திஜியின் உயிர் காப்பாற்றப் பட்டது. தீண்டாமைக்கும் கடுமையான அடி விழுந்தது. இது நடக்காமலிருந்தால், அரிசனங்கள் தனி மதத்தவர் ஆக்கப்பட்டிருப்பர். ஆம்; இன்று சீக்கியர் தாங்கள் இந்துக்கள் அல்ல என்கிறார்களே, அதுபோல் அரிசன மக்களும் சொல்லக் கூடிய நிலை ஏற்பட் டிருக்கும். காந்திஜி, தமது உயிரைப் பணயம் வைத்து, இந்து மதத்தைக் காத்தார். இந்து சமயாசாரியர் எவரும் செய்யாததை சமய சமரசவாதியான காந்தியடிகள் செய்தார். காந்தியடிகளின் உயிர் காப்பாற்றப்பட்டதிலே டாக்டர் அம்பேத்காருக்குப் பெரும்பங்கு உண்டு.

***அதிக ஒதுக்கீடு***

எரவாடா சிறையில் நடந்த பேச்சு வார்த்தைகளின் போது, அரிசனங்களுக்கு அவர்களுடைய சதவிகிதத்திற்

கும் அதிகமாகவே மாநில - மத்திய சட்ட மன்றங்களில் இடங்களை ஒதுக்கக் காந்தியடிகள் உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் தயக்கங் காட்டவில்லை. ரிசர்வ் தொகுதிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவோ, குறைக்கவோ அவர்கள் தாழ்த்தப்பட்டோர் தலைவர்களுடன் பேரம் பேசவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம் அரிசன வாக்காளராலேயே அரிசன வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படும் தனித் தொகுதி முறையைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான்.

சுதந்திர இந்தியாவுக்கெனத் தயாரித்த அரசியல் சட்டத்திலேயும் புனா ஒப்பந்த அடிப்படையில் அரிசனங்களுக்கான ரிசர்வ் தொகுதி முறை சில திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டது. ஆயினும், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை அதனை மறு பரிசீலனை செய்ய விதிவகுக்கப் பொறுப்பிலிருந்த டாக்டர் அம்பேத்காரும் மனநிறைவோடு இசைவு தெரிவித்தாரென்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

### *தீண்டாமை கிரிமினல் குற்றம்!*

இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து 35 ஆண்டுகளாகியும் அரிசனங்களுக்கான ரிசர்வ் தொகுதி முறை பற்றிய விதி அகற்றப்படவில்லை.

அரசியல் சட்டத்தில், கோயில் - குளம் - கிணறு - நடைபாதை - உணவுச் சாலை போன்ற பொது இடங்களில் அரிசன மக்களை அனுமதிக்க மறுப்பது சிறைத் தண்டனைக்குரிய கிரிமினல் குற்றமாக்கப்பட்டிருக்

கிறது. ஆம்; ''சாத்திர சம்மதம்'' ஆக ஆயிரமாயிர மாண்டுகளாக நடைமுறையிலிருந்து வந்த தீண்டாமை, தேசிய காங்கிரசின் முயற்சியால் **''சட்ட விரோதம்''** ஆக்கப்பட்டுவிட்டது.

அரிசனங்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ரிசர்வ் தொகுதிகளில் மட்டுமல்லாமல், எஞ்சியுள்ள பொதுத் தொகுதிகளிலும் போட்டியிட அரசியல் சட்டம் அனுமதி வழங்கியிருக்கிறது.

''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்ற சித்தாந்தத்தை இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்டதென்றாலும், அரிசன மக்களின் முன்னேற்றங் கருதி, கல்வி நிறுவனங்களிலும் அரசு அலுவலகங் களிலும் சதவிகித அடிப்படையில் அவர்கள் இட ஒதுக்கீடுகள் பெற அனுமதித்து வருகிறது. நாடு சுதந்திரம் பெற்றபின், மாநிலங்களிலும் மத்தியிலும் அரிசனப் பிரதிநிதி இல்லாத அமைச்சரவை தோன்றிய தில்லை.

மாநிலங்களிலே ஆளுநர்களாகவும் சட்டப் பேரவை மேலவைகளின் தலைவர்களாகவும் முதலமைச்சர்களாகவும் வரவும் முடிகின்றது. மாநில உயர்நீதி மன்றங்களிலும் மத்திய சுப்ரீம் உயர்நீதி மன்றத்திலும் நீதிபதிகளாகவும் அரிசன சட்ட அறிஞர்கள் வந்துள்ளனர்.

இநதியக் குடியரசின் தலைவராகவும் அரிசன சமூகத்தவர் வர அரசியல் சட்டம் அனுமதிக்கிறது.

இவ்வளவும் இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் விளைவித்த சமுதாயச் சீர்திருத்தமாகும் - ஏன், "சமுதாயப் புரட்சி" என்றும் சொல்லலாம்.

எரவாடா சிறையிலிருந்த வண்ணம் காந்தியடிகள் கடைப்பிடித்த உண்ணாவிரதத்தால், அதன் வெற்றியாக புனா உடன்படிக்கை ஏற்பட்டதால் இந்து மதம் காப்பாற்றப்பட்டுவிட்டது. ஆம், இந்து மாமன்னர்களும் இந்துமதத் தலைவர்களும் செய்யாததை காந்தியடிகள் செய்து முடித்தார்.

புனா உடன்படிக்கை ஏற்பட்ட காலத்திலே நாட்டில் 21 வயதடைந்தோர் வாக்குரிமை பெற்றிருக்க வில்லை. ஆம், சொத்து வரியும் வருமான வரியும் செலுத்துவோரே வாக்குரிமை பெற்றிருந்தனர். அந்தக் காலத்தில் தேசிய காங்கிரஸ் சட்டமன்ற பகிஷ்காரத்தைக் கடைப்பிடித்து வந்தது. ஆகவே, அரிசன மக்களின் வாக்குகளைப் பெறும் விருப்பமோ, சந்தர்ப்பமோ காங்கிரசுக்கு இருந்ததில்லை.

### வயது வந்தோருக்கு...

இந்திய அரசியல் சட்டத்தால் 21 வயதுடையோர் வாக்குரிமை பெற்றபின், உயர் சாதியாரால் நடத்தப்படும் அரசியல் கட்சிகள் அனைத்துமே அரிசனங்கள்பால் அன்பு காட்டுவதைப் பார்க்கிறோம். வயது வந்தோர் வாக்குரிமை பெற்றதால், தாழ்த்தப்பட்டோர் தேர்தல் காலங்களிலே தனி மதிப்புப் பெற்றுவிட்டனர்.

வேட்பாளர், பிறப்பால் உயர்சாதியினராயினும், சேரியை நாடி ஓடுவதைப் பார்க்கிறோம்.

தேசம் விடுதலை பெற்றால், படித்த சாதிக்கு அதிகாரங் கிடைக்கும், தொழில்கள் வளரும், பெரிய பெரிய பதவிகள் கிடைக்கப் பெற்று எட்டுத் திக்கிலும் பவனி வரலாம். இப்படியெல்லாம் ஆசைகளை வளர்த்துக் கொண்ட தேசிய காங்கிரசைச் சேர்ந்த படித்தவர்களும் வெளியிலிருந்த வண்ணம் அதை ஆதரித்த வருணாசிரமிகளும் தீண்டாமை ஒழிப்பை ஆதரித்தாக வேண்டிய கட்டாயத்திற்காளாயினர்.

காந்தியடிகளுக்கு சாதாரண மக்களிடையில் எல்லையற்ற செல்வாக்கிருந்த காலமது. அவர் சொல்லி விட்டதால், தீண்டாமையை ஒழிக்க சாதாரண மக்கள் கச்சை கட்டிக் கொண்டனர்.

### *அரிசன இயக்கம்*

எரவாடா சிறையில் ஏற்பட்ட புனா ஒப்பந்தத் திற்குப்பின், தேசத்தில் தீண்டாமையை ஒழிக்க ஒரு பேரியக்கத்தையே காந்திஜி தொடங்கினார்.

புனா ஒப்பந்தத்திலே, மத்திய - மாநில சட்ட மன்றங்களிலே தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு ரிசர்வ் தொகுதி அடிப்படையில் தாராளமாக இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு, ''நாட்டின் எல்லாத் துறைகளிலும் தீண்டாமை ஒழிக்கப்படும்'' என்று உத்தரவாதம் தரும் விதியும் சேர்க்கப்பட்டது.

அதன்படி, காந்திஜி எரவாடா சிறையிலிருந்த வண்ணம் 'அரிசன்' 'அரிசன் பந்து' என்னும் பெயர்களில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் வாரப் பத்திரிகைகளைத் தொடங்கி நடத்தினார். அவற்றின் ஆசிரியப் பொறுப்பை அவரே ஏற்றார்.

புனா உடன்படிக்கையை யடுத்து சிறையிலிருந்த படி தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தை நடத்த இந்திய அரசும் பம்பாய் மாகாண அரசும் அடிகளாருக்கு அனுமதியளித்தன. பின்னர், ஒன்றிரு திங்களுக்குள் அதனை ரத்து செய்துவிட்டன. அரசின் மனமாற்றத்தை எதிர்த்து அடிகள் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கத் தொடங்கினார். தேசமே கொதித்தெழுந்தது. தேச மக்களும் சிறைகளிலே அடைப்பட்டிருந்த தேசபக்தர் களும் அடிகளாரிடம் அனுதாபம் தெரிவித்து ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தனர். அதன்பின், அடிகள் நிபந்தனையின்றி 1933 செப்டம் பரில் விடுதலை செய்யப்பட்டார். ஆயினும், தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முடியும்வரை அரசியல் பிரசாரத்தில் ஈடுபடுவதில்லையென அடிகள் தாமாகவே விரதம் ஏற்றுக்கொண்டு, 1934ல் தேசம் முழுவதிலும் யாத்திரை செய்தார். ''தீண்டாமை ஒழிப்பு யாத்திரை'' என்று அதற்குப் பெயர் தரப்பட்டது.

தமது பிரசாரத்திற்கு உதவும் பொருட்டு அனைத் திந்திய ரீதியில் ''அரிசன சேவா சங்கம்'' ஒன்றை நிறுவி, அதனை நடத்தும் பொறுப்பை தீண்டாமை ஒழிப்பில் தீவிர ஆர்வமுடைய திரு. தக்கர்பாபா கையில் ஒப்புவித்தார்.

### *தமிழகத்திலே...*

முதலில் மத்திய மாகாணத்தில் சுற்றுலாச் செய்து விட்டு, பின்னர் தென்புலத்தை நோக்கி வந்தார். இங்கு முதலில் ஆந்திரத்திலும், அடுத்து, தமிழகத்திலும் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தமிழ்நாட்டில் மூதறிஞர் ராஜாஜியும் காந்திஜியுடன் சென்று தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தில் பங்கு கொண்டார்.

ஓய்வு பெற்ற நீதிபதி திவான்பகதூர் பாஷ்யம் அய்யங்கார், மதுரை ஏ. வைத்தியநாதய்யர், எல். என். கோபால்சாமி ஆகியோர் தமிழ் நாட்டில் அரிசன சேவா சங்கத்தை வலுப்படுத்துவதற்குப் பொறுப்பேற்று மாவட்டங்களில் கிளைச்சங்கங்களை நிறுவினர். தமிழ் நாட்டில் அரிசன சமூகத்தின் பெருந்தலைவர்களாக விளங்கிய திருவாளர்கள் தருமலிங்கம் பிள்ளை, எம்.சி.ராஜா, புஷ்பராஜ், ஆர். சீனிவாசன் ஆகியோரும் அரிசன சங்கத்திற்குக் கைகொடுத்து உதவினர்.

தேசமெங்கும் காந்தியடிகளே எதிர்பாராத வகையில் தீண்டாமை ஒழிப்புப் பணிகள் மிக வேகமாக நடைபெற்றன. கிராமங்களிலே பொதுக் கிணறுகளிலும் குளங்களிலும் நீர் எடுத்துப் பயன்படுத்த அரிசன மக்கள் அனுமதிக்கப்பட்டனர். சைவ - வைணவ திருக்கோயில் கள் பல அவர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. ஆம்; மற்ற இந்துக்களைப்போல கோயில் வழிபாட்டில் பங்கு கொள்ள அரிசன மக்கள் உரிமை பெற்றனர்.

கேரளத்திலுள்ள குருவாயூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்திலே அரிசன மக்கள் புகுவதற்கு வைதிகர்கள் தடையாக இருந்தனர். அந்தத் தடையைத் தகர்த்தெறிய குருவாயூர் வாசியான, திரு. கேளப்பன் என்ற காங்கிரஸ் காரர் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தார். அவருக்கு அனுதாபம் காட்டும் பொருட்டு, தாமும் உண்ணா விரதத்தில் ஈடுபடப் போவதாகக் காந்தியடிகள் அறிவித்தார்.

அரிசன ஆலயப் பிரவேசம்பற்றி குருவாயூர் பொது மக்களின் அபிப்பிராயத்தை அறிய அவ்வூர் காங்கிரஸ் காரர்கள் வாக்கெடுப்பு நடத்தினர். பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். பொதுமக்களுடைய ஆதரவு கிடைத்து விட்டதால், உயிர்போகும் வரை உண்ணா விரதம் இருக்க முனைந்த குருவாயூர் கேளப்பன், காந்தியடிகளின் ஆணைப்படி அதனைக் கைவிட்டார்.

திருவாங்கூர் சமஸ்தான அரசு - நடைபாதைகள், பொதுக்கிணறுகள், குளங்கள் ஆகியவற்றை மற்ற இந்துக்களைப்போல அரிசன இந்துக்களும் அனுப விக்கலாம் என்று ஆணை பிறப்பித்தது.

### *'வைக்கம் போர்!*

முதன் முதலில் தீண்டாமையை எதிர்த்து இந்திய தேசிய காங்கிரசானது இந்து வைதிகத்தின் மீது போர் தொடுத்தது திருவிதாங்கூர் சமஸ்தானத்திலேதான் என்பதை இங்கு நினைவூட்ட வேண்டும். புனா

உடன்படிக்கைக்குப் பத்தாண்டுகட்கு முன்பு - அதாவது, 1924-ல் கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டியானது அனைத்திந்திய காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றப் பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் அனுமதி பெற்று, திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ''வைக்கம்' என்னும் ஊரில் வைதிகத்தை எதிர்த்துப் போர் தொடங்கியது.

அந்த ஊரில் சிவன் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் தீண்டாதாரை நடமாடவும் அனுமதிக்க மறுத்தனர் வைதிகர்கள். தீண்டாதாரைப் பார்ப்பது கூடத் ''தீட்டு'' என்னும் கொடிய வழக்கம் வைக்கத்தில் நடைமுறையில் இருந்தது. ஆம்; ''அண்டாமை'' - ''பாராமை'' என்னும் பெயர்களிலே தீண்டாமை என்னும் கொடுமை வைக்கத்தில் நடைமுறையில் இருந்தது. அதை எதிர்த்துக் காங்கிரஸ் கமிட்டியே நடத்திய போருக்கு, அனைத்திந்திய காங்கிரஸ் ஆதரவளித்த தோடு, ஆயிரம் ரூபாயை நன்கொடையாகவும் தந்தது.

தமிழ் நாட்டிலிருந்தும் பெருந் தலைவர்கள் வைக்கம் சென்று, தடையை மீறி தீண்டாதார் சிவன் கோயில் மாட வீதிகளிலே நடமாடச் செய்யத் துணை நின்றனர். ராஜாஜி வைக்கத்திற்கே சென்று, அங்கு நடந்த சத்தியாக்கிரகத்திற்குப் பொது மக்களுடைய ஆதரவைத் திரட்டித் தந்தார். நிதி திரட்டிக் கொடுத்தும், கூட்டங்களில் பேசியும் சத்தியாக்கிரகிகளை உற்சாகப் படுத்தினார்.

பிற்காலத்தில் ''பெரியார்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற ஈ.வே. ராமசாமியார் வைக்கம் சென்று, ஒரு

முறைக்கு இருமுறை தடையுத்தரவை மீறிச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தார்.

கதர் வளர்ச்சிப் பணியில் பெரும் பங்கு கொண்ட காந்தியவாதியான கோவை திரு. சி.ஏ. அய்யாமுத்து அவர்களும் வைக்கத்தில் தடையை மீறிச் சிறை புகுந்தார். மதத்தால் கிறித்துவரான மதுரை ஜோசப்பும் தரும நியாயத்தை முன்னிட்டு வைக்கம் சத்தியாக்கிரகத் தில் ஈடுபட்டுச் சிறைத் தண்டனை பெற்றார்.

### *அரசு பணிந்தது!*

தொடக்கத்தில் திருவிதாங்கூர் அரசு, வைக்கம் சத்தியாக்கிரகத்தை முறியடிக்க முயன்றதென்றாலும், அந்தச் சத்தியாக்கிரகம் அனைத்திந்திய ரீதியில் ஆதரவு பெற்ற பின்னர் பணிந்து கொடுத்தது. வைக்கம் சிவன் கோயில் மாடவீதிகளில் அரிசனங்கள் செல்வதற்கிருந்த தடையை அகற்றி, தீண்டாமை ஒழிப்பிற்கு உதவி புரிந்தது. காந்தியடிகள் திருவிதாங்கூருக்கே சென்று, அரசுடன் பேசி இந்த வெற்றிக்கு வழிவகுத்தார்.

இதன்பின் சில ஆண்டுகள் கழித்து திருவிதாங்கூர் திவான் பொறுப்பிலிருந்த சர்.சி.பி. ராமசாமி ஐயர் முயற்சியால் சமஸ்தானங்களிலுள்ள ஆலயங்கள் எல்லாம் அரிசன மக்களுக்குத் திறந்து விடப்பட்டன.

வைக்கம் சத்தியாக்கிரகத்தில் நேரடியாகப் பங்கு கொண்டு அதன் வெற்றிக்கு உதவி புரிந்ததற்காக, திரு.வி.கலியாண சுந்தரனார், தமது ''நவசக்தி'' வார

இதழிலே "வைக்கம் வீரர்" என்று ஈ.வே.ராவுக்குப் பட்டம் தந்தார்.

### *பன்சாலியின் பட்டினி*

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தில் காந்தியடிகள் ஈடுபட்டிருந்தபோது நாடு முழுவதிலும் சட்ட மறுப்பு நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. பல்லாயிரக் கணக்கான காங்கிரஸ்காரர்கள் சிறைச்சாலைகளில் அடைப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு சிறைச்சாலையிலும் தீண்டாமை ஒழிப்பில் ஆர்வமுள்ள காங்கிரஸ்காரர்கள் தோட்டி வேலையை மேற்கொள்ள சிறை அதிகாரிகளிடம் அனுமதி கோரினர். பல சிறைகளில் அனுமதி கிடைத்தது. பேராசிரியர் பன்சாலிக்குச் சிறை அதிகாரிகள் தோட்டி வேலையில் ஈடுபட அனுமதி தர மறுத்தனர். அவர், அதிகாரிகள் அனுமதி தரும்வரை உணவு உட்கொள் வதில்லையென்று கூறி, உண்ணா விரதத்தைக் கடைப்பிடித்தார். சிறை அதிகாரிகளின் போக்கை வன்மையாகக் கண்டித்து காந்திஜி அறிக்கை விட்டார். அதன் பின்னர், அதிகாரிகள் பேராசிரியருக்கு அனுமதி தந்தனர்.

### *வித்யாலயங்கள்*

அரிசன சேவா சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்த திரு. தக்கர்பாபா அவர்கள், அரிசன மக்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டினார். நாட்டின்

பலவிடங்களிலே அரிசனங்களுக்காக வித்தியாலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. அரிசனப் பிள்ளைகளோடு உயர்சாதியார் எனப்படுவோரின் பிள்ளைகளும் சேர்ந்து படிக்க வழிசெய்தார். காந்தியடிகள் தந்த காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்திலே ''மதுவிலக்கு'' என்பது பெரும்பாலும் அரிசன மக்களுடைய பொருளாதாரச் சீர்குலைவைத் தவிர்ப்பதாக இருந்தது. அரிசன சேவா சங்கத்தார் குடிப்பழக்கத்திலிருந்து அரிசன மக்களை மீட்பதற்கு அரும்பாடுபட்டனர். அந்தக் காலத்தில் தேசம் முழுவதிலும் பல்வேறிடங்களில் அரிசன மக்களின் கல்வி நலன் கருதி தோற்றுவிக்கப்பட்ட வித்தியால யங்களிலே சில காலப் போக்கில் மறைந்து விட்டன என்றாலும், பல வித்யாலயங்கள் இன்னமும் நடந்து வரு கின்றன, ஆம்; மாநில - மத்திய அரசுகளின் ஆதரவோடு! அவற்றில் ஒன்று, சென்னை தியாகராய நகரிலுள்ள தக்கர் பாபா வித்யாலயம். சிதம்பரத்தில் அரிசனத் துறவியான சுவாமி சகஜானந்தர் நந்தனார் பள்ளி என்னும் பெயரில் ஒரு வித்யாலயத்தைத் தோற்றுவித்து, காந்தியடிகளின் ஆசியோடும் காங்கிரசின் ஆதரவோடும் நடத்தி வந்தார்.

அவர் சென்னை மாகாண சட்டமன்றத்திலும் ஆளு நரால் நியமிக்கப்பட்டு அங்கம் வகித்து வந்தார். காங்கிரசானது சட்ட மன்றம் புகுந்த பின் அதன் சார்பிலும் சகஜானந்தர் சட்ட மன்றத்தில் அங்கம் பெற்றார்.

## வ.உ.சி. யின் சேவை

காந்தி சகாப்தத்திற்கு முன்பே தம்முடைய சிறு வயதிலே அரிசன வகுப்பினரான சுவாமி சகஜானந்தர், விடுதலை வீரரான வ.உ.சிதம்பரனாரின் இல்லத்திலே அவருடைய பிள்ளைகளோடு சேர்ந்து வளர்ந்துவந்தார் என்பதனையும் இங்கு நினைவூட்ட வேண்டும்.

இரண்டு கண்களும் தெரியாத ஒரு அரிசன சிறுவனையும் வ.உ.சி. தமது இல்லத்தில் வைத்து வளர்த்து வந்தார். வ.உ.சி. தீண்டாமையில் நம்பிக்கை யற்றவர். அதை அடியோடு ஒழிப்பதிலேயும் ஆர்வம் கொண்டவர். தென்னாட்டுத் தேசியத் தலைவர்களிலே தீண்டாமை ஒழிப்பில் முதன் முதலில் தீவிரம் காட்டியவர் தேசபக்தர் சிதம்பரனார்தான்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே 1937-ல் இந்தியாவில் ஆறு மாநிலங்களிலே காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அவற்றுள் அப்போதைய பெரிய சென்னை மாகாணமும் ஒன்று. ராஜாஜியை முதலமைச்சராகக்கொண்டு இரண்டரை யாண்டுக்காலம் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கோலோச்சியது. அப்போது அரிசன ஆலயப் பிரவேசத்திற்கு சட்டம் செய்தார் முதல் அமைச்சர் ராஜாஜி.

## தடையை மீறல்

மதுரை நகரில் காங்கிரஸ் தலைவரான திரு. ஏ. வைத்தியநாதய்யர், கோயில் நிர்வாக அதிகாரி தடுத்தும்

கேளாமல் அரிசன கோஷ்டியினரை அழைத்துக் கொண்டு மீனாட்சியம்மன் கோயிலுக்குள் பிரவேசித்தார். நிர்வாக அதிகாரி கொடுத்த புகாரின் பேரில் போலீஸ் அதிகாரிகள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஏ. வைத்திய நாதய்யரையும், அவருடன் சேர்ந்து தடையை மீறிக் கோயிலுக்குள் புகுந்த அரிசனங்கள் உள்ளிட்ட சத்தியாக்கிரகிகளையும் கைது செய்து சிறையிலடைத் தனர். இது நிகழ்ந்த ஒன்றிரு நாட்களுக்குள் மீனாட்சி யம்மன் ஆலயத்திற்குள் நுழைவதற்கு அரிசனங்களுக்கு இருந்த தடையை அகற்றும் வகையிலே அப்போது ஆளுநர் பொறுப்பிலிருந்த ஆங்கிலேயரின் துணை கொண்டு முதல்வர் ராஜாஜி அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

## *சட்ட விரோதம்*

பாரதப் பெருநாடு சுதந்திரம் பெற்றதும், தீண்டாமையை சட்ட விரோதமாக்கும் விதி இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப் பட்டதல்லவா! அதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தது, 1938ல் ராஜாஜி ஆட்சி பிறப்பித்த ஆலயப் பிரவேச அவசரச் சட்டம், தேச விடுதலை இயக்கத்தை விடவும் வேகமாக வளர்ந்து வலுப்பெற்று வந்தது தீண்டாமை ஒழிப்பு இயக்கம். அதனை ஆன்மிக இயக்கமாகவே காந்திஜி கருதினார். இந்திய சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயம் முழுவதற்குமே பயன்படக் கூடிய பேரியக்கம் என்று தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திற்கு காந்தியடிகள் விளக்கம் தந்தார். தமிழ் நாட்டிலும் சரி; வடபுலத்திலும்

சரி, சமய அல்லது சமுதாய சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக் கொள்வோரும் அவர்களால் நடத்தப்பட்டு வந்த சீர்திருத்த இயக்கங்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு உருப்படியாகச் செய்தது இன்னதென்று திட்டவட்டமாகச் சொல்லுவதற்கில்லை. வெறும் பேச்சளவில்தான் அந்தச் சீர்திருத்தவாதிகள் தீண்டாமை விலக்கில் ஆர்வம் காட்டினர். ஆனால் தேசவிடுதலைப் போருக்கு மத்தியிலேயே காந்தியடிகளின் வழி காட்டுதலைக் கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கமானது இந்திய சமுதாயத்தையே ஓர் உலுக்கு உலுக்கிவிட்டதென்று சொல்லலாம். நான்கு வருணங்களுக்கு அப்பால் ஐந்தாவது பஞ்சம வருணம் என்பதாக ஒன்று உண்டு எனச் சொன்ன வைதிக வாதத்திற்கு மரண அடிகொடுத்து விட்டது காங்கிரஸ். தேசம் சுதந்திரம் பெற்றபின் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியல் சட்டமானது தேசிய காங்கிரஸ் படைத்த மகத்தான ஒரு புரட்சிச் சாசனமாகும்.

### *அம்பேத்கர் சாதனை*

வேத காலந்தொட்டு நால் வருணங்களில் மேல் வருணத்தவரான சாஸ்திரிமார்கள் எழுதி வைத்ததுதான் இந்து சமுதாயத்தில் அமுல் நடக்கும் சட்டமாக இருந்து வந்தது. இதற்கு மாறாக, தேசம் சுதந்திரம் பெற்ற பின்னர், நால் வருணங்களுக்கு அப்பால் ஐந்தாவதான பஞ்சம வருணத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டு

வந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களை மத்தியில் சட்ட அமைச்சராக்கியது தேசியகாங்கிரஸ். அவரது பெரு முயற்சியால் தயாரிக்கப்பட்டு, அவரது கையொப்பத் துடன் 1950 சனவரி 26-ல் நடைமுறைக்கு வந்த அரசியல் சட்டம்தான் 35 ஆண்டுக் காலமாக பாரத மக்களுக்கு வாழ்வளித்து வருகிறது. 'பறையர்' 'பஞ்சமர்' 'தீயர்' என்னும் இழி பெயர்களையெல்லாம் சட்ட விரோதமாக்கியது அரசியல் சட்டம்.

''எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்னும் பாரதியாரின் கனவை நனவாக்கியது இந்திய அரசியல் சட்டம். இந்தச் சாதனை புரிந்த பெருமை இந்திய தேசிய காங்கிரசுக்கே உரிமை.

இந்திய தேசிய காங்கிரசானது தேச விடுதலைப் போராட்டத்தின் நடுவே தீண்டாமை விலக்குக்கும் பாடுபட்டு வந்தது என்றால், காங்கிரசுக்கு வெளியேயும் ஏற்றத்தாழ்வோடு கூடிய சாதிவேறுபாடுகளில் நம்பிக்கையற்ற அமைப்புகள் சில அந்தக் கொடுமையை ஒழிப்பதிலே கருத்துச் செலுத்தின.

## *நாராயண குரு*

கேரளத்திலே நாராயண குரு என்னும் பெரியார், 'ஈழ யோகம்' என்னும் பெயரில் தனியாக ஒரு அமைப்பை நிறுவி, அதன் சார்பில் தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்டு வந்தார். அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். ஆனால், சாதி உணர்வோடு அல்லாமல், இந்து மதத்தை வலுப்படுத்தும் வகையிலே

யும் பணியாற்றி வந்தார். ''ஒரே சாதி; ஒரே மதம்; ஒரே தெய்வம்''என்பது குருவின் கோஷமாகும்.

இந்துக்கள் அனைவருக்குமுரிய பொதுக் கோயில் களிலே தீண்டாதாரும் சென்றுவழிபடத் தடை இருந்து வந்ததால், அவர்களுக்கெனத் தனியாகக் கோயில்களை நிறுவினார். அதிலே பணிபுரிய தாமே விரும்பி முன்வந்த அந்தணர்களையும் அர்ச்சகர்களாக்கினார்.

''தெய்வ மொழி'' எனப்படும் சமஸ்கிருதத்தைப் பயில்வதற்கு தீண்டாதாருக்கு உரிமை வழங்கப்படாத தால், அவர்களுக்கெனத் தனியாக சமஸ்கிருதப் பள்ளி களை நிறுவினார். அந்தப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக அந்தணர்களையும் நியமித்தார். தாழ்த்தப்பட்டவர்களுக் கெனத் தனியாக பள்ளிகளை நிறுவி அவர்களுடைய கல்வி வளர்ச்சியிலே நாராயண குரு கவனம் செலுத் தினார். அந்தப் பள்ளிகளிலே உயர்சாதி இந்துக்களுக்கும் ஆசிரியர் வேலை கொடுத்தார். பொதுவாக, அரிசன மக்களை இந்து மதத்திலிருந்து பிரித்துவிட நாராயண குரு விரும்பவில்லை, அது, வரணாசிரமிகளின் வேலையல்லவா! புலால் உண்ணல், மது அருந்தல் போன்ற தீய வழக்கங்களிலிருந்து தமது வகுப்பாரை மீட்பதற்கும் குருமகனார் பாடுபட்டார்.

### *வன்முறை வழி*

காங்கிரஸ் நடத்திய வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு கொள்கையளவில் நாராயண குரு ஆதரவளித்தாரென் றாலும், அணுகு முறையிலே அதனிடமிருந்து வேறுபட்

டார். வைக்கம் சிவன்கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளிலே அரிசன மக்கள் நடமாடுவதற்கு இருந்த தடையை அகற்றுவதற்கு அகிம்சை வழியிலான சத்தியாக்கிரக முறையை காங்கிரஸ் பயன்படுத்தியது. இது நாராயண குருவுக்குப் பிடிக்கவில்லை. அரிசனங்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று தாங்கள் நடமாடுவதற்குத் தடையாக கோயில் நிர்வாகிகள் போட்டுள்ள வேலிகளை அகற்ற வேண்டுமென்று ஆலோசனை கூறினார். இதனை ''வன்முறை'' என்று கருதி காந்தியடிகள் ஏற்க மறுத்தார்.

## *சுயமரியாதை இயக்கம்*

காங்கிரஸ் தீண்டாமை ஒழிப்புக்குத் தீவிரமாக பாடுபட்டுவந்த காலத்திலே, காங்கிரசுக்கு வெளியே ''சுயமரியாதை இயக்கம்'' என்னும் பெயரால் தனி இயக்கம் நடத்தி வந்த பெரியார் ஈ.வே.ராவும் கொள்கை யளவில் அதற்கு ஆதரவளித்தார். 1919-ல் காங்கிரசிலே இணைந்து, தமிழ் நாட்டளவில் முன்னணித் தலைவர் களில் ஒருவராக ஈ.வே.ரா. விளங்கினார். ஆயினும், காங்கிரசுக்கு எதிராக நடந்து வந்த ''பிராமணரல்லாதார் இயக்க''மானது பெரியாரைக் கவர்ந்தது. அந்த இயக்கத்தை ஜஸ்டிஸ் கட்சி நடத்தி வந்தது. சட்டமன்றத் தொகுதிகளிலே பிராமணரல்லா தாருக்குத் தனியாக இட ஒதுக்கீடுகள் செய்ய வேண்டு மென்று கோரியே ஜஸ்டிஸ் கட்சி பிறந்தது. பின்னர், அரசாங்க அலுவல்களிலும் பிராமணர் - பிராமணரல்லாதார் என்னும் வகுப்பு அடிப்படையில் இட ஒதுக்கீடு கோரியது.

### *ஈ.வே.ராவின் ஆதரவு*

அந்த வகுப்புவாத ஒதுக்கீடு முறையை காங்கிரஸ் கமிட்டிகளிலேயும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று 1924-ல் பெரியார் ஈ.வே.ரா. காஞ்சிபுரத்தில் கூடிய தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டிலே தீர்மானம் கொடுத்தார். மாநாட்டுத் தலைவர் திரு. வி.கலியாணசுந்தரனார் அதனை ஏற்க மறுத்து, நிராகரித்தார். அதனால், சினங்கொண்டு பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறினார். அதன் பின்னரே ''சுயமரியாதை இயக்க''த்தைத் தோற்றுவித்தார். நாராயண குரு தோற்றுவித்த ''ஈழ யோகம்'' என்னும் அமைப்பு போலல்லாமல், பெரியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கமானது அரசியலிலே ஈடுபட்டது. தேர்தல் களத்திலே காங்கிரசுக்கும் **ஜஸ்டிஸ்** கட்சிக்கும் போட்டி ஏற்பட்டபோது, தேச விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இயங்கிய **ஜஸ்டிஸ்** கட்சிக்கும் ஆதரவளித்தது. இதனால் தீண்டாமை ஒழிப்பு போன்ற சமுதாய சீர்திருத்தப் பிரச்னைகளில் கூட காங்கிரசோடு ஒத்துழைக்கும் சூழ்நிலை சுயமரியாதை இயக்கத்திற்கு இருக்கவில்லை. ஆயினும், அதன் சாதி ஒழிப்புப் பிரசாரமானது காங்கிரசின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கைக்கு வலுத்தேடியது எனலாம். 1934-ல் காந்திஜி தொடங்கிய தீண்டாமை ஒழிப்புச் சுற்றுலாவானது, வைதிகர்களிடையே ஆத்திரத்தைக் கிளப்பியது.

### *கருப்புக் கொடி, கல்லெறி!*

கேரளத்திலே பாலக்காட்டிலும், மகாராஷ்டிரத்திலே புனாவிலும் வைதிகர்கள் வன்முறையில் ஈடுபட்டனர், காந்திஜியின் மோட்டார் மீது கற்கள் எறியப்பட்டன. அவர் சென்ற பல ஊர்களிலே ஏற்றத் தாழ்வோடு கூடிய சாதி வேற்றுமையில் நம்பிக்கையுடைய வைதிகர்கள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இவற்றையெல்லாம் சகித்து, சரியாக ஏழு மாத காலம் காந்திஜி சுற்றுலாச் செய்தார். அப்போது பீகார் மாநிலத்தி லே கடுமையான பூகம்பம் ஏற்பட்ட செய்திகிடைத்த தால், தென்னகத்தில் இருந்த காந்திஜி சுற்றுலாவை முடித்துக்கொண்டு பீகாருக்கு விரைந்தோடினார்.

### *அம்பேத்கர் அதிருப்தி*

காங்கிரசின் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திலே முன்னணியில் இருந்தவர்கள் எல்லாம் உயர்சாதி இந்துக்களாவர். அவர்களிலே முதல் வருணத்தார் எனப்படும் அந்தணர்களும் இருந்தனர்.

இதனால் டாக்டர் அம்பேத்கர் உள்ளிட்ட அரிசனத் தலைவர்கள் காங்கிரஸ் நடத்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் அவநம்பிக்கை கொண்டனர். தேச விடுதலை இயக்கத்திற்கு வெற்றி தேடத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பயன்படுத்தும் ராசதந்திர முயற்சியே காங்கிரசின் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் என்றார் பி.ஆர். அம்பேத்கர். அவர் தாழ்த்தப்பட்டோருக்கு என அனைத்திந்திய ரீதியில் ஓர் அமைப்பை நடத்திவந்தார்.

அதன் முதல் மாநாடு 1918 மார்ச் 23, 24 தேதிகளில் வடபுலத்தில் நடைபெற்றது. அந்த ஆண்டிலிருந்து அரிசன மக்களுக்கெனப் பாடுபடும் தனியொரு கட்சியாக "தாழ்த்தப்பட்டோர் சங்கம்" இயங்கி வந்தது.

புனா ஒப்பந்தத்திலே கையொப்பமிட்டதன் காரணமாக காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றிய பெருமை டாக்டர் அம்பேத்கருக்கு உண்டு. அதனால் இந்தியர் அனைவருடைய பெருமதிப்பிற்கும் உரியவ ரானார். ஆயினும், உயர்சாதி இந்துக்களின் தலைமையி லே அரிசன மக்களுக்கென தனி இயக்கம் நடை பெறுவதனை அவர் விரும்பவில்லை. பிரிட்டிஷார் ஒரு பக்கம் விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமாக அரிசன மக்களைப் பயன்படுத்தித் தங்கள் சாம் ராஜ்யத்தை நிலை நிறுத்தப் பார்க்கின்றனர் என்றால், இன்னொரு பக்கம் மத மாற்றத்திற்குத் தங்களைப் பயன்படுத்த இஸ்லாமியர் முயல்கின்றனர் என்றும் டாக்டர் அம்பேத்கர் வெளிப்படையாகவே கூறினார்.

### *அரிசனங்களின் ஆதரவு*

அரிசன மக்கள் தங்களைத்தான் தம்பியிருக்க வேண்டும் என்று அம்பேத்கர் அடிக்கடி கூறி வந்தார். ஆயினும், காங்கிரசின் தீண்டாமை ஒழிப்பு இயக்கமானது அரிசன சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களைப் பெரிதும் கவர்ந்தது. அரிசன சேவா சங்கத்தின் முழுநேரப் பிரசாரகர்கள் சேரிதோறும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் முன் னேற்றத்திற்குப் பாடுபடலாயினர்.

### தூய்மை வாதம்

தீண்டாமை ஒழிப்பைக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டவர்களிலே சிலர்,''தாழ்த்தப்பட்டோர் குளித்துத் தூய்மையாக இருக்கவில்லையே, அவர்களை எப்படித் தொடுவது? எப்படி கோயிலுக்குள்ளே அனுமதிப்பது?'' என்று கேட்டனர்.

காந்தியடிகள், ''பொதுக்கிணறுகளிலும் குளங் களிலும் நீரெடுக்க அவர்களை அனுமதிக்காதபோது, நாள்தோறும் அவர்கள் குளித்துத் தூய்மை பெறுவது எப்படி?'' என்று கேட்டார். ''குடிக்கும் நீருக்கே அவர்கள் அல்லலுறும்போது குளிக்கும் நீருக்கு எங்கே போவது?'' என்றும் அடிகள் கேட்டார்.

### புலால் வாதம்

''தாழ்த்தப்பட்டோர் புலாலுண்கிறார்களே - குறிப்பாக, மாட்டு மாமிசத்தைத் தின்கிறார்களே, அவர்களை எப்படி இந்துக்களாகக் கருதுவது?'' என்றும் வைதிகர்கள் வாதம் எழுப்பினர். அவர்களுக்கு அடிகள் அளித்த பதில் வருமாறு;

''எருமை நிற்பதைப் பாராமல் எறும்பைச் சுட்டிக் காட்டுவதுபோல, கற்பனையான பரிசுத்தத் தன்மையைக் காப்பதற்காக கோடிக்கணக்கான மக்களை வேண்டு மென்றே ஒடுக்கும் கொடுமையை மறந்துவிட்டு. அற்பமான மாமிசம் தின்னும் வழக்கத்தைக் குறித்துப் பிரமாதப்படுத்துகிறார்கள். மற்றவர்களைச் சாதிப்

பிரஷ்டம் செய்யும் இழிவான முறையைக் கையாண்டு தான் சைவ உணவுக் கொள்கையைப் பாதுகாக்க வேண்டுமாயின், அத்தகைய கொள்கை பாதுகாப்பதற்கே தகுதியற்றது என்று சொல்வேன்.

''பிராமணர்கள் சைவ உணவு உண்பவர்கள் என்று கூறுவது ஓரளவுதான் உண்மை. அதாவது, தென்னிந்திய பிராமணர் சம்பந்தப்பட்டவரைதான் அது உண்மையாகும். மற்ற இடங்களில் பிராமணர்கள் தங்கு தடையின்றி மீன் சாப்பிடுகிறார்கள். வங்காளத்திலும் காஷ்மீரத்திலும் பிராமணர்கள் மாமிசமும் சாப்பிடு கிறார்கள்.

''தவிர தென்னிந்தியாவில் மீன் சாப்பிடுவோர், மாமிசம் சாப்பிடுவோர் எவரும் தீண்டத்தகாதவராகக் கருதப்படுவதில்லை. மாமிசம் சாப்பிடும் பிராமணரல் லாதார் பெரிய பதவியில் இருப்பவர்களாயின், அவர் களுடன் பிராமணர்கள் தோளோடுதோள் சேர்த்துக் கொள்வதில்லையா? மாமிசம் தின்னும் இந்து அரசர் களுக்கு பிராமணர்கள் மரியாதை செய்வதில்லையா?''

*(காந்தி நூல்கள் - தொகுப்பு 7; பக். 54-55)*

### *பிராமணரைப் பார்!*

காந்தியடிகள் புலாலுண்ணாதவர்; அதனை விரதமாகவும் கொண்டவர். ஆயினும், புலால் - குறிப்பாக, மாட்டு மாமிசத்தை உண்பவர் விஷயத்தில் வைதிக இந்துக்கள் பாரபட்சமாக நடந்து கொள்கிறார்கள் என்பதைத்தான் காந்தியடிகள் மேலே தந்துள்ள

பகுதிகளில் எடுத்துக்காட்டியிருக்கிறார். மாமிசம் உண்பதை ஒரு காரணமாகக் காட்டி, தீண்டாமை என்னும் கொடிய வழக்கம் நடைமுறைக்கு வந்ததாகத் தெரிகிறது. இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கருதும் வழக்கமுடையவர்கள். அதனால் மாட்டு மாமிசம் உண்பவர்களை அவர்கள் வெறுப்பார்களானால் அது புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால், குமரி முதல் காஷ்மீரம்வரை வாழ்கின்ற இந்து உயர் சாதியார்களிலே மிகப் பெரும்பாலோர் மாட்டு மாமிசங்களை உண்ணும் வழக்கமுடையவர்களே. அவர்களையெல்லாம் தீண்டாதவர்களாகக் கருதுவது என்றால் இந்த நாடே ''பறையர்கள் சேரி''யாகி விடும்.

### *கடவுள் தந்த தண்டனை!*

புலால் உண்ணாமை என்னும் புனித வழக்கத்தை ஒருதலையாகக் கொண்டு கோடிக்கணக்கான மக்களைத் தீண்டாதவர்களாகக் கருதும் கொடிய சாதி பகிஷ்காரம் நடைமுறைக்கு வந்ததனாற்றான், உயர் சாதியாரின் கொடுமைகளைத் தாங்கமுடியாத அரிசன மக்களிடையே மதம்மாறும் பரிகாரமுறை ஏற்பட்டு, புறச் சமயங்கள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்தன. இந்து சமயம் வலுவிழந்து வந்தது. இதற்காக ஆண்டவன் விதித்த தண்டனைதான் மாட்டு மாமிசம் உண்ணக் கூடிய புறச் சமயங்களைச் சார்ந்தவர்களுக்கு இந்த நாடு பல நூற்றாண்டு காலம் அடிமைப் பட்டிருந்ததாகும். ஆனால், சாதி பகிஷ்காரத்தை ஏற்படுத்தியவர்கள் வைதிக இந்துக்கள்; அதனால், ஆண்டவன் விதித்த தண்ட

னையை அனுபவிப்பவர்கள் இந்தியர்கள் எல்லோருமே! காந்தியடிகள் அரிசன இந்துக்களுக்கும் உயர்சாதி இந்துக் களுக்குமிடையே கலப்பு மணம் நிகழ்வதைக் கூட ஆதரித்தார்.

### கலப்பு மணம்

அரிசனப் பெண்களை மணந்துகொள்ள பிராமண இளைஞர்கள் முன்வர வேண்டுமென்று வெளிப்படை யாகவே கூறினார். தமது சபர்மதி ஆசிரமத்திலே அப்படிப்பட்ட கலப்பு மணங்களை அவரே நடத்தி வைத்தார். நாடு முழுவதும் எண்ணற்ற கலப்பு மணங்கள் விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலே காங்கிரஸ் தலைவர்களால் நடத்தி வைக்கப்பட்டன.

### சமபந்தி போசனம்

அரிசனங்களோடு உயர்சாதியாரும் கலந்து ஒரே இடத்தில் அமர்ந்து உணவு உண்ணும் சமபந்தி போஜன முறையையும் காந்தியடிகள் வற்புறுத்தினார். காந்தி விழாக் கொண்டாடப்படும் அக். 2லே நாடெங்கும் சமபந்தி விருந்து நடைபெறுவது வழக்கமாக இருந்தது விடுதலைப் போராட்ட காலத்திலே! அரசியல் அமைப் பான காங்கிரசே கலப்பு மணத்திற்கும், சமபந்தி போஜனத்திற்கும் தூண்டுதலாக அமைந்தது என்பதனை இந்திய தேசியத்திற்கு நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தக் காலத்திலே நினைவு கொள்வது நன்றிக் கடனாக இருக்கும்.

❖

# பெண் விடுதலைப் பேரியக்கம்

இந்திய தேசியமானது, பெண்கள் முன்னேற்றத் திற்கு ஆற்றியுள்ள தொண்டு, பாரதப் பெருநாட்டின் வரலாற்றிலேயே முன்னுதாரணமில்லாத புரட்சிகரமான சீர்திருத்தமாகும்.

### *திட்டம் பிறந்தது*

காந்திய சகாப்தத்திற்கு முன்வரை, பெண்கள் முன் னேற்றத்திற்காகக் காங்கிரசிடம் தனியாக வேலைத் திட்டம் இருக்கவில்லை. காந்திய சகாப்தத்திலேதான் அடிகள் தந்த நிர்மாணத் திட்டத்திலே பெண்கள் முன் னேற்றமும் ஒரு பகுதியாக அமைந்தது.

காந்திய சகாப்தத்திற்கு முன்பு வருடாந்தர காங்கிரஸ் மகா சபைகளிலே பெண்கள் சிறப்புப் பெற்றதாகத் தெரியவில்லை. 'காங்கிரஸ் சைகிளோ பீடியா' என்னும் ஆங்கில நூலிலே, 1885 தொடங்கி 1923 வரை கூடிய வருடாந்தர காங்கிரஸ் பேரவைகளிலே வரவேற்புத் தலைவராகவும் மகாசபைத் தலைவராகவும் இருந்தவர்களின் பெயர்ப்பட்டியல் தரப்பட் டுள்ளது. அதிலே, இந்திய கலாசாரத்தின் பிரதிநிதியாக ஒரு பெண்மணியின் பெயரைக் கூடக் காண முடிய வில்லை.

### *வெள்ளைப் பெண்மணி*

1917-ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் தலைமை வகித்தார். ஆனால், அவர் ஐரிஷ் நாட்டில் பிறந்து, நடுத்தரப் பருவத்தைக் கடந்த பின்னர் இந்தியக் குடியுரிமைபெற்ற வெள்ளைப் பெண்மணி யென்பதை மறந்துவிடுவதற்கில்லை.

இந்திய முஸ்லிம் சமுதாயம் கோஷா முறையைக் கடைப்பிடித்து வருவதால், விடுதலைப் பேரியக்கத்திலே கலந்து ஆண்களோடு தோளொடு தோள் சேர்த்துத் தொண்டாற்ற அவர்களுக்குச் சந்தர்ப்பமில்லை.

விடுதலைப் போர்க்களத்திலே காந்தி சகாப்தத் துக்கு முன் நமக்கு அறிமுகமாகும் ஒரே இந்தியப் பெண்மணி மாடம் காமா ஆவார். இவர் நாட்டால் இந்தியர் தானென்றாலும், மதத்தால் பார்ஸியாவார். இந்து சமுதாயத்தில் சரிபாதியினராகவுள்ள பெண்கள், அச்சம் -மடம் - நாணம் - பயிர்ப்பு என்னும் நான்கு மதில்களைக் கொண்ட சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தனர்.

### *வேதகாலப் பெண்கள்*

'வேத காலம்' எனப்படும் ஒரு காலத்திலே பெண்களை அடிமைப்படுத்தி ஆண்கள் ஆதிக்கம் செலுத்தியதாகத் தெரியவில்லை. வேதகாலம் என்பதைத் தமிழர் வரலாறு 'சங்க காலம்' என்று கூறுகின்றது.

சங்க காலத்தில் ஔவை மூதாட்டியாரைப் பார்க் கிறோம். தமிழ் மூவேந்தருக்கும் அறிவுரை கூறும்

அரசியல் ஆலோசகராக அவர் இருந்திருக்கிறார். மன்னன் அதிகமானின் அரசவைப் புலவராகவும் தமிழ் இலக்கிய வரலாறு அவரை அறிமுகப்படுத்துகின்றது.

அதிகமானுக்கும் தொண்டைமானுக்கு மிடையில் தூது சென்று அவர்களுக்குள் நேரவிருந்த கடும்போரைத் தவிர்த்த ராசதந்திரியாகவும் அவரை இலக்கிய வரலாறு காட்டுகிறது.

## *புனிதவதியார்*

மங்கைப் பருவத்திலேயே மனைவாழ்க்கையைத் துறந்து, சிவனடியே சிந்தித்துச் சொர்க்கம் புகுந்த - காரைக்காலம்மையார் என்றழைக்கப்பெற்ற - புனிதவதியாரையும் சைவ சமயத்திற்கேவுரிய பன்னிரு திருமுறையால் அறிகிறோம். அவர், அம்பலவாணரின் அருட்கூத்தைப் பாடினார். அது, திருவாலங்காட்டுப் பதிகம் எனப்படுகிறது. அறுபத்து மூன்று நாயன்மாரில் காலத்தால் முதல்வர் காரைக்காலம்மையார்தான்.

பத்து நூற்றாண்டுகட்கு முன்னர் வைணவ சமயத்தில் தோன்றிய ஆண்டாள் தமிழ்ப் பெண்குலத் திற்கே பெருமை தேடியவராவார். அவர் பாடியுள்ள பக்திப் பாடல்கள் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்ற வையாகும். இவற்றையெல்லாம் நோக்கினால், பெண்ணடிமைக்கு இந்து மதம் காரண மென்று சொல்வதற்கில்லை. பிற சமயங்களிலே தெய்வங்களெல்லாம் ஆண்பாலராகவே கூறப் படுகின்றனர்.

*பெண் தெய்வங்கள்*

இந்து மதத்திலே ஆண்பாதி பெண்பாதியாக - அர்த்தநாரி உருவத்தில் சிவபெருமான் வடிவம் படைக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியேயும் பெண் தெய்வங்கள் படைக்கப்பட்டு, இந்து மக்களால் வழிபடப்பட்டும் வருகின்றன. ஆகவே, பெண்ணை ஆணைவிடவும் தாழ்வாகவோ, இழிவாகவோ, பாவப் பிறவியாகவோ பாவிப்பது பிற்காலத்தில் இந்து மதத்தில் புகுந்த வழக்கமாகும்.

''அடுப்பூதும் மங்கையருக்குப் படிப்பெதற்கு?'' என்று வினா எழுப்பப்பட்டு, பெண்களுக்குக் கல்விதரக் கூடாதென்ற மூடத்தனத்தைக் கடைப்பிடித்து வந்த இந்துக்களிடையேதான் கல்வியையும் அறிவையும் கலையையும் பெண்வடிவில் கண்டு வழிபடுவது தொன்று தொட்டு இன்றுவரை இருப்பதைப் பார்க்கிறோம்.

பெற்றோர் சொத்தில் பெண்ணுக்குப் பங்கில்லை என்ற கொடுமையைக் கடைப்பிடித்துவந்த இந்து சமயத்தினரிடையில்தான் செல்வத்திற்குத் ''திருமகள்'' என்றும் ''லட்சுமி'' என்றும் பெண்வடிவத்தில் கண்டு வழிபடுவதும் வழக்கமாக இருக்கக் காண்கிறோம்.

இவற்றால் தெரிவதென்ன? இந்து மதத்தில் பெண்ணடிமை என்பது பிற்காலத்தில் புகுந்ததுதான் என்பதல்லவா!

### *இந்து மதம் அழிந்ததேன்?*

ஓராயிரம் ஆண்டுகட்கு முன்பு தொடங்கி இந்தியாவில் மதத்தாலும் நாட்டாலும் அன்னியரானவர்கள் அரசியல் ரீதியில் ஆதிக்கம் பெற்றனராதலால், இந்து மதம் தனது பழம்பெரும் கலாசாரத்திலே காலூன்றி வாழவும் வாய்ப்பற்று விட்டது.

இஸ்லாமிய - கிறித்துவ மதங்கள் உலக மதங்களாதலால், காலத்திற்கேற்ப மாறுதலடைய அவற்றிற்கு சர்வ தேச ரீதியில் சந்தர்ப்பம் இருந்து வந்தது.

இந்து மதம் இந்தியாவையே முதலும் முடிவுமான இடமாகக் கொண்டிருப்பதால் அரசியல் அடிமைத்தனம் அதன் ஆன்மாவையே அழித்தொழித்துவிட்டது.

எப்படியோ இந்துக்களிடையில் புகுந்துவிட்ட பெண்ணடிமைத்தனமானது இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றிய பின்னர், சூரியனைக் கண்ட பனிபோல் மறையலானது.

### *பாரதியின் குரல்*

காந்தி சகாப்தம் தோன்றுவதற்கு முன்பே தமிழகத்தில் ஒரு மகாகவி தோன்றி பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தார். அவர்தான் எட்டயபுரம் மகாகவி சி. சுப்பிரமணிய பாரதி. அவரைத் தோற்றுவித்தது தேசிய இயக்கமாதலால், அவர் ''தேசியக் கவி'' எனப் பெயர் பெற்றார். ஆம்; காந்தி சகாப்தம் தோன்றுவதற்கு முன்பே பெண்ணுரிமைப் போர் தொடங்கிவிட்டது தமிழகத்திலே! பாரதியாரின் போர்க்குரலைக் கேட்போம்;

*" ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டிடில்*
*அறிவி லோங்கியிவ் வையம் தழைக்குமாம்"*

*" பெண்களறிவை வளர்த்தால் வையம்*
*பேதமை யற்றிடும் கண்டீர்"*

*" பெண்ணறத்தினை ஆண் மக்கள் வீரந்தான்*
*பேணுமாயின் பிறிதொரு தாழ்வில்லை"*

*" பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!*
*பெண்மை வெல்கென்று கூத்திடு வோம்டா"*

*" மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்"*

*" பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்"*

*" மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்"*

*" தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு*
*பெண்களும்*
*சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*

## புதுமைப் பெண்

தேசிய காங்கிரஸ் தந்த புரட்சிக் கவியாவார் பாரதியார். ''புதுமைப் பெண்'' என்ற கற்பனைப் பெண்ணைப் படைத்து அவளுக்குக் குரல் கொடுத்தார். அந்தப் புதுமைப் பெண் பேசுகிறாள், கேட்போம்.

*" பட்டங்க ளாள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்."*

*" ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்"*

*" கற்பு நிலையென்று சொல்லவந் தாரிரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்"*

*" வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்."*

இந்தியாவில் தேசியப் பேரியக்கம் தோன்றிய பின்னர்தான் அனைத்திந்திய ரீதியில் பெண்கள் சங்கம் தோன்றியது. அது, ஆண்டுதோறும் மாநாடு நடத்தி, பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தது.

### *காந்தி சகாப்தம்*

தேசிய காங்கிரசின் வருடாந்தர மகாசபைகளிலே யும் பெண்களுக்குக் கல்வி தரக் கோரியும், வாக்குரிமை தருமாறு வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு வந்தது. ஆயினும், தேசியக் காங்கிரசிலே சமுதாயத்திலே சரிபாதியினரான பெண்கள் தங்களுக் குரிய இடத்தைப் பெறுவதற்குச் சக்தி பெற்றிருக்க வில்லை - குறிப்பாக, தேசவிடுதலைப் போரில் அவர்கள் அதிக ஆர்வங்காட்ட முன் வரவில்லை.

1824-ல் கர்நாடகத்திலே கித்தூர் என்னும் சமஸ்தானத்தின் மன்னர் திடீர் மரணமடைந்தபோது, அவரது மனைவி ராணி சென்னம்மாள் அரியாசனத்தி லேற ஒரு ஆண் மகவை ஸ்வீகாரமெடுத்தார். அவனை ஏற்க மறுத்து வேறொருவனைப் பரிந்துரைத்தது

கிழக்கிந்தியக் கம்பெனி. அதற்கிணங்க மறுத்ததால், ராணி சென்னம்மாளுக்கும் கம்பெனிக்கும் போர் மூண்டது. அதிலே, சென்னம்மாள் தோல்வியுற்று சிறைப்பட்டு, அங்கேயே உயிர் நீத்தார்.

### *ஜான்சி ராணி*

பின்னர், 1857-ல் நடந்த சிப்பாய்ப் புரட்சியின் போது ஜான்சி ராஜ்யத்தின் அரசர் மறைந்தபோதும், அங்கே வாரிசுத்தகராறைக் கிளப்பினர் கம்பெனியார். ஆம்; ஜான்சியின் ராணி லட்சுமிபாய் தேர்ந்தெடுத்த வாரிசை ஏற்க மறுத்து, வேறு ஒருவரை அரியாசனத்தில் ஏற்றிவைக்க முயன்றனர். அதனால், ஜான்சி ராணிக்கும் கம்பெனிக்கும் போர் மூண்டது. வடபாரதத்தில் மேற்கே பிஷாவர் தொடங்கிக் கிழக்கே கல்கத்தாவரையுள்ள விரிந்த நிலப்பரப்பில் நடந்த சிப்பாய்ப் புரட்சியிலே ஜான்சியின் போரும் சேர்ந்துகொண்டுவிட்டது.

இறுதியில் லட்சுமிபாய் போர்க்களத்திலேயே தான் தேர்ந்தெடுத்த வாரிசை முதுகில் சுமந்து குதிரை மீதேறி வலது கையில் வாள் ஏந்திப் போர்புரிந்த நிலையில் வீர சொர்க்கமடைந்தார் - ஆம், ஜான்சியிலும் வெற்றி கம்பெனியாருக்கே!

### *அவர்கள் அரசிகள்!*

சித்தூர் சென்னம்மாளும் ஜான்சியின் லட்சுமிபாயும் அரசியராதலால் அவர்களுக்குக் கையில் வாளேந்தி களத்தில் நின்று போரிட வாய்ப்பு ஏற்பட்டது. இந்த

இருவருக்குப்பின் மூன்றாவதொரு வீரமகள் இந்து சமுதாயத்திலே தோன்றவில்லை பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை எதிர்த்துப் போரிட!

காந்தி சகாப்தத்திலே அடுப்பங்கரையில் சிறைப்பட்டிருந்த அன்னையரெல்லாம் அரசியல் ஆர்வம் பெற்று தேச விடுதலைப் போரில் ஈடுபடலாயினர். அவர்களிலே தலை சிறந்தவர், வங்கத்துப் பெண்மணியான சரோஜினி தேவியார். இவர் 1919-ல் காந்திஜி நடத்திய ரௌலட் சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டதன் வாயிலாக அரசியலில் கலந்தார். அடுத்து, ஒத்துழையாமைக் கிளர்ச்சியில் கலந்தார். பின்னர், 1930-ல் நடந்த உப்புச் சத்தியாக்கிரகந் தொடங்கி, அடுத்தடுத்து நடந்த சட்ட மறுப்பு, தனி நபர் சத்தியாக் கிரகம், ஆகஸ்டுக் கிளர்ச்சி ஆகியவற்றி லெல்லாம் களம் புகுந்து சிறைத்தண்டனை பெற்றார். ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது காந்திஜியுடனும் கஸ்தூரிபாயுடனும் சேர்ந்து ஆகாகான் மாளிகையில் அடைபட்டார்.

### *வட்டமேஜையில் சரோஜினி*

தொடர்ந்து பல ஆண்டுகள் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கம் வகித்தார். 1931-ல் காந்தியடிகள் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டபோது, திருமதி சரோஜினி தேவியும் இந்தியப் பெண்களின் பிரதிநிதியாக பிரிட்டிஷ் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, காந்திஜியுடன் சென்று அம்மாநாட்டில் கலந்து கொண்டார். முதல் மாநாட்டிலே

டாக்டர் சுப்பராயன் மனைவி திருமதி ராதாபாய் சுப்பராயன் கலந்து கொண்டார்.

திருமதி சரோஜினி ஆங்கிலத்தில் சிறந்த கவிஞராவார். 1925-ல் நடந்த காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்தார்.

இவ்வம்மையார் வங்காளத்தில் பிறந்தவராயினும், ஆந்திரத்தைச் சேர்ந்த நாயுடு சமூகத்தவரை மணந்து வாழ்ந்ததால், சரோஜினி நாயுடு என்று அழைக்கப் பட்டார்.

வங்காளியான திரு.ஜே.எம். சென்குப்தாவை மணந்த ஐரிஷ் பெண்மணியான திருமதி நெல்லி சென்குப்தா என்பவர், 1934-ல் தடையை மீறி கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கி, மகாசபையின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோதே கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார்.

### *கொலையுண்ட காங்கிரஸ் தலைவி*

சுதந்திரத்திற்குப் பின் 1963-ல் திருமதி இந்திரா காந்தி காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவரானார். காங்கிரஸ் மகாசபைக்கு நூறாவது ஆண்டு பிறக்க விருந்த தருணத்திலே திருமதி காந்திதான் தேசப் பிரதமராகவும் காங்கிரஸ் தலைவராகவும் இருந்து வந்தார். நூற்றாண்டு விழாவை நடத்த ஒரு குழுவை நியமித்து, விழாவுக்கான ஆரம்ப வேலைகள் நடந்து

கொண்டிருந்த நிலையிலே திருமதி இந்திரா காந்தியை அவரது மாளிகையின் காவலர்களாக இருந்த இருவர் காலன்களாக மாறி சுட்டுக் கொன்றனர்.

மாநிலவாரியாகப் பார்த்தால் எத்தனையோ வீராங்கனைகள் தேச விடுதலைப் போரில் கலந்து ஆண்களோடு புகழேணியில் ஏறப் போட்டியிட்டனர்.

### *தம்பதி தம்பதிகளாக...*

காந்திஜியோடு கஸ்தூரிபாயும், மோதிலாலுடன் ஸ்வரூபாராணியும், ஜவர்லாலுடன் கமலாவும், பிரோஸ் காந்தியுடன் இந்திராவும், சென்குப்தாவுடன் நெல்லியும், தேசபந்து தாசரோடு ஊர்மிளாவும், ஈ.வே.ரா.வுடன் நாகம்மையாரும், அசப்அலியுடன் அருணாவும் தம்பதி தம்பதிகளாகச் சிறை சென்றனர். இத்தகைய வீரத் தம்பதிகளின் எண்ணிக்கை தேசம் முழுவதிலும் பல்லாயிரக் கணக்கிலிருக்கும். தமிழகத்திலே மாவட்டத் தோறும் எண்ணற்ற தம்பதிகள் சிறை புகுந்தனர். சில பெண்மணிகள் கைக் குழந்தைகளுடன் சிறை புகுந்தனர். மற்றுஞ் சிலர் கருவுற்றிருந்த நிலையில் சிறை புகுந்த தால் சிறையிலேயே பிரசவித்தனர். இந்த மகத்தான மாறுதலை வெறும் அரசியலாக மட்டு மல்லாமல், இந்திய தேசிய காங்கிரசால் நாட்டில் ஏற்பட்ட சமுதாய சீர்திருத்தமாகவும் கருதவேண்டும். இன்னும் சொன்னால், தேசவிடுதலைப் போரில் பெண்குலத்தின் விடுதலை வாழ்வும் கலந்திருந்ததைக் காண்கின்றோம். அரசியல் தொடர்பற்ற சமுதாய சீர்திருத்த அமைப்பு எதனாலும் இதுபோன்ற சாதனையைப் புரியமுடியாது.

***வீராங்கனை அருணா***

ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது, திருமதி அருணா அசப்அலி, தலைமறைவாகி நாசவேலை நடத்தியதாக அரசு புகார் எழுப்பியது. அம்மையாரின் தலைக்கு ஒரு லட்சம் விலைவைத்து பிரகடனம் வெளியிட்டது. ஆனால், கணவன் அசப் அலி சிறையிலிருந்த நிலையிலே மனைவியான அருணா நாடு முழுவதிலும் சுற்றிப் புரட்சி விளைவித்தார். கடைசிவரை அவரைப் பிடிக்க போலீஸ் புலிகளால் முடியவில்லை.

பம்பாய் மாகாண அரசாங்கச் செயலாளரும், இந்திய வைசிராய் லார்டு வில்லிங்டனும் அருணாவைப் பற்றிக் காந்திஜியிடம் முறையிட்டனர்.

உலகப் பெரும்போர் முடிந்து காங்கிரசுடன் இந்திய அரசு சமரசம் பேசத் தொடங்கிய நிலையிலே திருமதி அசப் அலி தாமாகவே வெளிவந்தார். அதற்கு முன் சிறையிலிருந்து வெளிவந்த நேருஜி. தலை மறைவாகத் திரிந்து அருணா விளைவித்த புரட்சியைப் பாராட்டியதோடு, 'அந்த வீராங்கனையைப் பார்க்க என் கண்கள் விரும்புகின்றன' என்று கூறி, அவ்வம்மையார் ஒரு சரித்திர நாயகி என்பதை உலகுக்கு உணர்த்தினார்.

தேசிய காங்கிரஸ் தோன்றிய பின்னுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்திலே பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்திலே, தமிழ் நாடு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

*முதல் பெண்மணி*

சென்னை அடையாறு பிரதேசத்தில் ''ஔவை இல்லம்'' என ஒன்றை நிறுவி, பெண் குழந்தைகளின் - குறிப்பாக, அகதிகளாகிவிட்டோரின் கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் தமக்கெனத் தனி வரலாற்றைப் பெற்று விட்டார்.

இவர் இந்தியாவிலேயே முதன்முதலாக மருத்துவக் கலை பயின்ற எம்.பி., பி.எஸ். பெண் பட்டதாரி ஆவார். இத்துடன், மாநில சட்டமன்றமொன்றில் அங்கம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணியும் இவரேயாவார். இவ்வம்மையார், 1926-ல் அப்போதிருந்த பெரிய சென்னை மாகாணத்தின் சட்டமன்றத்திலே பெண்களின் பிரதிநிதியாக ஆளுநரால் நியமிக்கப்பட்டு அங்கம் பெற்றார். அம்மன்றத்தின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவருக்குப்பின், 1935-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டப்படி புதிதாக அமைந்த சென்னை மாகாண சட்டப் பேரவையின் துணைத் தலைவர் பதவிக்குக் காங்கிரஸ் சார்பில் திருமதி ருக்மணி லட்சுமிபதி அம்மையார் 1937-ல் தேர்ந்தெடுக்கப்பட்டது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

இவருக்குப் பின் திருமதி அம்மண்ணராசா அவர்கள் சென்னை மாகாண சட்டப் பேரவையின் துணைத் தலைவியாக காங்கிரஸ் சார்பில் தேர்ந் தெடுக்கப்பட்டு 1946- முதல் 1952 வரை அப்பதவியி லிருந்தார். சுதந்திரத்திற்குப் பின்னும் பல பெண்கள்

பல்வேறு மாநிலங்களில பேரவைத் தலைவர்களாகவும், மேலவைத் தலைவர்களாகவும் காங்கிரஸ் சார்பில் பதவிபெற்றனர்.

### *தார்மிக ஆதரவு*

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் தமது வாழ் நாளில் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் சேராமல் பெண் குலத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் சமூக சேவகியாகவே வாழ்ந்தார். ஆயினும், தமக்கிருந்த தேசபக்தி காரணமாகக் காந்தியத்தில் பற்றுடைய தேசிய வாதியாகத் திகழ்ந்தார். தேச விடுதலைப் போராட்டத் திற்கு தார்மிக ரீதியில் ஆதரவு காட்டி வந்தார்.

1932-ல் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தின்போது, சென்னை நகரில் போலீசார் காங்கிரஸ் தொண்டர்களை மிருகத்தனமாகத் தாக்கி வந்ததைக் கண்டிக்கும் வகையில், தமது தலைமையில் பெண்கள் தூதுக்குழு ஒன்றை மாதர் சங்கத்தின் சார்பில் அழைத்துச் சென்று, சென்னை ஆளுநரைப் பேட்டி கண்டு அகிம்சை வீரர்களைத் தடியாலடிக்கும் கொடுமையைத் தடுத்து நிறுத்துமாறு முறையிட்டார்.

காந்திஜி சென்னை நகருக்கு வருகை தந்த போதெல்லாம் அவருக்கு வரவேற்பளித்து, தமது சமூக சேவைக்கு அவரைப் பயன்படுத்திக் கொண்டார்.

### *தேவதாசி முறை ஒழிப்பு*

சென்னை சட்டசபை வாயிலாகத் தேவதாசி முறையை ஒழிக்க அம்மையார் அரும்பாடுபட்டார்.

1928-ல் உத்தியோகப் பற்றற்ற முறையில் மதுரை திரு. கே. ஆர். வெங்கடராம ஐயர் கொண்டு வந்த தேவதாசி முறை ஒழிப்பு மசோதாவுக்கு அப்போது சட்ட சபையில் இடம் பெற்றிருந்த சுயராஜ்யக் கட்சியும் ஆதரவளித்தது. ஆனால், அப்போதைக்கு அது சட்டமாக்கப்படவில்லை. சுயராஜ்யக் கட்சி'' காங்கிரசின் பார்லிமெண்டரி அமைப்பாகத் திகழ்ந்தது.

மதத்தில் தலையிடுவதில்லையென்று விக்டோரியா ராணி தந்த உறுதிமொழியைக் காட்டி, சென்னை மாகாண அரசு நடு நிலை வகித்தது. அதனால், அரசாங்கச் சார்புடையோர் ஆதரவு கிடைக்கவில்லை.

### *அடிகளின் ஆதரவு*

தேவதாஸி முறையை வன்மையாகக் கண்டித்து, அதனை ஒழிக்க முயன்றுவந்த டாக்டர் ரெட்டிக்கு காந்திஜி ஆதரவளித்துத் தமது ''யங் இந்தியா''வில் அடிக்கடி எழுதினார், மேடைகளிலும் பேசினார். அதையும் பார்ப்போம்.

''தேவதாசி முறை ஒழிப்பை நான் ஆதரிக்கிறேன். உத்தேச மசோதா பொதுஜன அபிப்பிராயம் உருவாவதற்கு முன்பே கொண்டுவரப் படுவதாயிராது என்று நம்புகிறேன். வாய்விட்டுப் பேசுபவர் யாவருமே இந்த வழக்கத்தை எந்த உருவத்திலும் நீடிக்கவிடக் கூடாது என்றே சொல்லுகிறார்கள். ஒழுக்கக் கேடான இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் கருத்துக்கு மதிப்பு தரக்கூடாது.

"தேவதாஸி முறை - அதை ஆதரிப்பவர்களுக்கே ஓர் இழுக்காகும். பொது மக்கள் இவ்வளவு அசட்டையா யிருந்திரா விட்டால், அது எப்போதோ செத்து மடிந்திருக்கும். என்ன காரணத்தாலோ இந்த நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் உறங்கிக் கிடக்கிறது. பல தவறுகளின் கோரத்தைப் பொதுஜன அபிப்பிராயம் பல சமயங்களில் உணர்கிறது. ஆனால், அதுபற்றி எதுவும் செய்வதற்குப் பொது மக்களுக்கு அக்கறை பிறப்ப தில்லை. ஆனால், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் யோசனை உரிய காலத்திற்குமுன் எழுந்தது என்று நான் சொல்லமாட்டேன். இத்தகைய சட்டத்தை முன்பே கூடக் கொண்டுவந்திருக்கலாம். அது எப்படியிருந்தாலும் பொது வாழ்விலும் மதவாழ்விலும் தூய்மையை விரும்பும் யாவருடைய மனப்பூர்வமான ஆதரவும் அந்த அம்மையாருக்குக் கிடைக்குமென்றே நம்புகிறேன்."

*("யங் இந்தியா", 29-8-1929)*

## குழந்தை மணத் தடை

1926-இல் இந்திய சட்டசபையில் இடம் பெற்றிருந்த காங்கிரஸ்காரர்களைக் கொண்ட சுயராஜ்யக் கட்சி, அரிவிலாச சாரதா என்பவர் கொண்டுவந்த குழந்தை மணத் தடை மசோதாவிற்கு ஆதரவளித்து அது நிறைவேறச் செய்தது. இச்சட்டம் "சாரதா சட்டம்" என்றே பெயர் பெற்றது. காந்தியடிகள் குழந்தை மணக் கொடுமையைக் கண்டித்து அடிக்கடி எழுதியும் பேசியும் வந்தார்.

இதற்கு முன்பே ''குழந்தை மணத் தடை மசோதா'' ஒன்றை மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் சென்னை மாகாண சட்டமன்றத்தில் கொண்டு சென்றார். ஆட்சியி லேயே அரசின் ஆதரவு கிடைக்காததால் அவரது முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆனால், சாஸ்திரியார் தமது பெண்ணுக்கு பருவமடைந்த பின்பே திருமணம் செய்து வைத்தார். அதற்காக, வைதிகர்களின் வெறுப்புக்கு ஆளானார்.

### *விதவா விவாகம்*

தேசிய காங்கிரஸ், இளம் விதவைகளை மறுமணம் செய்து கொள்வதற்கு ஆதரவளித்துப் பிரச்சாரம் செய்தது. காங்கிரஸ் மகாசபையின் முதல் கூட்டத்தில் (1885) கலந்து கொண்டவரும், ''இந்து'' (ஆங்கிலம்), ''சுதேச மித்திரன்'' (தமிழ்) ஆகிய நாளேடுகளின் நிறுவனருமாகிய திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது விதவை மகளுக்கு 1888-ல் அலகாபாத்தில் நடந்த நான்காவது காங்கிரஸ் மகாசபையின் பந்தலிலேயே மறுமணம் செய்து வைத்தார். அதற்கு எதிராக வைதிகர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளை அவர் புறக்கணித்தார். மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் மனநிறைவோடு ஆதரவளித்தார்.

ஆந்திராவிலிருந்த தேசியவாதியான திரு. வீரேசலிங்கம் பந்துலு, சுப்பிரமணிய பாரதி, திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோரின் ஆதரவைப் பெற்று இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்து வைப்பதை

ஒரு இயக்கமாகவே நடத்தினார். காந்தியடிகளின் ஆதரவும் அவருக்கு இருந்தது.

ஆந்திராவிலிருந்த தேசியவாதியான திரு. வீரேசலிங்கம் பந்துலு, சுப்பிரமணிய பாரதி திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோரின் ஆதரவைப் பெற்று இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்து வைப்பதை ஒரு இயக்கமாகவே நடத்தினார். காந்தியடிகளின் ஆதரவும் அவருக்கு இருந்தது.

### *கலப்பு மணம்*

இருவேறு மதத்தவரிடையிலும் இருவேறு வருணத்தவரிடையிலும் இருவேறு சாதிகளிடையிலும் கலப்பு மணம் நடப்பதையும் இந்திய தேசியக் காங்கிரஸ் ஊக்குவித்தது.

காந்தியும் இதர தேசியத் தலைவர்களும் தனிப்பட்ட முறையிலும் கலப்பு மணத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்தனர். தங்களளவில் கலப்பு மணஞ் செய்து கொண்ட தலைவர்களுமுண்டு.

சிறை சென்ற தியாகியான டாக்டர் அருண்டேல் என்னும் ஐரிஷ் நாட்டு வெள்ளையர், தமிழ் நாட்டு அந்தண மகளான ருக்மணியைத் திருமணம் செய்து கொண்டார்.

கொங்கு நாட்டு வேளாளரும் சிறந்த தேசியவாதியு மான டாக்டர் ப. சுப்பராயன், கர்நாடகத்து அந்தணப் பெண்ணான ராதாபாய் என்பவரை மணந்து கொண்டார்.

சர்வோதய இயக்கத்தைச் சார்ந்த முன்னணித் தலைவர்கள் எத்தனையோ பேர் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களாவர். மதுரை வாசியும் மறவர் குலத்தவருமான திரு. ஜெகன்னாதன், அரிசனப் பெண்ணான கிருஷ்ணம்மாள் என்பவரை மணந்தார்.

மற்றொரு சர்வோதயத் தலைவரும் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவருமான திரு. அருணாசலம் அவர்கள் கிறித்துவப் பெண்ணை மணந்தார்.

சர்வதேசத் தலைவரும் காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான டாக்டர் அறம் அவர்கள், வங்காளப் பெண்மணியை மணந்தார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருந்தவரும் சிறைசென்ற விடுதலை வீரரும் வேளாளருமான திரு. க. திரவியம் கிறித்துவப் பெண்ணை மணந்தார்.

ஆந்திரத்தில் பிரபல தேசபக்தரும் காந்தியடிகளுக்கு நன்கு அறிமுகமான நாத்திகருமான திரு. கோபராஜு ராமச்சந்திரா அவர்கள், தன் ஒரே மகனுக்கு அரிசனப் பெண்ணையும், இரு மகள்களுக்கு அரிசனப் பையன்களையும் மணம் செய்து வைத்தார்.

இப்படி, இந்திய தேசியத்தின் ஒரு நூற்றாண்டு கால வரலாற்றிலே கலப்பு மணம் செய்து கொண்ட தேசியவாதிகள் லட்சக்கணக்கானவர் ஆவர்.

கேரளத்துத் தேச பக்தரான திரு. ஜி. ராமச்சந்திரன், அந்தண வருணத்துத் தமிழ் மகளான மதுரை

சௌந்தரம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களிருவரும் காந்திஜியின் சபர்மதி ஆசிரம வாசிகளாக இருந்த நிலையில் காதலித்து மணந்தனர்.

ராஜாஜியின் மகள் லட்சுமிக்கும் காந்திஜியின் மகன் தேவதாசுக்கும் திருமணம் நடந்ததும் நாடறிந்ததாகும்.

சிந்தி மொழியாளரான ஆசாரிய கிருபலானி, வங்கப் பெண்மணியான சுசேதாவை மணந்து கொண்டார்.

இப்படி, தமிழகத்திலும் வருணக் கலப்பு - மதக் கலப்பு சாதிக் கலப்பு - மாநில (மொழி)க் கலப்பு என்று சொல்லத்தக்க வகையில் கலப்பு மணம் செய்துகொண்ட சீர்திருத்தவாதிகளான காங்கிரஸ்காரர்கள் எண்ணற்றோராவர்.

### *வடபுலத்திலே*

கலப்பு மணம் வடபுலத்தில்தான் அதிக அளவில் நடந்ததெனலாம். காஷ்மீரத்து அந்தணரான ஜவகர்லால் நேருவின் மகள் இந்திரா, பார்ஸி மதத்தவரான பிரோஸ் காந்தியை மணந்தார். இது காதல் மணம். இதற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டு, பத்திரிகைகளிலே வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இந்திராவும் பிரோஸ் காந்தியும் தத்தம் மதத்தைத் தழுவியவர்களாகவே வாழ்ந்தனர். காந்திஜியும் ஆதரவளித்தார். காங்கிரசுக்கு நூற்றாண்டு விழா நடக்கும் காலத்திலே அதன் தலைவராகவுள்ள திரு. ராஜீவ்காந்தியும், இதாலி நாட்டு வெள்ளைப் பெண்ணான சோனியா என்பவரை மணந்தார்.

ஜனாப் அசப் அலி காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்தவர் காங்கிரஸ் முன்னணித் தலைவர்களில் ஒருவர். ''தேசிய முஸ்லிம்கள்'' அணியைச் சார்ந்தவர். இவர் அருணா என்னும் இந்துப் பெண்ணை மணந்தார்.

அனைத்திந்திய காங்கிரஸ் அலுவலகச் செயலாளரும் காங்கிரஸ் சோஷலிஸ்டுமான திரு. சாதிக் அலி, திருமதி. சாந்தி என்ற இந்துப் பெண்ணை மணந்தார். இந்தத் தம்பதிகள் மதம் மாறாமலே வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் நாட்டிலும் சிறை சென்ற தியாகியான தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தம் இரு மகள்களுக்குக் கலப்பு மணம் செய்து வைத்தார். அவர்களில் ஒரு மகள் முஸ்லிம் இளைஞருக்கு வாழ்க்கைப்பட்டார்.

### *முகமூடிக்கு எதிர்ப்பு*

பாரதப் பெருநாட்டில் மாநிலந்தோறும் பெண்கள் மாநாடுகள் நடைபெற்று, அவற்றிலே தாய்க்குலத்தின் உரிமைபற்றிப் பேசப்படுவது ஆண்டுதோறும் நிகழும் சடங்குபோலிருந்தது. பல மாநாடுகளில் காந்தியடிகள் கலந்து கொண்டார். சமூகச் சீர்திருத்த மாநாடு என்னும் பெயரிலும் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்ளும் போது மாநாடுகளும் நடைபெற்றன.

பெண்கள் முகமூடி அணிந்து கொள்வது வடக்கிலுள்ள வழக்கமாகும். அங்கு 'படுதா ஒழிப்பு'' என்னும் பெயரில் மாநாடுகள் அடிக்கடி மாநிலத்திற்கு மாநிலம் நடைபெற்று வந்தன.

## *நகைப் பைத்தியம்*

இந்தியப் பெண்களைப் பிடித்த மூட வழக்கங் களிலே அளவுக்கு மீறி நகைகளை அணிவதும் ஒன்றாகும். இதனையும் தேசியத் தலைவர்கள் எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தனர்.

காந்தியடிகள் மனைவி கஸ்தூரிபாய், மோதிலால் மனைவி ஸ்வரூபாராணி, ஜவகர்லால் மனைவி கமலா, கிருபலானி மனைவி சுசேதா ஆகியோரும், அவர்களைப் போல எண்ணற்ற தேசியத் தலைவர்களின் - தொண்டர்களின் மனைவியர்களும், மற்றும் அவர்கள் குடும்பங்களிலுள்ள பெண்களும் நகைகள் அணியாம லிருப்பதை ஒரு விரதமாகவே கடைப்பிடித்தனர்.

காந்தியடிகள் தாம் பேசிய கூட்டங்களிலும், தமது சுற்றுப் பிரயாணங்களிலும் பெண்களிடமிருந்து நகைகளை காணிக்கையாகப் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நகையணிவது பற்றிக் கொழும்பு நகரில் நடந்த பெண்கள் கூட்டத்தில் அடிகள் கூறியது வருமாறு;

''மற்ற இடங்களில் ச்கோதரிகள் செய்ததைப்போல உங்களுடைய நகைகளையும் நீங்கள் கொடுக்க வேண்டும். சகோதரிகள் ஏராளமாக நகைபோட்டுக் கொண்டிருப்பார்களானால் என்னுடைய பசிக் கண்கள் அவற்றையே நாடுகின்றன. பெண்களிடம் நான் நகை களைக் கேட்பதற்கு மற்றொரு உள்நோக்கமும் இருக் கிறது. அதாவது, நகைகளிடத்தும் ஆபரணங்களிடத்தும்

பெண்களுக்குள்ள மோகத்தைப் போக்க வேண்டு மென்பதே அந்த நோக்கம்.

''என்னைப் போலவே என் மனைவியும் எளிய முறையில் இருப்பதைக் காண்கிறீர்கள். அவள் கழுத்தில் தங்க மாலையையோ, மற்ற ஆபரணங்களையோ நீங்கள் பார்க்க முடியாது, நீங்களும் அப்படி இருக்க வேண்டு மென்று விரும்புகிறேன்.

''நாட்டில் சாப்பிட வழியில்லாது கோடிக்கணக்கான மக்கள் இருக்கும் வரையில் சகோதரிகள் தம்மை அலங்கரித்துக் கொள்ளுவதற்காக விலையுயர்ந்த ஆபரணங்களை வைத்திருப்பதற்கு நியாயமில்லை. இந்த நிலையை எளிதில் புரிந்துகொள்ள முடியும். தம்மிடம் நகைகள் இருக்கின்றன என்று காட்டிக் கொண்டு பெருமைப்படுவதற்காகவே பெண்கள் அவற்றை அணிந்து கொள்ளுகிறார்கள்.''

*('யங் இந்தியா', 8-12-27; காந்தி நூல்கள் - 7; பக்-555-58)*

தேவதாசிகள் இந்துக்களின் கோயில்களிலுள்ள தேவதைகளுக்குத் தொண்டு செய்பவர்கள் என்று கருதப்பட்டனர். அதனாற்றான், ''தேவதாசிகள் என்று பெயர் பெற்றனர். இவர்களுக்கு தேவரடியாள் என்றும் பெயருண்டு. கோயில்கள் சம்பந்தப்படாதவர்கள் "தாசிகள்" என்று அழைக்கப்பட்டனர். இவர்களுடைய தொழிலை ''சட்ட பூர்வமான விபச்சாரம்'' என்று வருணித்தார் அடிகள்.

1937-ல் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை சென்னை மாகாணத்தில் ஏற்பட்டபோது

திருமதி முத்துலட்சுமிரெட்டி மீண்டும் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தைச் செய்ய முற்பட்டார். அதற்கு காங்கிரஸ் ஆட்சியின் ஆதரவை எதிர்பார்த்தார். அப்போது காந்திஜி ''அரிசன்'' (25-9-37) இதழில் எழுதியதாவது;

''தேவதாசிகளை மானக்கேடான வாழ்க்கையில் அழுத்தும் ஒழுக்கக் கேடான முறையை நிறுத்துவதற்குத் தாம் கொண்டு வந்துள்ள மசோதாவை நிறைவேற்றும் படி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சென்னை மாகாண அமைச்சரவைக்குப் பகிரங்கமான ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அந்த மசோதாவை நான் பரிசீலனை செய்யவில்லை. ஆனால், அதன் நோக்கம் மிக நல்லதாகும். அதை ஏன் இன்னும் தென்னிந்திய மாகாணத்தில் சட்டமாக்கவில்லை என்பதுதான் ஆச்சரியம். மதுவிலக்கைப் போலவே இதுவும் அவ் வளவு அவசரமான பிரச்னையென்று டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி சொல்லுவதை நான் முற்றிலும் ஒப்புக் கொள்கிறன்.

''இப்போதுள்ள பிரதம மந்திரி (ராஜாஜி) பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கொடிய வழக்கத்தைப் பலமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார் என்பதை அவர் ஞாபகப்படுத்துகிறார். அதைச் சட்ட பூர்வமாகக் கவனிப்பதற்கு இப்போது அவருக்குக் கொஞ்சம் அதிகாரம் இருக்கிறது. இச்சமயத்தில் இப்பிரச்னையில் அவருடைய ஆர்வம் குறைந்துவிட வில்லை என்பது எனக்குத் தெரியும். இன்னும் பல மாதங்கள் கழிவதற்கு முன்பாகவே, தேவதாசி முறைக்குச் சட்ட சம்மதம்

இல்லாமல் போய்விடுமென்று திருமதி ரெட்டி நம்புவதை நானும் பகிர்ந்து கொள்ளுகிறேன்.''

*('அரிசன்', 25-9-37, காந்தி நூல்கள் - 7, பக். 610-11)*

### மாற்றுத் தொழில்

தேவதாசிகளே தாங்கள் நடத்தும் இழிசெயலை விட்டுவிட விரும்பும் வகையில் அவர்களிடையில் சமூக சீர்திருத்த நோக்குடைய காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும், மனமாற்றமடையும் தேவ தாசிகளை மணந்துகொள்ள காங்கிரஸ் இளைஞர்கள் முன்வர வேண்டுமென்றும் காந்தியடிகள் கூறினார்.

திருமணங்களுக்கும் பிற மங்கல நிகழ்ச்சிகளுக்கும் தேவதாசிகளை அழைத்து பாடவும் ஆடவும் வைக்கும் வழக்கத்தை மக்கள் விட்டுவிட வேண்டும் என்றும் கூறினார்.

''அத்தியாவசியமான குடும்பக் கடமைகளைச் செய்வதைவிட தன்னுடைய எசமானரின் (கணவரின்) சுகானுபவத் தேவைகளைத் திருப்தி செய்வதிலும் தன்னுடைய ஆடம்பரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதிலுமே பெண்களின் நேரம் செலவாகி விடு கிறது. பெண்கள் குடும்பத்தில் இப்படி உழலும அடிமைத்தனம் நமது காட்டுமிராண்டித்தனத்தின் சின்னம் என்றே எனக்குத் தோன்றுகிறது. அடுக்களை களில் (சமயலறையில்) அடிமைகளாய் உழைப்பது காட்டுமிராண்டித்தனத்தின் சின்னம்தான் என்பதே எனது அபிப்பிராயம். இந்தக் கொடுமை யிலிருந்து பெண்

களை விடுதலை செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. குடும்ப வேலை என்பது பெண்களின் நேரம் முழுவதையுமே விழுங்கி விடுவதாய் இருக்கக் கூடாது.''

*(''அரிசன்'', 8-6-40)*

தங்களுடைய உடல்களை விற்று விபசாரத் தொழில் புரியும் பெண்களை அதிலிருந்து மீட்பதையும் இந்தியதேசியம் தனது கடமையாகக் கொண்டது. இந்தியாவை இந்து மாமன்னர்கள் ஆண்ட காலத்தில்கூட இந்த விபசாரத் தொழில் சமூகத்தின் அங்கீகாரம் பெற்ற ஒன்றாக இருந்தது. இதற்கு முதன் முதலில் எதிர்ப்புக் காட்டியது இந்திய தேசியம்தான். இதற்கும் காந்தி யடிகளே காங்கிரசுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியினர் வங்காள, பம்பாய் மாநிலங்ககளின் சட்டமன்றங்களில் அதிக எண்ணிக் கையில் புகுந்த பின்னர், அந்த மாநிலங்களில் அவர்களது முயற்சியால் தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது.

சென்னை மாகாணத்திலும் நாடு சுதந்திரம் பெற்றதையடுத்து, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேவதாசி ஒழிப்புச் சட்டம் 1948- சனவரியில் நடை முறைக்கு வந்தது. இது, காங்கிரஸ் ஆட்சியின் சாதனை யாகும்.

### வழுக்கி விழுந்த சகோதரிகள்

''விபசாரிகள்'' எனப்படுவோருக்கு ''வழுக்கி விழுந்த சகோதரிகள்'' என்று மாற்றுப் பெயர் தந்தார்

அடிகள். இவர்களை அதிலிருந்து மீட்கவும், மறுவாழ்வு அளிக்கவும் அடிகள் காங்கிரசுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

காங்கிரஸ்காரர்கள், நாட்டின் பல பகுதிகளிலே அடிக்கடி "வழுக்கி விழுந்த சகோதரிகள் மாநாடு" நடத்தி அவர்கள் முன்னேற்றத்திற்குத் திட்டமிட்டனர். 1925-ல் மாயூரத்தில் ஒரு மாநாடு நடைபெற்றது. அப்போது காங்கிரசிலிருந்த மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அதனை நடத்தினார். ஆந்திர தேசியவாதியான யாமுன பூரண திலகம்மாள் தலைமை வகித்தார். திரு.வி.க., ஈ.வே.ரா. உள்ளிட்ட தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் பேசினர்.

### *பெண் தளபதிகள்*

தமிழ் நாட்டிலே வெள்ளை நிறத்துப் பெண்மணிகளான டாக்டர் அன்னிபெசன்ட், மார்க்ரட் கசின்ஸ் ஆகியோரும் சிறை புகுந்து இந்திய பெண்மணிகளின் வீரத்தோடு போட்டியிட்டனர். இவர்களில் பெசன்ட் அம்மையாரை, பிரிட்டிஷ் பேரரசு வெளியில் விட்டு வைக்க அஞ்சி, வீட்டுக் காவலில் வைத்தது. தேசமே கொதித்தெழுந்தது கண்டு அஞ்சி இரண்டு திங்களுக்குள் அவரை விடுதலை செய்தது. திருமதி கசின்ஸ் அம்மையார் தாமே வலுவில் சென்று தடையை மீறி ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார். உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது, பம்பாய் மாகாணத்திலுள்ள தர்சனா உப்பள முற்றுகையே காங்கிரஸ்காரர்களுக்குச்

சோதனைக் களமாக அமைந்தது. அதிலேயும் வீராங் கனையான சரோஜினி தேவி இரண்டாவது தளபதியாக விளங்கினார். முதல் தளபதியாக 80 வயதையடைந்த முதியவரான அப்பாஸ் தயாப்ஜி செயல்பட்டுச் சிறைத் தண்டனை பெற்றார். உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது பெண்கள் காட்டிய வீரத்தைப் பற்றி அடிகள் தெரிவித்த கருத்து வருமாறு,

''உப்புச் சத்தியாக்கிரகத்திலே நாடெங்கும் பெண்கள் காட்டிய வீரம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. கணவர்களையும் குழந்தைகளையும் பிரிந்து மாதக் கணக்கிலும் ஆண்டுக் கணக்கிலும் பெண்கள் சிறைப்பட்டிருப்பதென்பது சாதாரண விஷயமல்ல. பல ஊர்களிலே பெண்கள் போலீசாரின் கடுமையான தடியடிக்கும் ஆளாயினர். பாரதத்தின் வரலாற்றிலேயே ஒரு புதிய அத்தியாயத்தை பெண்கள் சேர்த்துவிட்டனர்.''

*(காந்தி நூல்கள், பகுதி-7, பக். 564-5)*

### கணவனைப் பிரிந்த காமா

பார்ஸிப் பெண்ணான மாடம், விடுதலைப் போரில் பங்கு பெறுவதற்காகவே, அதிலே தன்னுடன் கருத்தொற்றுமையற்ற கணவனிடமிருந்து விவாக ரத்துப் பெற்று, லண்டனிலே முகாம் அமைத்தது, காங்கிரசின் வரலாற்றிலே புனிதமான பகுதியாகும். அவர், வேறு சில விடுதலை வீரர்களுடன் சேர்ந்து, லண்டனில் 'இந்தியா லீக்' அமைத்து, 'வந்தே மாதரம்' என்னும் ஏடு நடத்தினார்.

முதல் மகாயுத்தத்தின்போது முகாமை லண்டனி லிருந்து பாரிசுக்கு மாற்றிக் கொண்டார். அங்கும் தங்க முடியாதபோது, தமது புரட்சியாளர் முகாமை பெர்லி னுக்கு மாற்றினார்.

தேசியக் காங்கிரசானது பெண்கள் முன்னேற்றத்தில் ஆற்றிய பணிகளை முழுமைப்படுத்திப் பார்ப்போம்.

குழந்தை மணத்தைத் தடுப்பதிலேயும், இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்து கொடுக்கத் தூண்டு வதிலேயும் கலப்பு மணத்திற்கு ஆதரவளிப்பதிலேயும் காந்தியடிகள் அக்கறை காட்டியதையும், அதற்கேற்ற வகையில் சட்டங்கள் செய்யக் காங்கிரசும் அதன் பார்லி மெண்டரி அமைப்பான சுயராஜ்யக் கட்சியும் முயன்ற தனையும் ஏற்கனவே அறிந்தோம். அதைப்போல பொருந்தா மணத்தை எதிர்ப்பதிலேயும் காந்தியடிகளும் சமூக சீர்திருத்தத்தில் ஆர்வமுடைய காங்கிரஸ்காரர்களும் அக்கறை காட்டினர்.

### *பொருந்தா மணம்*

அதிக வயதுடைய முதியவர் இளம் வயது கன்னியை மணப்பதற்குப் 'பொருந்தா மணம்' என்று பெயர் தரப்பட்டுள்ளது. இதுபோன்ற கொடுமைகள் இன்னமும் குறைந்த அளவிலேனும் நடந்து கொண்டுதானிருக்கின்றன. பொருந்தாத் திருமணத் திற்குக் கன்னிப் பெண்கள் கட்டாயப்படுத்தப்படு கின்றனர் என்றே சொல்ல வேண்டும். இதனை அடிகள் ''கட்டாயத் திருமணம்'' என்கிறார். இதனை உணர்ந்தே.

*" கற்பு நிலை யென்று சொல்ல வந்தாரிரு*
*கட்சிக்கு மஃதுப் பொதுவில் வைப்போம்*
*வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுத்திடும்*
*வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"*

என்று பாரதியார் பாடியுள்ளார்.

பால்ய விவாகத்தைத் தடுக்கச் சட்ட மிருப்பதுபோல, இந்தப் பொருந்தா மணத்தைத் தடுக்கச் சட்ட மிருக்கவில்லை. ஆயினும், இதுபோன்ற திருமணங்கள் நடக்கும்போது, உள்ளூரிலுள்ள காங்கிரஸ் வாதிகளும் சமூக சீர்திருத்தவாதிகளும் சத்தியாக்கிரகஞ் செய்து அதைத் தடுத்து நிறுத்தவேண்டியது அவசியம் என்று அடிகள் கூறியிருக்கிறார்.

### *சட்டப்படி சமவுரிமை*

பொதுவாக, பெண்களுக்குக் கல்வி அளிப்பது, பெற்றோர் சொத்தில் பங்கு தருவது, மறுமணம் செய்து கொள்ளவும் கலப்பு மணம் செய்து கொள்ளவும் உரிமையளிப்பது, குழந்தை மணத்தைத் தடுத்து நிறுத்துவது - குறிப்பாக, ஆண்களுக்குள்ள உரிமைகளை யெல்லாம் பெண்களுக்கும் வழங்குவது பற்றியெல்லாம் அடிகள் எழுதியுள்ளவற்றையும் தேசிய காங்கிரஸ் எடுத்து வந்த முயற்சிகளையும் பற்றி காந்தி நூல் வெளியீட்டுக் கழக ஆதரவில் வெளியிடப் பட்டுள்ள "மகாத்மா காந்தி நூல்கள், தொகுப்பு - 7"ல் விரிவாகக் காணலாம்.

இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபைக்கு சமூக சீர்திருத்தத்தில் - குறிப்பாக, பெண்கள் சம்பந்தப்பட்ட

சீர்திருத்தப் பணிகளில் எவ்வளவோ ஆர்வம் இருந்த தென்றாலும் அவற்றைச் செயல்படுத்த விடுதலைப் போராட்டக் காலத்தில் அதற்கு அதிக சந்தர்ப்பம் இருக்கவில்லை. தேசியக் காங்கிரசானது, விடுதலைக் காக சட்ட மறுப்புப் போராட்டம் நடத்திய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆண்டுக்கணக்கில் சட்ட விரோதமான அமைப்பாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது வங்கிகளில் கணக்கிலிருந்த நிதி பறிமுதல் செய்யப் பட்டது. அகில இந்திய அலுவலகம், மாகாண - மாவட்ட அலுவலகங்கள் ஆகியவை போலீசாரால் பூட்டி சீல் வைக்கப்பட்டன. காங்கிரஸ்காரர்கள் நாடெங்கிலுமுள்ள சிறைச்சாலைகளில் ஆண்டுக் கணக்கில் அடைப் பட்டனர். இவ்வளவு தொல்லைகளுக்கும் தடை களுக்கும் இடையேயும் காந்தியடிகளும் காங்கிரஸ் காரர்களும் சமூக சீர்திருத்தப் பணிகளில் அவகாச மேற்பட்டபோதெல்லாம் ஆர்வங்காட்டினர்.

எரவாடா சிறைச்சாலையிலிருந்தபடி அடிகள் அரிசனங்களைத் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுவிக்க இயக்கம் நடத்தியதனை ஏற்கனவே அறிந்தோம்.

### *முன்மாதிரியில்லை*

சுருங்கச் சொன்னால், சமூக சீர்திருத்தத்திற் கென்றே இயங்கி வந்த அமைப்புகளை விடவும் அதிக அளவில் அப்பட்டமான அரசியல் அமைப்பாக விளங்கிய தேசியக் காங்கிரஸ் சேவை செய்துள்ளது என்பதனை அதன் ஒரு நூற்றாண்டு கால வரலாறு காட்டும்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில் சுதந்திரத்திற்குப் பின் இந்திய தேசிய காங்கிரசின் செல்வாக்கால் எழுதப்பட்ட அரசியல் சட்டமானது ஆண்களோடு சமநிலையில் பெண்களுக்கு உரிமைகள் வழங்கியுள்ளது. விடுதலைப் போராட்ட காலத்தில் தான் கொள்கைகளாகக் கொண்டிருந்தவற்றைச் சட்டங்களாக்கியது.

இந்திய நாடாளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கென தனி இடங்கள் - அதாவது, ரிசர்வ் தொகுதிகளை அரசியல் சட்டம் ஒதுக்கவில்லையென்றாலும், ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் மத்திய நாடாளுமன்றத்திற்குப் பெண்களும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். டில்லி ராஜ்ய சபையிலும் பெண்கள் தவறாமல் இடம்பெற்று வருகின்றனர். மாநில சட்ட மன்றங்களின் இரு அவைகளிலும் பெண்களில்லாத சந்தர்ப்பமே இருந்ததில்லை.

### *எங்கெங்கும் பெண்கள்*

மத்திய - மாநில அமைச்சரவைகளிலும் பெண்கள் தவறாமல் இடம்பெற்று வருகின்றனர். ஒருவருக்கு மேல் இடம் பெற்ற சந்தர்ப்பங்களுமுண்டு. தமிழக அரசிலே 1977க்குப் பின் தொடர்ந்து நடந்துவரும் அ.தி.மு.க. அரசிலே இரண்டு பெண்கள் அமைச்சராக்கப்பட்டுள்ளனர். முன்னரே சொன்னது போன்று மாநில ஆளுநராகவும் பெண்கள் பதவி பெற்றுள்ளனர்.

அயல் நாடுகளுக்கான தூதுவர் பதவிகளுக்கும் பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சான்றாக, திருமதி.

விசயலட்சுமி பண்டிட் ருஷ்ய நாட்டிற்குத் தூதுவராக நியமிக்கப்பட்டது நாடறிந்ததாகும்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தலைமைப் பதவிக்கு இதுவரை ஒரே ஒரு முறைதான் பெண் ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். அவர், இந்தியப் பெண்மணியான திருமதி. விசயலட்சுமி பண்டிட் ஆவார்.

அண்மையில் அண்டார்டிகா என்னும் பெயருடைய மனித வாசனையே இல்லாத தீவுக்குச் சென்ற வீரமிக்க குழுவிலே ஒரு இந்தியப் பெண்மணியும் இருந்தா ரென்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

பாரதம் சுதந்திரம் பெற்ற பின்னர், 1970-ல் நடந்த பாகிஸ்தானின் படையெடுப்பை முறியடித்து, அதன் கிழக்குப் பகுதியை ''வங்க தேசம்'' என்னும் பெயரில் தனி நாடாக்கிய பெருமை மத்தியிலிருந்த காங்கிரஸ் ஆட்சியின் பெண் பிரதமரான இந்திரா காந்திக்கே உரிய தென்பதை உலகறியுமல்லவா!

அந்தப் போரின்போது அமெரிக்க வல்லரசு தன் 7ஆவது அணி போர்க் கப்பலை டாக்காவை நோக்கி அனுப்பியது. அதற்காகச் சிறிதும் அஞ்சாமல், அது தானாக வந்தவழியே போகச் செய்த பெருமை நம் பெண் பிரதமருக்கே உரிமை.

### *கல்வித் துறையிலே...*

சுதந்திரம் தேடித்தந்த காங்கிரசின் நூற்றாண்டு விழாக் காலத்திலே, சுதந்திரத்திற்குப் பின் கல்வித்

துறையில் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் நோக்குவோம்.

பொதுவாக, ஐந்தாண்டுத் திட்டப்படி நாட்டில் கல்வி கற்றோரின் சதவிகிதம் கடந்த 38 ஆண்டுகளிலே வளர்ந்திருக்கிறதென்றால் அதிலே பெண்களின் வளர்ச்சி வியப்பைத் தருவதாக இருக்கிறது.

தமிழ் நாட்டளவில் பார்த்தாலும் ஆண்டுதோறும் பள்ளிப் படிப்பிலும் சரி, பட்டப் படிப்பிலும் சரி; தேர்வு பெற்றவர்களிலே பெண்களின் சதவிகிதம் ஆண்கள் சதவிகிதத்தை விடவும் அதிகமாகும்.

## *பெண்களுக்கெனப் பல்கலைக் கழகம்*

விடுதலைப் போராட்டக் காலத்திலே தேசிய வாதியும் சீர்திருத்தவாதியுமான டாக்டர் கார்வே புனாவில் ஒரு பெண்கள் பல்கலைக் கழகத்தை நிறுவினார். அதுதான் இந்தியாவில் முதலில் தோன்றிய பெண்கள் பல்கலைக் கழகமாகும். அடுத்து, 65 ஆண்டுகளுக்குப் பின் 1984-ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டில் கொடைக் கானலில் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆரை முதல்வராகக் கொண்ட தமிழக அரசு இரண்டாவது பெண்கள் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்துள்ளது. அதையும் மனித சமுதாயத்துக்குச் சேவை செய்துவரும் சிறந்த மனிதாபிமானப் பெண்மணியான அன்னை தெரசாவின் பெயரால் அமைத்துள்ளது.

அடுத்து, 1985ஆம் ஆண்டிலே புதிதாக காரைக் குடியில் தான் நிறுவிய அழகப்பா பல்கலைக் கழகத்துக்கு

ஒரு பெண்மணியான ராதா தியாகராசன் அவர்களை தமிழக அரசு துணைவேந்தராக நியமித்துள்ளது. இந்தியாவிலே ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான ஒரு பல்கலைக் கழகத்திலே பெண்மணி ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றது இதுவே முதன் முறையாகும்.

அண்மைக்காலமாகப் போலீசிலும் பெண்களைக் கொண்ட தனிப் பிரிவு தமிழகத்தில் ஏற்பட்டு, அத்துறையிலே அவர்கள் உயர் பதவிகள் பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது. நீதிபதிகள் பதவிகளும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### உலகத் தலைமை

உலக அரசியல் அரங்கில் 1984-ஆம் ஆண்டிலே தான் பாரதப் பெண் பிரதமரான திருமதி இந்திரா காந்தி மூன்றாவது உலகம் எனப்படும் கூட்டு சேரா நாடுகளின் அணிக்குத் தலைவராக்கப்பட்டார்.

நீண்ட நெடுங்காலமாக - பல நூற்றாண்டுக்கு மேலாக சுதந்திரமாக வாழ்ந்துவரும் வளர்ந்துவிட்ட நாடுகள் வரிசையிலுள்ள நாடுகளில் கூட அரசியலிலே பெண்கள் இந்தியாவின் அளவுக்கு முன்னேறவில்லை எனலாம். இன்னும் இன்னும் இந்தியாவிலே பெண் குலம் உலகமே கண்டு வியக்கத்தக்க அளவில் முன் னேறத்தான் போகிறது.

ஒரு நூற்றாண்டுக்கு முன் இந்தியப் பெண் சமுதாயம் எந்த அளவுக்கு எல்லாத் துறைகளிலும்

பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது என்பதை நினைத்துப் பார்த்தால், காங்கிரஸ் தோன்றிய பின்னுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்திலே பாரதப் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றம் வியப்பைத் தருவதாக இருக்கிறது.

ஒரு நூற்றாண்டுக் காலத்தில் இந்தியப் பெண் குலம் அடைந்துள்ள வளர்ச்சியில் பல்வேறு அமைப்புகளுக்கும் தலைவர்களுக்கும் பங்குண்டு.

ஆனால், காங்கிரசால் தோற்றுவிக்கப்பட்ட தேசிய எழுச்சிதான் - ஒரு நூற்றாண்டுக் காலத்திலே அது புரிந்துள்ள சாதனைகள்தான் பெருங்காரணமென்பதனை யாரும் மறுப்பதற்கில்லை.

❖

# தேசியம் வளர்த்த வர்க்க உணர்ச்சி

இந்திய தேசியமானது, தொடக்கக் காலத்தில் படித்தவர்களுக்கு உத்தியோகம் தேடித்தரும் அமைப் பாகவே செயல்பட்டதென்றாலும் - பின்னர், தேச உரிமைக்குக் குரல் கொடுக்கும் புரட்சி அமைப்பாக மாறி, அதனையடுத்து உழவர் - தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்காகவும் பாடுபடலானது.

### *பகுத்தறிவுப் பிரசாரம்*

பின்னர், முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவச் சக்திகளை எதிர்க்கும் வர்க்கப் புரட்சி அமைப்பாகவும் செயல்படலானது. இதைவிடப் ''பகுத்தறிவுப் பிரசாரம்'' வேறு எதுவாக இருக்க முடியும்? அன்னியரை வெளி யேற்றிச் சுதந்திரம் அடைந்தால்தான் சுக வாழ்வு கிடைக்குமென்று கூறியதும் அதற்கான வேலைத் திட்டத்தையும் வகுத்து உழவர் - தொழிலாளர்களிடையே பரப்பி, அதற்கு ஆதரவு தேடியதும் வர்க்க உணர்ச்சியைத் தூண்டிய பணியாகும். இந்தப் பிரசாரத்தால், மக்கள் மூடநம்பிக்கைகளிலிருந்து ஓரளவு மீண்டனர்; ஆம்; மீட்கப்பட்டனர்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு - அதாவது. காங்கிரஸ் தோன்றுவதற்குமுன், உழவர்களும் தொழிலாளர்களு மான ஏழை மக்கள் தங்கள் துயரங்களுக்கான காரணங் களைப் பொருளாதார ரீதியில் அறிந்திருக்கவில்லை. தங்கள் பட்டினிக்கும் பிணிக்கும் படிப்பின்மைக்கும் கடந்த பிறவியில் செய்த பாவங்களே காரணமென்று நம்பினர். சோதிடம் பார்ப்பவரோ, ஏழரை நாட்டுச் சனியே காரணமென்பார். மந்திரக்காரரைக் கேட்டால், 'கிரகம் படுத்துகிறது' என்று சொல்லுவார். இதனை, ''கஞ்சி குடிப்பதற்கிலார், அதன், காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்'' என்று வேதனையோடு பாடுகிறார் பாரதியார்.

## மூட நம்பிக்கை

முதன் முதலில் காங்கிரஸ்தான் மக்களையணுகி, அவர்கள் துன்பங்களுக்கு அன்னியரின் சுரண்டலே காரணம் என்பதைப் பொருளாதார ரீதியில் புள்ளி விவரங்களோடு புலப்படுத்தியது.

காந்தியடிகளைப் பொறுத்த வரையில் அவர் தமது பொது வாழ்க்கையை ''அடிமைக் கூலிகள்'' எனப்பட்ட தென்னாப்பிரிக்க இந்தியத் தொழிலாளர் மத்தியில்தான் தொடங்கினார். ஆம், தோட்ட முதலாளிகளான வெள்ளையரிடம் அல்லலுற்ற இந்தியத் தொழிலாளர் களுக்கு சங்கம் அமைத்து, அவர்களுக்காகப் போராடி னார். அவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழ்த் தொழிலாளராவர். அந்தக் காலம் 1906 முதல் 1916

வரையிலுள்ள 10 ஆண்டுகள் ஆகும். ஆம்; காந்தியடிகளின் பகுத்தறிவுப் பணி அல்லது சமூக சீர்திருத்தப் பணி கடல் கடந்த நாடுகளில் வாழும் இந்தியத் தொழிலாளர்களிடமிருந்துதான் தொடங்குகிறது.

### *தமிழரிடையில்...*

அவரது "சாத்விகம்" - "சத்தியாக்கிரகம்" ஆகிய புதிய தத்துவங்களும் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைப் போராட்டத்திலேயே தோன்றி, வெற்றியும் பெற்றன. அடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய வர்க்கப் போருக்கு ஆதரவு காட்டி தேசிய காங்கிரசின் வருடாந்தர மகாசபைகளிலே தீர்மானம் நிறைவேற்றப்படுவது வழக்கமாக இருந்தது.

இந்திய தேசியத் தலைவர்களிலே சிலர் நிதி திரட்டியும் காந்தியடிகளுக்கு அனுப்பி வைத்தனர். இதன் மூலம்தான் தேசிய காங்கிரசும் தொழிலாளி வர்க்க சேவையில் பிரவேசித்தது.

### *கடல் கடந்த நாடுகளில்...*

இந்தியாவில் 6 மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுவந்த 1937 முதல் 1939 வரையுள்ள ஒரு கால கட்டத்திலே, இலங்கை - மலேசியா - சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலே தோட்ட முதலாளிகளான வெள்ளையர்களால் சுரண்டப்பட்ட - அங்கெல்லாம் இயங்கிவந்த வெள்ளையராட்சியாலும் அல்லலுற்ற - இந்தியத் தொழிலாளர்களுக்கு ஆதரவு காட்டி இந்திய

தேசிய காங்கிரஸ் தீர்மானம் போட்டதோடு, அவர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடுத்தவும் நேருஜியைத் தன் தூதுவராக அனுப்பி வைத்தது. அவர் அந்த நாடுகளிலே ''இந்தியர் காங்கிரஸ்'' என்னும் பெயரில் ஸ்தாபனங் களைத் தோற்றுவித்து, இந்தியர்கள் குறிப்பாக, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பினார்.

### *விவசாயிகளுக்கு...*

சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலே, இந்தியாவிலுள்ள உழுபவர்களுக்கும் உழுவிப்போருக்கு மிடையிலும் வர்க்க ரீதியாகப் பிரச்னை இருந்தது. ஆனால், அன்னியராட்சிக் காலமாதலால் அத்துறையில் வர்க்கப்பூசலைத் தோற்றுவிப்பதில் காங்கிரஸ் அதிக ஆர்வங்காட்டவில்லை எனலாம்.

மற்றும், உழுவிப்போரான நிலவுடைமையாளரைக் கொண்டு வரிகொடா இயக்கத்தை காங்கிரஸ் நடத்த வேண்டியிருந்தது. அதனால், விவசாயத் துறையில் வர்க்கப் போர் தொடங்க அதிக வாய்ப்பிருக்கவில்லை. ஆயினும், சுதந்திர இந்தியாவிலே உழுவிப்போரிட முள்ள விளை நிலங்கள் உழுபவர்க்கே சொந்தமாக்கப் படும் என்பதை காந்திஜியும் நேருஜியும் தெளிவாகக் கூறிவந்தனர். இதனை கொள்கை ரீதியில் பிரகடனம் செய்தது 1934-ல் நடந்த கராச்சி காங்கிரசிலேதான்!

விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலும் உழுபவர்களுக்கு நியாயமான முறையில் ஊதியமும்

உரிமைகளும் வழங்கத்தக்க சட்டங்கள் நிறைவேற்று மாறு காங்கிரசானது ஆங்கிலேயர் அரசை வற்புறுத்தி வந்தது.

காங்கிரசிலிருந்த இடதுசாரிகளான சோஷலிஷ்டு களும் கம்யூனிஸ்டுகளும் வர்க்கப் போர் என்று சொல்லத் தக்கவகையில் அங்குமிங்குமாகப் பல போராட்டங்களை யும் நடத்தியதுண்டு.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழி லாளர் நிலை வேறுவிதமாக இருந்தது. அடிமை இந்தியா வில் தொழில் வளர்ச்சி யிருக்கவில்லை. அற்ப சொற்ப அளவில் சென்னை, மதுரை, தூத்துக்குடி போன்ற தென்னக நகரங்களிலும், பம்பாய், ஆமதாபாத் போன்ற வடபுலத்து நகரங்களிலும் இயங்கிவந்த பஞ்சாலைகளும் அநேகமாக ஆங்கிலேயருக்கே சொந்தமாக இருந்து வந்தன. பெரிய பெரிய வாணிப நிறுவனங்களும் ஆங்கிலேயர் வசமே இருந்துவந்தன.

போக்குவரத்து சாதனங்களான ரெயில்வே கம்பெனிகளும் கப்பல் கம்பெனிகளும்கூட வெள்ளையர் வசமே இருந்து வந்தன.

இந்த நிலையில் இந்தியத் தொழிலாளிகளின் வர்க்க உணர்ச்சி வெள்ளை முதலாளிகளுக்கு எதிரானதாகவே இருந்து வந்தது, அதனால், இந்திய தேசிய காங்கிரஸ் தொழிற்சங்க இயக்கத்தைத் தோற்று விப்பதிலே அதிக அக்கறை காட்டியது.

தமிழ்நாட்டில் ''இந்து'' பத்திராதிபர் திரு. ஏ. அரங்கசாமி ஐயங்கார், ''தமிழ் நாடு'' பத்திராதிபர்

டாக்டர் பி. வரதராசுலு நாயுடு ஆகியோரும் தொழிற் சங்க இயக்கத் தலைவர்களாக விளங்க முடிந்தது.

சர்வதேச ரீதியில் இயங்கிவந்த பிரம்மஞான சங்கத் தலைவியான டாக்டர் அன்னிபெசன்ட்டும், அதே சங்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான ஜி. எஸ். அருண்டேலும் தொழிற்சங்க இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, வெள்ளை முதலாளிகளின் சுரண்டலை எதிர்த்துப் போராடியாக வேண்டிய சந்தர்ப்ப நிர்ப்பந்தச் சூழ்நிலை இருந்தது. ஆம்; வெள்ளை யராதிக்கத்தை எதிர்க்க தேசிய காங்கிரசானது வர்க்க உணர்ச்சியைப் பயன்படுத்தியது.

சமுதாயத்திலுள்ள சாமான்யர்களான தொழிலாளர் களிடம் இயற்கையாகவே அனுதாபமுடையவர்களான வ.உ.சிதம்பரனார், ராஜாஜி, திரு.வி. கலியாண சுந்தரனார், குத்தி கேசவப் பிள்ளை, பி.பி. வாடியா ஆகியோர் தொழிற்சங்க இயக்கத்தில் முன்னணியில் இருந்தனர்.

காந்திஜி இந்திய அரசியலில் நேரடியாக போராட்ட ரீதியில் ஈடுபட்டது 1917-ல் பீகாரிலுள்ள சம்பரான் மாவட்டத்தில் அவுரித் தோட்ட விவசாயிகள் மூலமாகத் தான். அந்த விவசாயிகள் அவுரித் தோட்ட முதலாளிக ளான வெள்ளையர்களால் மிகவும் கொடுமையாகச் சுரண்டப்பட்டு வந்தனர். அதனை எதிர்த்து அடிகள் நடத்தியதே அவரது கன்னிப்போராகும். அதிலே வெற்றி அவருக்குத்தான்!

ஆமதாபாத்திலும் 1918-ல் ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி நடத்திய போராட்டம் வெற்றிபெற காந்திஜி பாடுபட்டார். அதிலும், அவருக்குத்தான் வெற்றி!

காந்தியடிகளுக்கு முன்பே 1908-ல் தூத்துக்குடியில் வெள்ளையர் நடத்திய ஹார்வி மில் தொழிலாளர்களுக்காக சங்கம் நிறுவி அவர்களுக்கு ஊதிய உயர்வு கோரி வ.உ.சி. போராடியதும், வெள்ளை வர்த்தக முதலாளிகளால் நடத்தப்பட்ட பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குப் போட்டியாக ''சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி''யை வ.உ.சி. துவக்கியதும்தான் அவர் இரண்டு ஆயுள் தண்டனை பெறக் காரணமாயின.

மதுரையில் வெள்ளை முதலாளிகளால் நடத்தப்பட்டுவந்த ஹார்வி மில் வேலை நிறுத்தத்தில் தொழிலாளி வர்க்கத்தினருக்கு ஆதரவாகப் பேசியதற்காக ''தமிழ் நாடு'' ஆசிரியர் டாக்டர் பி. வரதராசுலு நாயுடு அவர்களுக்கு 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கில் மதுரை சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நாயுடுவுக்காக ராஜாஜி ஆஜராகி வாதாடினார். உயர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்ததில் நாயுடு விடுதலையானார்.

இந்தியாவிலேயே முதன் முதலாக ''சென்னைத் தொழிலாளர் சங்கம்'' என்னும் பெயரில் 1918-ல் தொழிற்சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் சென்னை பக்கிங்காம் - கர்னாடிக் மில்கள் சம்பந்தப் பட்ட தொழிலாளர்களுக்காகவே தோன்றியது எனலாம். இது,

காங்கிரசானது தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த ஆண்டிலேயும் அதன் செல்வாக்கில் தான் இருக்கிறது.

1920-ல் பி அண்டு சி ஆலைத் தொழிலாளர்கள் இச்சங்கத்தின் மூலம் நடத்திய வேலை நிறுத்தம் ஆறுமாத காலம் தொடர்ந்து நீடித்தது. போலீசாரின் அடக்கு முறை பேயாட்டமாடியது. ஒரே நாளில் 6 தொழிலாளர் போலீசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உயிர்ப்பலியாயினர். அந்தப் பிரேதங்கள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டபோது சென்னை நகரமே அதிர்ச்சியடைந்தது.

திரு. வி.க., வ.வே.சு. ஐயர், தோழர் சிங்காரவேல் செட்டியார், திரு. எஸ். சீனிவாச ஐயங்கார், வி.சக்கரை செட்டியார் ஆகியோர் இவ்வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தினர். இவர்கள் அவ்வளவு பேரும் அப்போது காங்கிரஸ் தலைவர்களாக இருந்தனர். ஆறு மாதம் தொடர்ந்து நடந்த பின், வேலை நிறுத்தம் தோல்வியுற்றது.

1928-ல் நாகப்பட்டினம் ரயில்வே தொழிலாளர் சம்பந்தமாகத் தொடங்கிய வேலை நிறுத்தமானது தென்னிந்திய ரயில்வே சதி வழக்கு தோன்றக் காரணமானது. அதிலே தோழர் சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார் ஆகியோர் ஆண்டுக் கணக்கில் தண்டனை பெற்றனர். திரு. பெருமாள் என்னும் தொழிலாளி ஆயுள் தட்ணனை பெற்றார்.

1920-ல் பம்பாயில் அனைத்திந்திய தொழிலாளர் மாநாடுகூடி, அதிலே "ஆல் இண்டியா டிரேட் யூனியன்

காங்கிரஸ்'' என்னும் பெயரில் முதன் முதலாக அனைத்திந்திய ரீதியில் தொழிற்சங்கமொன்று தொடங்கப்பட்டது. அது இதுவரை தொடர்ந்து ஓரளவு வலுவான அமைப்பாக நடந்து வருகிறது. இது தோன்றிய பின்னர், வேறு பல அனைத்திந்திய அமைப்புகள் தொழிலாளர்களுக்காகத் தோன்றின.

நாடு சுதந்திரம் பெற்றதும் காங்கிரசானது தன் செல்வாக்கில் இந்திய தேசியத் தொழிலாளர் காங்கிரஸ் ஐ.என்.டி.யூ.ஸி. என்னும் பெயரில் ஒரு தனி அமைப்பைத் தோற்றுவித்தது.

1922-ல் கயா நகரில் தேசபந்து தாசர் தலைமையில் கூடிய காங்கிரஸ் மகா சபையின் அ.இ.கா.க. கூட்டத்தில் இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தோடு காங்கிரசுக்குள்ள தொடர்பை மேலும் வலுப்படுத்த அறுவர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. அது பற்றிய தீர்மானத்தின்மீது தோழர் சிங்காரவேலர் விரிவாகப் பேசினார். தேச விடுதலைக்குத் தொழிலாளர் வர்க்கத்தையே காங்கிரஸ் நம்பவேண்டுமென்று வாதாடினார்.

இங்கே இந்திய தொழிற் சங்க இயக்கத்தோடு காங்கிரஸ் கொண்டிருந்த தொடர்பை விவரிப்பது நோக்கமல்ல. சமூக சீர்திருத்தத்திலே குறுகிய வகுப்புணர்ச்சிகளுக்குப் புறம்பான வர்க்க உணர்ச்சியை வளர்த்ததிலே ஒரு நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற காங்கிரசுக்குள்ள பங்கை உணர்த்துவதே யாகும்.

❖

# தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டி வளர்த்தது காங்கிரசே!

இந்திய தேசியம் பிறந்தது காங்கிரசிடமிருந்துதான் என்பதோடு, அதனை ஒரு நூற்றாண்டுக் காலமாக வளர்த்து வந்ததும் காங்கிரஸ்தான்.

## *மதவழித் தேசியம்*

காங்கிரசுக்கு முன்னர் ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் ஆகியவை தேசந் தழுவிய முறையில் பரவியிருந்தனவென்றாலும், அவை இந்துமத அமைப்புகளே.

அப்படியே, உலகந் தழுவிய முறையில் நிலவிய இஸ்லாமிய - கிறித்துவ அமைப்புக்களுக்குட்பட்டு இந்தியாவிலிருந்த இஸ்லாமியரும் கிறித்துவரும் குமரி முதல் இமயம் வரையில் ஒருமைப்பாடு உடையவர்களாக வாழ்ந்தன ரென்றாலும், அதுவும் மதவழி ஒருமைப் பாடே! இவையெல்லாம் மதவழித் தேசியங்களே யன்றி, அனைத்து மதங்களும் கலந்த மக்கள்வழித் தேசியமல்ல வென்பது மறுக்க முடியாத உண்மை யென்பதை மற்றொரு முறையும் சொல்லியாக வேண்டும்.

மக்கள் வழிப்பட்ட இந்திய தேசியம் 1885-ல் காங்கிரஸ் மூலமாகத் தோன்றிய தென்றாலும் அதனை அழிக்க பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் செய்த சதி ஒன்றல்ல; இரண்டல்ல; பலவாகும்.

மதவழிச் சிறுபான்மையினருக்கு அரசியல் - கல்வி - பொருளாதார ரீதியில் சலுகைகள் வழங்குவதன் வாயிலாக, இந்திய தேசியத்தை அழிக்க அல்லது பலவீனப்படுத்த ஆட்சி முயன்று பார்த்தது. அந்த முயற்சி களிலொன்று, வங்கப் பிரிவினை. அதனை எதிர்த்துப் போராடி தேசியம் வெற்றி கண்டது. அதாவது, 1905-ல் நடைமுறைக்கு வந்த மதவழிப்பட்ட வங்கப் பிரிவினை யானது 1911-ல் ஆட்சியாலேயே ரத்துச் செய்யப்பட்டது.

## *மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம்*

1919-ல் இரண்டு ரௌலட் சட்டங்களை இந்திய சட்டமன்றத்தில் நிறைவேற்றி தேசபக்தியை - அதாவது, தேசியத்தைக் கொன்றுவிட அரசு முயன்று பார்த்தது. காந்தியடிகள் நடத்திய ரௌலட் சட்ட எதிர்ப்பியக் கத்தால் அச்சட்டங்கள் நடைமுறைக்கு வராமல் செத்து விட்டன.

அடுத்து, 1921-ல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தத்திலே மதவழிச் சிறுபான்மையினருக்குத் தனித் தொகுதிகள் வழங்கி, அதன் மூலம் தேசியப்பண்பை - தேசபக்தி என்னும் புதுமதத்தை அன்னிய ஆட்சி அழிக்க முயன்றது.

அப்போது, மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர் திருத்தத்தைப் பகிஷ்கரித்ததன் மூலமும், கிலாபத் இயக்கத்தின் வாயிலாக இந்து முஸ்லிம்களிடையில் ஒருமைப்பாட்டை உருவாக்கியதன் மூலமும் காங்கிரஸ் மகாசபையானது இந்திய தேசியத்தையும் இந்தியரிடையில் அப்போதுதான் வளர்ந்து கொண் டிருந்த தேசபக்தியையும் காப்பாற்றியது. ஆயினும், தனித்தொகுதி முறையானது நிலைத்துவிட்டது.

1932-ல் பிரிட்டிஷ் பிரதமர் மாக்டொனால்டு அளித்த தீர்ப்பின் மூலமாக, இந்திய மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கினராக இருந்த தாழ்த்தப்பட்ட மக்களை இந்து மதத்திலிருந்து பிரித்தெடுத்துத் தனி மதமாக்கச் சதி செய்தது பிரிட்டிஷ் ஆட்சி. ஆம்; தாழ்த்தப்பட் டோருக்கும், இஸ்லாமியருக்கும் கிறித்துவருக்கும் வழங்கியது போன்ற தனித் தொகுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றது. இதனை அனுமதித் திருந்தால், இந்து மதம் பிளவுபடுத்தப்பட்டு, இந்திய தேசியமும் பலவீன மடைந்திருக்கும்.

இச்சதியை முறியடிக்க காந்தியடிகள் உண்ணா விரதத்தை மேற்கொண்டு, தாழ்த்தப்பட்டோர் தலைவர் களுடன் சமரசம் பேசி, புனா உடன்படிக்கை கண்டார். இதன் பின்னர், மாக்டொனால்டு தீர்ப்பு மரணக் குழிக்குப்போய்விட்டது.

இதனாலும், இந்திய தேசியத்திற்கு ஏற்படவிருந்த அழிவிலிருந்து அதனைத் காந்தியடிகளும் காங்கிரசும் காப்பாற்ற முடிந்தது.

சிப்பந்தி வர்க்கத்தைச் சிருஷ்டிக்கும் ஆங்கிலக் கல்வி முறையை இந்தியர் மீது திணித்து அதன் மூலமும் இந்திய தேசியப் பண்பையும் தேச பக்தியையும் அழித்து விட ஆங்கில அரசு முயன்றது.

ஆங்கிலக் கல்வி முறையைத் தனது சக்தி முழுவதையும் கொண்டு எதிர்த்தது இந்திய காங்கிரஸ். ஆம்; காந்தி சகாப்தத்திலே!

### *தேசியக் கல்வி*

ஆங்கிலக் கல்வி முறைக்கு 'அடிமைக் கல்வி முறை'' என்று மாற்றுப் பெயர் கொடுத்து அதற்கு எதிராகத் ''தேசியக் கல்வி முறை'' என்பதாகப் புதிய கல்வி முறை ஒன்றையும் மக்களுக்குத் தந்தது காங்கிரஸ். ஆங்கிலக் கல்வி முறையை அன்று ஆட்சேபிக்காதிருந் தால், படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் நடுவே இடைவெளி ஏற்பட்டிருக்கும். அதனால், பரங்கிமொழி படித்த புதிய சாதி, தேசத்துரோக சாதியாக - தேசிய விரோத குலமாக ஆகியிருக்கும்.

அதையும் எதிர்த்து, அரசாங்கக் கல்லூரிகளை விட்டு வெளியேறுமாறும், ஆங்கிலக் கல்வி முறையைப் பகிஷ்கரிக்குமாறும் மக்களுக்குக் காங்கிரசானது வேண்டுகோள் விடுத்தது. பல்லாயிரக் கணக்கில் மாணவர்களும் மாணவியர்களும் கல்லூரிகளிலிருந்து வெளியேறினர்.

அவர்களுக்காக நாட்டின் பல பகுதிகளில் தேசியக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. குஜராத், பீகார்,

உ.பி. போன்ற மாநிலங்களில் தேசியப் பல்கலைக் கழகங்களும் தோன்றின. கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் தாய்மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்ற கொள்கை பரவியது.

காங்கிரசின் - குறிப்பாக, காந்தியடிகளின் ஆங்கிலக் கல்வி முறை எதிர்ப்புக்கு நாட்டில் அதிக ஆதரவு கிடைக்கவில்லையென்றாலும், அக்கல்வி முறையின் கேடுகளை மக்கள் உணர்ந்தனர். ஆங்கில மோகம் தணிக்கை செய்யப்பட்டது. மகாகவி பாரதியாரின் கவிதைகளும் கட்டுரைகளும் ஆங்கிலக் கல்விமுறை எதிர்ப்புக்குத் துணை புரிந்தன. நாட்டு மக்களுக்குத் தாய்மொழியிடத்துப் பற்றுதல் ஏற்பட ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சி பயன்பட்டது. காங்கிரஸ் நடத்திய ஆங்கில மோக எதிர்ப்புக் கிளர்ச்சியானது நாட்டு மொழிகளிலே நாளிதழ்களும் வார - மாத இதழ்களும் தோன்றக் காரணமானது. இதனாலும், "தேசியம்" என்ற பண்பானது அழிவிலிருந்து மீட்கப்பட்டது.

## *நாட்டு மொழிகளுக்கு வாழ்வு*

நாட்டு மொழிகளில் நாடக நூல்களும் நாவல்களும் சிறு கதைகளும் எழுதும் எழுத்தாளர்கள் நாடெங்கும் தோன்றலாயினர். பேச்சு மேடைகளிலே நாட்டு மொழிகளே முதன்மை பெற்றன. இதனால், எளிய குடும்பங்களிலே பிறந்த திரு. கு. காமராசர் போன்றவர்கள் நாட்டின் தலைவர்களாகவும் முதலமைச்சர்களாகவும் வரமுடிந்தது.

சமூக சீர்திருத்தக்காரர்கள் என்று கூறிக்கொள் வோர், காங்கிரஸ் அமைப்பானது தேசியப் பண்பை வளர்த்தது ஆங்கில மோகத்தைத் தணிக்கை செய்து தாய்மொழிப்பற்றை வளர்த்தது, உண்மையான சமூக சீர்திருத்தந்தான் என்பதை உணர மறுத்து தேசியத்திற்கு எதிராகத் தாங்கள் நடத்திய வெறும் வாய்ப் பிரச்சாரந்தான் இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நடந்த மாபெரும் சமூக சீர்திருத்த இயக்கம் - அதாவது, பகுத்தறிவு இயக்கம் என்று சாதிக்கின்றனர்.

சுதந்திரப் போராட்ட காலத்திலே தேசிய ஒருமைப் பாட்டை அழியவிடாமல் காக்க காங்கிரஸ் அரும்பாடு பட்டதெனலாம்.

### *காங்கிரசின் தேசிய சாதனைகள்*

விடுதலைப் போராட்ட காலத்திலே இன்று தனது நூற்றாண்டு விழாவைக் காணும் காங்கிரசானது, தேசியத்தை - தேசபக்தியை - தேசிய ஒருமைப் பாட்டுணர்ச்சியைக் காப்பாற்ற ஆற்றிய பணிகள் வருமாறு;

- சாதி - மத - வருண - வர்க்க வேற்றுமைகளைக் கடந்த முறையில் நாடு முழுவதற்குமாக ஒரே அமைப்பை - அதாவது, இந்திய தேசிய காங்கிரசை அமைத்து, அதனைக் கட்டி வளர்த்தது.
- நாடு முழுவதற்குமான ஒரே தேசியக் கோரிக்கை யாகச் ''சுதந்திரம்'' என்னும் லட்சியத்தைப்

பிரகடனம் செய்து, அதற்கு வெற்றிதேட முயன்றது.

- இந்தியர் எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் இந்நாட்டு மக்கள்; அவர்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர் - என்னும் சமத்துவ ரீதியிலான ஒருமைப்பாட்டுணர்வினைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரப்பியது.
- பங்கிம்சந்திரர் என்னும் கவிஞர் வங்கமொழியில் பாடிய "வந்தே மாதரம்" என்று தொடங்கும் பாடலைத் தேசத்தின் கீதமாகவும், அதன் முதற் சொல்லான "வந்தே மாதரம்" என்பதனைத் தேசிய மந்திரமாகவும் காங்கிரஸ் செய்தது.
- ஆளப்படுவோர் ஒரு சாதி - அது இந்திய சாதி! ஆளுவோர் ஒரு சாதி - அது ஆங்கிலேய சாதி - அன்னியச் சாதி - என்ற உண்மையை ஒவ்வொரு இந்தியர் உள்ளத்திலும் பதியச் செய்தது.
- தேச விடுதலையை விரும்புவோரின் - குறிப்பாக, விடுதலைப் போர் வீரர்களின் - தேசிய உடையாக கதருடையைத் தேர்ந்தெடுத்து, அதை தேசபக்தி யுடையோர் அனைவரும் அணியும்படி காங்கிரஸ் செய்தது. தேசத்தைச் சுரண்டும் அன்னிய ஆடைகளை மக்கள் பகிஷ்கரிக்கும்படியும் செய்தது.
- இந்திய நிலப்பரப்பைத் தாய் வடிவில் காட்டி, அந்த வடிவத்திற்குப் "பாரத மாதா" எனப் பெயர் தந்து இந்தியா ஒரே நாடு - சேதமில்லாத இந்துஸ்தானம்

அது இந்திய மக்களின் தெய்வம் என்று மக்கள் நம்பும்படிச் செய்தும் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்த்தது. தேச பக்தியும் தெய்வ பக்தியும் ஒன்றே என்பதை உணர்த்தியது.

- தேசம் முழுவதற்கும் ஒரே கொடியாக மூவர்ணத் தேசியக் கொடியைப் படைத்து, அதை உயர்த்தி வழிபடச் செய்தது காங்கிரஸ். அப்போது பாடுவதற்காக, ''ஜண்டா ஊஞ்சா ரஹே ஹமாரா'' என்ற பாடலை அறிமுகப்படுத்தியது, அதற்கு நிகராக, ''தாயின் மணிக்கொடி பாரீர்!'' என்னும் பாடலை பாரதியார் தமிழில் படைத்துக் கொடுத்துத் தேசியமும் தமிழும் பிணைந்திருக்கச் செய்தார்.

### தேசப் பிரிவினை

தேச விடுதலைப் போராட்டத்தின்போது, தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டி வளர்க்கக் காங்கிரஸ் அரும்பாடு பாட்டதாயினும், விடுதலை பெற்ற நாளிலே காங்கிரசின் விருப்பத்திற்கு மாறாக தேசம் பிளக்கப் பட்டது.

1921-ல் முஸ்லிம்கள் விஷயத்தில் விரிவான முறையில் நடைமுறைக்கு வந்த தனித் தொகுதி முறையால், இஸ்லாமியர் தனித் தேசிய இனத்தவர் - அவர்கள் பெருவாரியாக வாழும் பிரதேசம் அவர்களுக் கேவுரிய தாயகம் என்ற உணர்வு ஏற்பட்டு, அது தேசப் பிரிவினையில் போய் முடிந்தது.

பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கத் தேதி தெரிவித்த நாளிலே இந்தியாவின் மொத்த நிலப் பரப்பு 18,098,629 சதுர மைல் ஆகும். மொத்த மக்கள் தொகை 30 கோடி ஆகும்.

இந்த நிலப்பரப்பிலே வடமேற்கில் பஞ்சாப் மாநிலத்தின் மேற்குப் பகுதி - வடமேற்கு எல்லைப்புற மாநிலம் - பலுச்சிஸ்தான் மாநிலம் - சிந்து மாநிலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "மேற்குப் பாகிஸ்தான்" எனப் பெயர் தந்தது பிரிட்டிஷ் அரசு.

இதற்குக் கிழக்கே - சரியாக ஆயிரம் கல் தொலைவிலுள்ள - வங்காளத்தின் கிழக்குப் பகுதியையும், அஸ்ஸாம் மாநிலத்தில் சற்றேறக்குறைய ஒரு மாவட்டத்தையும் ஒருங்கிணைத்துக் "கிழக்குப் பாகிஸ்தான்" எனப் பெயர் தந்தது பிரிட்டிஷ் அரசு.

இந்த மேற்குப் பாகிஸ்தான் - கிழக்குப் பாகிஸ்தான் என்ற இரண்டையும் ஒருங்கிணைத்து ஒரே பாகிஸ்தான் நாடாக்கி, அதற்குத் தனியாகச் சுதந்திரம் வழங்கி, ஜனாப் ஜின்னாவின் தலைமையில் இயங்கி முஸ்லிம் லீகிடம் அதனை ஒப்புவித்தது.

### *555 'இந்தியா'க்கள்!*

எஞ்சிய இந்தியாவும் ஒரே நாடாக்கப்படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே இந்தியா நிர்வாக ரீதியில் (ஆம்; பூகோள ரீதியில் அல்ல) இரண்டு பிரிவாக்கப் பட்டிருந்தது.

கவர்னர்களைத் தலைவர்களாகக் கொண்ட மாநிலங்கள் ''பிரிட்டிஷ் இந்தியா'' என்றும், மன்னர் களைத் தலைவர்களாகக் கொண்ட சமஸ்தானங்கள் ''சமஸ்தான இந்தியா'' என்றும் அழைக்கப்படலாயின. ஆனால், இரண்டு இந்தியாவும் டில்லியிலிருந்த - ஒரே வெள்ளையரின் மேலாதிக்கத்தில்தான் இருந்து வந்தது. அவர், பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்த நிர்வாகத்தில் ''கவர்னர் ஜெனரல்'' என்றும், சமஸ்தான இந்தியாவின் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ''வைசிராய்'' என்றும் பெயர் பெற்றிருந்தார்.

பிரிட்டிஷார் பெரிய இந்தியாவுக்கு வழங்கிய சுதந்திரத் திட்டத்திலே சமஸ்தானங்களைச் சேர்க்க வில்லை யாதலால், 1947 ஆகஸ்டுப் பதினைந்திலே ''வைசிராய்'' பதவிக்கு ஆயுள் முடிந்துவிட்டது. பிரிட்டிஷ் இந்தியா வைத்தான் காங்கிரசிடம் ஒப்பு வித்தனராதலால் 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் ''கவர்னர் ஜெனரல்'' தான் டில்லியில் இருந்தார்.

ஆகஸ்டுப் பதினைந்தில் மத்தியிலிருந்த நேருவின் இடைக்கால அமைச்சரவையிடம் பிரிட்டிஷார் ஒப் படைத்தது கவர்னர்கள் ஆளுகையிலிருந்த மாநிலங்கள் அடங்கிய இந்தியாவைத்தான். எஞ்சிய சமஸ்தானங் களை சுதந்திரமாக விட்டுவிட்டனர். அந்த சமஸ்தானங் களின் எண்ணிக்கை 554 ஆகும்.

ஆம்; பிரிட்டிஷார் வெளியேறிய நாளிலே 555 'இந்தியாக்கள்' இருந்தன. அதாவது, ஒவ்வொரு

சமஸ்தானமும் ஒவ்வொரு மன்னராட்சி நாடாகி விட்டன. அநேகமாக, பிரிட்டிஷார் இந்நாட்டில் புகுந்தபோது இருந்த நிலையில் சமஸ்தான இந்தியாவை வைத்தனர்.

## *இந்தியாவிற்குள் தீவுகள்*

இந்த சமஸ்தானங்களும் தொடர்ந்தாற்போல் ஒரே நிலப்பரப்பில் இருக்கவில்லை. இந்திய நிலப்படத்தைப் பார்த்தால் பழைய பிரிட்டிஷ் இந்தியாவுக்குள்ளே தனித்தனிப் பிரதேசங்களாக இருந்தன. கவர்னர் மாநிலங்களுக்கு மத்தியிலும் அவற்றைச் சுற்றிலும் சிதறிக் கிடந்தன.

இவற்றை அப்படியே விட்டுவைத்தால் நேரு ஆட்சியின் கீழிருந்த சுதந்திர இந்தியாவுக்கு அபாயப்படு குழிகளாக மாறிவிடலாம் என்று அஞ்ச வேண்டியிருந்தது. சுதந்திர இந்தியா என்னும் குழந்தையானது எச்சரிக்கையின்றி ஓடியாடினால், அது விழுந்து மாளக்கூடிய அபாயப்படுகுழிகளாகத்தான் பிரிட்டிஷார் சமஸ்தானங்களை விட்டுச் சென்றனர். இந்த 554 சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்க வேண்டிய பெரும் பொறுப்பு நேரு ஆட்சியின்மீது சுமந்தது.

சர்தார் படேல் சமஸ்தானத் துறைக்குப் பொறுப்பேற்றார். ஆம், நேரு ஆட்சிக்குட்பட்ட இந்தியாவில் இல்லாத பகுதிகளுக்கு ஒரு துறை. அதன் பெயர் சமஸ்தான இலாகா. அதற்கொரு அமைச்சர், அவர் பெயர் சர்தார் வல்லபபாய் படேல்!

பிரிட்டிஷார் இந்திய சமஸ்தானங்களிலே ஒவ் வொன்றையும் சுதந்திரமாக விட்டு வெளியேறியபோது, நெல்லிக்காய் மூட்டையைக் கட்டவிழ்த்து விட்டால் எப்படி காய்கள் சிதறியோடுமோ அப்படிச் சிதறிக் கிடந்தன.

அப்போது, திருவிதாங்கூர், மைசூர், ஐதராபாத், ஜெய்ப்பூர் பரோடா காஷ்மீர் ஆகியவை சற்றுப் பெரிதாகவும் வரலாற்றுச் சிறப்புடையதாகவுமிருந்த சமஸ்தானங்கள் இராணுவ பலத்துடன் விளங்கின. அதனால், சுதந்திரமாக வாழ விரும்பின. இந்திய அரசு தாக்குமானால், பிரிட்டன் தங்களுக்கு உதவி புரியுமா என்பதையும் மோப்பம் பிடித்தன. ஆனால், பிரிட்டனின் நிலை தெளிவு படுத்தப்படவில்லை. திவான் சர்.சி.பி. இராமசாமி ஐயரின் தூண்டுதலால், திருவிதாங்கூர் மன்னர் சுதந்திரப் பிரகடனம் செய்தார். சமஸ்தானாதி பதிகள் சங்கம் கூடி, தனித்து வாழச் சதி புரிந்தன.

## *ஐதராபாத்தில் போர்*

முஸ்லிம் மன்னரால் ஆளப்படுவதும் இந்துக்கள் பெரும்பாலோராக வாழ்வதுமான ஐதராபாத்திற்குத் தன்னால் உதவிபுரிய முடியுமென்பதை பாகிஸ்தான் அதிபர் ஜனாப் ஜின்னா வெளிப்படையாகவே அறிவித்வித்தார்.

முஸ்லிம் மக்கள் பெருவாரியாக வாழ்வதும் இந்து மன்னரால் ஆளப்படுவதுமான காஷ்மீரம் பாகிஸ்தானில் நிபந்தனையின்றி இணைந்துவிட வேண்டும் என்று

அதிபர் ஜின்னா ''பிரகடனம்' என்று சொல்லத் தக்க வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

நிதானத்தைக் கடைப்பிடித்து மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய சமஸ்தானங்களில் மைசூர் முக்கியமானதாகும்.

சர்தார் படேலின் பொறுப்பிலிருந்த இந்திய சமஸ்தான இலாகா, 'ஒரு சமஸ்தானத்தையும் இந்தியா வுக்கு வெளியே விட்டுவைக்கப் போவதில்லை'' என்று தெளிவாக அறிவித்தது. ஆனால், ''படைபலத்தாலன்றி, சமஸ்தான மன்னர்களுடன் பேசியே இணைப்புக்கு வழி செய்வதுதான் அரசின் கொள்கை'' என்பதும் தெளிவு படுத்தப்பட்டது.

### *காந்திஜியின் அறிவிப்பு*

காந்தியடிகள், ''இந்தியாவிலிருந்து பிரிந்து தனித்து வாழும் வகையில் சுதந்திரப் பிரகடனம் செய்ய எந்த ஒரு சமஸ்தான மன்னருக்கும் உரிமையில்லை'' என்பதைத் தெளிவுபடுத்தி அறிக்கை விட்டார். சுதந்திரப் பிரகடனம் செய்த திருவாங்கூர் சமஸ்தானத்தில் திவானுக்கு எதிராக மக்கள் ''கலகம்'' செய்தனர். அவர் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார். அதன் விளைவாக, திவான் சர்.சி.பி. பதவியைத் துறந்து சமஸ்தானத்தை விட்டே வெளியேறினார். பின்னர், திருவிதாங்கூர் மன்னர், இந்தியாவுடன் தமது சமஸ்தானத்தை இணைத்தார்.

காஷ்மீர் மீது பாகிஸ்தான் படையெடுத்தது அதைத் தன்னோடு இணைத்துக்கொள்ள! பாரதப் படையும்

காஷ்மீருக்குள் புகுந்து பாகிஸ்தானின் படை யெடுப்பை முறியடித்தது. ஆனால், இந்தியப் படை புகுவதற்கு ஏற்பட்ட காலதாமதத்தைப் பயன்படுத்திக் கொண்டு, காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் கைப்பற்றிக் கொண்டது.

ஐ.நா. தலையீட்டின் பேரில் காஷ்மீரில் பாகிஸ் தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. இதற்கு பிரிட்டனும் தூண்டுதலாக இருந்தது. ஆனால், பாகிஸ்தான் கைப்பற்றிய பகுதி ''அஸாத் காஷ்மீர்'' (சுதந்திர காஷ்மீர்) என்ற பெயரில் அதன் மேலாதிக்கத்திற்குச் சென்று விட்டது. இது, இந்தியா இழந்த பகுதியன்று. கைப்பற்ற இயலாமற்போன பகுதிதான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஐதராபாத், பாகிஸ்தானின் உதவி கிடைக்குமென்று நம்பி, இந்திய அரசுக்கு எதிராக ஆட்டம் போட்டது. அங்கு இந்திய அரசின் ஏஜண்டாக இருந்த திரு. கே.எம். முன்ஷி, அதனை இந்தியாவுடன் இணைக்க மன்னருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அது பயன்தரவில்லை.

### *ரஸாக்கர் போராட்டம்*

''ரஸாக்கர்கள்'' என்னும் பெயரில் குண்டர்கள் படையொன்றைத் திரட்டி, சமஸ்தான மக்கள் நடத்திய பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை ஒடுக்க மன்னர் நிஜாம் முயன்றார். இதனால், ''உள்நாட்டுக் கலகம்'' போன்ற நிலைமை ஏற்பட்டது.

நிலைமை மோசமாவதையறிந்து, இந்தியா ''போலீஸ் நடவடிக்கை'' என்னும் பெயரால் நடவடிக்கை எடுத்து ரஜாக்கர்களை ஒடுக்கியதோடு, இந்தியாவுடன் இணையுமாறு மன்னரை வற்புறுத்தியது. மன்னர் பணிந்து கொடுத்ததால், ஐதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைந்தது.

இப்படி, ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும் சர்தார் படேல் நேரில் சென்று மன்னர்களுடன் பேசி இணைப்புக்கு வழி செய்தார். சமஸ்தானத்துறையின் செயலாளராக இருந்த திரு.வி.பி. மேனன், அற்புதமாகப் பணி செய்து சமஸ்தானங்களை இணைப்பதிலே சர்தார் படேலுக்கு வெற்றி தேடித்தந்தார்.

இடைக்கால ஏற்பாடாக சமஸ்தான இணைப்புத் திட்டம் ஒன்றை வகுத்து அதை நடைமுறைப்படுத்தினார் சர்தார் படேல். பூகோள ஒருமைப்பாடுள்ளதாக இருந்த சிறிய சமஸ்தானங்கள் சிலவற்றை இணைத்துப் புதிதாக ராஜஸ்தான், பெப்ஸ், சௌராஷ்டிரா போன்ற புதிய ராஜ்யங்களைப் படைத்தார்.

கவர்னர் மாகாணங்களின் நடுவே சிறிய திட்டுக்கள் போன்றிருந்த குட்டி சமஸ்தானங்களை அந்த மாகாணங்களோடு படேல் ஐக்கியப்படுத்தினார். அவற்றிலொன்று தமிழ் மாகாணத்துடன் ஐக்கியப்படுத்தப்பட்ட புதுக்கோட்டை சமஸ்தானம். எதிர்ப்புக் காட்டாமல் இணைப்பு உடன்படிக்கையில் புதுக்கோட்டை அரசர் கையொப்பமிட்டார்.

சமஸ்தானங்களின் இணைப்பால் ஏற்பட்ட புதிய மாகாணங்களுக்கு அவற்றின் மன்னர்களிலொருவர் ''ராஜப் பிரமுகர்'' என்னும் பெயரால் ஆளுநர் போன்ற நிலையில் வைக்கப்பட்டார். போரின் மூலம் இணைந்த காஷ்மீர் சமஸ்தானம் விசேஷ அந்தஸ்தில் வைக்கப் பட்டது.

ஆம்; இணைப்பிற்குப் பின்னரும் அங்கு மன்னர் பதவி நீடித்ததென்றாலும் மக்கள் தலைவராக விளங்கிய ஷேக் அப்துல்லா ''பிரதமர்'' பொறுப்பில் வைக்கப்பட்டு, அவரது தலைமையில் அமைச்சரவை நிறுவப்பட்டது.

''காஷ்மீர் சிங்கம்'' என நேருஜியால் அழைக்கப் பட்ட ஷேக் அப்துல்லாதான் உண்மையில் காஷ்மீரில் ''மன்னர்'' மீது செல்வாக்குச் செலுத்தினார். அப்துல்லா, காஷ்மீருக்குப் பூரண சுயாட்சியும், அந்தச் சுயாட்சி அரசியலை வகுக்க சுயநிர்ணய உரிமையும் கோரினார். சர்தார் படேல் அதற்கு மனமார இணங்கவில்லை யென்றாலும், காஷ்மீரின் விசேஷ சூழ்நிலையைக் கருதி, காந்திஜியும் நேருஜியும் அப்துல்லாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.

அதன்பின், இந்தியாவிலுள்ள வேறு மாநிலம் எதற்கு மில்லாத வகையில் கூடுதல் அதிகாரங்களுடன் காஷ்மீர் சுயாட்சியுடைய மாநிலம் ஆனது.

சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கும் முயற்சியிலே நேருஜியின் அரசும் சர்தார் படேலின் சமஸ்தானத்துறையும் பூரண வெற்றி பெற்றன. இந்திய பூகோளப் படத்தையே மாற்றிவிட்டன.

## *மொழி வழி இன எழுச்சி*

பாரதம் சுதந்திரம் பெற்றதும் மொழிவாரி மாநிலக் கோரிக்கை வலுப்பெற்று, மாநிலந்தோறும் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆந்திர, கேரள, மகாராஷ்டிர, கர்நாடக மாநிலங்கள் அமைக்கக்கோரி, அந்தந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளே முன்னணியில் நின்று, அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு கிளர்ச்சி நடத்தின, தமிழ் மாகாணம் கோரித் தமிழ் நாடு காங்கிரஸ் முயற்சி எடுக்கவில்லை. அதனால், தமிழரசுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டு, அதன் சார்பில் தமிழகத்தில் தமிழரசு படைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் போராட்ட காலத்திலே மொழிவழி மாகாணம் அமைக்கப்படுமென உறுதிகூறி, அதற்கு முன்னோடியாக காங்கிரஸ் மாகாணங்களை மொழிவாரி திருத்தியமைக்கப்பட்டது. ஆனால், தேசம் சுதந்திரம் பெற்ற பின்னர் காங்கிரசின் மனோ நிலையில் மாறுதல் ஏற்பட்டது. மொழிவாரி பிரதேச உணர்ச்சியைக் கூட வெறுத்து, அதற்கு ''குறுகிய மாகாணப் பற்று'' எனப் பெயர் தந்தது.

''மொழிவாரி உணர்ச்சி காட்டுமிராண்டிகளின் நாகரிகம்'' என்றார் 1953-ல் சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் பொறுப்பிலிருந்த ராஜாஜி. இதனை ஐதராபாத்தில் நாணல் நகரில் நடந்த காங்கிரஸ் மகாசபையிலேயே கூறினார். ''மொழிவாரி மாகாணம் கோருவோருடன் தெருச் சண்டைக்கு நிற்கவும் தயார்''

என்று, 1955-ல் அமிர்தசரசில் கூடிய காங்கிரஸ் மகா சபையிலே நேருஜி கூறினார்.

ஆயினும், மொழிவாரி மாநிலக் கிளர்ச்சியால் காங்கிரசே பிளவுபடும் நிலை ஏற்பட்டபோது, நீதிபதி தார் தலைமையில் மொழிவாரி மாகாணப் பிரிவினைக் கமிஷனை நிறுவியது மத்திய அரசு.

அக்கமிஷன் இரண்டு ஆண்டுகளுக்குமேல் நாடு முழுவதும் சுற்றி விரிவாக விசாரணை நடத்திவிட்டு பிரிவினையின் அபாயங்களை விளக்கிவிட்டு, பிரிவினையை ஒத்திப் போடுமாறு பரிந்துரை தந்தது.

## *ஆந்திரத் தனி மாநிலம்*

அதன் பின்னும் பிரிவினை உணர்ச்சி வலுத்தது, குறிப்பாக, ஆந்திரப் *பிரிவினைக் கிளர்ச்சி* வலுத்தது. பொட்டி ஸ்ரீராமுலு என்ற தேசபக்தர் உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்தார். அதனால், ஆந்திரத்தில் மக்கள் கலகம் செய்தனர். ஆகவே 1953- அக்டோபர் 1-ல் ஆந்திரம் பிரிக்கப்படுமென நேருஜி நாடாளு மன்றத்திலே அறிவித்தார். அதன்படி ஆந்திரம் அமைக்கப்பட்டது.

இதன் பின்னும் மொழிவாரி மாநிலக் கிளர்ச்சி நீடித்தது. தமிழகத்தின் நிலை புதுமையானதாக இருந்தது. இங்கு மொழிவழி அல்லாமல் ஆரியர் - திராவிடர் என்ற நிற வழியில் பிரிவினைக் கோரிக்கை இருந்து வந்தது. தெலுங்கு - தமிழ் - மலையாளம் -

கன்னடம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்களை ஒருங்கிணைத்து, அதனை இந்தியாவிலிருந்து பிரித்தெடுத்து தனித் திராவிட நாடு அமைக்கக் கோரப்பட்டது.

இந்தக் கோரிக்கை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே எழுப்பப் பட்டதாயினும், அது ஏற்கப்படவில்லை. திராவிடத்தை மொழிவழியிலும் பிரிப்பது ஆரியர் அல்லது வடவர் ஆதிக்கத்தை வலுப்படுத்திவிடும் என்றும் வாதிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழரசுக் கழகம் தனித்து நின்று போராடியது தமிழகத்தில் தனியரசு காண!

### *பஸல் அலி கமிஷன்*

தவிர்க்க முடியாத நிலையில் 1953-ல் நீதிபதி பஸல் அலி தலைமையில் ஹிருதயநாத குன்ஸ்ரு, கே. எம். பணிக்கர் ஆகிய மூவரைக் கொண்ட கமிஷனை மத்திய அரசு அமைத்தது. அதற்கு ''ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன்'' என்று பெயர் தரப்பட்டது.

இந்தக் கமிஷன் இரண்டாண்டு காலம் நாடு முழுவதையும் சுற்றி விசாரணை நடத்திய பின்னர் பொதுவாக ராஜ்யங்கள் அனைத்தையும் மொழிவாரித் திருத்தியமைக்குமாறு பரிந்துரைத்தது. இதைத் தள்ளிப்போடுவது நல்லதல்ல என்றும் கூறியது.

ஆனால், பம்பாய் நகரின்மீது உரிமை கொண்டாடி மகாராஷ்டிர மாகாண காங்கிரசும் குஜராத் மாகாண காங்கிரசும் போராடியதால், இந்த இரண்டும் கலந்திருந்த

''பம்பாய் ராஜ்யப்'' பிரிவினையைத் தள்ளிப்போட வேண்டியதாயிற்று.

பஸல் அலி கமிஷன் அறிக்கையை மத்திய அரசு அமுல் நடத்த முனைந்தது. ''1956 நவம்பர் 1 ஆம் தேதியன்று ராஜ்யங்கள் திருத்தியமைக்கப்படும்'' என்று அறிவித்தது.

பஸல் அலி கமிஷன் ராஜ்யங்களின் எல்லைகளைத் திருத்தியமைப்பதற்கும் திட்டவட்டமாக அலோசனை களைக் கூறியிருந்தது. ஆனால், அதற்கு பல்வேறு காரணங்களால் எல்லா மாகாணங்களிலும் எதிர்ப்பு ஏற்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சென்னை நகரம் தமிழகத்துக்கே உரியதென்றும், அதன்மீது ஆந்திரம் கொண்டாடும் உரிமை நியாயமற்ற தென்றும் பஸல் அலி கமிஷன் தீர்ப்புக் கூறியது. இது, தமிழரசுக் கழகத்தின் கிளர்ச்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

## *குமரி முனை மீண்டது*

தமிழர் மிகுதியாக வாழும் தேவிகுளம் - பீர்மேடு தாலுக்காக்களைத் தமிழகத்துடன் இணைக்கக் கமிஷன் மறுத்துவிட்டது. ஆனால், திருவிதாங்கூரின் தென் பகுதியிலுள்ள தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுக்காக்களையும், கிழக்குப் பகுதியிலுள்ள செங்கோட்டைத் தாலுக்காவையும் தமிழகத்தோடு இணைத்துவிட கமிஷன் பரிந்துரை செய்தது.

பின்னர், கேரளத்திலிருந்த காங்கிரஸ் அரசு செய்த கிளர்ச்சியின் காரணமாக செங்கோட்டைத் தாலுக்காவின் மலைப்பகுதியை கேரளத்திலேயே விட்டுவைக்க தமிழ் நாட்டில் திரு. காமராசர் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் ஆட்சி இசைவு தெரிவித்தது. ஆம், கைக்கு வந்தது வாய்க்கெட்டாமற் போய்விட்டது. தேவிகுளம், பீர்மேடு தாலுக்காக்களைக் கோரி 1955 பிப்ரவரி 20-ல் தமிழ் நாடெங்கும் கடையடைப்பும் பொது வேலை நிறுத்தமும் நடைபெற்றது. அது பயன்தரவில்லை.

எல்லைக் கிளர்ச்சியானது உள்நாட்டுக் கலவரமாக உருவாகி விடுமோ என்று மத்திய அரசு அஞ்சியதென லாம். ஆனால், இந்திய தேசிய காங்கிரசானது தனது செல்வாக்கால், கிளர்ச்சிகளைச் சமாளித்து முன்கூட்டி அறிவித்திருந்தபடி, 1.11.56-இல் இந்தியா முழுவதிலும் ராஜ்யங்களை மொழிவாரி திருத்தியமைத்தது. அப்போது தமிழகத்தில்.

பின்னொரு தேதியில் பம்பாய் ராஜ்யத்தையும் 'மகாராஷ்டிரம்', 'குஜராத்' என இரு வேறு ராஜ்யங் களாகப் பிரித்தது.

இதன் முடிவில் நவபாரதம் பிறந்தது. வரலாற்றில் முன் எந்தக் காலத்திலும் இந்தியாவில் ராஜ்யங்கள் மொழிவாரி இருந்ததில்லை. நமது தமிழகமும் இதற்கு விலக்கல்ல.

இந்தச் சரித்திரங் காணாத சாதனையைப் புரிந்த காங்கிரஸ் கட்சிக்குத்தான் 1985 டிசம்பர் இறுதியில் ஒரு நூற்றாண்டு நிறைவு பெற்றது.

பஸல் அலி கமிஷன் அறிக்கைப்படி ராஜ்யங்களை மொழிவாரித் திருத்தியமைத்ததாலும் சமஸ்தானங்கள் அடையாளந்தெரியாமல் அழிந்து போயின.

ராஜ பிரமுகர்களின் - அதாவது, மாஜிமன்னர்களின் தலைமையைப் பெற்றிருந்த திருவிதாங்கூர் - கொச்சி, மைசூர், ஐதராபாத், பெப்ஸ், ராஜஸ்தான் ஆகிய ராஜ்யங்கள் மொழிவாரி மாகாணங்களிலே ஐக்கியப் படுத்தப்பட்டுவிட்டன.

''ஐதராபாத்'' என்பதாக ஒரு சமஸ்தானமே இல்லாதொழிந்தது. அதனை மொழிவாரியாகப் பிரித்து மராத்தி மொழி வழங்கும் பகுதி மகாராஷ்டிரத்திலும், கன்னட மொழி வழங்கும் பகுதி கர்நாடகத்திலும், தெலுங்கு மொழி வழங்கும் பகுதி ஆந்திரத்திலும் சேர்க்கப்பட்டு விட்டன. ஐதராபாத் நகரம் ஆந்திர ராஜ்யத்தின் தலை நகரம் ஆக்கப்பட்டது.

இப்படி, ராஜ்யங்கள் மொழிவாரி புனரமைக்கப் பட்டதால், மொழிவழி தேசிய இனங்களின் தனித் தன்மை அரசியல் சட்டதால் அங்கீகரிக்கப்பட்டது. ராஜ்யப் புனரமைப்புக் காரணமாக அரசியல் சட்டமும் பெருமளவுக்கு மாறுதலுக்குள்ளானது.

தமிழகம் தனியாக மாநிலம் ஆன நாளிலே திரு. கு. காமராசர் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''இந்திய தேசியம்'' என்பது மொழிவழி கலாசாரத் தின் ''கூட்டுச் சரக்கு'' என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

## பயங்கரச் சோதனைகள்!

இந்திய தேசிய காங்கிரசானது ஒரு நூற்றாண்டுக் காலத்திலே உள்ளும் புறமுமாக பல பயங்கரச் சோதனைகளைச் சந்தித்து, அவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து, 1985 ஆம் ஆண்டு டிசம்பரிலே நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. அது சந்தித்த சோதனைகளை சுருக்கமாகவேனும் இங்கு அறிந்து கொள்வது அவசியமாகும்.

காங்கிரஸ் தோன்றிய பின்னுள்ள முதல் இருபதாண்டுக் காலத்திலே அதிலே முன்னணியிலிருந்த சட்ட அறிஞர்கள் பலருக்கு நீதிபதி பதவிகளையும், அட்வகேட் ஜெனரல் பதவிகளையும், மற்றும் பல பொறுப்புகளையும் தந்து அவர்களுக்கிருந்த தேச விசுவாசத்தை விடவும் பிரிட்டிஷ் விசுவாசத்தையே அதிகமாக்க அரசு முயன்றது. இதனால் பெரு நாவலர்களாகத் திகழ்ந்த தேசியத் தலைவர் பலரது சேவையை காங்கிரஸ் இழக்க நேர்ந்தது ஆயினும், புதியவர்களாக அறிஞர்கள் பலர் காங்கிரசுக்கு வருகை தந்த வண்ணம் இருந்தன ராதலால், அந்த இழப்பை காங்கிரஸ் எளிதில் ஈடு செய்ய முடிந்தது.

### *சூரத்தில் ஏற்பட்ட பிளவு*

காங்கிரசானது முதன்முதலாக பிளவுபட்டது 1907-ல் குஜராத் மாநிலத்திலுள்ள சூரத் நகரில் நடந்த மகாசபையின் போது ஆகும். அந்தப் பிளவு கடுமை யானது. ஆனால், கொள்கை ரீதியானது.

1905-ல் வைசிராய் கர்ஸான் நடைமுறைப் படுத்திய வங்கப் பிரிவினை காரணமாக நாடு தழுவிய முறையில் சுதேசி இயக்கம் வீறிட்டு எழுந்தது. திலகர் பெருமானும் அவரைச் சார்ந்திருந்த சிறுபான்மையினரும் சுதேசிப் பொருள்களையே உபயோகிக்க வேண்டுமென்ற பிரசாரத்தோடு திருப்தியடைய மறுத்தனர். பிரிட்டனில் உற்பத்தியாகி இந்தியாவில் இறக்குமதியாகும் பொருட்கள் உட்பட அன்னிய நாட்டுப் பொருள்கள் அனைத்தையுமே பகிஷ்கரிக்க வேண்டுமென்று சூரத் காங்கிரசுக்கு முன்பு 1906-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையிலேயே தீர்மானம் கொடுத்தனர். அதனால், தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே வெளிப்படையாக கருத்துப் போர் மூண்டது. அந்த மகாசபைக்குத் தலைமை வகித்த பெருங்கிழவர் தாதாபாய் நௌரோஜி அவர்களின் சமரச முயற்சியினால் கல்கத்தாவிலேயே காங்கிரஸ் பிளவுபடுவது தடைப் பட்டது. அடுத்து, சூரத் காங்கிரசில் ஏற்பட்ட பிளவின் போது தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே கைகலப்பு ஏற்பட்டது. போலீசார் தலையிட்டு மகாசபைப் பந்தலை ஆக்கிரமித்துக் கொண்டு, பிரதிநிதி களை வெளியேற்றினர். அதனால், சூரத் மகா

சபையானது வரவேற்புரையோடு கலைந்து போய் விட்டது.

அதன்பின் திலகர் தலைமையில் தீவிரவாதிகள் காங்கிரசிலிருந்து வெளியேறி, ''தேசியவாதிகள் மாநாடு'' (நேஷனலிஸ்டு கான்பரன்ஸ்) என்பதாக ஒரு அமைப்பை நிறுவினர்.

மகாராஷ்டிரத்தில் செயலாளராக திலகரும், வங்காளத்தில் செயலாளராக அரவிந்தரும், சென்னை மாகாணத்தில் செயலாளராக வ.உ.சி.யும் பொறுப் பேற்றனர். பிற்காலத்தில் இந்திய தேசியக் காங்கிரசி லிருந்து எத்தனையோ கட்சிகள் கிளைத்தன. அதற்கு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது சூரத் காங்கிரசின் போது தோன்றிய ''தேசியவாதிகள் மாநாடு''

இதன் பின்னர், தொடர்ந்து பத்தாண்டுக் காலம் அசல் காங்கிரசானது மிதவாதிகளின் செல்வாக்கிலேயே இருந்தது. அதற்கு எதிராகத் தோன்றிய தேசிவாதிகள் மாநாட்டின் தலைவர்களும் தொண்டர்களும் சூரத் காங்கிரஸ் கலைந்து ஆறு திங்களுக்குள்ளாகவே அரசாங்கத்தாரால் வேட்டையாடப்பட்டனர். அரச நிந்தனை குற்றத்திற்காகத் திலகருக்கு ஆறு ஆண்டு கடுங்காவலும், அதே குற்றத்திற்காக கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாருக்கு இரண்டு ஆயுள் சிறைத் தண்டனையும் செஷன்ஸ் கோர்ட்டால் விதிக்கப்பட்டன. வங்கத்தின் தீவிரவாதியான அரவிந்தகோஷ்மீது சதிவழக்கு போடப்பட்டது. எதிர் வழக்காடி அரவிந்தர்

விடுதலை பெற்றார். ஆனால், அரசியலுக்குத் தலை முழுக்குப் போட்டு பிரெஞ்சுக் குடியரசின் ஆதிக்கத்தி லிருந்த பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்து ஆசிரமவாசியானார்.

இந்த முப்பெரும் தலைவர்களுடன் அவர்களைப் பின்பற்றியவர்களும் சிறைப்பட்டதோடு, சூரத்தில் நடந்த தேசியவாதிகள் மாநாட்டின் ஆயுள் முடிந்து போய்விட்டது. மிதவாதிகளின் கையில் சிக்கிய காங்கிரசே இயங்கி வந்தது. அதனால், காங்கிரஸ் மக்களிடையே செல்வாக்கு அற்றுப் போனது. இது, காங்கிரசுக்கு ஏற்பட்ட மற்றொரு பயங்கரச் சோதனை யாகும்.

### *காந்தியடிகளின் வருகை*

பின்னர், தென்னாப்பிரிக்காவிலிருந்த காந்தியடிகள் 1916-ல் தாயகம் திரும்பி, இந்திய தேசிய காங்கிரசிலே இணைந்தார். அனைத்துலக ஆன்மிக அமைப்பாக விளங்கிய பிரம்மஞான சங்கத்தின் தலைவியாகத் திகழ்ந்த டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையாரும் 1915-ல் காங்கிரசிலே இணைந்தார்.

காந்திஜியும் பெசண்டும் காங்கிரசிலே கலப்பதற்கு இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு திலகரும் வ.உ.சி.யும் சிறைவாழ்விலிருந்து விடுதலை பெற்றனர். பெசன்ட் அம்மையார் ''இந்திய சுயாட்சிச் சங்கம்'' என்னும் பெயரில் புதிய அமைப்பு ஒன்றை நிறுவி, ''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுயாட்சியே

இந்தியாவின் கோரிக்கை'' என்று பிரகடனம் செய்தார். திலகரும் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்திலே கலந்தார்.

1917-ல் பெசன்ட் அம்மையார் இந்திய அரசால் கைது செய்யப்பட்டு, உதகமண்டலத்தில் ஒரு பங்களாவில் விசாரணையற்ற கைதியாக காவலில் வைக்கப்பட்டார். வாடியா, டாக்டர் அருண்டேல் ஆகியோரும் அம்மையாருடன் சேர்த்து காவலில் வைக்கப்பட்டனர்.

பெசன்டம்மையார் சிறைப் பட்டதால் பாரததேசத் திலே மக்கள் கொதிப்படைந்தனர். படித்த சமுதாயத்திலே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. இதனால், மிதவாதப் பாதையிலிருந்து தீவிரவாதப் பாதைக்குத் திரும்பியாக வேண்டிய கட்டாயம் காங்கிரசுக்கு ஏற்பட்டது. சூரத் மகாசபையில் கருத்து வேற்றுமையால் காங்கிரசிலிருந்து விலகிய தீவிரவாதிகளில் பெரும் பாலோர் திரும்பவும் காங்கிரஸ் பணியிலேயே ஈடு படலாயினர். தேசிய காங்கிரஸ் புத்துயிர் பெற்றது. ஆம், மிதவாதிகளால் ஜீவனற்றுக் கிடந்த காங்கிரசானது பெசன்ட் சிறைப்பட்டதால் புதிய சக்தியைப் பெற்றது. இது, காங்கிரஸ் வெற்றிகரமாகச் சமாளித்த பயங்கரமான சோதனைகளில் ஒன்றாகும்.

### *புரட்சிகர அணிகள்*

தேசபக்தியுடைய - புரட்சி மனப்பான்மை கொண்ட இளைஞர் சமுதாயம் ஒன்று ஆயுத பலங்கொண்ட புதிய

சக்தியாக முன்னணிக்கு வந்தது. மகாராஷ்டிரம், வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலே பல்வேறு பெயர்களுடன் மறைவாகச் செயல்படும் புரட்சி ஸ்தாபனங்கள் தோன்றின.

இந்த ஸ்தாபனங்களை அழிப்பதற்கென்று நீதிபதி ரௌலட் என்ற வெள்ளையர் தலைமையில் ஒரு தனிக் குழுவை அமைத்து, அதனிடம் பரிந்துரை கேட்டது இந்திய அரசு. கமிஷன் பயங்கரப் புரட்சியை ஒடுக்கு வதற்கு இருவேறு கொடிய சட்டங்களை உருவாக்குமாறு இந்திய அரசுக்குப் பரிந்துரை தந்தது. அவை, ரௌலட் சட்டம் - 1, ரௌலட் சட்டம் - என்று பெயர் பெற்றன. இந்தச் சட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்தினால் நாட்டில் ஒரு தேச பக்தன் கூட இருக்கமாட்டான் என்று ரௌலட் கமிஷன் அபிப்பிராயம் தெரிவித்தது.

நாட்டில் வளர்ந்து கொண்டு வந்த தேசிய எழுச்சியை அகிம்சை ரீதியான விடுதலைப் புரட்சியாக மாற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காந்தியடிகள் ''ரௌலட் சட்ட எதிர்ப்பு'' என்ற பெயரில் ஒரு பேரியக்கத்தைத் தொடங்கினார்.

1919 ஏப்ரல் 6-ஆம் தேதியை ''ரௌலட் சட்டங்கள் எதிர்ப்பு'' நாளாகக் கொண்டாடுமாறு தேச மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அதிகார வர்க்கம் செய்த கெடுபிடியின் காரணமாக காந்தியடிகள் நிச்சயித்த தேதிக்கு முன்னதாகவே எதிர்ப்பு இயக்கம் தோன்றி விட்டது. அவரே கைது செய்யப்பட்டார். அதனால்,

தேசத்தில் ஏற்பட்ட கொதிப்பைக் கண்டு அரசு அஞ்சிய தால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

### *பஞ்சாப் படுகொலை*

ஏப்ரல் 13-ஆம் நாளிலே பஞ்சாப் மாநிலத்திலுள்ள அமிர்தசரஸ் நகரில் ஜாலியன்வாலாபாக் என்னும் சுற்றுப்புற மதிலுக்கு மத்தியிலுள்ள திடலிலே பொதுக் கூட்டம் நடந்தது. அதைக் கலைப்பதற்கு பஞ்சாப் ஆளுநர் சர். ஓட்வியர் என்பார் ஆணைப்படி ராணுவ தளபதி ஜெனரல் டயர் மக்கள் கூட்டத்தின்மீது பீரங்கிப் பிரயோகம் செய்தான். இதனால் நூற்றுக்கணக்கானவர் அந்த மைதானத்திலேயே கொல்லப் பட்டனர். பஞ்சாபிலே ஒரு வார காலம் ராணுவ ஆட்சி நடந்தது. இது காங்கிரசுக்கு ஏற்பட்ட மற்றொரு பயங்கரமான சோதனையாகும். அகிம்சையின் அவதாரமான காந்தியடிகளின் தலைமை அந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய காங்கிரசுக்குக் கிடைத்தில்லையானால், பாரத தேசம் முழுவதும் பயங்கரக் கிளர்ச்சியாளர்களின் கைக்குப் போய்விட்டிருக்கும்.

ஆனால் காந்தியடிகள் துணிவோடு பொறுப்பேற்று வன்முறைக் கிளர்ச்சிக்கு முற்றுப் புள்ளிவைத்து, தேசத்தை அகிம்சை வழிக்குத் திருப்பினார். ஆம்; காந்தியடிகளின் தலைமையில் வைத்த நம்பிக்கையின் காரணமாக ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்ட ரகசிய ஸ்தாபனங்கள் செயலற்றுப் போயின. அவற்றைச் சார்ந்திருந்த இளைஞர்களில் பெரும்பாலோர்

காங்கிரசிலே இணைந்தனர். இது, இந்திய தேசிய காங்கிரசுக்குக் கிடைத்த புனர்வாழ்வாகும்.

### *நிர்மாணத் திட்டம்*

பஞ்சாப் படுகொலையால் பாரத மக்களுக்கு முன் எப்போதும் இல்லாத அளவில் ஏற்பட்ட எதிர்ப்புணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு திட்டமிட்ட முறையில் கட்டுப்பாடான வழியில் தேச விடுதலைப் போரைத் தொடங்கி காந்தியடிகள் 13 அம்சங்களைக் கொண்ட ''நிர்மாணத் திட்டம்'' ஒன்றைக் கொடுத்தார். இது, இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் மாபெரும் ஸ்தாபனத்திற்கு மரணமிலாப் பெருவாழ்வு தரும் அமிழ்தமாகத் திகழ்ந்தது. தேச விடுதலையில் ஆர்வமுள்ளவரை ஆக்கரீதியிலான வழிகளில் ஈடுபடுத்த காந்தியடிகள் விரும்பினார். இதனால், பஞ்சாப் படுகொலையால் தேசத்தைச் சூழ்ந்திருந்த காரிருள் மறைந்து, பேரொளி பிறந்தது.

1914-ல் தொடங்கிய முதலாவது உலகப் பெரும் போரிலே பிரிட்டனின் தலைமையில் இயங்கிய நேச நாடுகளுக்கு 1918-ல் வெற்றி கிடைத்தது. ஜெர்மனியின் தலைமையில் இயங்கிய பகை நாடுகளுக்குப் படுதோல்வி ஏற்பட்டு விட்டது. அதனால், ஜெர்மனியுடன் சேர்ந்திருந்த துருக்கி நாட்டைப் பழிவாங்க முயன்றது பிரிட்டன். துருக்கி அரசர் முஸ்லிம் உலகத்தின் கலீபாவாக இருந்து வந்தார். அதனை ஏற்க மறுத்து முஸ்லிம் உலகத்தையே ஆத்திரத்திலாழ்த்தியது

ஆங்கிலேயரின் சாம்ராஜ்யம். இந்தியாவிலும் முஸ்லிம்கள் கொதிப்படைந்தனர். தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த கிலாபத் கிளர்ச்சியைத் தொடங்கினர். காந்தியடிகள் முஸ்லிம்களின் மத உணர்ச்சிக்கு இந்துக்களும் மதிப்புத் தரவேண்டுமென்றும், கிலாபத் இயக்கத்தை நடத்தும் பொறுப்பை காங்கிரசே ஏற்க வேண்டும் என்றும் கூறினார்.

## *இந்து - முஸ்லிம் ஒற்றுமை*

சில மாதங்கள் ''இந்து - முஸ்லீம் ஏக்ஹோ'' என்றும் ''வந்தே மாதரம்'' - ''அல்லாஹு அக்பர்'' என்றும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டுக் குரலெழுப்பினர். உலகம் முழுவதுமே இந்து - முஸ்லிம் களிடையே ஒற்றுமை உருவானது. இது, காந்தியடிகளின் தலைமையைப் பெற்றதால் தேசிய காங்கிரசுக்கு ஏற்பட்ட புதிய பலமாகும்.

துருக்கியிலே கமால் அதாதுர்க் என்பவர் புரட்சி செய்து மன்னராட்சியை வீழ்த்தி அந்நாட்டின் சர்வாதிகாரியானார். அதனால் இந்தியாவிலே கிலாபத் இயக்கம் தேவையற்றுப் போனது. ஆயினும், இந்திய விடுதலை இயக்கத்திற்கு கிலாபத் கிளர்ச்சியால் ஏற்பட்ட புதிய பலத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக் கெதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவிக்க காந்தியடிகள் முயன்றார். கிலாபத் இயக்கம் நடந்து கொண்டிருக்கும்போதே, 1920-ல் நாகபுரியில் சேலம் சி. விஜயராகவாச்சாரியார்

தலைமையில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேச விடுதலைப் போரை நடத்திச் செல்ல காந்தியடிகளை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும் என்றும் நாகபுரி மகாசபை முடிவு செய்தது.

அப்போது 35 ஆண்டுகளைக் கடந்திருந்த தேசிய காங்கிரசானது மாபெரும் வல்லரசை எதிர்த்து களம் புகும் காளையின் நிலையை அடைந்தது. இனி, காங்கிரசை அழிப்பது சாத்தியமில்லை என்ற அச்சத்தை பிரிட்டிஷ் அரசு அடைந்தது.

## *ஒத்துழையாமைப் போர்*

திட்டமிட்டபடி காந்தியடிகள் ஒத்துழையாமைப் போரை 1921-ல் தொடங்கினார். அதன் களப்பலியாக போர் தொடங்குவதற்கு முன்னதாகவே வேலூரில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவுக்காக ராஜாஜியும், அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த ஆரணி திரு. சுப்பிரமணிய ஐயரும் மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்றனர்.

தேசம் முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகள் நிரம்பி வழியும் வகையிலே தேச பக்தர்கள் சிறைப் பட்டனர். படைபலம் படைத்ததும், உலக வல்லரசு களிலே மிகப் பெரியதுமான பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்து கத்தியின்றி ரத்தமின்றி போர் நடத்த முடியும் என்ற உண்மையை காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் புலப்படுத்தினார். ஆனால், சௌரிசாரா என்னும்

ஊரில் வெறிபிடித்த கூட்டத்தார் காவல் நிலையத்தைக் கொளுத்தினர். அதன் உள்ளிருந்த காவலர் பலர் தீயில் வெந்து மாண்டனர். இந்தச் சம்பவம் காந்தியடிகளின் மனதுக்கு வேதனை தந்தது, அவர் சிறைக்கு வெளியே இருந்ததால், பர்டோலியில் காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கூட்டினார். அவரது வற்புறுத்தல் காரணமாக, ஒத்துழையாமைப் போர் நிறுத்தப் பட்டு விட்டதாக காரியக் கமிட்டி ஒரு தீர்மானத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு அறிவித்தது. இந்த அறிவிப்பானது இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திவந்த விடுதலைப் போர் யாத்திரையிலே மகத்தான ஒரு திருப்பமாகும்.

போரை நிறுத்திய பின்னர் காந்தியடிகள் மீது ''யங் இந்தியா''வில் அவர் எழுதிய அரச நிந்தனைக் கட்டுரைகளுக்காக அரசு வழக்குத் தொடுத்தது. நீதி மன்றத்திலே அவருக்கு ஆறாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. உலக உத்தமர் ஒருவரைச் சிறைக்கு அனுப்பும் நிலை தமக்கு ஏற்பட்டதற்காக வெள்ளை யரான நீதிபதி வருத்தம் தெரிவித்தார்.

காந்தியடிகள் சிறைப்பட்டதோடு, தேசிய காங்கிரசின் முன்னணித் தலைவர்கள் எல்லோரும் சிறைவாசிகளாகி விட்டனர். சுருங்கச் சொன்னால், இந்திய தேசிய காங்கிரசே சிறைப்படுத்தப்பட்டு விட்ட தெனலாம். அதன் 35 ஆண்டு கால வரலாற்றிலே இவ்வளவு பெரிய சோதனையை இப்போதுதான் அது முதன் முதலாகச் சந்தித்தது.

### *சுயராஜ்யக் கட்சி உதயம்*

காந்தியடிகள் சிறைப்பட்டிருந்த நேரத்திலே, வெளியிலிருந்த காங்கிரஸ் தலைவர்களிலே ஒரு சாரார் ஒத்துழையாமை இயக்கத்தை அடியோடு கைவிட வேண்டுமெனக் கருதினர். அவர்களில் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், பண்டித மோதிலால் நேரு ஆகியோர் முக்கியமானவர்களாவர். இவர்கள் சட்டசபைப் பிரவேசத்தை விரும்பினர்.

ராஜாஜியின் தலைமையில் மற்றொரு சாரார்'' ஒத்துழையாமையைக் கைவிடவிரும்பாதவர்களாயினர். இவர்களில் முன் சொன்ன சாரார் ''மாறுதல் வேண்டுவோர்'' என்றும் பின் சொன்னவர்கள் ''மாறுதல் வேண்டாதார்'' என்றும் பெயர் பெற்றனர். மற்றொரு சாரார் இருசாராருக்குமிடையே ஊசலாட்டம் போட்டனர்.

மாறுதல் வேண்டுவோர் 1920-ல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு - செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தப் படி அமைந்த மத்திய - மாநில சட்ட மன்றங்களிலே பிரவேசிக்க விரும்பித் தேர்தலில் ஈடுபட ''சுயராஜ்யக் கட்சி'' என்ற பெயரில் காங்கிரசுக்குள்ளேயே தனியாக பார்லிமெண்டரிக் கட்சி யொன்றை நிறுவினர்.

இந்நிலையில் காந்தியடிகள் மருத்துவக் காரணத்தினால், இரண்டரை யாண்டுக் காலச் சிறைத் தண்டனையை அனுபவித்த பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

அடிகள் விடுதலையானதும் மாறுதல் வேண்டுவோருக்கும் மாறுதல் வேண்டாதாருக்கு மிடையே

சமரசம் செய்து வைத்து, காங்கிரசை அழிவிலிருந்து காப்பாற்ற முயன்றார். இரு சாராரிடமும் பேசிய பின்னர், அவரவர்கள் வழியில் செயல்பட காங்கிரஸ் அதிகார பூர்வமாக அனுமதிக்க வழி செய்தார். ஆம்; மாறுதல் வேண்டுவோர் சட்ட மன்றங்களில் புகுந்து ஒத்துழையாமையைக் கடைப் பிடிக்கலாம்; மாறுதல் வேண்டாதோர் சட்ட மன்றங்களுக்கு வெளியேயிருந்து காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றலாம். இந்த நடுநிலை சமரசத்தால் காங்கிரஸ் காப்பாற்றப் பட்டது. ஆயினுஞ் சுயராஜ்யக் கட்சி சட்டமன்றத்திற்குள் சென்றதும் ஒத்துழையாமையிலிருந்து நழுவியது.

1928-ல் சுயராஜ்யக் கட்சி மாறுதல் வேண்டா தாரின் எதிர்ப்புக் கிடையிலும், 1926-ல் அவர்களின் தார்மிக ரீதியிலான ஒத்துழைப்போடும் தேர்தலில் புகுந்து பெருமளவு வெற்றி கண்டது. வங்காளம், பம்பாய் ஆகிய இரு மாகாணங்களிலும் மாண்டேகு - செம்ஸ்போர்டு திட்டம் ஸ்தம்பிக்கும்படி சுயராஜ்யக் கட்சியால் செய்ய முடிந்தது.

சென்னை மாகாணத்திலே 1926-ல் நடந்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் முதுகுக்கு மண்காட்டி அதனை ஆட்சியிலிருந்து வெளியேற்ற சுயராஜ்யக் கட்சியால் முடிந்தது.

1928-ல் காங்கிரசுக்கு மட்டுமின்றி, இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கே ஒரு பயங்கரமான சோதனை ஏற்பட்டது. ஆம்; 1928-ல் இந்தியாவின் அரசியல்

கோரிக்கை இதுவெனத் தெளிவாகக் கூறும்படி இந்தியத் தலைவர்களுக்கு பிரிட்டன் அறைகூவல் விட்டது. இதற்குப் பதிலளிக்க, அவ்வாண்டில் சர்வ கட்சி மாநாடு நடத்தப்பட்டது. ஆனால், முஸ்லிம் தலைவர்களில் பெரும்பாலோர் தனித் தொகுதியை நிரந்தரத் திட்டமாக காங்கிரஸ் ஏற்க வேண்டும் என்றனர், அதற்கு காங்கிரஸ் இணங்காததால், அதுவரை காங்கிரசுடன் ஒத்துழைத்து வந்த லீக், அதனுடன் பகைமை கொண்டது.

## *முஸ்லிம் லீக்கின் பகை*

முஸ்லிம் லீக்கின் தலைவர் ஜனாப் ஜின்னா, 14 அம்சத் திட்டமொன்றை வெளியிட்டு, அதிலே ஒன்றைக் கூடக் கைவிடுவது சாத்தியமில்லை என்று அறிவித்தார். தனித் தொகுதியும் மாநில சுயாட்சியும் ஜின்னாவின் திட்டங்களில் முக்கியமானவையாகும்.

லீகின் இந்தப் போக்கு காங்கிரசின் எதிர்காலத் திற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பயங்கரமான சோதனையாக அமைந்தது.

இதற்கு முன், 1924 வரை காங்கிரசில் கலந்து செயல்பட்டு வந்த கம்யூனிஸ்டுகள், அந்த ஆண்டிலே இந்தியா தழுவிய முறையில் தங்கள் முதல் மாநாட்டை கான்பூரில் நடத்தினர்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஒரு வரான தோழர் சிங்காரவேலர் கான்பூர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தேசிய காங்கிரசுக்கு தத்துவ

ரீதியில் வேறுபாடுடைய அமைப்பாக கம்யூனிஸ்டுக் கட்சி செயல்படலானது.

### *தென்னகத்தில் நீதிக்கட்சி*

தமிழ் நாட்டிலும் 1917-ல் தோன்றிய ஜஸ்டிஸ் பிராம்மணரல்லாதார் கட்சியானது, காங்கிரசுக்குக் கடுமையான சோதனையாக அமைந்தது. பிராம்மணர் - பிராமணரல்லாதார் பூசலை அக்கட்சி தோற்றுவித்தது.

சுயராஜ்யக் கட்சியின் தோற்றத்தால் ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாத சமுதாயத்திலுள்ள மேல் தளத்து மக்களிடையே ஓரளவு செல்வாக்கு இழந்ததென்றாலும், சுயராஜ்யக் கட்சி காங்கிரசிலே இரண்டறக் கலந்த பின்னர், திரும்பவும் அந்தக் கட்சி சென்னை மாகாணத்தில் ஆட்சிக்கு வரலானது.

1928-ல் லீக் மேற்கொண்ட தீவிர வகுப்புவாதப் போக்கால் தேசிய முஸ்லிம் தலைவர்களில் சிலர் காங்கிரசிலிருந்து வெளியேறினர். அவர்களில் ஷௌகத் அலி, முகமதலி (அலி சகோதரர்கள்) முக்கியமானவர் களாவர்.

சென்னை மாகாணத்திலும் அப்பட்டமான வகுப்பு வாத இயக்கமான ஜஸ்டிஸ் கட்சியால் காங்கிரசுக்கு குள்ளேயும் வகுப்புவாதம் ஊடுருவியது.

இதன் விளைவாக, பெரியார் ஈ.வே.ரா., எஸ். இராமநாதன், வி. சக்கரை செட்டியார் உள்ளிட்ட பெருந் தலைவர்கள் பலர் காங்கிரசிலிருந்து விலகி ஜஸ்டிஸ்

கட்சியின் ஆதரவாளராக மாறினர். வேறு பட்ட காரணங்களால் திரு.வி. கலியாணசுந்தரனார், வ.உ.சிதம்பரனார் இருவரும் அரசியலிலிருந்தே ஒதுங்கிக் கொண்டுவிட்டனர்.

தோழர் சிங்காரவேலர் கம்யூனிஸ்டுக் கட்சியை வளர்ப்பதற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, காங்கிரஸ் பணிகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இப்படி, தேசம் முழுவதிலும் வகுப்புவாத - வர்க்கப் பிரச்னைகள் காங்கிரசுக்கு பயங்கரச் சோதனைகளாக அமைந்தன.

இந்தச் சூழ்நிலையில் காங்கிரசுக்கு ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக காந்தியடிகள் விளங்கினார்.

## *சோஷியலிஸ்டுக் கட்சி*

இந்திய தேசிய காங்கிரசுக்குள் தோன்றிய கிளைக் கட்சிகளிலே காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி முக்கிய மானதாகும், ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆச்சாரிய நரேந்திர தேவ் அச்சுத பட்டவர்த்தன் போன்ற முதுபெரும் தலைவர்கள் அந்தக் கட்சியைத் தோற்று வித்தனர். இடது சாரிக் கொள்கையில் தமக்கிருந்த பற்றுக் காரணமாக, காந்தியடிகளுக்கு அடுத்த தலைவராக விளங்கிய ஜவகர்லால் நேருவும் இந்தப் புதிய கட்சியிடம் உள்ளூர அனுதாபம் உடையவராக இருந்தார். அதன் தோற்றத்திற்கு நேருஜியே காரணம் என்று சொல்லப் பட்டது.

1930-ல் நடைபெற் உப்பு சத்தியாக்கிரகத்திற்குப் பின்னர்தான் அந்தப் புதிய உள்கட்சி பிறந்தது. தோன்ற விருக்கும் சுதந்திர பாரதம் சோஷலிச பாரதமாகவும் அமைவதற்கு வழி வகுக்கப் போவதாக காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் கூறிக்கொண்டனர்.

மாநிலந்தோறும் கிளைக் கட்சிகள் தோற்றுவிக்கப் பட்டன - ஏன்? மாவட்டங்களிலும் கூடத் தோன்றின. ஒரு கால கட்டத்திலே இந்தப் புதிய கட்சி காங்கிரசையே ஜீரணித்துவிடக் கூடும் என்று காந்தியடிகளைச் சார்ந் திருந்த பெரும் தலைவர்களிலேயும் சிலர் நம்பினர். காந்தியடிகள் சோஷலிஸ்டுக் கட்சியை எதிர்க்கவில்லை. அதனை நல்லெண்ணத்துடனேயே நடத்தினார் என்று சொல்ல வேண்டும். ஆனால், ஆண்டுதோறும் நடைபெறும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திலேயும் இடையிடையே அவசியப்பட்டபோதெல்லாமும் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலேயும் காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் காந்திய வாதிகளோடு பலப்பரீட்சை நடத்தி வந்தனர். காந்திஜி உள்ளிட்ட காந்தியவாதிகளை புதிய கட்சியினர் ''வலது சாரித்'' தன்மையுடைய தேசிய வாதிகளாகவே கருதினர்.

### *காங்கிரஸ் கட்சி*

இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் தயாரிக்கப் பட்ட அரசியல் சீர்திருத்தப்படி, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கத்தக்க 1935 ஆம் ஆண்டு சட்டம் தயாரிக்கப்பட்டு, 1937-ல் மாநில

சட்டமன்றங்களுக்குப் பொது தேர்தல் நடத்தப் பெற்றது. இதிலே, காங்கிரஸ் போட்டியிட்டது.

1937-ல் இந்தியாவிலே ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றது, இரண்டாவது உலகப் பெரும் போர் தோன்றிய நாள்வரை - அதாவது, இரண்டரையாண்டுக் காலம் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் நீடித்தது.

அந்தக் கால கட்டத்திலே காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி முழுக்க முழுக்க காங்கிரஸ் ஆட்சிக்கு எதிர்க்கட்சிபோலவே செயல்படலானது. நாட்டின் பல பகுதிகளிலே வேலை நிறுத்தங்களை நடத்தி, சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் கூடச் சோதனைகளை ஏற்படுத்தியது. தமிழ் நாடும் இதற்கு விலக்கல்ல. அந்த நேரத்திலே காங்கிரஸ் ஆட்சியே நாடு முழுவதும் பரவலாக ஆயிரக்கணக்கான சோஷலிஸ்டுகளைச் சிறைக்குள் தள்ள வேண்டிய அவசியத்தை சோஷலிஸ்டுக் கட்சி ஏற்படுத்தியது.

### *நேதாஜி தலைவரானார்*

1924-ல் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி வெளிப் படையாகச் செயல்படத் தொடங்கிய தென்றாலும், சில ஆண்டுகளுக்குள்ளேயே - அதாவது, காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே இந்திய அரசால் தடை செய்யப்பட்டு விட்டது. அதனால், அப்பட்டமான கம்யூனிஸ்டுகளும் காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியிலே கலந்து கொண்டனர். நேருஜி கூட பல சமயங்களில்

சினங்கொண்டு தாக்குமளவுக்கு காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியினர் செயல்பட்டனர். 1937-ல் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெயரை காந்தியடிகளே பரிந்துரைத்ததால் போட்டியின்றித், தேர்வு பெற்றார், ஆனால் நேதாஜி காந்தியத்தை அடிக்கடி குறைகூறிப் பேசி அடிகளாரின் நம்பிக்கையை இழந்தார். இந்த நிலையில் 1938-ஆவது ஆண்டிலும் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு இரண்டாவது முறையாகப் போட்டியிட நேதாஜி விரும்பினார். காங்கிரஸ் சோஷலிஸ்டுகளின் பேராதரவு அவருக்குப் பின்பலமாக அமைந்தது, ஆனால், காந்தியடிகள் நேதாஜி திரும்பவும் இரண்டாவது ஆண்டிலும் தலைமைப் பதவியில் நீடிப்பதை விரும்பவில்லை. தமக்கும் நேதாஜிக்கும் அடிப்படைக் கொள்கைகளில் இடைவெளி அதிகமாக இருப்பதை உணர்ந்ததாலேயே அடிகள் அவர் தலைமைப் பதவியில் நீடிப்பதை விரும்பாதவரானார். நேதாஜி, காந்தியடிகளின் ஆதரவின்றியே - அவரைச் சார்ந்தோரின் எதிர்ப்பை முறியடித்தே - தலைவர் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று நம்பிப் போட்டியில் இறங்கினார்.

### *காந்திஜி - நேதாஜி கருத்துப் போர்*

காந்தியத்தில் அழுத்தமான பற்றுதலுடைய சர்தார் படேல், ராஜாஜி, ராஜேந்திர பிரசாத் ஆகியோர் டாக்டர் பட்டாபி சீதாராமையாவை நிறுத்தி வைத்து, அவருக்கு வாக்களிக்குமாறு காங்கிரஸ் காரர்களுக்கு ஒரு

கூட்டறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்தனர். நேதாஜி காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியில் அங்கம் வகிக்கவில்லையென்றாலும் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ள நேதாஜியை ஆதரிப்பதே வழி என்று கருதி அக்கட்சி அவருக்கு ஆதரவளித்தது. சொற்ப வாக்குகள் வித்தியாசத்தால் நேதாஜி வெற்றி பெற்றார். அது வரை தலைவர் தேர்தல் போட்டியிலே காந்திஜி தம் கருத்தை வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால் தேர்தல் முடிவு தெரிந்த பின்னர் 'பட்டாபியின் தோல்வி எனது தோல்வி' என்று நொந்த மனத்துடன் அறிக்கை வெளியிட்டார். அதுவரை நேதாஜிக்கு ஆதரவாக இருந்த காங்கிரஸ் வாதிகளிலேயும் ஒரு கணிசமான எண்ணிக் கையினர் அவருக்கு எதிராகத் திரும்பினர். காங்கிரஸ் பிளவுபட்டது.

அரிபுரா காங்கிரஸ் மகாசபையிலே நேதாஜியைப் பின்பற்றுவோருக்கும் காந்திஜியைப் பின்பற்று வோருக்கு மிடையே கடுமையான கருத்துப் போர் ஏற்பட்டது. காந்திஜியை வழிகாட்டியாகக் கொண்டு காங்கிரசை நடத்திச் செல்ல நேதாஜிக்குக் கட்டளை யிடும் தீர்மானம் ஒன்றை பண்டித கோவிந்த வல்லப பந்த் மகாசபையில் கொண்டு வர, பிரதிநிதிகளில் பெரும்பாலோரின் ஆதரவுடன் அது நிறைவேறியது. ஆயினும் காங்கிரசில் தோன்றிய கொள்கைப் போருக்கு முற்றுப்புள்ளி விழவில்லை. ''காந்திய வழியில் செல்வது காலத்திற்கு ஏற்றதல்ல'' என்று வெளிப்படையாக நேதாஜி கூறினார். அவருடைய பேச்சிலே பாசிஸக்

கொள்கை ஒளிவிட்டது. நேதாஜி சிகிச்சையின் பொருட்டு ஐரோப்பாவில் தங்கியிருந்த காலத்திலே ஜெர்மனியின் சர்வாதிகாரியான இட்லரையும் இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினியையும் சந்தித்துப் பேசினார். அவர்களிடம் தமக்குள்ள நல்லெண்ணத்தையும் பல சந்தர்ப்பங்களிலே நேதாஜி வெளிப்படுத்தியது உண்டு. அதற்கு முக்கியமான காரணம், அரசியல் கொள்கையை விடவும், அந்த இரு சர்வாதிகாரிகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிரிகள் என்பதுதான்.

ஜவகர்லால் நேரு தமக்குள்ள இடதுசாரி மனப்பான்மை காரணமாக காந்திக்கும் நேதாஜிக்குமிடையே ஊசலாடினார். அவர்களிடையில் சமரசம் செய்து வைக்க முயன்று தோல்வியுற்றார். அரிபுரா காங்கிரசையடுத்து கல்கத்தா நகரில் காங்கிரஸ் கூட்டமானது காங்கிரசுக்கு மிகப் பெரிய சோதனையாக அமைந்தது. அந்தக் கூட்டத்திலே காந்தியடிகளும் சர்தார் படேலும் கலந்து கொள்ளவில்லை. ராஜாஜி, ராஜன்பாபு, ஆசாத், கோவிந்த வல்லப பந்த் ஆகிய காந்தி பக்தர்கள் கலந்து கொண்டனர். நேதாஜியின் தலைமையை ஓட்டைப் படகுடன் ஒப்பிட்டு அதனை நம்பாதீர் என்றார் ராஜாஜி. கல்கத்தா அ.இ.கா.க. கூட்டத்திலே கோவிந்த வல்லப பந்த் காந்திஜியின் தலைமையில் நம்பிக்கை தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்திற்கு ஆதரவு கிடைத்தது. அதன் எதிரொலியாக நேதாஜி காங்கிரஸ் தலைமைப் பதவியைப் துறந்தார்.

### *பார்வர்ட் பிளாக் பிறந்தது*

காங்கிரஸ் மகாசபை, தனக்கு ஏற்பட்ட சோதனையை கல்கத்தாவில் நடந்த அ.இ.கா.க. கூட்டத்திலே ஓரளவு சமாளித்தது என்றாலும், அதற்கு முற்றுப்புள்ளி விழவில்லை. காங்கிரஸ் தலைமைப் பதவியைத் துறந்த நேதாஜி ''பார்வர்டு பிளாக்'' (முற்போக்குக் கட்சி) என்னும் பெயரில் புதிய கட்சி ஒன்றைத் துவக்கினார். காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியும் நேதாஜியின் கட்சிக்குத் துணை நின்றது. நேதாஜி நாடு முழுவதையும் சுற்றி காங்கிரசுக்கு எதிராகப் பிரசாரப் போர் நடத்தினார். காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தில் அடங்கிய மதுவிலக்குக் கொள்கைகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்பதை நேதாஜி வெளிப்படையாகக் கூறினார். அகிம்சையையும் கொஞ்சம் அசைத்துப் பார்க்க முயன்றார். காங்கிரசின் கொள்கைகளில் நம்பிக்கையிழந்து கட்சிக் கட்டுப்பாடுகளை மீறிய வகையில் செயல்படுவதற்காக காங்கிரஸ் காரியக் கமிட்டி நேதாஜியை தன்னிலிருந்து விலக்கி வைத்தது. இது வங்க மாநிலத்திற்கே விட்ட அறைகூவலாகி விட்டது. வங்க மாநில காங்கிரஸ் காரர்களிலே மிகப் பெரும்பாலோர் நேதாஜியையே சார்ந்து நின்றனர். வங்க மாகாண காங்கிரஸ் கமிட்டியே நேதாஜியின் கைப்பிடியில் சிக்கிவிட்டது. அதனால் திரு. ஜே. எம். சென்குப்தா போன்றவர்களைக் கொண்டு புதிய மாகாணக் கமிட்டியைத் தோற்றுவிக்க வேண்டிய தாயிற்று.

இந்த நிலையில் 1939-ல் இரண்டாவது உலகப் பெரும் போர் மூண்டது. அந்தச் செய்தி வெளியான நாளிலே நேதாஜி சென்னையில் இருந்தார். பிரிட்டனுக்கு எதிராக ஜெர்மனி - இத்தலி - ஜப்பான் ஆகிய நாடுகளைக் கொண்டு அமைந்துள்ள அணியை இந்திய தேசிய காங்கிரஸ் ஆதரிக்க வேண்டும் என்று சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் நேதாஜி பேசினார்.

போர்க் காலத்தில் காங்கிரஸ் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசிக்கக் காரியக் கமிட்டியின் அவசரக் கூட்டம் பம்பாயில் நடத்தப் பெற்றது. அதற்கு நேதாஜியும் அழைக்கப்பட்டார். காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் சிலரும் விசேஷ அழைப்பின் பேரில் கலந்து கொண்டனர். ஆனால், கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

❖

# தேசந்தழுவிய ஒரே தேசிய அமைப்பு

இந்திய தேசிய காங்கிரசானது, கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திலே, தனது தேசியப் பண்புக்குக் களங்கம் நேராத வகையிலே, குறுகிய வகுப்புவாத அமைப்புகளோடும் தோழமை கொண்டதுண்டு - குறிப்பாக, விடுதலைப் போராட்ட காலத்திலே, நாட்டிலுள்ள அனைத்துச் சக்திகளின் ஆதரவைப் பெற விரும்பியதன் காரணமாக வகுப்புவாத அமைப்புகளோடு தோழமை கொள்ள முயன்று வந்துள்ளது. இதிலே சில நேரங்களில் வெற்றியையும், பல நேரங்களில் தோல்வி யையும் காங்கிரஸ் கண்டதுண்டு.

## *உண்மைத் தேசியம்*

''தேசியம்'' என்பதன் பொருள் தேசத்தில் உள்ள அனைத்தையும் தழுவியது என்பதாகும். இதனால் சாதி சமய - வர்க்கப்பிரிவுகளின் அமைப்புகளிடமிருந்து ஒதுங்கி நிற்பதோ, அவற்றை ஒதுக்கிவைப்பதோ ''உண்மையான தேசியம்'' ஆகாது என்பதனை விடுதலைப் போராட்ட காலத்திலே காங்கிரஸ் உணர்ந் திருந்தது. தேசத்திற்கு விடுதலை தேடுவதே அதன் பிரதான குறிக்கோளாக இருந்த காலத்திலே சந்தர்ப்ப

நிர்ப்பந்தத்தால் அதற்குத் துணை புரியும் எந்த ஒரு அமைப்பையும் அது புறக்கணிப்பதற் கில்லையல்லவா!

இஸ்லாமிய சமயத்தவரின் அமைப்பாகிய முஸ்லிம் லீ கோடும், பழைய பெரிய வங்கத்திலும் பழைய பெரிய பாஞ்சாலத்திலும் லீகுக்குப் புறம்பாக இயங்கி வந்த வேறு இஸ்லாமிய அமைப்புகளோடும் காங்கிரஸ் தொடர்பு கொண்டது.

எல்லைப்புற மாகாணத்தில் இஸ்லாமியரையே கொண்டு கான் அப்துல் கபார்கானால் நடத்தப்பட்ட குதாய் கித்மத்கர் என்னும் அமைப்போடும் காங்கிரஸ் தொடர்பு கொண்டிருந்தது. எல்லைப்புறத்தில் அது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ராணுவத்திற்கு போட்டி ராணுவமாகவே செயல்பட்டு வந்தது. இந்தியாவின் ஒரு மைப்பாட்டிற்குட்பட்ட ''பட்டாணிஸ்தான்'' அமைப்பது இதன் குறிக்கோளாக இருந்தது. அதனால், இதன் தலைவரான கான் அப்துல் கபார்கான், ''எல்லைக் காந்தி'' என்றே இந்திய மக்களால் அழைக்கப்பட்டார். அவர் காந்தியத்தில் அழுத்தமான பற்றுக் கொண்டவர். காங்கிரசின் நூற்றாண்டு விழா கொண்டாப்படும் நேரத்திலும் அவர் 95 வயதுள்ளவராக வாழ்ந்து வருகிறார். வகுப்புவாத ரீதியில் இயங்கி வந்த முஸ்லிம் லீகோடு காங்கிரஸ் பல நேரங்களிலே உடன்படிக்கைகளும் கண்டதுண்டு.

### *காந்திஜி - ஜின்னா சமரசம்*

பாகிஸ்தான் கோரிக்கையை லீக் எழுப்பிய பின்னரும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடற்ற

வகையிலே அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு அதன் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்களோடு காந்தியடிகள் சமரசம் பேசியதுண்டு. ஆனால், லீக்தான் முஸ்லிம்களின் ஒரே ஸ்தாபனம் என்றும், காங்கிரசானது இந்துக்களின் ஸ்தாபனம் என்றும் காந்தியடிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று ஜனாப் ஜின்னா வற்புறுத்தியபோது அதனை ஏற்க அடிகள் மறுத்துவிட்டார்.

வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்களின் தோழமையைக் காத்துக் கொள்வதற்காகக் கூட காங்கிரசானது தேசியப் பண்பை விட்டுக் கொடுத்ததில்லையென்பதற்கு இது மிகச் சிறந்த சான்றாகும். ஆனால், தேசம் விடுதலை பெறவிருந்த நேரத்திலே லீகின் பிரிவினைக் கோரிக்கையை தேசிய காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. இது, காங்கிரஸ் - லீக் உடன்படிக்கையின் பேரில் அல்ல. பிரிட்டிஷ் அரசுக்கும் இந்திய தேசிய காங்கிரசுக்கும் ஏற்பட்ட உடன் படிக்கையின் பேரில்தான். இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் பிரிட்டனிலிருந்து விடுவிப்பதற்காகத் தேசத்தைப் பிளக்கின்ற தவறை காங்கிரஸ் ஏற்க வேண்டியதாயிற்று. ஆனால், இந்தியாவை இரண்டாகத் துண்டுபடுத்தி, ஒன்றுக்கு ''பாகிஸ்தான்'' என்றும் மற்றொன்றுக்கு ''இந்துஸ்தான்'' என்றும் பெயர் வைக்க வேண்டும் என்று லீக் கோரியது.

அதனை ஏற்க மறுத்து, பாகிஸ்தான் நீங்கிய எஞ்சிய பிரதேசத்தை ''இந்தியா'' என்றே அறவித்து, அதிலே சமயச்சார்பற்ற அரசை காங்கிரஸ் பிரகடனம் செய்தது.

இதுவும் காங்கிரசானது எந்தக் காலத்திலும் - எதை முன்னிட்டும் தேசியப் பண்பை விட்டுக் கொடுத்து வகுப்புவாத சக்திகளிடம் சரணடைந்ததில்லை என்பதைப் புலப்படுத்தும்.

பிரிட்டிஷாரின் முயற்சியால் பாகிஸ்தான் அமைக்கப்பட்டதும் இந்து மகாசபை போன்ற வகுப்புவாத அமைப்புகள் எஞ்சிய இந்தியாவுக்கு ''இந்துஸ்தான்'' என மதவழிப்பட்ட பெயரை வைக்குமாறு கோரிக்கை விடுத்தன. அதனையும் ஏற்க மறுத்தது இந்திய தேசிய காங்கிரஸ்.

### *புதிய அரசமைப்புச் சட்டம்*

1950 சனவரி 26-ல் அரசியல் நிர்ணய மன்றத்தால் பிரகடனம் செய்யப்பட்டு, சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்திலேயும் தொடக்கத்திலுள்ள பூர்வ பீடிகையில் ''இந்தியா - அதாவது, பாரதம் சமயச் சார்பற்ற நாடு'' என்பதை உலகறியப் பிரகடனம் செய்யத் தூண்டியது தேசிய காங்கிரஸ்.

இப்படி, ஒரு நூற்றாண்டு காலம் தேசியப் பண்பைக் காத்து வந்த மகத்தான ஒரு அமைப்புக்குத் தான் இன்று ''இந்திரா காங்கிரஸ்'' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

விடுதலைப் போராட்ட காலத்திலே இந்து மகாசபை, சீக்கியர் சங்கம் போன்ற அமைப்புகளின்

ஒத்துழைப்பையும் காங்கிரஸ் பெற்றதுண்டு. ஆம்; தனது தேசியப் பண்பை இழக்காமலே!

விடுதலைப் போரின் தொடக்க காலத்திலே பயங்கரப் புரட்சியில் ஈடுபட்டு, ஆயுள் தண்டனை பெற்று அந்தமான் சிறையில் பல ஆண்டுக் காலம் அடைக்கப்பட்டிருந்த சகோதரர் இருவரில் ஒருவரான வீரசவர்க்கார் இந்து மகாசபையின் தலைவராக இருந்திருக்கிறார். காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்த மதன் மோகன் மாளவியாவும் இந்து மகாசபைக்கும் தலைவராக இருந்ததுண்டு. டாக்டர் மூஞ்சே, எம்.எஸ். ஆனே போன்ற காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினர்களாக இருந்த தேசியத் தலைவர்களும் இந்து மகா சபையை வளர்த்தது உண்டு. இதுபோல, நாட்டிலுள்ள நிலப்பிரபுத்துவ - தொழில் முதலாளித்துவ - வர்த்தக முதலாளித்துவ சக்திகளால் இயக்கப்பட்டு வந்த வர்க்க அமைப்புக்களின் ஒத்துழைப்பைப் பெறவும் தொடக்க காலத்திலிருந்து பாரதம் விடுதலை பெறுகின்ற காலம்வரை காங்கிரஸ் முயன்று கொண்டிருந்தது.

இதனாலும் அதன் தேசியப் பண்பு கொஞ்சமும் பழுதுபட்டதில்லை. ''பணக்கார வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு மிடையே கடுமையான ஒரு வர்க்கப் போர் நிகழ்ந்தாலன்றி, வெள்ளையன் வெளியேறிய பின்னும் நவபாரதத்தைப் படைக்க முடியாது'' என்பதில் நம்பிக்கையுடையவர்கள் கம்யூனிஸ்டுகள் - சோஷலிஸ்டுகள் என்று

சொல்லப்படும் இடதுசாரிகள். அவர்களால் நடத்தப் பட்ட சோஷலிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய அமைப்புகளோடும் காங்கிரஸ் தோழமை கொள்ளத் தவறவில்லை. இன்னும் சொன்னால், அந்த இடதுசாரி அமைப்புகளை தேசம் விடுதலை பெறும் வரை தன் உட்கிளைகளாகவே காங்கிரஸ் கொண்டிருந்ததை உலகம் அறியும்.

### *படுகொலைகள்*

தமது மூச்சு முடியும் போதும், *'ஹே ராம்'* என்று ராம நாமத்தைச் சொல்லிய காந்தியடிகளை வழிகாட்டியாகக் கொண்டிருந்த காலத்திலேயும் தெய்வ நம்பிக்கையற்ற நாத்திகர்களும் காங்கிரசிலே கலந்திருந்தனர் என்பதை முன்பே அறிந்தோம்.

காங்கிரசானது தனக்கேயுரிய தேசியப் பண்பை யொட்டி வகுப்புவாத அமைப்புகளோடு தோழமை கொண்டிருந்ததென்றாலும், அவற்றால் பயங்கரமான விளைவுகளையும் அது சந்தித்ததுண்டு. காங்கிரசின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய டில்லிவாசியான சுவாமி சிரத்தானந்தர் மதவெறி பிடித்த ஒரு முஸ்லிமால் கொல்லப்பட்டார். காந்தியடிகளும் மதவெறிபிடித்த ஒரு இந்துவால் தேசம் சுதந்திரம் பெற்று ஆறு திங்கள் முடிவதற்குள் பாரதத்தின் தலைநகரிலே சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப் போராட்ட காலத்திலே வடபாரதத்தில் வகுப்பு வாத அமைப்புகளால் தோற்றுவிக்கப்பட்ட வகுப்புக் கலவரங்களுக்குக் கணக்கேயில்லை.

நாடு விடுதலை பெறவிருந்த நேரத்திலே கூட வங்க மாகாணத்திலே நவகாளி என்னும் பெயருடைய மாவட்டத்திலே, அந்த மாநிலத்தில் இயங்கிய வகுப்புவாத அரசின் துணையோடு பயங்கரமான வகுப்புக் கலவரம் ஏற்பட்டது. தேசத்தையே நடுங்க வைத்த அந்தக் கலவரத்தை அடக்கி இந்து - முஸ்லிம் களிடையே அமைதியை ஏற்படுத்த காந்தியடிகள் அங்கு யாத்திரை செய்ய வேண்டிய தாயிற்று. இப்படிப்பட்ட பயங்கரமான வகுப்புக் கலவரங்கள் நாட்டிலே தோன்றிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் இந்திய தேசிய காங்கிரசானது வகுப்பு வாதத்திற்கு அப்பாற்பட்ட தேசியப் பண்பில் காலூன்றி நின்று செயல்பட்டு வந்தது.

சமீப சில ஆண்டுகளாக பஞ்சாபிகளான சீக்கியர் சிலரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள ''காலிஸ்தான்'' பிரிவினைக் கிளர்ச்சி காரணமாக பிரதமர் இந்திரா காந்தி மதவெறி பிடித்த சீக்கயரால் கொல்லப்பட்டது உலகறிந்ததாகும். இந்த நேரத்திலே கூட, புதிதாகப் பிரதமர் பதவியை ஏற்ற ராஜீவ் காந்தி, இந்து - சீக்கிய மக்களிடையே உறவை வளர்க்க அரும்பாடு பட்டார். சீக்கிய மதக் கட்சியான அகாலி தளத்தின் தலைவர் திரு. லோங்கோவாலுடன் நேருக்கு நேர் சமரசம் பேசி உடன்படிக்கை செய்தார். இந்தச் சாதனையாலும் காங்கிரசானது ஆட்சிக்கு வந்த பின்னும் அதிகார பலத்தை நம்புவதைவிட தனக்கேயுரிய தேசியப் பண்பையே அதிகமாக நம்பி வருகிறது என்பதை அறியலாம்.

மதவாதத்தினும் குறுகியதான சாதிவாத அமைப்பு களோடும் விடுதலைப் போராட்ட காலத்திலேயும் அதற்குப் பின்னும் தோழமை கொள்ள காங்கிரஸ் முயன்று வந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கு தான் ஆற்ற வேண்டிய கடமை காரணமாக பிறப்பு வழிப்பட்ட சாதியவாதக் கட்சியான ''தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்'' என்னும் அமைப்போடும் காங்கிரஸ் தோழமை கொண்டது உண்டு. இதற்கு 1934-ல் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் அமைப்புத் தலைவரான டாக்டர் அம்பேத்கருடன் சமரசம் பேசி ''புனா உடன்படிக்கை'' கண்டதே சிறந்த சான்றாகும்.

தேசிய காங்கிரசானது குறுகிய சாதியவாதத்தையும் மதவாதத்தையும் மாநிலவாதத்தையும் மனமார விரும்பி ஏற்கவில்லையென்றாலும், அந்தக் குறுகிய வட்டங்களி லேயும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையும், அவற்றைத் தீர்த்தாக வேண்டிய கடமை தனக்கு உண்டு என்பதையும், சுதந்திரப் போராட்ட காலத்திலும் சரி; சுதந்திரம் பெற்றபின்னும் சரி, காங்கிரஸ் மறந்ததே இல்லை.

இந்தியாவில் மொழிவாரி இனவுணர்ச்சிகள் இருந்து வருகின்றன என்பதையும் இந்திய தேசிய காங்கிரஸ் எந்த நாளிலும் மறந்ததேயில்லை. உண்மையைச் சொல்வதானால், இனவழி தேசியத்தை அங்கங்களாகக் கொண்டே இந்திய தேசியம் வளரவேண்டும் என்பதனை தான் தோன்றிய காலத்திலிருந்தே காங்கிரஸ் உணர்ந்து வந்திருக்கிறது. காங்கிரஸ் அமைப்பின் மாகாணங்களை

மொழிவாரி பிரதேச ரீதியில்தான் அமைத்தனர் தேசியத் தலைவர்கள். சுதந்திர இந்தியாவிலும் ராஜ்யங்களை மொழி அடிப்படையில் திருத்தியமைத்து மொழிவழி தேசிய இனங்களைத் திருப்திப்படுத்த காங்கிரஸ் தவறியதேயில்லை. இந்திய தேசியப் பண்புக்கும் தேசிய ஒருமைப் பாட்டிற்கும் ஒத்த வகையில் மொழிவழி மாநில உணர்ச்சியோடு காங்கிரஸ் உறவு கொண்டே வந்திருக்கிறது. இனியும் அந்த உயர் நெறியை அது கைவிடாது என்று நம்பலாம்.

இந்திய நாடு திட்டமிட்ட முறையில் முன்னேறுவ தற்கு முன் எந்தக் காலத்திலுமே வாய்ப்புப் பெற்ற தில்லை. கலாசார ரீதியில் இந்தியா வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே ஒரே நாடாக இருந்து வருகிற தென்றாலும், அரசியல் ரீதியிலான ஒருமைப்பாடு முன் எந்தக் காலத்திலுமே உருவானதில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே குமரி முதல் இமயம் வரை ஒரே ஆட்சி உருவாக்கப்பட்ட தென்றாலும் ஆளும் சாதியான ஆங்கிலேயரின் நன்மைக்காகவே அந்த ''அற்புதம்'' நிகழ்ந்ததன்றி, இந்திய சமுதாயத்தினரின் நன்மைக்காக அல்ல. இந்தியாவின் ஆயிரமாயிரம் ஆண்டுக்கால வரலாற்றிலே முழுக்க முழுக்க இந்திய சமுதாயத்தினரின் நன்மைக்காகவே குமரி முதல் காஷ்மீரம் வரையுள்ள நிலப்பரப்பிலே ஒரே அரசாங்கத்தை - மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்தை நிறுவத்தக்க அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பெருமை இந்திய தேசிய காங்கிரசுக்கே உரியதாகும்.

இந்திய நாடு திட்டமிட்ட முறையில் முன்னேறுவதற்கு முன் எந்தக் காலத்திலுமே வாய்ப்புப் பெற்றதில்லை. கலாசார ரீதியில் இந்தியா வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே ஒரே நாடாக இருந்துவருகிறதென்றாலும், அரசியல் ரீதியிலான ஒருமைப்பாடு முன் எந்தக் காலத்திலுமே உருவானதில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே குமரி முதல் இமயம் வரை ஒரே ஆட்சி உருவாக்கப்பட்ட தென்றாலும் ஆளும் சாதியான ஆங்கிலேயரின் நன்மைக்காகவே அந்த 'அற்புதம்' நிகழ்ந்ததன்றி, இந்திய சமுதாயத்தினரின் நன்மைக்காக அல்ல. இந்தியாவின் ஆயிரமாயிரம் ஆண்டுக்கால வரலாற்றிலே முழுக்க முழுக்க இந்திய சமுதாயத்தினரின் நன்மைக்காகவே குமரிமுதல் காஷ்மீரம் வரையுள்ள நிலப்பரப்பிலே ஒரே அரசாங்கத்தை - மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்தை நிறுவத்தக்க அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பெருமை இந்திய தேசிய காங்கிரசுக்கே உரியதாகும்.

நலிந்த பிரிவுகளையும் பின்தங்கி விட்ட பிரதேசங்களையும் கைதூக்கி விடத்தக்க வகையிலே ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்த பெருமையும் இந்திய தேசிய காங்கிரசுக்கு உண்டு. அதன்படி, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் காலத்திலே இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது நிறைவு பெறுகிறது.

''வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது'' என்று சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தோன்றிய பிரிவினை வாதம் குரலெழுப்பியது உண்டு. அதிலுள்ள

உண்மையை இந்திய தேசியம் அன்றும் மறுத்த தில்லை; இன்றும் மறுக்கவில்லை. இந்த நாட்டைச் சுரண்டி வந்த ஆங்கிலேயர் இழைத்த அநீதிகளிலே வடக்கை வாழவைத்ததும் தெற்கைத் தேயவைத்ததும் ஒன்றாகும். வியப்பென்னவென்றால், இந்தக் குரலை எழுப்பியவர்கள் நான் சொல்லும் உண்மையை உணராமல் இருந்ததாகும்.

தேசம் அடிமைப்பட்டிருந்த காலத்திலே வடக்கு வாழ்ந்ததற்கும் தெற்கு தேய்ந்ததற்கும் எந்த பிரிட்டிஷ் ஆட்சி காரணமோ அந்த ஆட்சியை வெளியேற்ற தேசிய காங்கிரஸ் துடித்தது, எதற்காக? வடக்கோடு தெற்கும் கிழக்கோடு மேற்கும் சமநிலையில் வளரவும் வாழவும் வாய்ப்பு ஏற்பட வேண்டு மென்பதற்காகத்தான். அந்த வாய்ப்பு, தொடர்ந்து நடைமுறைக்கு வந்த ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்பட்டு வந்திருக்கிறது. வடக்கோடு சேர்ந்து தெற்கும் சமநிலையில் வாழ்ந்து வருவதை விவரிக்க வேண்டுமானால், அது ஒரு தனி நூலாக அமையும்.

வெள்ளையர் வெளியேறி விட்டால் திரும்பவும் வேத காலத்திலிருந்த ''வருணாசிரமக் கொடுமைகள்'' வாழ்வு பெற்றுவிடும் - என்ற வாதத்தை எழுப்பி, சுதந்திரப் போராட்டத்திற்குத் தடையாக இருந்தவர்களும் உண்டு. ஆனால், இன்று நாம் காண்பதென்ன? யாரை ''வருணாசிரமிகள்'' என்று சீர்திருத்தவாதிகள் சொன்னார் களோ, அவர்கள் சுதந்திரம் பெற்ற இந்தியத் தமிழகத்தி லே ஆட்சிக்கு வர வாய்ப்பு பெறவில்லை. வரலாற்றில்

முன் எந்தக் காலத்திலும் இல்லாதபடி 21 வயதைக் கடந்தவர்களுக்கு சுதந்திர இந்தியாவில் வாக்குரிமை கிடைத்து விட்டதால், எந்த ஒரு வருணத்தாரும் தனித்து நின்று ஆட்சியைக் கைப்பற்ற சந்தர்ப்பமே யில்லை. இன்னொரு வகையில் சொல்வதானால், காலமெல்லாம் வருணாசிரமத்தை எதிர்த்தவர்களே தொடர்ந்து 18 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

இது, வருணாசிரம அரசியலுக்கு இந்திய தேசிய ஜனநாயக அரசியல் வைத்த முற்றுப் புள்ளியாகும்.

❖

# இந்திய விடுதலைப் போரில் மொழிவழிச் சிறுபான்மையினர்

1885 முதல் 1985 வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்திலே இந்திய தேசிய எழுச்சியானது, அலைகடல் போல் பொங்கி எழுந்து, இமயம் முதல் குமரிவரை வெள்ளப் பெருக்கெடுத்தோடியது, மத வேறு பாடுகள் மறைந்தன. அதுபோல, மொழி வேறுபாடும் தணிக்கைக் குட்பட்டது. ''எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்று பாரதி பாடினாரே, இது நடைமுறையில் இருந்தது.

இந்திய தேசிய நீரோட்டத்திலே தமிழகத்தையும் ஈடுபடுத்திய பெருமையிலே தமிழர் மத்தியில் வாழ்ந்த மொழிவழிச் சிறுபான்மையினருக்கும் பெரும் பங்கு உண்டு என்று சொல்ல வேண்டும். கர்நாடகம், கேரளம், ஆந்திரம், வடபுலம் ஆகிய அயல் மாநிலங் களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் தமிழகத்தில் குடியமர்ந்தவர்கள் எல்லாம் தேசவிடுதலை இயக்கத்தி லே தமிழரோடு தமிழராகக் கலந்தனர். அவர்களிலே சிலர் பழங்குடித் தமிழரையும் விஞ்சும் வகையில் சிறப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கினர்.

### அடக்குமுறைக்கு அஞ்சாது நின்றனர்

காங்கிரசின் ஒரு நூற்றாண்டுக் கால வரலாற்றிலே முதல் அறுபது ஆண்டுக்காலம் காங்கிரஸ்காரர்கள் அனுபவித்தது ஏகாதிபத்தியக் கொடுங்கோலரின் அடக்கு முறைகளைத்தான்! ஆகவே, அந்த அடக்குமுறைக் கொடுமைகளை அனுபவிப்பதில் தமிழகத்திலே வாழ்ந்த பிறமொழியாளரும் முன்னணியில் நின்றனர் என்பது தமிழர் நன்றியோடு போற்றத்தக்க விஷயமாகும். இந்தத் துறையில் - அந்தத் துறையில் என்றில்லாமல், அரசியல் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் தமிழ் நாட்டாருடன் தோளோடு தோள் சேர்த்துத் தொண் டாற்றினர். அவற்றில் சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### அயல் நாட்டவரும் பங்கு பெற்றனர்

அன்னிபெசன்ட் அம்மையார், டாக்டர் ஜி. எஸ். அருண்டேல், திருமதி மார்க்கரெட் கசின்ஸ் ஆகிய மூவரும் ஐரோப்பாவிலுள்ள அயர்லந்து நாட்டில் பிறந்து, இந்தியாவில் குடியேறி, இந்தியக் குடிமக்களாகவே தங்களைப் பதிவு செய்து கொண்டவர்களாவர். சென்னையில் தங்கி வாழ்ந்த அவர்கள் தேச விடுதலைப் போரில் இரண்டறக் கலந்தனர். ஆங்கில ஏகாதிபத்தியத் தினை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதிலே பிற இந்தி யருக்குச் சளைக்காத வகையிலே அக்கறை காட்டினர்.

டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் 1915-ல் தொடங்கிய ''ஹோம் ரூல்'' (சுயாட்சி) இயக்கமானது

பிரிட்டிஷாரைக் கதிகலங்கச் செய்தது. நாடெங்கணும் புயற்காற்று வேகத்தில் சுயாட்சி இயக்கம் பரவியது. திருமதி பெசன்ட், திரு. ஜி. எஸ். அருண்டேல், திரு,வி. வி. வாடியா ஆகிய மூவரையும் இந்திய அரசு கைது செய்தது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விசாரணையின்றி தேச பக்தர்களைச் சிறையிலடைக்கும் கொடுமையை முதலில் சந்தித்தவர்கள் இம்மூவர்தான். இவர்களிலே வாடியா மராத்தி மொழி பேசும் மகாராஷ்டிர மாநிலத்தவராவார்.

திரு. ஈ.வே. ராமசாமி (கன்னடர்). டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு (தெலுங்கர்) ஆகிய இருபெரும் தலைவர்களும் தமிழரோடு தமிழராகக் கலந்து வாழ்ந்தனர் என்றாலும், தங்கள் வீட்டிலே தமிழல்லாத மொழிகளைத்தான் பேசினர். பெரியார் ஈ.வே.ரா. தம்மை கன்னடர் என்றே அடிக்கடி கூறிக்கொண்டதுண்டு. அதுபோல, டாக்டர் நாயுடுவும், ''நான் தமிழகத்திலே ஆட்சி செலுத்திய நாயக்க (தெலுங்கர்) வமிசத்தைச் சேர்ந்தவன்'' என்று பெருமிதத்தோடு தமிழர் மத்தியிலே மேடைகளில் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் வீட்டு மொழி தெலுங்கு, ஆயினும், அவர் தம்மை தெலுங்கர் என்று எந்தக் காலத்திலும் சொல்லிக் கொண்டதில்லை. மேற்சொன்ன நாயக்கர், நாயுடு, ரெட்டியார் ஆகிய மூவரும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியையும் பெற்றனர்.

திரு. ரெட்டியார், நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பழைய சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சர்

பதவியையும் பெற்றார். இம்மூன்று தலைவர்களுமே விடுதலைப் போர்ராட்ட காலத்தில் பலமுறை சிறை சென்றனர்.

பத்திரிகைத் துறையிலேயும் தமிழ் நாட்டின் குடிமக்களாகி விட்ட பிற மொழியினர் செல்வாக்குப் பெற்றனர். 'இந்தியா' என்னும் வாரப்பத்திரிகை மூலமாகத்தான் சுப்பிரமணிய பாரதி கவிஞர் பெருமானாக தமிழ் மக்களுக்கு அறிமுகமானார். அந்தப் பத்திரிகை திலகர் சகாப்தத்திலே அனல் கக்கியது. அதன் புரட்சிகரமான போக்குக் கண்டு ஏகாதிபத்தியத்தின் நெற்றிக்கண் திறந்தது. தடைச் சட்டம் அதன்மீது பாய்ந்தது. அதனால், "இந்தியா" பத்திரிகை பிரெஞ்சுப் பிரதேசமான புதுவைக்குக் குடியேறியது.

"இந்தியா" பத்திரிகையின் ஆசிரியர் திரு. சி. சுப்பிரமணிய பாரதியார்தான் என்றாலும், மூலதனம் போட்டு அதனை நடத்தி வந்தவர் திருவல்லிக் கேணியில் வாழ்ந்த திரு. மண்டயம் சீனிவாசாச்சாரி ஆவார். அவர் கர்நாடகத்திலுள்ள மண்டயம் என்னும் சிற்றூரிலிருந்து சென்னைக்கு வந்து குடியேறிய குடும்பத்தில் பிறந்தவர்.

கன்னட நாட்டவரான அவர் இந்தியா பத்திரிகையைத் தொடங்கியில்லையேல், மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியாரை நாம் பெற்றிருக்க முடியுமோ என்னவோ?

"தமிழ்த் தென்றல்" என்று தமிழினத்தார் போற்றி வரும் திரு. வி. கலியாணசுந்தரனார், "தேச பக்தன்"

என்னும் நாளிதழின் மூலமாகத்தான் பொது வாழ்வில் புகுந்து தனிப் பெரும் தலைவராகத் திகழ்ந்தார். ஆனால், அந்தப் பத்திரிகையை நடத்தியவர் கன்னட மொழி வழங்கும் மங்களூர் என்னும் ஊரிலிருந்து சென்னைக்கு வந்து இங்கு குடியமர்ந்த சுப்பராய காமத் ஆவார். தமிழ் மக்களிடை தேசிய உணர்ச்சியை எழுப்பியதிலே ''தேச பக்தனு''க்குப் பெரும் பங்கு உண்டு.

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், தமிழில் ''சுதேச மித்திரன்'' நாளிதழைத் தொடங்கி, பத்திரிகை உலகில் பெரும்புகழ் பெற்றார் என்றாலும், அதனோடு போட்டி யிடும் வகையில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு ''தமிழ் நாடு'' என்னும் நாளிதழைத் தொடங்கி பல ஆண்டுக் காலம் நடத்தினார். தேச பக்த ஆவேசத்தை வளர்த்த பெருமையிலே ''தமிழ் நாடு'' நாளிதழுக்குப் பெரும் பங்கு உண்டு. அத்துடன் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' என்னும் ஆங்கில நாளிதழையும் நாயுடுவே தொடங் கினார்.

பின்னர், வடபுலத்திலிருந்து தமிழகத்திற்கு வருகை தந்து, சென்னையில் குடியமர்ந்த திரு. ராமநாத் கோயங்கா என்பவர் 'தினமணி' என்னும் தமிழ் நாளிதழைத் தொடங்கினார்.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' என்னும் நாளிதழையும் விலைக்கு வாங்கி, இந்த இரண்டு இதழ்களையும் இன்று வரை வெற்றிகரமாக அவரே நடத்தி வருவதை நாடறியும்.

### *தொழிற்சங்கத் துறையில்*

விடுதலைப் போராட்டத்தின் புரட்சி முனையெனத் திகழ்ந்த தொழிற்சங்க இயக்கத்திலும் வீட்டு மொழியை தமிழல்லாத வேற்று மொழியாகக் கொண்ட தமிழர் பலர் முன்னணியில் நின்று தொண்டாற்றினர். 1918-ல் இந்தியாவிலேயே சென்னை நகரில்தான் முதன் முதலாக ''தொழிலாளர் சங்கம்'' தோன்றியதென்று தொழிற்சங்க வரலாறு கூறுகிறது. அந்தச் சங்கத்தைத் தோற்று வித்தவர்கள் திரு. ஜி. ராமானுஜ நாயுடு, திரு. செல்வபதி செட்டியார் ஆகிய இரு தெலுங்கரும், திரு. வாடியா என்ற மராத்தியரும் ஆவர். இவர்களுக்கு வழிகாட்டித் துணைபுரிந்த பெருமை திரு. வி.க.வுக்கு உண்டு.

1918-ல் மதுரை ''ஆர்வி மில்' தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திய போது, அதனை ஆதரித்து வைகை ஆற்றில் நாள்தோறும் சொற்பொழி வாற்றியதற்காக டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு 18 மாத சிறைத் தண்டனை பெற்றார்.

சென்னை நகரத்திலே - ஏன்? சென்னை மாகாணம் முழுவதிலும் தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டி வளர்க்க மராத்தியரான திரு. வாடியா மட்டுமின்றி, வங்காளிய ரான திருமதி மிருணாளினி (கவியரசி சரோஜினி தேவியின் சகோதரி), திரு. முகுந்தலால் சர்க்கார் ஆகியவர்களும் பங்கு கொண்டனர்.

1928-ல் நடைபெற்ற தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டு,

அதன் காரணமாக அரசு தோற்றுவித்த தென்னிந்திய ரயில்வே சதி வழக்கில் குற்றவாளிகளாக்கப்பட்டு, கடுந்தண்டனை பெற்றவர்களிலே வங்காளியான திரு. முகுந்தலால் சர்க்கார் முக்கியமானவராவார்.

தொழிற்சங்க இயக்கத்திலேயும் ஐரிஷ்காரர்களான டாக்டர் அன்னிபெசன்டும், ஜி.எஸ். அருண்டேலும் முன்னணித் தலைவர்களாக விளங்கினர்.

தமிழ் நாட்டில் விவசாயிகள் இயக்கத்தைக் கட்டி வளர்த்ததிலேயும் தமிழல்லாத வேற்று மொழியை வீட்டு மொழியாகக் கொண்டவர்கள் எண்ணற்றோர் ஆவர்.

1941-ல் நடைபெற்ற திரு. மோகன் குமார மங்கலம், திரு. பி. ராமமூர்த்தி ஆகியோர் சம்பந்தப்பட்ட சென்னை கம்யூனிஸ்டு சதி வழக்கிலே திரு. உமாநாத் போன்ற தமிழரல்லாதாரும் கடும் தண்டனைபெற்றனர்.

இந்திய தேசிய எழுச்சியிலிருந்து கிளைத்த சமூக சீர்திருத்த இயக்கத்திலேயும் தமிழல்லாத வேற்று மொழிகளை வீட்டு மொழிகளாகக் கொண்ட இருமொழியாளர் பலர் முன்னணியில் நின்று தொண்டாற்றினர். பெரியார் ஈ.வே.ரா., காங்கிரசிலிருந்தபோது சமூக சீர்திருத்த எண்ணங்களைக் காங்கிரஸ் மேடைகளில் நின்று பரப்பினார். வைக்கத்தில் நடந்த தீண்டாமை ஒழிப்புப் போரில் ஈடுபட்டு, தமது சகோதரியாருடன் சிறை சென்றார். காங்கிரசை விட்டு விலகிய பின், ''சுய மரியாதை இயக்கம்'' என்ற பெயரில் சமூக சீர்திருத்தப் பேரியக்கம் ஒன்றைத் தோற்றுவித்தார்.

### *பெண் குலத்திலும்...*

தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட திருமதி. முத்துலட்சுமி ரெட்டி என்பவர், பெண் குலத்தின் உரிமைக்காகப் பெரும்பாடு பட்டார். தேவதாசி முறை ஒழிப்புக்காக அவர் பட்டபாடு தனி வரலாறாகும். அவரது பணிக்குக் காந்தியடிகளும் பக்கபலமாக இருந்தார் என்பது குறுப்பிடத் தக்கதாகும்.

இந்தியாவிலேயே மருத்துவக் கல்வி கற்று எம்.பி. பி.எஸ். பட்டம் பெற்ற முதல் பெண்மணி திருமதி ரெட்டி. இந்தியாவில் மாநில சட்ட மன்றம் ஒன்றிலே முதன் முதல் பெண்மணி ஒருவர் உறுப்பினராக இடம் பெற்றது சென்னை மாகாண சட்டமன்றத்திலேதான். அந்தப் பெண்மணி சென்னை வாசியான திருமதி முத்துலட்சுமி ரெட்டியாரே ஆவார்.

இப்படி, மொழி வேறுபாட்டை மறந்து, வீட்டு மொழி எதுவானாலும், வாழும் நாட்டால் தங்களைத் தமிழராகவே கருதி, தமிழ் நாட்டைத் தேசிய நீரோட்டத் தில் கலக்கப் பாடுபட்ட இரு மொழியாளர் எண்ணற்றோர் ஆவர்.

### *இந்தியா முழுவதும்...*

இந்தப் புதுமை தமிழகத்தில்தான் நிகழ்ந்தது என்று எண்ணிவிட வேண்டாம். தமிழையே வீட்டு மொழி யாகவும் நாட்டு மொழியாகவும் கொண்ட தமிழரின் திறமையின்மையால் பிறமொழியினர் முன்னணியில்

இருந்தனர் என்றும் யாரும் கருதிவிட வேண்டாம். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தின் வரலாற்றைத் தனித் தனியே எடுத்துப் பார்த்தால், அங்கெல்லாமும் மொழிவழி சிறுபான்மையினர் தாங்கள் வாழும் மாநிலத் திற்கு விசுவாசமாக இருந்து அங்கு தேசிய இயக்கத்தைக் கட்டி வளர்க்க அரும்பாடு பட்டிருப்பதைக் காணலாம்.

தேசிய இயக்கத்தின் ஒரு நூற்றாண்டுக் கால வரலாற்றிலே அந்த இயக்கத்தைக் கட்டி வளர்க்கத் தொண்டாற்றிய இருமொழியாளர்களை இங்கு தனியே பிரித்துக் காட்டியது - அவர்கள் பெயர்களைப் பட்டியல் தொகுத்துக் காட்டியது - அவர்களையெல்லாம் தமிழ் மண்ணுக்கு அன்னியர்களாகக் கருதி அல்ல. அவர்களும் தமிழ் மண்ணின் மைந்தர்களே! ஆயினும், தேசிய இயக்கமானது இந்திய மக்கள் அனைவரையுமே தழுவி வளர்ந்திருக்கிறது ஏன்பதையும், ஒவ்வொரு மொழி வழிப் பிரதேசத்திலும் வேற்று மொழிகளை வீட்டு மொழிகளாகக் கொண்டவர்களாலும் இந்திய தேசியம் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் நினைவூட்டத்தான்.

திரு. ஜி. ராமச்சந்திரன் வீட்டு மொழியால் மலையாளியாயினும், தமிழ்ப் பெண்மணியான மதுரை திரு. சௌந்தரம்மாளை மணந்து, தமிழ்நாட்டு அரசியலிலே இரண்டறக்கலந்தார். இவர்களிருவரும் சபர்மதியிலுள்ள காந்தி ஆசிரமத்தில் சேர்ந்திருந்த போது, பரஸ்பரம் காதலித்து மணந்தனர்.

திருமதி ருக்மணி லட்சுமிபதி அவர்கள், பிறப்பால் ஆந்திரராயினும், தமிழ்நாட்டு நாயுடுவை மணந்து தமிழ்நாடு காங்கிரசிலே இரண்டறக் கலந்து சேவை செய்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் துணைத் தலைவியாகவும் இருந்தார். த.நா.கா.க. சார்பில் 1946-ல் திரு. டி. பிரகாசம் அமைச்சரவையில் இடம் பெற்றார். 1935-ல் ராஜாஜியின் தலைமையில் நடந்த உப்புச் சத்தியாக் கிரகத்தில் கலந்து, சிறைத் தண்டனை பெற்றார்.

1937-ல் பழைய சென்னை மாகாண சட்டசபைக்கு சென்னை நகரில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அச்சபையின் துணைத் தலைவராக இருந்தார்.

இராஜபாளையம், தெலுங்கு மொழி பேசும் இராஜுக்களின் கோட்டையாகும். அந்தப் பிரதேசத்தின் முடிசூடா மன்னனெனத் திகழ்ந்த திரு. பி. எஸ். குமாரசாமி ராசா, தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாடு காங்கிரசோடு தொடர்பு கொண்டு, தேச விடுதலைக்குத் தொண்டாற்றினார். பலமுறை சிறை சென்றார். இராம நாதபுரம் ஜில்லா போர்டின தலைவராகவும் விளங்கினார்.

1934-ல் இராமநாதபுரம் - நெல்லை - மதுரை மாவட்டங்களுக்கான தொகுதியில் த.நா.கா. க. வேட்பாளராகப் போட்டியிட்டு, இந்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1950-51-ல் த.நா.கா. சார்பில் சென்னை மாகாண சட்டசபையில் இடம் பெற்று, மாகாணத்தின் முதலமைச் சராகவும் பதவி வகித்தார்.

திரு. என். எஸ். வரதாச்சாரியார் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட ஆந்திரர், ஆயினும், சென்னை வாசியாகி விட்டதால், தம் வாழ்நாள் முழுவதும் த.நா. கா. கமிட்டியோடு தொடர்பு கொண்டு, தேச விடுதலைக்குத் தொண்டாற்றினார். ராஜாஜியுடன் வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, சிறைத் தண்டனை பெற்றார். நாகபுரி தேசியக்கொடிப் போரிலும் சிறை புகுந்தார்.

த. நா. கா. வேட்பாளராக 1937-ல் சென்னை மாகாண சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்லிமெண்டரிக் காரியதரிசியாகப் பதவி வகித்தார்.

இவ்வளவும் மாநில மட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்ட சான்றுகளாகும். இன்னும் மாவட்ட வாரியாகப் பார்த்தால், பிறமொழிகளை வீட்டு மொழி களாகக் கொண்ட இருமொழியாளர் பல்லாயிரவர் தமிழ் நாட்டில் காங்கிரசைக் கட்டி வளர்க்கப் பாடுபட்டு வந்தது புலனாகும்.

மதுரை மாநகரில் சௌராஷ்டிரா மொழி பேசும் சமூகத்தார் காங்கிரஸ் ஒன்றையே தங்கள் தனிக் கட்சியாகக் கொண்டிருந்தனர். அவர்களிலே தம்பதிகள் தம்பதிகளாகச் சிறை புகுந்தவர்களுமுண்டு. இதற்கு திரு. என். எம்.ஆர். சுப்பராமன் தம்பதிகள் சான்றாவர்.

தமிழ் நாட்டவரான திரு.ஜே. சி. குமரப்பா, கே. சந்தானம், எச்.டி.ராசா, கே. நடராசன் ஆகியோர் உள்ளிட்ட பல்லாயிரவர் வடபுல மாநிலங்களில் தங்கி வாழ்ந்து, அங்கு பத்திரிகைத் தொழிலிலும் அரசியல்

கிளர்ச்சியிலும் கலந்து சிறை சென்றுள்ளனர். அவர்கள் பெயர்களை எல்லாம் தொகுத்தால், அது தனி வரலாறாகும்.

தஞ்சை வாசியான ஜே. சி. குமரப்பா, இருமுறை ஆமதாபாத் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டார். தமிழரான திரு. கே. சந்தானம், நாபா சமஸ்தான சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, நேருஜியுடன் சிறை வாழ்க்கை நடத்தினார்.

இவ்வளவும் காங்கிரஸ் மகாசபையின் வரலாற்றை யொட்டிய சான்றுகளாகும். காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பு மன்னர்கள் சகாப்தத்தில் - அதாவது, 18ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆதிக்கத்தை எதிர்த்துத் தமிழகத்தில் நடந்த புரட்சியைப் பார்த்தால், அதைத் தொடங்கி வைத்த மாவீரன் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட வீரபாண்டியக் கட்டபொம்மு நாய்க்கன் என்பது புலனாகும்.

தமிழ் நாட்டின் விடுதலைக்காகக் கட்டபொம்மன் சகோதரர்களும், அவர்களுடன் விடுதலைப் போரில் இணைந்து நின்ற தெலுங்கு பாளையக்காரர்களும் தூக்கிலிடப்பட்டு மாண்டனர்.

சருங்கச் சொன்னால், இந்திய விடுதலைப் போரானது மொழி வேறுபாடுகளைக் கடந்து நடந்தது. அதனாற்றான், விடுதலைப் போராட்ட வரலாற்றை ''காங்கிரஸ்'' என்ற ஒரு தனிக் கட்சியின் வரலாறாகக் கருத வேண்டியிருக்கிறது. அந்த இந்திய தேசியத்திற்குத் தான் 1985- டிசம்பருடன் ஒரு நூறு வயது நிறைவு பெற்றது. அதற்கு நமது வாழ்த்து உரித்தாகுக! ❖

# காங்கிரசுக்கு ஏற்பட்ட சோதனைகள்

இந்திய தேசிய காங்கிரசானது, தனது ஒரு நூற்றாண்டுக் கால வரலாற்றிலே எத்தனையோ உட்பூசல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

1907-ல் சூரத் நகரில் சிறுபான்மையினரான தேசிய வாதிகளுக்கும் பெரும்பான்மையினரான மிதவாதி களுக்கு மிடையே பூசல் ஏற்பட்டது. அதை ''வெற்றி'' கரமாகச் சமாளிக்கக் காலம் காங்கிரசுக்குக் கைகொடுத்தது.

சரியாக 10 ஆண்டுகளுக்குப் பின்னர் சூரத்தில் பிரிந்து சென்ற திலகரும், அவருடைய தோழர்களும் மீண்டும் காங்கிரசில் இணைந்தனர். சூரத்தில் ஏற்பட்ட பிரிவும், அதற்குப்பின் பிரிந்தவர்கள் இணைந்ததும் இந்திய தேசிய காங்கிரசுக்கு மறுமலர்ச்சி தந்தது. ஒரு ஜனநாயக அமைப்பு தனக்குள் ஏற்படும் பிளவை எப்படிச் சமாளிக்கும் என்பதற்கு, இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது.

பின்னர், காங்கிரசோடு இணைந்து வேலை செய்த ஜனாப் ஜின்னா போன்ற தேசிய முஸ்லிம்கள் 1928-ல்

காங்கிரசிலிருந்து வெளியேறி, முஸ்லிம் லீகில் இரண்டறக் கலந்தனர். அதுவரை காங்கிரசின் தோழமைக் கட்சியாக இயங்கி வந்த லீகானது. அதன் பகைக் கட்சியாக மாறியது. இந்திய முஸ்லிம்களுக்கு லீக் மட்டும்தான் ஒரே அரசியல் கட்சி என்பதை ஜனாப் ஜின்னா சாதித்துக் காட்டவும் முயன்றார்.

இந்தச் சந்தர்ப்பத்திலே பிரிட்டிஷார் தங்கள் பிரித்தாளும் தந்திரத்தை மிகவும் திறமையாகக் கையாண்டு, காங்கிரசுக்கும் லீக்குக்கும் நடுவில் ஏற்பட்ட இடைவெளியை அதிகப்படுத்த முயன்றனர். அந்த நேரத்திலும் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரிய தேசிய அமைப்பாகச் செயல்பட்டது காங்கிரஸ். டாக்டர் அன்சாரி, அப்பாஸ் தயாப்ஜி, ரபி அகமத் கித்வாய் டாக்டர் சையத் முகமது, அபுல்கலாம் ஆசாத், ஜாக்கிர் உசேன், யாகூப்ஹாசன், ஜனாப் ஆசப் அலி போன்ற தேசிய முஸ்லிம் தலைவர்கள் காங்கிரசைச் சார்ந்து நின்று அதன் தேசியப் பண்பைக் காத்தனர்.

''சோஷலிசம்'' என்னும் பொருளாதாரச் சித்தாந்தத்தின் அடிப்படையில் காங்கிரசிலே ஒரு சாரார் அரண்மனைக்கு எதிர்மனை அமைத்தனர். ஆம்; காங்கிரசுக்குள்ளேயிருந்த ஒரு சாரார் ''சோஷலிஸ்டுக் கட்சி''யை நிறுவினர். வாழைக்குக் கீழ்க் கன்றாக அதுவும் வளரலானது.

இது, இந்திய தேசிய காங்கிரசுக்கு ஒரு சோதனை யாக அமைந்த தென்றாலும், இந்தச் சோதனையிலும் காங்கிரஸ் வெற்றியையே கண்டது. காலப் போக்கில் தன்னில் ஒரு பகுதியினராகத் தோன்றிய சோஷலிஸ்டுக் கட்சியினரின் பெரும்பாலோரை காங்கிரஸ் ஜீரணித்து விட்டது!

இரண்டாவது உலகப் பெரும்போர் தோன்றிய தருணத்திலே, காங்கிரசுக்குள்ளேயே "பார்வர்டு பிளாக்" என்னும் புதிய கட்சி ஒன்றை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தொடங்கினார். அந்தச் சந்தர்ப்பத்திலே வங்க மாநில மக்களின் இன உணர்ச்சியானது இந்திய தேசியத்தை மோதிப் பார்க்க முயன்றது. ஆனால், நேதாஜி இந்தியாவை விட்டு வெளியேறி விட்டதால், அப்போதைக்கு இந்திய தேசிய காங்கிரசுக்கு பார்வர்டு பிளாக்கால் அபாயம் எதுவும் ஏற்படவில்லை. அனேகமாக அதையும் காங்கிரஸ் ஜீரணித்து விட்டதென்றே சொல்லவேண்டும். பார்வர்டு பிளாக் இங்குமங்குமாக சில மாநிலங்களில் பெயரளவில் இயங்கி வருகிறதென்றாலும் அது தேசிய விருட்சத்தி லிருந்து இறங்கிய வேராகவே இயங்கி வருகிறது. இத்தனைக்கும் மேலாக, இங்குமங்குமாக ஒரு சில மாநிலங்களிலே மாநிலக் கட்சிகளும் தோன்றின காங்கிரசுக்கு உள்ளும் புறமுமாக! 'சென்னை மாகாணத்திலே காங்கிரசுக்குப் புறம்பாகத் தோன்றிய

ஜஸ்டிஸ் கட்சியையும் இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மாநில அமைப்புகளையும் வெற்றிகரமாகச் சமாளித்து, இந்திய தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்ப்பதற்கு இந்தக் குறுகிய உணர்ச்சிகளையும் எருவாக்கிக் கொண்டது காங்கிரஸ்.

இது, நாடு சுதந்திரம் பெறும்வரை காங்கிரசுக்கு ஏற்பட்ட சோதனைகளும், அவற்றை காங்கிரஸ் வெற்றிகண்ட சாதனைகளும் ஆகும்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னுள்ள 38 ஆண்டுக் காலத்திலேயும் காங்கிரசானது திரும்பத் திரும்பப் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. மிகப் பெரிய சோதனை ஒன்று உண்டென்றால், தேசம் சுதந்திரம் பெற்ற பின்னர், அது இந்திய தேசியத்தின் ஏகப் பிரதிநிதித்துவ அமைப்பாக இருந்த நிலைமாறி, அரசியல் கட்சிகளிலே ஒன்று என்ற நிலைக்கு காங்கிரசானது தாழ்ந்து விட்ட நிலையிலும், காங்கிரசின் இடத்தைக் கைப்பற்ற புதிதாகத் தோன்றிய அனைத்திந்தியக் கட்சிகளில் எதனாலும் இதுவரை இயலவில்லை. இன்றைக்கும் - அதாவது, அரசியல் கட்சிகளிலே ஒன்று என்று ஆகிவிட்ட நிலையிலும் - இந்திய தேசியத்தின் வலிமைமிக்க ஒரே அமைப்பாக காங்கிரஸ்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது.

தேசவிடுதலைப் போரின் முன்னணித் தளபதிகளில் ஒருவரான ராஜாஜி , அந்த விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்திலே பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கை காரணமாக காங்கிரசுடன் கடுமையான கருத்து வேற்றுமை காட்டினார். தமது கருத்து ஏற்கப்படாததால், காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

அவரது போக்கானது, தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு கடும் சோதனையாக அமைந்தது. அப்போது, த. நா. கா. கமிட்டியின் த்லைவர் பொறுப்பிலிருந்து திரு. காமராசர் துணிகரமாக பொறுப்பேற்று, தமிழ் நாட்டில் காங்கிரஸ் அமைப்பு நிலை பெறச் செய்தார்.

1952-ல் நடந்த பொதுத் தேர்தலிலே சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் படுதோல்வியடைந்தது. ஜனநாயகம் சோதனைக்குள்ளானது, அப்போதும், அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருந்த ராஜாஜியை முதல்வர் பொறுப்பில் அமர்த்தி சென்னை மாகாணத்தில் காங்கிரசை காமராசர் காத்தார்.

தேசம் சுதந்தரம் பெற்ற பின்னர், தன்னுள்ளே தனித்தியங்கிவந்த பல அமைப்புகளை வெளியேற்றி, காங்கிரஸ் தன்னை ஒரு கட்சியாக்கிக் கொண்டுவிட்டது. அப்படி வெளியேற்றப்பட்ட அமைப்புகளில் காங்கிரஸ் சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு, பார்வர்டு பிளாக், தமிழரசுக் கழகம் ஆகியவற்றைச் சொல்லலாம்.

காங்கிரசைக் கட்டி வளர்த்தவர்களிலே காந்திஜி, மௌலானா அபுல்கலாம் ஆசாத், ராஜேந்திர பிரசாத் போன்ற அனைத்திந்தியாவிலும் புகழொளி வீசிய பெருந்தலைவர்களை யெல்லாம் காங்கிரசிலிருந்து காலதேவன் பிரித்துவிட்டான். இது, காங்கிரசுக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இந்த இழப்புக்குப் பின்னும் மறைந்த அம்மாபெரும் தலைவர்களின் பாதையிலே நடைபோட்டு, தனது யாத்திரையைத் தொடர்ந்து நடத்தி வருகிறது காங்கிரஸ்.

1947- தொடங்கி 1977 வரையுள்ள 30 ஆண்டுக் காலத்திலே, மத்தியிலும் பெரும்பாலான மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி ஒன்றே ஆட்சி செலுத்தி வந்தது. ஆனால் ஜனநாயகத் தேவதையும் காங்கிரசைச் சோதிக்க நினைத்தது போலம்! அதனால் திருமதி இந்திரா காந்தியின் தலைமையைப் பெற்றிருந்த காங்கிரஸ் அரசானது, நாட்டில் 1975-ல் ''நெருக்கடி'' நிலையைத் தோற்றுவித்தது.

இது, காங்கிரசுக்கேயன்றி, ஜனநாயகத்திற்கும் ஒரு சோதனையாக அமைந்தது. இது காங்கிரசிலிருந்த மூத்த தலைவர்கள், திருமதி இந்திராவிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற முயன்றதன் எதிர்விளைவாகும். அதற்காக, ஒரு புதிய கிளர்ச்சியையே குமரி முதல் இமயம் வரை தோற்றுவித்தனர். தாங்கள் நடத்திய கிளர்ச்சிக்கு ''இரண்டாவது சுதந்திரப் புரட்சி'' என்றும் பெயர் தந்தனர்.

திருமதி இந்திரா காந்தியின் பக்கத்திலும் ஆற்றல் மிக்க அரசியல் தலைவர்கள் இருந்தனர் என்றாலும், அவ்வம்மையாரை எதிர்த்தவர்களை நோக்குங்கால் இவர்கள் இரண்டாவது வரிசையினர்தான். இந்த நேரத்திலே ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் வந்ததால், காங்கிரசுக்குள்ளே பிளவு ஏற்பட்டது.

''காங்கிரசின் அதிகார பூர்வமான வேட்பாளர்'' என்னும் முத்திரையோடு திரு. என். சஞ்சீவி ரெட்டி காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டாரால் நிறுத்தி வைக்கப்பட்டார். அவரை எதிர்த்து, அப்போது துணை ஜனாதிபதியாக இருந்த திரு. வி.வி. கிரி அவர்கள், தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டார்.

காங்கிரசுக்கு வெளியிலிருந்த ராஜாஜி போன்ற மூத்த தலைவர்களில் ஒரு சாரார் திரு. சி.டி. தேஷ்முக் என்பவரை மூன்றாவது வேட்பாளராக நிறுத்தி வைத்தனர்.

பிரதமர் பொறுப்பிலிருந்த இந்திரா காந்தி, மனச் சாட்சிப்படி வாக்களிக்குமாறு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றிருந்த வாக்காளர்களுக்கு - குறிப்பாக, காங்கிரஸ்காரர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். திரு.வி.வி. கிரியின் வெற்றிக்குக் கை கொடுக்கவே அவர் இந்த வேண்டுகோளை வெளி யிட்டார்.

பிரதமர் பெருமாட்டியார் விரும்பியபடி, திரு. வி.வி. கிரி வெற்றி பெற்றார். காங்கிரசின் அதிகார பூர்வ வேட்பாளரான திரு. சஞ்சீவி ரெட்டி தோல்வியுற்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரசில் ஏற்பட்ட பிளவு காரணமாக, கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாகக் குற்றஞ் சாட்டி, திருமதி இந்திரா காந்தியை காங்கிரசிலிருந்து வெளியேற்றும் தீர்மானத்தை காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றியது.

இதனைக் காங்கிரசிலே ஒரு சாரார் கடுமையாக எதிர்த்தனர். மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சி புரிந்த மாகாணங்களிலும் பதவிகளைப் பெற்றிருந்தவர்களில் பெரும்பாலோர் திருமதி இந்திராவைச் சார்ந்து நின்றனர்.

எளிய தொண்டர் வரிசையிலிருந்து, தமது தியாகத் தாலும் திறமையாலும் படிப்படியாக முன்னேறி முதலில் த.நா.கா. தலைவராகவும், பின்னர் தமிழகத்தின் முதல்வராகவும், பின், ''காமராஜ் திட்டம்'' தந்து, அதன் வெற்றிக்குத் தாமே பொறுப்பேற்று வகித்த தமிழக முதல்வர் பொறுப்பைத் துறந்து, அனைத்திந்தியக் காங்கிரசின் தலைவரான திரு. காமராசர் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவுக்குப் பிரதான காரணரானார்.

இந்தச் சோதனை மிக்க நேரத்திலே காங்கிரஸ் காரர்களை ஒன்றுபடுத்தவும் சிலர் முயன்றது உண்டு. ஆனால் அவர்கள் வெற்றிபெறவில்லை. காங்கிரசில்

ஏற்பட்ட பிளவானது நிரந்தரமாகி விட்டது. ஆம், இருவேறு ''காங்கிரஸ் கட்சிகள்'' ஏற்படலாயின. ஒரு காங்கிரஸ் கட்சிக்கு பிரதமர் இந்திரா காந்தி தலைவர், இன்னொரு காங்கிரஸ் கட்சிக்குக் கர்நாடகத்தைச் சேர்ந்த திரு. நிஜலிங்கப்பா தலைவர்.

இரண்டாவதாகச் சொன்ன கட்சிதான் பழைய காங்கிரஸ் கட்சி என்று வாதிக்கப்பட்டது. அதனால், திருமதி இந்திரா காந்தியின் தலைமையில் இயங்கிய காங்கிரசிலிருந்து பிரித்தெடுத்துக் காட்ட, திரு. நிஜலிங்கப்பா தலைமையிலிருந்த காங்கிரசுக்கு ''ஸ்தாபன காங்கிரஸ்'' என்று பெயர் தரப்பட்டது. திரு. காமராசரும் அவரது செல்வாக்கில் இயங்கிய த.நா. காங்கிரசும் ஸ்தாபன காங்கிரஸ் சார்பிலிருந்தனர்.

காங்கிரஸ் மேலிடத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவானது மாநிலந்தோறும் விரிவடையலானது. தமிழ் நாடு போன்ற சில மாநிலங்களிலே, அதிகாரபூர்வமான காங்கிரஸ் கமிட்டிகள் ஸ்தாபன காங்கிரசின் மாகாணக் கிளைகளாக மாறின. ஆனால் பெரும்பாலான மாகாணங் களிலே அதிகாரபூர்வமாக இயங்கி வந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகள், திருமதி இந்திராவில் தலைமை யைக் கொண்ட காங்கிரசின் மாகாணக் கிளைகளாக மதிக்கப்பட்டன.

இப்படி, காங்கிரஸ் பிளவுபட்டதற்கு மேலிடத்துத் தலைவர்கள் மட்டத்தில் ஏற்பட்ட போட்டியும் ஒரு

காரணம்தான் என்றாலும், கொள்கை ரீதியான போராட்டமும் மற்றொரு காரணமானது.

பிரதமர் பொறுப்பிலிருந்த திருமதி இந்திரா காந்தி, கனரகத் தொழில்களை அரசுடைமையாக்கும் கொள்கையை விரிவுபடுத்த விரும்பினார். அத்துடனன்றி, நாட்டிலுள்ள பெரும்புள்ளிகளிடம் சிக்கிச் சிறைபட்டிருந்த பெரிய வங்கிகளை அரசுடைமை யாக்குவதிலும் ஆர்வம் காட்டினார். இதனை காங்கிரசிலிருந்த ''மூத்த தலைவர்கள்'' எனப்படுவோரில் பெரும்பாலோர் விரும்பவில்லை. ''இளம் தலைவர்கள்'' இந்தப் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பினர். அவர்கள் ''இளந்துருக்கியர்'' என்னும் பெயரில் ஒரு கோஷ்டியாக இந்திராவுக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். முதிய தலைவர்களிலே சிலரும் தனிக்' குழுவாகச் செயல்படலாயினர். அவர்களுக்கு ''காங்கிரஸ் சிண்டிகேட்'' எனப் பெயர் தந்தன பத்திரிகைகள்.

இன்னொரு பிரச்னையையும் திருமதி இந்திரா காந்தி தோற்றுவித்தார். நேருஜி பிரதமராக இருந்த காலத்திலே சமஸ்தானங்களைக் கலைப்பதற்குத் துணைபுரிந்த மன்னர்களுக்கு வருடாந்திர பென்ஷன் தருவதற்கு அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டது மத்திய அரசின் சமஸ்தான இலாகா. அந்த இலாகாவை நிர்வகித்து வந்த சர்தார் படேல் இந்த உடன்படிக்கைக்குக் கர்த்தாவாக விளங்கினார். திருமதி.

இந்திரா காந்தி மன்னர்களின் மானியங்களை ஒழிக்க மசோதா ஒன்றைத் தயாரித்து அதை நாடாளு மன்றங்களின் இரு அவைகளிலும் வைத்தார். லோக் சபையில் அவருக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. ராஜ்ய சபையிலோ ஒரு வாக்கு வித்தியாசத்தில் மசோதா தோல்வியுற்றது. இதையே காரணம் காட்டி, லோக் சபையைக் கலைத்து மறு தேர்தலுக்கு ஆணையிடுமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியது திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவை.

அதன்படி 1967-ல் நாடாளுமன்றத்திற்கு நான்காவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. திருமதி இந்திராவின் தலைமையைக் கொண்டிருந்த காங்கிரசும் ஸ்தாபன காங்கிரஸ் எனப் பெயர் பெற்றிருந்த முதுபெரும் தலைவர்களைக் கொண்டிருந்த கட்சியும் தேர்தல் களத்தில் மோதின. அப்போது மூதறிஞர் ராஜாஜியால் நடத்தப்பட்டு வந்த சுதந்திரா கட்சி, ஸ்தாபன காங்கிரசுக்கு ஆதரவளித்தது. அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழகத்திலுள்ள தி.மு.க. ஆகிய பல கட்சிகள் திருமதி. இந்திரா காங்கிரசுக்கு வெளிப் படை யாகவே ஆதரவளித்தன. தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு கண்டன. தேர்தல் முடிவிலே திருமதி இந்திராவின் தலைமையைப் பெற்றிருந்த காங்கிரசுக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. தமிழகத்திலே மிகப் பெரும்பாலான பார்லிமெண்டுத் தொகுதிகளை தி.மு.க. விடமிருந்து பெறவேண்டுமென்ற விருப்பத்தால்,

சட்டசபைத் தொகுதிகள் அனைத்தையும் அதற்கே விட்டுவிட்டது இந்திராவின் தலைமையைப் பெற்றிருந்த காங்கிரஸ்.

தேசம் முழுவதிலும் திருமதி இந்திரா காங்கிரசுக்கே மகத்தான வெற்றி கிடைத்தது. மத்தியிலும் பெரும் பாலான மாநிலங்களிலும் அந்தக் கட்சியே ஆட்சிக்கு வந்தது.

தமிழகத்திலே இந்திராவினுடைய காங்கிரசின் பேராதரவோடு திமுகழகம் இரண்டாவது முறையாகவும் சட்டசபையைக் கைப்பற்றி ஆட்சிப் பீடத்தில் நிலையாக அமர்ந்தது. இதற்குப் பின்னர்தான் மேலே சொன்னபடி 1975- ஜூன் திங்களிலே நாட்டில் நெருக்கடி நிலை யைப் பிரகடனம் செய்தது இந்திரா காங்கிரஸ். ஜெயப் பிரகாசர், மொரார்ஜி தேசாய் போன்ற பெருந்தலைவர்கள் பாதுகாப்புக் கைதிகளாக்கப்பட்டனர். இது தேச மக்களுக்கு வியப்பையும் வேதனையையும் தந்தது. நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரவர்க்கம் ''வல்லான் வகுத்தது வாய்க்கால்'' என்ற போக்கில் செயல்பட்டுப் பிரதமர் இந்திரா ஆட்சி மீது மக்களில் பெரும்பாலோருக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. நெருக்கடி நிலை ஒன்றரையாண்டுக் காலம் நீடித்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே பிரதமர் இந்திராகாந்தி மிகுந்த துணிவோடு நாடாளு மன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடத்த முன் வந்தார். ஆம்;

ஆறாவது பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதியைக் கொண்டு ஆணை பிறப்பித்தார். இதிலே இந்திரா காங்கிரசுக்கு எதிரான கட்சிகள் எல்லாம் ஜனதா கட்சி என்னும் பெயரிலே ஒரு கூட்டணியை நிறுவிப் போட்டியிட்டன. வெற்றி ஜனதா கட்சிக்குத்தான். அதிலே ஐந்தாறு கட்சிகள் கட்சிக்குள் கட்சிகளாக இணைந்திருந்தன. திருமதி இந்திராகாந்தி படுதோல்வி கண்டார். ஆம், தனிப்பட்ட முறையில் அவரும் அவர் மகன் திரு. சஞ்சய் காந்தியும் சொந்த மாகாணத்திலேயே தோல்வியுற்றனர். ஆனால், ''இரண்டாவது சுதந்திரப் புரட்சி''யை நடத்தி மத்திய ஆட்சியைக் கைப்பற்றிய ஜனதா ஆட்சி இரண்டரை யாண்டுக்குள் உடைபட்டு விட்டது. ஜனதா கட்சிக்குள் ஒரு கட்சியாக இயங்கி வந்த திரு. சரண்சிங்கைத் தலைவராகப் பெற்றிருந்த லோக்தளக் கட்சியே ஜனதா கட்சி உடைபடக் காரணமாக இருந்தது. திரு. சரண்சிங் தலைமையில் இடைக்கால அமைச்சரவை ஒன்று தோன்றியது.

இது, ஆறுமாத காலமே உயிர் வாழ்ந்தது. நாடாளுமன்றத்தைச் சந்தித்து நம்பிக்கை வோட்பெற துணிவில்லாததால், அதைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் நடத்த குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூறினார் பிரதமர் திரு. சரண்சிங். அதன்படி நடைபெற்ற தேர்தலிலே தனித்துப் போட்டியிட்டே மகத்தான வெற்றிகண்டது இந்திரா காங்கிரஸ். திரும்பவும் இந்திரா

காந்தி பிரதமரானார். இது, காங்கிரஸின் வரலாற்றில் நீங்காத மகத்தான புரட்சியாகும். தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் திருமதி. இந்திரா காந்தி பிரதமராக இருந்து நாட்டை நடத்திச் சென்றார். கூட்டுசேரா நாடுகள் அணியின் தலைவரானார். ஆசிய நாடுகளின் விளையாட்டுக் காட்சியை புதுடெல்லியில் நடத்தினார். இதனால் இந்தியா தலை நிமிரலானது.

பஞ்சாபில் ''காலிஸ்தான்'' கோரும் சீக்கியர்கள், அதற்காக அராஜகத்தில் இறங்கினர். அமிர்தசரஸ் பொற்கோயிலில் ஆயுதங்களைக் குவித்து, கொலைச் செயலில் ஈடுபட்டனர். மிகுந்த துணிச்சலோடு பொற்கோயிலுக்குள் ராணுவத்தை அனுப்பினார் பிரதமர் இந்திரா. கலகக்காரர்களின் கொட்டம் அடக்கப்பட்டது.

ஆனால், பிரதமர் இந்திரா காந்தி தன் வீட்டில் காவல்புரிந்த இரு சீக்கிய காவலர்களால் அக்டோபர் 30 ல் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மகன் ராஜீவ் காந்தி, தேசத்தின் பிரதமராக்கப்பட்டார்.

❖

# வாழ்க, இந்திய தேசியம்!

தேசம் விடுதலை பெற்ற நாள்வரை - கொஞ்சம் அதிகமாகப் போனால், இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த 1950 சனவரி 26 வரை காங்கிரஸ் என்னும் அமைப்பானது, இந்திய தேசியம் என்பதனைத் தனக்கே உரியதாகக் கொண்டிருந்தது. ஆனால், அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், இந்திய அரசியல் கட்சிகளில் காங்கிரசும் ஒன்றாக ஆகிவிட்டது. இது ஜனநாயக நியதி - நீதியும் கூட! இதனால், காங்கிரசுக்குக் குறைவு எதுவும் ஏற்பட்டு விடவில்லை. தானே இந்திய தேசியத்தின் முழு வடிவமாக இருந்த நிலை மாறி, தேசியத்தினுள் அடங்கிய கட்சிகளில் ஒன்றாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் வகையிலே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்தது காங்கிரஸ்தானே!

ஆயினும், நடைமுறையில் பார்க்குமிடத்து, இந்திய தேசியத்தை இன்றளவும் தன் உயிர் மூச்சாகக் கொண்டு, அதனை வளர்ப்பதிலும் காப்பதிலும் இதர கட்சிகளை விடவும் காங்கிரஸ் கட்சியே அதிகமாகப் பங்கு பெற்றுவருகிறது. அந்தப் பெருமையை அதனிடமிருந்து

வேறு எந்த அமைப்பும் இதுவரை பறித்துவிட வில்லை.

அது, இந்திரா காங்கிரசுக்குச் சரித்திரம் கொடுத்த பெருமையாகும். அதனாற்றான், 1885-ல் தோன்றிய இந்திய தேசியக் காங்கிரசின் வரலாற்றைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டு, அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது இ.காங்கிரஸ். தேசம் சுதந்திரம் பெற்றதும், அந்த சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்னும் பெயருடைய அமைப்பைக் கலைத்துவிட வேண்டுமென்று காந்தியடிகள் கூறினார். கலைப்பதற்கான தீர்மானம் ஒன்றையும் தயாரித்துத் தன் கைவசத்தில் வைத்திருந்த நிலையில்தான் அவர் கொலையுண்டார். காங்கிரசைக் கலைத்து விடுவதிலே நேருஜி, சர்தார் படேல், ராஜாஜி, ராஜன் பாபு, மௌலானா ஆசாத் ஆகியோர் ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. அதில் காந்திஜியிடம் கருத்து வேற்றுமையும் அவர்களுக்கு இருந்தது.

திரிபுரா காங்கிரசில் நிகழ்த்திய தலைமை யுரையிலே, ''நாடு சுதந்திரம் பெற்றவுடன் காங்கிரஸ் கலைக்கப்படவேண்டும் என்ற கருத்தை நான் ஏற்பதற்கில்லை'' என்று சுபாஷ்சந்திர போஸ் கூறினார்.

காங்கிரசைக் கலைத்துவிட்டால் அதைப்போன்ற கட்டுக் கோப்பான ஒரு அமைப்பை எளிதில் கட்டிவளர்க்க முடியாது என்று காங்கிரஸ் தலைவர்கள்

கருதினர். ஆயினும், காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டு மென்பதிலே காந்தியடிகள் உறுதிகாட்டியதால் அவரைச் சூழ்ந்திருந்த தலைவர்கள் வெளிப்படையாக எதிர்ப்புக் காட்ட முடியவில்லை.

காங்கிரசைக் கலைத்துவிட்டு, அதனிடத்திலே ''லோக் சேவக் சங்கம்'' என்னும் பெயரில் அனைத்திந்திய ரீதியில் புதிய அமைப்பு ஒன்றை நிறுவ அடிகள் விரும்பினார். அதனைப் பார்லிமெண்டரித் துறைக்குப் புறம்பானதாகவும் இயக்க எண்ணினார்.

பார்லிமெண்டரித் துறையில் ஈடுபட்டு மாநிலங்களிலும் மத்தியிலும் அதிகாரப் பதவிகளை ஏற்க விரும்பும் காங்கிரஸ்காரர்கள் தனியாக ஒரு கட்சியை அல்லது பல கட்சிகளை அமைத்துக் கொள்ளலாம் என்றும் அடிகள் ஆலோசனை கூறினார். காந்தியடிகள் நினைத்தது நடந்திருந்தால், 1885 தொடங்கி 1950 சனவரி 26 வரை உருவாக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வரலாறு இன்று நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவுடைமையாகியிருக்கும். அந்த வாய்ப்பு நழுவிப் போயவிட்டது.

இந்திய விடுதலைப் போராட்டமானது அகிம்சை வழியில் நடைபெற்றதால் சமுதாயத்தின் உயர் மட்டத்திலுள்ள சுகஜீவிகளில் பலர் காங்கிரசிலே முன்னணித் தலைவர்கள் ஆகிவிட முடிந்தது. சமூக, பொருளாதார, சமய விஷயங்களிலே பிற்போக்குத்

தனமான குறிக்கோளைக் கொண்டவர்களும் தேசிய காங்கிரசில் செல்வாக்குப் பெற்றுவிட முடிந்தது. அதனால், நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், அந்தப் பிற்போக்காளரிடம் காங்கிரசை விட்டுவைப்பதால் சுதந்திரம் பெற்ற பாரதம் புரட்சிப் பாதையில் வேகமாக நடைபோடத் தவறி விடுமென்று காந்தியடிகள் அஞ்சியிருக்க வேண்டும். அந்தக் காரணத்தாலும் காங்கிரசைக் கலைத்துவிட வேண்டுமென்று அவர் கருதியிருக்கலாம். கலைப்புத் தீர்மானம் அகில இந்திய காங்கிரசிலோ வருடாந்திரக் காங்கிரஸ் மகாசபையிலோ விவாதிக்கப் பட்டிருக்குமாயின், அதுபற்றிய சாதக - பாதகமான கருத்துக்கள் காங்கிரஸ் முன்னணித் தலைவர்களிடமிருந்து வெளியாகியிருக்கக் கூடும்.

சுதந்திரத்திற்குப் பின்னும் தாம் நீண்ட காலம் வாழ்ந்திருக்க முடியும் என்று காந்தியடிகள் நம்பினார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் அவர் காங்கிரசைக் கலைக்க வேண்டுமென்று கூறினார். கலைத்த பின்னும், தாம் விரும்பிய லோக் சேவா சங்கத்தை நிறுவி அதன் மூலம் அடிகள் நாட்டை நடத்திச் சென்றிருக்க முடியும். மாநில - மத்திய அரசுகளையும் அவர் முற்போக்குப் பாதையில் நடைபோடச் செய்திருப்பார். அவர் மறைந்து விட்டதால் நேருஜி போன்ற மற்ற காங்கிரஸ் தலைவர்களுக்கு மகாத்மாவின் கலைப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி வைக்கத் துணிவு

ஏற்படவில்லை. அவர்கள் காங்கிரசைக் கலைக்கத் தவறியது சரி என்பதே எனது கருத்தாகும்.

காந்தியடிகள் மறைந்துவிட்ட நிலையிலே காங்கிரசைக் கலைத்திருந்தால், அதிலிருந்த பழம் பெரும் தியாகிகளும் முன்னணியிலிருந்த முதுபெரும் தலைவர்களும் பல்வேறு கட்சிகளை நிறுவி சிந்திச் சிதறிப்போயிருப்பார்கள் என்று நேஜியைப் போன்ற காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள் நினைத்ததை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். காந்திஜி மறைந்தபின் காங்கிரசைக் கலைப்பது பற்றி அவர் எழுதி வைத்திருந்த தீர்மானத்தை காங்கிரஸ் மகாசபையில் முன் மொழிய காந்தி பக்தர்களில் எவரும் முன்வரவில்லை யென்பது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

காங்கிரஸ் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்திலே, அதன் புகழ் மிக்க வரலாற்றை நினைவூட்டுவதற்காகவே இந்நூலை எழுதமுனைந்து, ஒருவாறு எழுதி முடித்தேன். என்னைப் பொறுத்த வரையில், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு வேறு, இந்திரா காங்கிரசின் வரலாறு வேறு என்று நான் நினைத்ததில்லை. ஆயினும், தேசம் விடுதலை பெறும் வரை இருந்த காங்கிரசின் நிலைவேறு - அதாவது, இ. காங்கிரசின் நிலை வேறு. தேசம் விடுதலை பெறும் வரையுள்ள தேசிய காங்கிரசின்

வரலாற்றை, ''விடுதலைப் போரில் தமிழகம்'' என்னும் பெயரில் எழுதி வெளியிட்டுள்ளேன்.

தேசம் விடுதலை பெற்ற நாள் வரை இருந்த - அதற்குப் பின்னும் இன்றுவரை இருக்கின்ற காங்கிரசின் வரலாற்றையும் இந்நூலில் விவரித்துள்ளேன்.

இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது நிறைவு பெற்று, அதற்காக நாடெங்கும் தேசிய விழா கொண்டாடப்படும் நேரத்தில் பிரதமர் ராஜீவ் என்ற இளைஞர் அதன் தலைவராக இருக்கிறார். தமிழகத்தின் பிரதிநிதியாக திரு. கருப்பையா மூப்பனார் அனைத்திந்திய காங்கிரசின் பொதுச் செயலாளர்களில் ஒருவராக இருந்து வருகிறார். ஆம்; வடக்கும் தெற்கும் இணைந்ததே இன்றைய தேசிய காங்கிரஸ்.

தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் காங்கிரசால் படைத்து வளர்க்கப்பட்ட இந்திய தேசியத்திற்கு வாழ்த்துக் கூறுகிறேன். அதற்கு வயது ஒரு நூறு மட்டும் அல்ல; இந்தியத் திருநாடு உள்ள வரை இந்தியத் தேசியமும் இருக்கும். தேசியப்பண்பிலிருந்து பிரித்தெடுத்து இந்திய தேசத்தை யாரும் சிதைத்துவிட முடியாது; சிதைக்கவும் கூடாது.

இந்திய தேசிய காங்கிரசை வாழ்த்தும் இந்த நேரத்திலே, கட்சிமாறி கட்சி ஆட்சிக்கு வரும்


ஜனநாயகம் வளர்ந்து, வலுப்பெற்று வாழவேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

ஒரு நூற்றாண்டு காலம் அரும் பாடுபட்டு, இந்தியாவை ஒரே நாடாகச் செய்துவிட்டது காங்கிரஸ். அதனை வலுப்படுத்தி, என்றென்றும் நிலைபெறச் செய்வது தேச மக்களின் கடமையாகும்.

வாழ்க, இந்தியா! வாழ்க, இந்திய தேசியம்!

❖

# இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது



பூங்கொடி பதிப்பகம்